# அழகப்பா பல்கலைக்கழகம்

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தர மதிப்பீட்டில் A+(CGPA: 3.64)
தகுதியும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் - பல்கலைக்கழக மானியக்குழுவின் முதல் தரப்
பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதியும் பெற்றது

காரைக்குடி – 630003

## தொலைநிலைக்கல்வி இயக்ககம்

இளங்கலைத் தமிழ் -பிலிட்.,

இரண்டாமாண்டு - மூன்றாம் பருவம்

தாள்: 10732 - இலக்கணம் -அகப்பொருளும் யாப்பும்

**Copy Right Reserved** **For Private use only**

**Author :**
**Dr.M.CHITHAMBARAM**
Associate Professor in Tamil,
Tamil Research Centre
Alagappa Govt Arts College ,
Karaikudi – 630003

**"The Copyright shall be vested with Alagappa University"**

**All rights reserved. No part of this publication which is material protected by this copyright notice may be reproduced or transmitted or utilized or stored in any form or by any means now known or hereinafter invented, electronic, digital or mechanical, including photocopying, scanning, recording or by any information storage or retrieval system, without prior written permission from the Alagappa University, Karaikudi, Tamil Nadu.**

**Reviewer:**
**Dr. V. THIRUVENI**
Assistant Professor of Tamil ,
PPR- Coordinator - DDE –All Tamil Programmes
Directorate of Distance Education,
Alagappa University,
Karaikudi.630003.

**Work Order No.AU/DDE/DE12/III Sem/ PCM /2021 Dated 27.08.2021 Copies – 2500**

## இளங்கலைத் தமிழ் -பிலிட்.,
## இரண்டாமாண்டு மூன்றாம் பருவம்
## தாள் 10732 - இலக்கணம் - அகப்பொருளும் யாப்பும்
## பாடத்திட்டம் - பொருளடக்கம்

**நோக்கம்:**

இலக்கியங்களில் யாப்பு இலக்கணம் எவ்வாறு பயன்படுத்தப் பட்டுள்ளது என்பதைப் பற்றி விளக்குதல்


**பிரிவு 1: நம்பியகப் பொருள்**

| | | | |
|---|---|---|---|
| **கூறு** 1 | : | நம்பியகப் பொருள் - அகத்திணையியல் -அகப்பொருள்-வகை-ஐந்திணை | 1 |
| **கூறு** 2 | : | நம்பியகப் பொருள் - கருப்பொருள்-முதற்பொருள்-விளக்கம | 8 |
| **கூறு** 3 | : | நம்பியகப் பொருள்- பிரிவு-இலக்கணம்- வாயில்கள்-அகப் பொருள் மாந்தர் | 15 |
| **கூறு** 4 | : | நம்பியகப் பொருள் - களவியல்-கைக்ககிளை - வகை-பாங்கிமதி உடன்பாடு | 33 |

**பிரிவு 2: மடல் ஏறுதல் - வரைவியல் - கற்பியல்**

| | | | |
|---|---|---|---|
| **கூறு** 5 | : | நம்பியகப் பொருள் -மடல் ஏறுதல்- மடல்விலக்குதல் | 57 |
| **கூறு** 6 | : | நம்பியகப் பொருள் -இரவுக்குறியிடையீடு வரைவு வேட்கை- வரைவு கடாதல்- பொருள்வயிற்பிரிதல் | 70 |
| **கூறு** 7 | : | நம்பியகப் பொருள் - வரைவியல் - வரைவுமலிதல். அறத்தொடுநிற்றல் | 91 |
| **கூறு** 8 | : | நம்பியகப் பொருள் - வரைவியல் - உடன்போக்கு—மீட்சி | 100 |
| **கூறு** 9 | : | நம்பியகப் பொருள் -கற்பியல்-கற்பின் இலக்கணம்.- பிரிவுகள் | 117 |

**பிரிவு 3: யாப்பெருங்கலம்**

| | | | |
|---|---|---|---|
| **கூறு** 10 | : | யாப்பெருங்கலக்காரிகை —விளக்கம் | 133 |
| **கூறு** 11 | : | யாப்பெருங்கலக்காரிகை - உறுப்பியல்-எழுத்து-அசை – சீர்- தளை-அடி – தொடை | 138 |

**பிரிவு 4: செய்யுளியல் - ஒழிபியல்**

| | | | |
|---|---|---|---|
| **கூறு** 12 | : | யாப்பெருங்கலக்காரிகை — செய்யுளியல் - பாக்கள் - வகைகள்- | 158 |
| **கூறு** 13 | : | யாப்பெருங்கலக்காரிகை-செய்யுளியல் -வண்ணகம் - தரவு-சுரிதகம் அம்போதரங்கம் | 176 |
| **கூறு** 14 | : | யாப்பெருங்கலக்காரிகை — ஒழிபியல் | 196 |

| | | |
|---|---|---|
| **கூறு: 1** | | |
| | சிறப்புப்பாயிரம் | |
| | அகப்பொருளின் வகை - அகப்பொருள் சொல்லப்படும் திறன் | 1 |
| | கைக்கிளை - ஐந்திணை - பெருந்திணை, | |
| | ஐந்திணைக்கும் உரிய பொருள் | |
| | முதற் பொருளின் வகை – நிலம் - பொழுது | |
| | பயிற்சி வினாக்கள்: | |
| | | |
| **கூறு: 2** | திணைகளுக்குரிய கருப்பொருள்கள் | 8 |
| | உரிப் பொருள் | |
| | கைகோள் வகை | |
| | களவொழுக்கப் புணர்ச்சி வகை | |
| | கைக்கிளைக்குரிய பொருண்மைகள் | |
| | இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம் | |
| | உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம் | |
| | பகற்குறி இரவுக்குறிகளின் இலக்கணம் | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 3** | பிரிவின்வகை - ஒருவழித்தணத்தல் - வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் | 15 |
| | வரைவு நிகழுங் காலம் | |
| | களவு வெளிப்படுமுன் நிகழும் வரைவிற்கு இலக்கணம் - களவு வெளிப்பட்டபின் வரைதற்கு இலக்கணம் | |
| | உடன்போய் வரைதல் - மீண்டு வரைதலின் வகை | |
| | அறத்தொடுநிலை பொருண்மைகள் | |
| | கற்பின் வகை | |
| | கற்பிற் புணர்ச்சியின் வகை | |
| | களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 4** | களவின் இலக்கணம் - எண்வகை மணம் | 33 |
| | கைக்கிளையின் பாகுபாடு – காட்சி – ஐயம் - துணிவு – குறிப்பறிதல் | |
| | களவிற்கு உரிய கிளவித் தொகை | |
| | இயற்கைப் புணர்ச்சி | |
| | வன்புறை வகை – விரி | |
| | பிரிவுழி மகிழ்ச்சி – பிரிவுழிக் கலங்கலின் விரி | |
| | இடந்தலைப்பாட்டின் விரி | |
| | பாங்கற் கூட்டம் - வகை - விரி | |
| | பாங்கிமதி உடன்பாட்டின் வகை – விரி | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | பிரிவு – ஐஐ – மடலேறல் - வரைவியல் - கற்பியல் | |
| | | |
| **கூறு: 5** | மடல் கூற்று - மடல் விலக்கு | 57 |
| | குறை நேர்தல் - மடற்கூற்றொழிதல் | |

| | | |
|---|---|---|
| | குறை நயப்பித்தல் - மறுத்தல் | |
| | குறைநேர்தல் குறை நயப்பித்தல் | |
| | .கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல்: | |
| | ஒருசார் பகற்குறியின் வகை - விரி | |
| | பகற்குறி இடையீட்டின் வகை -வரி | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 6** | இரவுக்குறியின் வகை - விரி | 70 |
| | அல்ல குறி | |
| | வரைதல் வேட்கை | |
| | வரைவு கடாதல் வகை - விரி | |
| | ஒருவழித்தணத்தல் வகை - விரி | |
| | வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு - விரி | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 7** | வரைவின் இலக்கணம் | 91 |
| | வரைவு மலிதல் | |
| | அறத்தொடு நிற்றல் - அறத்தொடு நிற்றலின் வகை | |
| | களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 8** | உடன்போக்கு – வகை – விரி | 100 |
| | கற்பொடு புணர்ந்த கவ்வை | |
| | செவிலி தேடிச் செல்லல் | |
| | நற்றாய் புலம்பல் | |
| | கண்டோர் இரங்கல் | |
| | மனை மருட்சி | |
| | மீட்சி – வகை – விரி | |
| | வரைதல் | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 9** | கற்பின் இலக்கணம் | 117 |
| | கற்பிற்குரிய கிளவித் தொகை | |
| | இல்வாழ்க்கையின் வகை - விரி | |
| | பரத்தையிற்பிரிவின் வகை - விரி | |
| | உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள | |
| | உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள | |
| | பிரிவு வகைகள் | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | பிரிவு – ஐஐஐ - யாப்பெருங்கலம் | |
| | | |
| **கூறு: 10** | யாப்பருங்கலக்காரிகை - அமைப்பு முறைமை | 133 |
| | யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர் பற்றி அறிதல் | |
| | பாயிரக் கருத்து | |
| | அவையடக்கக் கருத்துகள் | |

| | | |
|---|---|---|
| **கூறு: 11** | அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் | 138 |
| | அசை – வகை | |
| | சீர்களின் வாய்பாடு – வகை | |
| | தளை – வகை | |
| | பாக்களுக்கான அடிவரையறை | |
| | தொடை - தொடை விகற்பம் | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | பிரிவு ஐஏ – செய்யுளியல் - ஒழிபியல் | |
| | | |
| **கூறு:12** | பாக்களின் அடி - வகை | 158 |
| | பாக்களின் ஓசை - வகை | |
| | வெண்பாவின் இலக்கணம் - வெண்பாவின் வகை | |
| | ஆசிரியப்பாவின் இலக்கணம் - ஆசிரியப்பாவின் வகை | |
| | வெண்பா – ஆசிரியப்பா - இனம் | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | | |
| **கூறு: 13** | கலிப்பா – கலிப்பாவின் வகைகள் | 176 |
| | கலிப்பாவின் உறுப்புகள் - வண்ணகம் - தரவு – தாழிசை – கொச்சகம் - சுரிதகம் - அம்போதரங்கம | |
| | நேரிசையொத்தாழிசைக் கலிப்பா - அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா | |
| | கொச்சகக்கலிப்பாவின் வகை | |
| | வஞ்சிப்பாவின் இலக்கணம் - வஞ்சிப்பாவின் இனம் | |
| | மருட்பா இலக்கணம் - மருட்பா வகை | |
| | பயிற்சி வினாக்கள | |
| | | |
| **கூறு: 14** | அசை, சீர். தளை, அடி, தொடை போன்றவற்றின் புறனடைகள் | 196 |
| | பாக்களின் புறனடை | |
| | வனப்பு | |
| | வண்ணம் | |
| | பொருள்கோள் | |
| | விகாரம் - வசையுளி | |
| | அடியின்றி நடப்பன - ஓரடியால் நடப்பன. | |
| | பயிற்சி வினாக்கள் | |
| | **மாதிரி வினாத்தாள் I** | 232 |
| | **மாதிரி வினாத்தாள் II** | 233 |

# பிரிவு – I – நம்பியகப்பொருள்

குறிப்பு

தமிழ் இலக்கண, இலக்கிய மரபு அகம், புறம் என்னும் இரண்டு அடிப்படைப் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு அமைந்ததாகும். அவற்றுள் அகம் என்பது ஒத்த தலைவனும் தலைவியும் தன மனத்தகத்தே பெற்று மகிழும் இன்பம் ஆகும். இது தலைமக்கள் தன் உள்ளத்துள்ளே உணர்ந்து மகிழ்தல் ஆதலினாலும் புறத்தார்க்கு இத்தன்மைத்து என உணர்த்த இயலாதது ஆகையினாலும் ‘அகம் எனப்பட்டது. இந் நூலானது அத்தகைய சிறப்பிற்குரிய அகமரபின் இலக்கணத்தை விரித்துரைத்தலின் அகப்பொருள் எனப்பட்டது. இந் நூலினைத் தமிழுக்கு யாத்தளித்தவர் நாற்கவிராச நம்பி ஆதலால் அவரின் பெயருடன் சேர்த்து நம்பியகப்பொருள் எனப் பெயர் பெறலாயிற்று.

**கூறு: 1 – நம்பியகப்பொருள் - அகத்திணையியல் - அகப்பொருள் - வகை – ஐந்திணை**

**நோக்கம்: அகத்திணை மரபு - அகப்பொருள் - வகை – கைக்கிளை – பெருந்திணை – அன்பின் ஐந்திணை போன்றவற்றை அறிதல்.**

## 1.1 சிறப்புப்பாயிரம்

பூமலி நாவன் மாமலைச் சென்னி
ஈண்டிய விமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகட லடக்கி மலையத் திருந்த
இருந்தவன் றன்பால் இயற்றமி ழுணர்ந்த
புலவர்பன் னிருவருட் டலைவ னாகிய
தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப்பொருள் இலக்கணம் அகப்படத் தழீஇ
இகப்பருஞ் சான்றோர் இலக்கிய நோக்கித்
தொகுத்து முறைநிறீஇச் சூத்திரம் வகுத்தாங்
ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்
புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்
மாந்தருந் தேவரும் வாழ்த்தமுக் குடைக்கீழ்
ஏந்ததெழில் அரிமான் ஏந்துபொன் னணைமிசை
மதிமூன்று கவிப்ப உதய மால்வரைக்
கதிரோன் றிருந்தனெக் காண்டக இருந்து
தத்துவம் பகர்ந்தோன் சரணம் பொருந்திய
உத்தமன் புளியங்குடி உய்யவந் தானெனும்

குறிப்பு

முத்தமி ழாசான் மைந்தன் இத்தலத்
திருபெருங் கலைக்கும் ஒருபெருங் குரிசில்
பாற்கடற் பல்புகழ் பரப்பிய
நாற்கவி ராச நம்பியென் பவனே.

என்பது பாயிரம் ஆகும்.

பூ மிக்க நாவலையுடைய பெரிய மேருமலையில் குவிந்த முப்பத்து முக்கோடி தேவர்களும் வேண்டிக்கொண்டதால் அங்குநின்று வந்து தனது குழிந்த கையினால் விந்தமென்னும் நெடிய மலையினது ஆணவத்தைத் தீர்த்து அலைகடலினை அடக்கி. பொதிய மலையின்கண்ணே இருந்து தவம் செய்தவன் அகத்தியன். அகத்தியரிடத்து இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழுள்ளும் இயலாகிய தமிழைக் கற்ற மாணாக்கர் பன்னிருவராவர். அவர்களுள் முதல்வனாகிய தொல்காப்பியனால் அருளிச் செய்யப்பட்ட தொல்காப்பியத்துள் அகப்பொருட்குரிய இலக்கணத்தை உளப்படக் கூட்டிக்கொண்டு அகப்பொருள் இலக்கணத்தைக் கடவாத சங்கத்தாருடைய செய்யுள்களை ஆராய்ந்து அவ்விலக்கண இலக்கியங்களுள் கலந்து கிடந்த கிளவிகளைச் சேர்ந்து அடைவுடன் நிறுத்தி அவ்வடைவிற்கு ஏற்பச் சூத்திரஞ் செய்து, அந்நூற்கு அகப்பொருள் விளக்கம் என்று ஒரு பெயரை வெளிப்படுத்தி மயக்கந்தீர உரையைப் பரப்பி எழுதியவர் மனிதரும் தேவரும் துதிக்க முக்குடையின் கீழ், உயர்ந்த அழகினையுடைய சிங்கஞ்சுமந்த பொன்னணை மேல், நிறைமதி மூன்று கவிப்ப உதயம் என்னும் பெரிய மலையின் கண்ணே இளஞாயிறொன்று இருந்தாற் போ இருந்தருளி உண்மைப்பொருளை அருளிச் செய்தோனுடைய திருவடிகளைச் சேர்ந்த மேலோன் என்றும், திருப்புளிங்குடி என்னும் ஊரகத்துத் தோன்றிய உய்யவந்தான் மைந்தன் என்றும் இவ் உலகத்தின்கண் உண்டாய ஆரியம் முத்தமிழ் என்னும் இரண்டு கலைக்கும் ஒரு பெரிய நாயகன் என்றும் பாற்கடல்போலும் பலவாகிய புகழைப் பரப்பினவன் என்றும் கூறப்பெற்ற நாற்கவிராசநம்பி என்னும் பெயருடையோன் ஆவான்.

**ஆக்கியோன் பெயர்**: நாற்கவிராச நம்பி.

**வழி**: தொல்காப்பியத்தின் வழி., அதன் வழியாயினும், தொல்காப்பியம் வழி நூலானமையின் இது சார்பு நூல் எனப்படும்.

**எல்லை**: அதனானே அடங்கும்.

**நூற்பெயர்**: அகப்பொருள் விளக்கம்.

**யாப்பு:** தொகை, வகை. விரி

**நுதலிய பொருள்**: அகப்பொருள்.

**கேட்போர்**: கற்றுவல்லோர்.

**பயன்:** வீடுபேறு.

**காலம்:** பாண்டியன் குலசேகரன் காலம்

**களம்:** பாண்டியன் அவைக்களம்.

**காரணம்:** கிளவிகளை அடைவுபடக் கோத்தல்,

குறிப்பு

## 1.2 அகப்பொருளின் வகை:

மலர்தலை உலகத்துப்புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை எனஎழு பெற்றித் தாகும்.

பரந்த இடத்தையுடைய தமிழ் நாட்டகத்து, சான்றோரால் ஆராயப்பட்ட அரிய தமிழாக விளங்குவது அகப்பொருள். இது கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழு பெற்றித் தாகும்.

## 1.3 அகப்பொருள் சொல்லப்படும் திறன்:

அதுவே
புனைந்துரை உலகியல் எனுந்திறம் இரண்டினுந்
தொல்லியல் வழாமற் சொல்லப் படுமே.

அவ்வகப்பொருள் இல்லதும் உள்ளதுமாகிய இரண்டு கூறுபாட்டானும் பழைய நெறி பிழையாமற் கூறப்படும்.இதனைத் தொல்காப்பியர்.

“நாடக வழக்கினு முலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கங்
கலியே பரிபாட் டாயிரு பாங்கினும்
உரிய தாகும் என்மனார் புலவர்”எனக் குறிப்பிடுவார்.

## 1.4 கைக்கிளை:

அவற்றுட்
கைக்கிளை உடையது ஒருதலைக் காமம்.

மேற்சொல்லப்பட்ட அகப்பொருள் ஏழனுள் கைக்கிளை என்பது ஒரு தலைக்காமம் ஆகும். தலைவன் தலைவிமாட்டுத் ஒருதலையாய்க் கொள்ளும் அன்பு ஆகும். இது சிலபோது தலைவன் மாட்டுத் தலைவியிடமும் தோன்றுவதுண்டு.எனவே இது ஆண்பாற் கைக்கிளை,பெண்பாற் கைக்கிளை எனப்பட்டது.

## 1.5 ஐந்திணை:

ஐந்திணை உடையது அன்புடைக் காமம்.

ஐந்திணை என்பதனுடைய பொருள் அன்புடைக் காமம் ஆகும். அது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல். பாலை என்று சொல்லப்படும்.

## 1.6 பெருந்திணை:

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்.

பெருந்திணை என்பது பொருந்தாக் காமம் என்பதாம்.இது ஒப்புமை இல்லாத் தலைமக்கள் மாட்டுத் தோன்றுவது ஆகும்.இவ் ஒழுக்கம் மிகுதியாகப் பின்பற்றப்பட்டமையால் பெருந்திணை எனப்பட்டது என்பார் இளம்பூரணர்.

குறிப்பு

## 1.7 ஐந்திணையின் பெயர்:

குறிஞ்சி பாலை முல்லை மருதம்
நெய்தல் ஐந்திணைகக் எய்திய பெயரே.

நிலம் வகுக்கப்படாத கைக்கிளையும் பெருந்திணையும் நீங்கலாக நிலம் வகுக்கப்படும் ஐந்திணைக்கும் உரிய பெயர் உணர்த்திற்று.குறிஞ்சியும் பாலையும் முல்லையும் மருதமும் நெய்தலும் அவ்வைந்து திணைக்கும் பொருந்தியபெயராகும். இதனைத் தொல்காப்பியர்

மாயோன் மேய காடுறை யுலகமும்
சேயோன் மேய மைவரை யுலகமும்
வேந்தன் மேய தீம்புன லுலகமும்
வருணன் மேய பெருமண லுலகமும்
முல்லை குறிஞ்சி மருத நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே” எனக் குறிப்பார்.

## 1.8 ஐந்திணைக்கும் உரிய பொருள்:

அவைதாம்,
முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் எனமுறை
நுதற்பொருண் மூன்றினும் நுவலப் படுமே.

குறிஞ்சி முதலாகிய ஐந்திணைதாம் முதற்பொருளும் கருப்பொருளும் உரிப்பொருளும் என முறையானே கருதுதலையுடைய பொருள் மூன்றாலும் சொல்லப்படும். இதனைத் தொல்காப்பியர்

“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை” எனக் குறிப்பார்.

## 1.9 முதற் பொருளின் வகை:

நிலமும் பொழுதுமென முதலிரு வகைத்தே.

முதற்பொருளாவது நிலமும் பொழுதும் என இரண்டுகூற்றினை உடைத்தாகும்.

## 1.10 நிலம்:

வரையே சுரமே புறவே பழனந்
திரையே அவைஅவை சேர்தரும் இடனே
எனஈர் ஐவகைத்து அனையியல் நிலமே.

நிலம் என்னும் முதற்பொருள், வரையும் ( மலை ) வரைசார்ந்த இடமும் - குறிஞ்சி
சுரமும் ( மணல் ) சுரஞ்சார்ந்த இடமும் - பாலை
புறவும் ( காடு ) புறவு சார்ந்த இடமும் - முல்லை
பழனமும் ( வயல் ) பழனஞ் சார்ந்த இடமும் - மருதம்
கடலும் கடல்சார்ந்த இடமும் - நெய்தல்

எனப் பத்துவகையினை உடையதாகும்.

## 1.11.காலம்:

பெரும்பொழுது என்றா சிறுபொழுது என்றா
இரண்டு கூற்றது இயம்பிய பொழுதே.

முதற்பொருள், பெரும் பொழுது என்றும்சிறுபொழுது என்றும் இரண்டு பகுதியினை உடையதாகும்.

குறிப்பு

## 1.12பெரும்பொழுதின் வகை:

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்கு
இருமூன்று திறத்தது தெரி பெரும் பொழுதே.

பெரும்பொழுது கார் முதலாக வேனில் ஈறாகச்சொல்லப்பட்ட ஆறு பகுதியினை உடைத்தாகும்.

ஆவணி, புரட்டாசி – கார்காலம்

ஐப்பசி, கார்த்திகை - கூதிர் காலம்

மார்கழி, தை – முன்பனிக்காலம்

மாசி, பங்குனி – பின்பனிக்காலம்

சித்திரை, வைகாசி - இளவேனிற்காலம்

ஆனி, ஆடி – முதுவேனிற் காலம்

## 1.13.சிறுபொழுதின் வகை:

மாலை யாமம் வைகறை எற்படு
காலை வெங்கதிர் காயும்நண் பகலெனக்
கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்.

சிறுபொழுது மாலை முதலாக நண்பகல் ஈறாகச்சொல்லப் பட்ட ஐவகையினை உடைத்தாம் அவற்றுள், மாலையாவது நிசியின்முன்னும் எற்பாட்டின் பின்னும் உண்டாகிய காலம்.யாமமாவது இடையிரவு, வைகறை யாவது விடியற்காலம். எற்படுகாலையாவது ஆதித்தன் படுகிற பொழுது. நண்பகலாவது உச்சிப்பொழுது ஆகும்.

## 1.14.குறிஞ்சிக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

அவற்றுள்,
கூதிர் யாமம் முன்பனி யென்றிவை
ஓதிய குறிஞ்சிக் குரிய வாகும்.

பெரும்பொழுதும் சிறுபொழுதுமாகிய பதினொன்றனுள் கூதிரும் யாமமும் முன்பனியுமாகிய மூன்றுமாகும்.

## 1.15 பாலைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

வேனில் நண்பகல் பின்பனி யென்றிவை
பான்மையி னுரிய பாலை தனக்கே.

குறிப்பு

பாலைக்கு வேனிலும் நண்பகலும் பின்பனியுமாகிய மூன்றும் விதியான் உரியவாகும்.

## 1.16.முல்லைக்குரிய பெரும்பொழுதும் சிறுபொழுதும்:

மல்குகார் மாலை முல்லைக் குரிய.

கார்காலமும் மாலைக்காலமும் ஆகிய இரண்டு காலமும் முல்லைக்குரியன.

## 1.17.மருதத்துக்குரிய சிறுபொழுது:

இருள்புலர் காலை மருதத்திற் குரித்தே.

மருதத்திற்கு குரிய சிறுபொழுது விடியற்காலம் ஆகும்.

## 1.18.நெய்தற்குரிய சிறுபொழுது:

வெய்யோன் பாடு நெய்தற் குரித்தே.

நெற்தற்குரிய சிறுபொழுது கதிரவன் படுகின்ற காலம்ஆகும்.

## 1.19.மருதம் நெய்தல் என்னும் இரண்டற்குரிய பெரும்பொழுது

மருதம் நெய்தலென் றிவையிரண் டற்கும்
உரிய பெரும்பொழு திருமூன் றும்மே..

மருதமும் நெய்தலும் என்னும் இரண்டற்கும் பெரும்பொழுது ஆறும் உரியவாம்.

**பயிற்சி வினாக்கள்:**

1. அகப்பொருளின் வகைகள் யாவை?

மலர்தலை யுலகத்துப்புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை யெனவெழு பெற்றித் தாகும்.

பரந்த இடத்தையுடைய தமிழ் நாட்டகத்து, தலைச்சங்கத்தோரும் இடைச் சங்கத்தோரும், கடைச்சங்கத்தோருமாகிய சான்றோரால் ஆராயப்பட்ட அரிய தமிழ் நூலகத்து அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை பெருந்திணை என ஏழு பெற்றித் தாகும்.

2. நிலத்தின் பிரிப்பு முறைகளை விளக்குக.

வரையே சுரமே புறவே பழனந்
திரையே யவையவை சேர்தரு மிடனே
எனவீ ரைவகைத் தனையியல் நிலமே.

நிலம் என்னும் முதற்பொருள், வரையும் வரைசார்ந்த இடமும்,சுரமுஞ் சுரஞ்சார்ந்த இடமும், புறவும் புறவு சார்ந்த இடமும்,பழனமும் பழனஞ் சார்ந்த இடமும், கடலும் கடல்சார்ந்த இடமும் எனப் பத்துவகையினை உடையதாகும்.

3. பெரும்பொழுதின் வகைகளைச் சுட்டியுரைக்க.

காரே கூதிர் முன்பனி பின்பனி
சீரிள வேனில் வேனி லென்றாங்
கிருமூன்று திறத்தது தெரி பெரும் பொழுதே.

பெரும்பொழுது கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில் முதுவேனில் எனச் சொல்லப்பட்ட ஆறு பகுதியினை உடைத்தாகும்.

4. சிறுபொழுதினை குறித்துரைக்க.

மாலை யாமம் வைகறை ஏற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனக்
கைவகைச் சிறுபொழுது ஐவகைத் தாகும்.

சிறு பொழுது மாலை, யாமம், வைகறை, ஏற்படு, காலை, நண்பகல் என ஆறு வகைப்படும்.



**குறிப்பு**

குறிப்பு

# கூறு: 2 – நம்பியகப்பொருள் - கருப்பொருள் வகை – விளக்கம்

**நோக்கம்: கருப்பொருள் தன்னை அறிதல் - ஐந்திணைகளுக்குரிய கருப்பொருள்களைக் கற்றல்**

**இயற்கைப் புணர்ச்சி – உள்ளப் புணர்ச்சி – மெய்யுறு புணர்ச்சி பற்றி அறிதல்.**

## 2.1.கருப்பொருள்:

ஆரணங்கு உயர்ந்தோர் அல்லோர் புள்விலங்கு
ஊர்நீர் பூமரம் உணாப்பறை யாழ்பண்
தொழில் எனக் கருஈர் எழுவகைத் தாகும்.

தெய்வம், உயர்ந்தோர், அல்லோர், புள், விலங்கு,ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண் தொழில் ஈறாகச் சொல்லப்பட்ட பதினான்கு வகையினை கருப்பொருள் உடைத்தாகும்.

## 2.2குறிஞ்சிக் கருப்பொருள்

விறற்சேய் பொருப்பன் வெற்பன் சிலம்பன்
குறத்தி கொடிச்சி குறவர் கானவர்
குறத்தியர் கிளிமயில் மறப்புலி குடாவடி
கறையடி சீயஞ் சிறுகுடி யருவி
நறுஞ்சுனை வேங்கை குறிஞ்சி காந்தன்
ஆரந் தேக்ககில் அசோகம் நாகம்.
வேரல் ஐவனந் தோரை யேனல்
கறங்கிசைத் தொண்டகங் குறிஞ்சியாழ் குறிஞ்சி
வெறிகோள் ஐவனம் வித்தல் செறிகுரற்
பைந்தினை காத்தல் செந்தேன் அழித்தல்
செழுங்கிழங் ககழ்தல் முழங்கிவீ ழருவியொடு
கொழுஞ்சுனை யாடல் குறிஞ்சிக் கருப்பொருளே.

இவை குறிஞ்சிக்குரிய கருப்பொருள் ஆகும். சேய் முதலாகச் சுனையாடல்ஈறாகச் சொல்லப் பட்டனவெல்லாங் குறிஞ்சிக்கருப்பொருளாம்

## 2.3. பாலையின் கருப்பொருள்

கன்னி விடலை காளைமீளி
இன்னகை எயிற்றி எயினர் எயிற்றியர்
மறவர் மறத்தியர் புறவுபருந் தெருவை
கழுகு செந்நாய் கல்கெழு குறும்பு
குழிவறுங் கூவல் குராஅ மராஅ
உழிஞ்சில் பாலை யோமை யிருப்பை
வழங்குகதிக் கொண்டன செழும்பதிக் கவர்ந்தன

பகைத்துடி பாலையாழ் பஞ்சுரம் வெஞ்சமம்
பகற்சூறை யாடல் பாலக்கருப் பொருளே.

கன்னி முதலாகச் சூறையாடல் ஈறாகச் சொல்லப்பட்டன எல்லாம் பாலைக் கருப்பொருளாம்.

## 2.4 முல்லையின் கருப்பொருள்



நெடுமால் குறும்பொறை நாடன் தோன்றல்
வடுவில் கற்பின் மனைவி கிழத்தி
இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்
கான வாரண மான்முயல் பாடி
குறுஞ்சுனை கான்யாறு குல்லை முல்லை
நிறங்கிளர் தோன்றி பிறங்கலர்ப் பிடவம்
கொன்றை காயா மன்றலங் குருந்தந்
தாற்றுக்கதிர் வரகொடு சாமை முதிரை
ஏற்றுப்பறை முல்லை யாழ்சா தாரி
சாமை வரகு தரமுடன் வித்தல்
அவைகளை கட்டல் அரிதல் கடாவிடல்
செவிகவர் கொன்றைத் தீங்குழல் ஊதல்
மூவின மேய்த்தல் சேவினந் தழுவல்
கழுமிய குரவையொடு கான்யா றென்றிவை
முழுதுட னாடன் முல்லைக்கருப் பொருளே.

நெடுமால்முதலாகக்கான்யாறாடல்ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாம்முல்லைக் கருப்பொருளாம்.

## 2.5 மருதத்தின் கருப்பொருள்

இந்திரன் ஊரன் பைந்தார் மகிழ்நன்
கெழுதகு கற்பின் கிழத்தி மனைவி
உழவர் உழத்தியர் கடையர் கடைச்சியர்
மழலை வண்டான மகன்றில் நாரை
அன்னம் போதா நன்னிறக் கம்புள்
குருகு தாரா எருமை நீர்நாய்
பெருகிய சிறப்பின் பேரூர் மூதூர்
யாறு மனைக்கிண றிலஞ்சி தாமரை
நாறிதழ்க் கழுநீர் நறுமலர்க் குவளை
காஞ்சி வஞ்சி பூஞ்சினை மருதஞ்
செந்நெல் வெண்ணெல் அந்நெல் லரிகிணை
மன்றன் முழவ மருதயாழ் மருதம்
மன்றணி விழாக்கோள் வயற்களை கட்டல்
அரிதல் கடாவிடல் அகன்குளம் குடைதல்

குறிப்பு

வருபுன லாடன் மருதக்கருப் பொருளே.

இந்திரன் முதலாக வருபுனலாடல்ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் மருதக் கருப்பொருளாம்.

## 2.6 நெய்தலின் கருப்பொருள்

வருணன் சேர்ப்பன்விரிதிரைப் புலம்பன்
பரும அல்குற் பரத்தி நுளைச்சி
நுளையர் நுளைச்சியர் பரதர் பரத்தியர்
அளவர் அளத்தியர் அலைகடற் காக்கை
சுறவம் பாக்கம் பெறலரும் பட்டினம்
உவர்நீர்க் கேணி கவர்நீர் நெய்தல்
கண்டகக் கைதை முண்டகம் அடம்பு
கண்டல் புன்னை வண்டிமிர் ஞாழல்
புலவ மீனுப்பு விலைகளிற் பெற்றன
நளிமீன் கோட்பறை நாவாய்ப் பம்பை
விளரியாழ் செவ்வழி மீனுப்புப் படுத்தல்
உணங்கவை விற்றன்மீன் உணக்கல்புள் ளோப்பல்
நெடுங்கட லாடல் நெய்தற்கருப் பொருளே.

வருணன் முதலாகக் கடலாடல்ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாம் நெற்தற் கருப்பொருளாம்

## 2.7 உரிப் பொருள்

புணர்தலும்பிரிதலும் இருத்தலும் ஊடலும்
இரங்கலும் இவற்றின் நிமித்தமு மெனவாங்
கெய்திய உரிப்பொருள் ஐயிரு வகைத்தே.

உரிப்பொருள புணர்தலும், புணர்தல் நிமித்தமும்; பிரிதலும்,பிரிதல் நிமித்தமும்; இருத்தலும் இருத்தல்நிமித்தமும்; ஊடலும் ஊடல் நிமித்தமும்; இரங்கலும்,இரங்கல் நிமித்தமும் எனப் பத்து வகையினை யுடைத்தாம். இதனைத் தொல்காப்பியர்,

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றி னிமித்த மென்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே"என விளக்குவார்.

## 2.8 கைகோள் வகை:

அளவில் இன்பத்தைந்திணை மருங்கிற்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்.

எல்லையில்லாத இன்பத்தையுடைய ஐந்திணையிடத்துக் களவும் கற்புமென இரண்டொழுக்கமும் நிகழும்.

## 2.9 களவொழுக்கத்தின்கண் நிகழும்புணர்ச்சியின் வகை

இயற்கைப்புணர்ச்சி இடந்தலைப் பாடு

குறிப்பு

பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டமென்

றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்தே.

களவு என்னும் கைகோள் இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம்,பாங்கியிற் கூட்டமென நான்கு வகையினை யுடைத்தாம்.

காமப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும்

பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்

றாங்கநால் வகையினு மடைந்த சார்பொடு

மறையென மொழிதன் மறையோ ராறே" என்பது தொல்காப்பியம்.

## 2.10 கைக்கிளை நிகழும் காலம்

மெய்க்கிளையாழோர் வேண்டும் புணர்ச்சிமுன்

கிளைநரம்பினைஉடைத்தாகிய யாழினையுடைய கந்திருவர் விரும்பும் களவிற் புணர்ச்சிமுன் கைக்கிளை நிகழ்தல் கடனென்றுசொல்லுவர் புலவர்.

## 2.11 கைக்கிளை

அதுவே,

காமஞ் சான்ற இளமை யோள்வயிற்

குறிப்பறி காறுங் குறுகாது நின்று

குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

கைக்கிளையாவது காமநுகர்தற்கு அமைந்த இளமையுடைய தலைமகளிடத்துண்டாகிய குறிப்பினைத் தான் அறியும் வரை தலைமகன் அவளைச் சாராது நின்று தன்வசமாகிய நெஞ்சினோடுசொல்லுதலாம்.

## 2.12 கைக்கிளைக்குரிய தலைமக்கள்

மறையோர் மன்னவர்வணிகர்சூத் திரரெனும்

இறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே,

கைக்கிளை அந்தணர்,மன்னர், வணிகர், சூத்திரர் என்னும்நால்வகைத் தலைமக்கட்கே கூடுவதாம்.

அதுவே,

மொழிந்தோர் நால்வரு மொழிந்தைந் நிலத்துறை

இழிந்தோர் தம்முள் உயர்ந்தோரு மெய்துப.

கைக்கிளையை நால்வகைத் தலைமக்களுமன்றி ஐந்து நிலத்தும் உறையும் கீழ்நிலைமக்களுள் தலைமக்களும் பெறுவர்.

## 2.13 இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்

ஒத்த தலைவனும் தலைவியும் எதிர்பாராதவிதமாகச் சந்திக்கும் சந்திப்பு இயற்கைப் புணர்ச்சி எனப்படும்.

தெய்வந் தன்னின்எய்தவுங் கிழத்தியின்

எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி.

குறிப்பு

மேற்சொல்லப்பட்ட நால்வகைப்புணர்ச்சியுள்ளும் இயற்கைப்புணர்ச்சியானது இயற்கைப் புணர்ச்சியாவது தெய்வத்தாற் பெறவும் படும்., தலைமகளாற் பெறவும் படும் என்பதாம்.

## 2.14 இயற்கைப் புணர்ச்சிக்கொரு சிறப்பு விதி

இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும்.

இயற்கைப் புணர்ச்சிதெய்வத்தால் பெறுங்காலத்து முயற்சியின்றித்தானே முடிவதாம்.
எனவே,அப் புணர்ச்சி தலைமகளால் பெறுங்காலத்து முயற்சியால் முடிவதாகும் என்பது பெறப்படும்.

## 2.15 களவொழுக்கின்கண் புணர்ச்சி நிகழும் திறம்

உள்ளப் புணர்ச்சியுமெய்யுறு புணர்ச்சியும்
கள்ளப் புணர்ச்சியுட் காதலர்க் குரிய.

உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்னும் இரண்டும் தலைமகனுக்கும் தலைமகட்கும் களவுப்புணர்ச்சிக்கண் உரியவாம்.

## 2.16 உள்ளப் புணர்ச்சி நிகழும் காலம்

பொருவிறந்தோற்குப் பெருமையும் உரனும்
நன்னுதற் கச்சமும் நாணும் மடனும்
மன்னிய குணங்க ளாதலின் முன்னம்
உள்ளப் புணர்ச்சி யுரிய தாகும்

இங்ஙனம் தெய்வத்தாலோ தலைவியின் முளற்சியாலோ அமையும் களவுப் புணர்ச்சி இரு வகைப்படும்.அவைமுறையே உள்ளப்புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி என்பவையாகும். அவற்றுள் பெருமையும், உரனும் தலைமகனுக்கு உரிய குணமாதலாலும் அச்சமும், நாணும், மடனும் தலைமகட்கு உரிய குணமாதலாலும் மேற்சொல்லப்பட்ட இரண்டு புணர்ச்சியுள்ளும் உள்ளப்புணர்ச்சி முன் நிகழ்தற்குரித்தாம்.
உரனெனினும் அறிவெனினும் ஒக்கும்.பெருமையென்பது பழியும் பாவமுமஞ்சுதல், அறிவென்பது தக்கதறிதல். அச்சமென்பது காணாததொன்று கண்டால் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணமென்பது பெண்டிர்க்கியல்பாகிய குணம். மடமென்பது பேதைமை.
பெருமையு முரனு மாடூஉ மேன"
அச்சமு நாணு மடனுமுந் துறுத்த
நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப" என்பது தொல்காப்பியம்.

## 2.17 மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலம்

காட்சி முதலாச்சாக்காடு ஈறாக்
காட்டிய பத்துங் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.

குறிப்பு

காட்சியும், வேட்கையும் ஒருதலையுள்ளுதலும் மெலிதலும், ஆக்கஞ் செப்புதலும் நாணுவரையிறத்தலும், நோக்குவ வெல்லா மவையேபோறலும், மறத்தலும், மயக்கமும் சாக்காடும் என்னும் பத்து அவத்தையும் ஒருங்கே நிகழுமாயின் தலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற்குரித்தாம்.

**காட்சி**: தலைமகளைத்தலைமகன் தனியிடத்துக் காண்ட அளவிழல் ஏற்படும் மன உணர்வு.

**வேட்கை**: இவளைப் பெறவேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி.

**ஒருதலையுள்ளல்:** இடை விடாது நினைத்தல்,

**மெலிதல்**: உடம்பு வாடுதல்,

**ஆக்கஞ் செப்பல்**: தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற உணர்வைப் பிறர்க்கு உரைத்தல்.

**நாணுவரையிறத்தல்:** நாணத்தின் எல்லையைக் கடத்தல்.

**நோக்குவவெல்லாம் அவையே போறல்:** காணுபவை எல்லாம் தலைவியின் உறுப்பு போலத் தோற்றுதல்.

**மறத்தல்:** அறிவு திரிந்து பேதலித்தல்

**மயக்கம்**: செய்யும் செயலறியாது மோகித்தல்.

**சாக்காடு:** இறந்துபடுதல்.

“வேட்கை யொருதலை யுள்ளுதன் மெலிதல்
ஆக்கஞ் செப்பல் நாணுவரை யிறத்தல்
நோக்குவ வெல்லா மவையே போறல்
மறத்தல் மயக்கஞ் சாக்கா டென்றன்
சிறப்புடை மரபினவை களவென மொழிப” என்பது தொல்காப்பியம்.

## 2.19 களவுப் புணர்ச்சி நிகழும் இடம்

பிறர் எவரும் அறியாமல் தலைவன் தலைவியைச் சந்திக்க தலைவியாலோ தோழியாலோ குறிக்கப்படும் இடம் குறியிடம் ஆகும்.

பகற்குறி இரவுக் குறியெனும் பான்மைய
புகற்சியி னமைந்தோர் புணர்ச்சிநிக ழிடனே.

இத்தகைய குறியிடம் பகற் குறியும், இரவுக் குறியுமென்னும் இரண்டு பகுதியினை உடையதாகும். பகலில் தினைப்புனம் காத்தல். பூக்கொய்தல் பொருட்டாக வந்த தலைவியை பிறருக்குத் தெரியாமல் தலைவனைச் சந்திப்பது பகற்குறி எனப்படும். தலைவன் தலைவியை இரவுப்பொழுதில் சந்திக்கும் இடம் இரவுக்குறி எனப்படும்.

## 2.20 பகற்குறி இரவுக்குறிகளின் இலக்கணம்

இல்வரை யிகந்ததுபகற்குறி இரவுக்குறி
இல்வரை இகவா இயல்பிற் றாகும்.

பகற்குறி இல்லின் எல்லையைக்கடந்ததமையும். இரவுக்குறி இல்லின் எல்லையைக் கடவாது.

குறிப்பு

**பயிற்சி வினாக்கள்:**

**1.** கைக்கிளை என்றால் என்ன?

அதுவே,

காமஞ் சான்ற இளமை யோள்வயிற்
குறிப்பறி காறுங் குறுகாது நின்று
குறிப்படு நெஞ்சொடு கூற லாகும்.

கைக்கிளையாவது காமநுகர்தற்கு அமைந்த இளமையுடைய தலைமகளிடத்துண்டாகிய குறிப்பினைத் தான் அறியும் வரை தலைமகன் அவளைச் சாராது நின்று தன்வசமாகிய நெஞ்சினோடுசொல்லுதலாம்.

2. இயற்கைப் புணர்ச்சி என்பதனை விளக்குக.

இயற்கைப்புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி
முயற்சி யின்றி முடிவ தாகும்.

இயற்கைப் புணர்ச்சிதெய்வத்தால் பெறுங்காலத்து முயற்சியின்றித்தானே முடிவதாம்.

எனவே,அப் புணர்ச்சி தலைமகளால் பெறுங்காலத்து முயற்சியால் முடிவதாகும் என்பது பெறப்படும்.

3. மெய்யுறு புணர்ச்சி நிகழும் காலத்தினை விவரி?

காட்சி முதலாச்சாக்காடு ஈறாக்
காட்டிய பத்துங் கைவரு மெனினே
மெய்யுறு புணர்ச்சி எய்துதற் குரித்தே.

காட்சியும், வேட்கையும் ஒருதலையுள்ளுதலும் மெலிதலும், ஆக்கஞ் செப்புதலும் நாணுவரையிறத்தலும், நோக்குவ வெல்லா மவையேபோறலும், மறத்தலும், மயக்கமும் சாக்காடும் என்னும் பத்து அவத்தையும் ஒருங்கே நிகழுமாயின் தலைமகற்கு மெய்யுறு புணர்ச்சி கூடுதற்குரித்தாம்.

காட்சி: தலைமகளைத்தலைமகன் தனியிடத்துக் காண்ட அளவிழல் ஏற்படும் மன உணர்வு.

வேட்கை: இவளைப் பெறவேண்டும் என்னும் உள்ள நிகழ்ச்சி.

ஒருதலையுள்ளல்: இடை விடாது நினைத்தல்,

மெலிதல்: உடம்பு வாடுதல்,

ஆக்கஞ் செப்பல்: தன்னெஞ்சின்கண் வருத்த மிகுகின்ற உணர்வைப் பிறர்க்கு உரைத்தல்.

நாணுவரையிறத்தல்: நாணத்தின் எல்லையைக் கடத்தல்.

நோக்குவவெல்லாம் அவையே போறல்: காணுபவை எல்லாம் தலைவியின் உறுப்பு போலத் தோற்றுதல்.

மறத்தல்: அறிவு திரிந்து பேதலித்தல்

மயக்கம்: செய்யும் செயலறியாது மோகித்தல்.

சாக்காடு: இறந்துபடுதல்.

*Self -Instructional -Material*

# கூறு:3- நம்பியகப்பொருள் - பிரிவு இலக்கணம் - வாயில்கள் - அகப்பொருள் மாந்தர்

**நோக்கம்: ஒருவழித் தணத்தல் - பொருள்வயிற் பிரிதல் - களவில் இடம்பெறும் வாயில்கள் - வரைதலின் வகை – அறத்தொடு நிற்றல் - கற்பின் வகை போன்றவற்றை அறிதல்.**

குறிப்பு

## 3.1 பிரிவின்வகை

ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வாயிற் பிரிதலென் றிருவகைத் தாகும்
நிறைதரு காதன் மறையினிற் பிரிவே.

களவின்கட்பிரியும் பிரிவு ஒருவழித்தணத்தலும், வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலுமென இரண்டுபகுதியினை உடைத்தாகும். அவற்றுள், ஒருவழித்தணத்தலாவது,ஓரூரின் கண்ணும் ஒரு நாட்டின் கண்ணும் பிரிதல் ஆகும்.வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலாவது வரைவிடைவைத்துக் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பொருள்வயிற்பிரிதல் என்பதாம்.

## 3.2 ஒருவழித்தணத்தல்

அவற்றுள்,
ஒருவழித் தணத்தற்குப் பருவங் கூறார்.

மேற்சொல்லப்பட்ட இரண்டினுள்ளும் ஒருவழித் தணத்தல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையின் இதற்குப் பருவ வரையறை சொல்லார் புலவர்.

## 3.3 வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல்

வரைவிடை வைத்துப்பொருள்வயிற் பிரிவோர்
இருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலின்,அது இரண்டு திங்களின் இகவாமையை உடைத்தென்று சொல்லுவர் ஆசிரியர்.

## 3.4 வரைவு நிகழுங் காலம்

களவு வெளிப்படா முன்னும்பின்னும்
விளையு நெறித்தனெ விளம்பினர் வரைவே.

களவு ஒழுக்கதை மேற்கொண்ட தலைமக்கள் ஊரறிய இல்லறம் மேற்கொண்டு வாழ விரும்புவர். இத் திருமணம் களவு வெளிப்படா முன் வரைதல், களவு வெளிப்பட்ட பின் வரைதல் என்னும் இருவகைகளை உடையதாகும்.

குறிப்பு

களவு வெளிப்படா முன்னும் என்றதனால் களவு வெளிப்பட்ட பின்னும் எனத் தந்துரைக்கப்பட்டது.

## 3.5 களவு வெளிப்படுமுன் நிகழும் வரைவிற்கு இலக்கணம்

நான்கு வகைப்புணர்வினுந்தான்றெருண்டு வரைதலும்
பாங்கனிற் பாங்கியிற் றெருளுற்று வரைதலுங்
களவு வெளிப்படா முன்வரைத லாகும்.

மேற்சொல்லப்பட்ட இயற்கைப்புணர்ச்சி முதலாகிய நான்குவகைப் புணர்ச்சிக்கண்ணும் தலைமகன்றானே தெருண்டு வரைதலும், பாங்கனாலோ பாங்கியாலோ தெருட்டப்பட்டு வரைதலுமாகிய அவை,களவு வெளிப்படாமுன் வரைவாம்..

## 3.6 களவு வெளிப்பட்டபின் வரைதற்கு இலக்கணம்

உடன்போய்வரைதலும் மீண்டு வரைதலும்
உடன்போக் கிடையீ டுற்று வரைதலுங்
களவுவெளிப் பட்டபின் வரைத லாகும்.

புணர்ந்துடன் போய்த்தலைமகன் தன்னூரின் கண்ணே வரைதலும், மீண்டுவந்து தம்மூரின்கண்ணே வரைதலும், உடன்போக்கிடையீடுபட்டுத் தலைமகன் தமரை வழிபட்டு வரைதலுமாகிய இவை களவு வெளிப்பட்டபின் வரைதலாகும்

## 3.7 உடன்போய் வரைதல்

அவற்றுள்,
உடன்போய் வரைதல் ஒருவகைத் தாகும்.

மேற்சொல்லப்பட்ட மூன்றனுள்,உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலாகிய ஒருவகையினையினதாகும்.

## 3.8 மீண்டு வரைதலின் வகை

அவண்மனை வரைதலும் தன்மனை வரைதலும்
எனமீண்டு வரைதல் இருவகைத் தாகும்.

உடன்போய் மீண்டு தம்மூரின்கண்வரைதல், தலைமகள் மனையின்கண் வரைதலும் தலைமகன் மனையின்கண் வரைதலும் என இரண்டு வகையினையுடைத்தாகும்.

## 3.9 அறத்தொடுநிலை நிகழும் இடம்

தலைவனும் தலைவியும் மேற்கொண்ட களவொழுக்கத்தில் தொடர்ந்து சந்திக்க இயலாத சூழலிலும் வரைதல் நிகழாமல் இயல்பாகவே தலைவியின் மனநிலையைப் புரிந்து கொள்ளும் சூழலிலும் திருமணம் உறுதிப்படலாம். இதற்கு அறத்தொடு நிற்றல் என்று பெயர்.

ஆற்றூர் அஞ்சினும்அவன்வரைவு மறுப்பினும்
வேற்றுவரைவு நேரினும் காப்புக்கை மிகினும்
ஆற்றுறத் தோன்றும் அறத்தொடு நிலையே.

தலைமகன் வரும்வழியில் உண்டாகும் ஏதத்தினையஞ்சியவிடத்தும், தமர் வரைவு எதிர்கொள்ளாதவிடத்தும்,பிறர் வரைவு நேருமிடத்தும், காவல் கைமிகுந்தவிடத்தும் நெறிப்படப் புலப்படும் அறத்தொடுநிலை என்பதாம்.

## 3.10 அறத்தொடு நிற்பாரும் அறத்தொடு நிற்கும் வழியும்:

குறிப்பு

தலைவி பாங்கிக்கறத்தொடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க் கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தன்னையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியுணர்ந் தோரே.

தலைவி, பாங்கி, செவிலி, நற்றாய் முதலாய நால்வரும் இவ்வாறு அறத்தொடு நிற்றற்கு உரியர் என்று சொல்லுவர்அகப்பொருளிலக்கணம் அறிந்தோர். தலைவி பாங்கிக்கு அறத்தொடு நிற்பாள். பாங்கி செவிலிக்கு அறத்தொடு நிற்பாள். செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள்.நற்றாய் தந்தை தன்னையர்க்கு அறத்தொடு நிற்பாள்.

## 3.11 தலைமகள் அறத்தொடு நிற்கும் இடம்

ஒருபுணர் வொழிந்தவற்றொருவழித் தணப்பவும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரியவும்
இறைவனைச் செவிலி குறிவயிற் காணவும்
மனைவயிற் செறிப்பவும் வருத்தங் கூரின்
வினவியக் கண்ணும் வினவாக் கண்ணும்
அனநடைக் கிழத்தி அறத்தொடு நிற்கும்..

பாங்கியிற்கூட்டம் என்பது நீங்கலாகிய மூன்று புணர்ச்சிக்கண்ணும், தலைமகன் ஒருவழித் தணத்தவிடத்தும், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்தவிடத்தும் செவிலி தலைமகனைக் குறிவயிற் காண்டவிடத்தும், இற்செறித்தலின் பொழுதும் ,தனக்கு வருத்தம் மிகுமாயின் தன்னை அவள் வினவியவிடத்தும்,வினவாதவிடத்தும் தலைமகள் பாங்கிக்கு அறத்தொடுநிற்பாள்.

“வரைவிடை வைத்த காலத்துவருந்தினும்
வரையா நாளிடை வந்தோன் முட்டினும்
உரையெனத் தோழிக் குரைத்தற் கண்ணும்
தானே கூறுங் காலமு முளவே”,˙ என்பது தொல்காப்பியம்

## 3.12 பாங்கி அறத்தொடுநிற்கும் திறம்

முன்னிலைப்புறமொழி முன்னிலை மொழிகளிற்
சின்மொழிப் பாங்கி செவிலிக் குணர்த்தும்.

முன்னிலைப் புறமொழியும்,முன்னிலைமொழியுமாகிய இரண்டினாலும் பாங்கி செவிலிக்குஅறத்தொடுநிற்பாள்.

## 3.13 செவிலி அறத்தொடுநிற்கும் திறம்

செவிலிநற் றாய்க்குக் கவலையின் றுணர்த்தும்.

செவிலி அறத்தொடுநிற்குங் காலத்து நற்றாய்க்கு விளங்குமாறு அறிவிப்பாள்.

## 3.14 நற்றாய் அறத்தொடு நிற்கும் திறம்

குறிப்பு

நற்றாய் அறத்தொடுநிற்குங் காலைக்

குரவனுந் தன்னையுங் குறிப்பி னுணர்ப.

தலைமகள் தந்தையும், தன்னையும் அவள்குறிப்பினானே அறிவர்.

தந்தையுந் தன்னையும்முன்னத்தின் உணர்ப" என்பது தொல்காப்பியம்

## 3.15 அறத்தொடு நிற்பார்க்கு வினா நிகழும் இடம்

பாங்கி தலைவியை வினவஞ் செவிலி

பாங்கியை வினவும் பாங்கி தன்னையும்

நற்றாய் தானும் வினவுஞ் செவிலியிற்

பொற்றொடிக் கிழத்தியை உற்று நோக்கின்.

தலைவியின் மாற்றங்களைக் கண்டு ஐயுறும் தோழி தலைவியை வினவுவாள்.செவிலி ஐயுறும் போது தோழியைக் கேட்பாள்.நற்றாய் ஐயுறும் போது செவிலியைக் கேட்பாள்.இவ்வாறு ஒருவருக்கொருவர் ஐயுற்று வினவும் பொழுது தலைவியின் களவொழுக்கம் அறத்தொடு நிற்றலாக வெளிப்படும். பாங்கி தன்னையும் என்ற உம்மை "நற்றாய்செவிலியை வினவுதலன்றி, என்னும் பொருள்படநின்றது. "நற்றாய்தானும், என்னும் உம்மை "பாங்கியைச்செவிலி வினவுத லன்றி, என்னும் பொருள்பட நின்றது.இவ்வாறு நற்றாய் வினவுவது செவிலியைப் போலத்தலைமகளை உற்றுப் பார்த்தவிடத்து எனக்கொள்க.

## 3.16 உடன்போக்கில் அறத்தொடு நிற்பார்

ஆங்குடன் போயுழிஅறத்தொடு நிற்ப

பாங்கியுஞ் செவிலியும் பயந்த தாயும்.

தலைமகளும், தலைமகனும் புணர்ந்துடன் போகிய காலத்து அறத்தொடு நிற்பவர் தோழியும், செவிலியும், நற்றாயும் ஆவர்.

## 3.17 கற்பின் வகை

களவின் வழிவந்தகற்பும் பொற்பமை

களவின் வழிவாராக் கற்புமென் றாங்கு

முற்படக் கிளந்த கற்பிரு வகைத்தே.

கற்பானது, களவுப் புணர்ச்சி வழியால் வந்த கற்பு, களவுப் புணர்ச்சிவழி வாராக் கற்பு என இரு வகைப்படும்.

"முற்படப் புணராது சொல்லின்மையிற்

கற்பெனப் படுவது களவின் வழித்தே" என்பது தொல்காப்பியம்

## 3.17 கற்பிற் புணர்ச்சியின் வகை

குரவரிற் புணர்ச்சிவாயிலிற் கூட்டமென்று
இருவகைத் தாகுங் கற்பிற் புணர்ச்சி.

கற்பென்னுங் கைகோளிற் புணர்ச்சி குரவரால் புணரும் புணர்ச்சியும்,வாயில்களாற் புணரும், புணர்ச்சியும் என்னும் இரண்டு பகுதியினை உடைத்ததாகும்.இவற்றுள்,குரவராற் புணரும்புணர்ச்சியாவது, வதுவை கூட்டிப் புணரும் புணர்ச்சி ஆகும். வாயில்களாற் புணரும் புணர்ச்சியாவது, புலவிதீர்த்துப்புணரும் புணர்ச்சி என்பதாகும்.

குறிப்பு

## 3.18 களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி

அவற்றுள்
களவின் வழிவந்த கற்பிற் புணர்ச்சி
கிளைஞரின் எய்தாக் கேண்மையும் உடைத்தே
உடன்போய் வரைதலும் உண்மை யான.

மேற்சொல்லப்பட்ட இருவகைக் கற்பினுள்ளும் களவின்வழி வந்த கற்பினுள் புணரும் புணர்ச்சியானது தலைமகள் சுற்றத்தாரால் பெறப்படாத தன்மையினை உடைத்தாம். இது புணர்ந்துடன் போய்த்தலைமகன் தன்னூரின்கண்ணே வரைந்து கோடலும் உண்டு என்பதனால் அமையும்.

”கொடுப்போரின்றியுங் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலையான” என்பது தொல்காப்பியம்

## 3.19 கற்புக் காலத்துத் தலைவன்பால் நிகழும் நிகழ்ச்சி

மறையிற்புணர்ச்சியும் மன்றற் புணர்ச்சியும்
இறைவற் கெய்தலுண் டிருவகைக் கற்பினும்.

மேற்சொல்லப்பட்டஇருவகைக் கற்பின்கண்ணுந் தலைமகற்குக் களவிற்புணர்ச்சியும் வதுவைப் புணர்ச்சியும் பொருந்துதலுமுண்டு.

## 3.20 தலைவன்பால் நிகழும் அந் நிகழ்ச்சிகளுக்கு உரிய மகளிர்

காதற் பரத்தையர்காமக் கிழத்தியர்
பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தியென்
றன்னவர் உரியர் அவையிரண் டிற்கும்.

அவ்வொழுக்கம் இரண்டிற்கும் உரியமகளிரை உணர்த்திற்று. காதற்பரத்தையர்,காமக்கிழத்தியர், வதுவைப் பெருங்கிழத்தி முதலாகிய மூவகையோரும் தலைமகன் அவ்வாறொழுகும் ஒழுக்கம் இரண்டற்கும் உரியர் ஆவார்.

## 3.21 களவிற்புணர்ச்சிக்கு உரிய மகளிர்

அவருட்,
காதற் பரத்தையர் களவிற் குரியர்.

மேற்சொல்லப்பட்ட மூவகையோருள்ளுள் காதற்பரத்தையர் களவொழுக்கத்திற்குரியர் ஆவார்

குறிப்பு

## 3.22 மன்றல் புணர்ச்சிக்கு உரிய மகளிர்

ஒழிந்தோர் மன்றற் புணர்ச்சிக் குரியர்

காமக்கிழத்தியும், பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தியுமாகிய இருவரும் வதுவைப் புணர்ச்சிக்குரிய மகளிர் ஆவர்.

## 3.23 கற்பில் நிகழும் பிரிவின்வகை

பரத்தையிற் பிரிதல்ஓதற்குப் படர்தல்
அருட்டகு காவலொடு தூதிற் கறல்
உதவிக் கேகல் நிதியிற் கிகத்தலென்
றுரைபெறு கற்பிற் பிரிவறு வகைத்தே.

கற்பிற் பிரியும் பிரிவு பரத்தையிற் பிரிதல், ஓதல் பிரிவு,பகைவயிற் பிரிவு, காவல் பிரிவு, தூதுப் பிரிவு,துணைவயிற் பிரிவு,பொருள்வயிற் பிரிவு என ஆறு வகையினை யுடைத்ததகும்.

ஓதல் காவல் பகைதணிவினையே
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்
றாங்கவ் வாறே யவ்வயிற் பிரிவே" என்பது தொல்காப்பியம்

## 3.24 பரத்தையிற் பிரிவின் வகை

மனைப்பிரிவயற் சேரியின் அகற்சி
புறநகர்ப் போக்கிவை புரவலற் குரிய
பரத்தையிற் பிரியும் பருவத் தான்.

பரத்தையிற்பிரியுங்காலத்து அயன்மனைப்பிரிவு, அயற்சேரிப் பிரிவு,புறநகர்ப் போக்கு முதலாகிய மூன்றுபிரிவும் தலைமகற்குரியனவாம்.

## 3.25அயன்மனைப் பிரிவுக்குக் காரணம்

கெழீஇய காமக் கிழத்தியர்பொருட்டாத்
தழீஇய அயல்மனைத் தலைவன் பிரியும்.

பொருந்திய காமக்கிழத்தியர்காரணமாகத் தலைமகன் தொடர்ந்து அயல்மனைக்கண் பிரிவான்.

## 3.26 அயற்சேரிப் பிரிவுக்குக் காரணம்

பின்னர் வரைந்த பெதும்பையும் பரத்தையும்
இன்னியல் விழவும் ஏது வாக
அவனயற் சேரியின் அகலும் என்ப.

அயற்சேரியிற் பிரிவுக்குஏது உணர்த்துதல் நுதலிற்று.இரண்டாவதாக வரைந்து கொள்ளப்பட்ட பெதும்பைப் பருவக் கிழத்தி,காதற் பரத்தை, இனிமை தருகின்ற விழா ஆகிய மூன்று காரணமாக தலைவன் பக்கத்துச் சேரிக்கண் பிரிவான்.

## 3.27 புறநகர்ப் போக்குக்குக் காரணம்

விருந்தியற் பரத்தையைப்பெருந்தேர் மிசைக்கொண்டு
இளமரக் காவின் விளையா டற்கும்

புனலா டற்கும் புறநகர்ப் போகும்.

இளமரக்காவின்கண்ணே விளையாடுதல் காரணமாகவும் புனலாடுதல் காரணமாகவும் தலைமகன் பரத்தையைத் தேர்மேல் ஏற்றிக்கொண்டு நகர்ப்புறத்திலே போவான்.

குறிப்பு

## 3.28 தலைவிக்கு ஊடல் நிகழும் இடம்

ஊடல் அவ்வழிக் கூடுங் கிழத்திக்கு.

அம் மூன்று பிரிவின் கண்ணுந்தலைமகட்கு ஊடல் அமையும்.

## 3.29 ஊடலைத் தணிக்கும் வாயில்கள்

கொளைவல் பாணன்பாடினி கூத்தர்

இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்

பாகன் பாங்கி செவிலி அறிவர்

காமக் கிழத்தி காதற் புதல்வன்

விருந்தாற் றாமை யென்றிவை ஊடல்

மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்.

பாணன், பாடினி, கூத்தர், இளையர், கண்டோர், இருவகைப் பாங்கர்,பாகன் பாங்கி, செவிலி அறிவர், காமக் கிழத்தி, புதல்வன் விருந்தினர் எனப்படும் இவர்கள் அனைவரும் தலைமகள் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாவர்.

## 3.30 ஓதற்பிரிவு: வேதம் ஓதற்கு உரியர்

ஓதற் தொழில் உரித்து உயர்ந்தோர் மூவர்க்கும்.

ஓதல் என்னும் தொழில் அந்தணர், அரசர், வணிகர் என்னும் மூவர்க்கும் உரித்து.

## 3.31ஏனைக் கல்விக்கு உரியர்

அல்லாக் கல்வி எல்லார்க்கும் உரித்தே.

வேதமல்லாத கல்வி நால்வர்க்கும் உரித்து.

## 3.32 படைக்கலம் முதலியன பயிலுதற்கு உரியர்

படைக்கலம் பயிறலும் பகடுபிற ஊர்தலும்

உடைத்தொழி லவர்க்கென உரைத்திசி னோரே.

போர்த்தொழிலுக்குரிய படைக்கலன்களைக் கற்றல்,யானை, தேர், குதிரை ஆகியவற்றின் மீது ஊர்ந்து செல்லக் கற்றல்,ஆகியவை நால்வகை வருணத்தார்க்கும் உரியவை எனப் புலவர் உரைப்பர்.

## 3.33 காவற்பிரிவின் வகை:

அறப்புறங் காவல் நாடுகா வலெனச்

சிறப்புறு காவற் றிறமிரு வகைத்தே.

காவல், அறப்புறங்காவல், நாடுகாவல் என இரு வகைத்தாகும்.

## 3.34 அறப்புறங் காவற்கு உரியர்:

அவற்றுள்,

அறப்புறங் காவல் அனைவர்க்கு முரித்தே.

மேற் சொல்லிய இரண்டனுள்ளும் அறப்புறங் காவல் என்பது நால்வர்க்கும் உரித்து.

### 3.35 நாடுகாவலுக்கு உரியர்

மற்றைக் காவல் கொற்றவர்க் குரித்தே.

நாடுகாவலென்பது அரசர்க்குரித்தாகும்.

குறிப்பு

### 3.36 தூதிற் பிரிவுக்கு உரியர்

வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்கும்
தூது போதல் தொழிலுரித் தாகும்.

தூது போதல் தொழில் பார்ப்பாரும் வேந்தரும் என்னும் இருவர்க்கும் உரித்தாகும். பகைதணிவினை எனினும், தூதுவினை எனினும் ஒன்றேயாம்.

“வயலைக் கொடியின் வாடிய மருங்குல்
உயவ லூர்திப் பயலைப் பார்ப்பான்
எல்லி வந்து நில்லாது புக்குச்
சொல்லிய சொல்லோ சிலவே யதற்கே
ஏணியுஞ் சீப்பு மாற்றி
மாண்வினை யானையு மணிகளைந் தனவே” ( புறம் - 305 ) என்பதனாலும்,
“மடந்தாழு நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சங்
கடந்தானை நூற்றுவர்பா னாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராய ணாவென்னா நாவென்ன நாவே” ( சிலம்பு – படர்க்கை – 3 ) என்பதனாலும் அவ்விருவர்க்குந் தூது போதலை அறியலாம்.

### 3.37 நாடுகாவற்பிரிவுக்கும் தூதிற்பிரிவுக்கும் ஒரு சிறப்புவிதி

சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய இரண்டும்
உறற்குரி மரபின ஒழிந்தோர் இருவர்க்கும்.

அரசனாற் சிறப்புப் பெயர் பெற்றவர்களாயின் வணிகரும், சூத்திரரும் என்னும் இருவர்க்கும் மேற்கூறிய நாடு காவற்றொழிலும் தூதுபோதற்றொழிலும் உரியதாகும்.

### 3.38 துணைவயிற் பிரிவுக்கு உரியர்:

உதவி அந்தணர் ஒழிந்தோர்க்கு உரித்தே.

வேந்தர்க்குற்றுழியாகிய தொழில் அந்தணர் நீங்கலாக மூவர்க்கும் உரியதாகும்.

### 3.39 நான்கு வருணத்தார்க்கும் உரிய பிரிவு:

பரத்தையிற்பிரிவும் பொருள்வயிற் பிரிவும்
உரைத்த நால்வர்க்கு முரிய வாகும்.

பரத்தையிற் பிரிவும்,பொருள்வயிற் பிரிவும் நால் வருணத்தார்க்கும் உரியதாகும்.

## 3.40 நிலமக்களுள் தலைமக்களுக்கு உரிய பிரிவு:

இழிந்தோர்தமக்கும் இவற்றுண்மேம் பட்டவை

ஒழிந்தன வாமென மொழிந்தனர் புலவர்.

இவ்வறுவகைத் தொழிகளுள் மேம்பட்டனவாகிய ஓதலும், நாடுகாவலும், தூதுபோதலும், ஆகிய மூன்றும் நீங்கலாகிய ஏனையன இழிந்தோராகிய நிலமக்களுள் தலைமக்கட்கும் உரியவாகும் என்பர் சான்றோர்,

குறிப்பு

## 3.41 தலைமகன் பிரிவுக்கு இலக்கணம்

கல்வி முதலாஎல்லா வினைக்குஞ்

சொல்லி அகறலுஞ் சொல்லா தகறலும்

உரியன் கிழவோன் பெருமனைக் கிழத்திக்கு.

கல்வி முதலாகச் சொல்லப் பட்ட பிரிவிற்கெல்லாம் தலைவன் தலைமகளிடத்து சொல்லியும் பிரிவான். சொல்லாமலும் பிரிவான்.

சொல்லா தகலினுஞ் சொல்லும் பாங்கிக்கு.

தலைமகன் தலைமகட்குச்சொல்லாது பிரியும், ஆயினுந் தோழிக்குச்சொல்லியே பிரிவான்.

குறிப்பின் உணர்த்தும் பெறற்கருங் கிழத்திக்கு.

தலைவன் பிரிவினை உரைக்காது செல்வான் எனினும் குறிப்பினால் தலைவிக்கு உணர்த்துவான்.

## 3.42 தலைமக்கள் நாடிடையிட்டுச் செல்லுங்கால் செல்லுந்திறன்

காலிற் சேறலும் கலத்திற் சேறலும்

ஊர்தியிற் சேறலும் நீதி யாகும்.

காலிற்சேறல், கலத்தில் சேரல், ஊர்தியில் சேரல் ஆகிய மூன்றும் எல்லாப் பிரிவின்கண்ணும் எல்லார்க்கு இயல்பாகும்.

## 3.43 அங்ஙனம் செல்லுதற்கண் அந்தணர்க்கு உரிய சிறப்புவிதி

புலத்திற் சிறந்தபுரிநூன் முதல்வர்க்குக்

கலத்திற் சேறல் கடனன் றென்ப.ஷ

காலிற்சேறல் முதலாகிய மூன்று பிரிவுகளுள் கலத்தில் செல்லல் என்னும் பிரிவு அந்தணர்க்கு உரியதன்று.

## 3.44 அரசர்முதலிய தலைமக்கள் குலமகளிரோடு செல்லக் கூடாதவை:

வலனுயர்சிறப்பின் மற்றை மூவர்க்கும்

குலமட மாதரொடு கலமிசைச் சேறலும்

பாசறைச் சேறலும் பழுதனெ மொழிப.

குல மாதரொடு கலத்தில் சேறலும், குலமாதரொடு பாசறைச்சேறலும் ஆகிய இரண்டும் வேந்தர் முதலாகிய மூவர்க்குங் குற்றம் என்று சொல்லுவர் கற்றுவல்லோர்.

“மணன்மலி பூங்கானல்வருகலன்க ணோக்கிக்

குறிப்பு

கணவன்வரக் கல்லுருவ நீத்தாள்'' - குலமாதரொடுகலத்தில் செல்லாமை

''பனியிருங் கங்குலுந் தமியணீந்தித்
தம்மூ ரோளே நன்னுதல் யாமே
இரவுத்துயின் மடிந்த தானை
உரவுச்சின வேந்தன் பாசறை யோமே'' - குலமாதரொடு பாசறைக்கண் செல்லாமை. 'குலமாதரொடு செல்லார்' என்றமையால் பரத்தையரோடு செல்வர் என்பது பெறப்படும்.

''துயிலின்றி யானீந்தத்தொழுவையம் புனலாடி
மயிலியலார் மருவுண்டு மறந்தமைகு வான்மன்னோ
வெயிலொளி யறியாத விரிமலர்த் தண்காவிற்
குயிலாலும் பொழுதனெக் கூறுந ருளராயின்'' - பரத்தையரோடு பாசறைக்கண் சென்றது

## 3.45 தலைமகன் செலவழுங்கல்

ஓதல் முதலாகியஓதிய ஐந்தினும்
பிரிவோன் அழுங்கற்கும் உரிய னாகும்.

ஓதல் முதலாகச் சொல்லப்பட்ட ஐவகைப் பிரியும் தலைமகன் பிரிந்து போதலும் உண்டு, போகாமையும் உண்டு.

## 3.46 செலவழுங்கற்கு உரிய இடம்

இல்லத் தழுங்கலும்இடைச்சுரத் தழுங்கலும்
ஒல்லும் அவற்கென உரைத்திசி னோரே

பிரியக் கருதிய தலைமகன் இல்லின் கண் செலவழுங்குதலும்,இடைச்சுரத்தின்கண் செலவழுங்குதலும் பொருந்தும் என்பர் புலவர்.

''புணரிற் புணராதுபொருளே பொருள்வயிற்
பிரியிற் புணராத புணர்வே யாயிடைச்
சேரினுஞ் செல்லா யாயினும் நல்லதற்
குரியை வாழியென் நெஞ்சே பொருளே
வாடாப் பூவின் பொய்கை நாப்பண்
ஓடுமீன் வழியிற் கெடுவ யானே
விழுநீர் வியலகந் தூணி யாக
வெழுமா ணளக்கும் விழுநிதி பெறினுங்
கனங்குழைக் கமர்த்த சேயரி மழைக்கண்
அமர்ந்தினிது நோக்கமொடு செகுத்தன
னெனைய தாகுக வாழிய பொருளே'' - என்பது சான்றாம்.

## 3.47 செலவழுங்கற்குக் காரணம்

தலைவி தன்னையும்தன்மனந் தன்னையும்

அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது

செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

இல்லத்தில் தலைமகளையும் தன்னெஞ்சினையும் தேற்றுதல் காரணமாகவும்,இடைச்சுரத்தில் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் அழுங்குதல் மாத்திரமல்லது தலைமகன் போகானல்லன் என்பதாம்.

குறிப்பு

இல்லகத்துத் தலைமகளைத்தேற்றுதற்குச் செய்யுள் :

''பொன்னும் மணியும்போலும் யாழநின்
நன்னர் மேனியும் நாறிருங் கதுப்பும்
போதும் பணையும் போலும் யாழநின்
மாத ருண்கணும் வனப்பின் றோளு
மிவைகாண்டோறு மகமலிந் தியானு
மறநிலை பெற்றோ ரனையே னதன்றலைப்
பொலந்தொடிப் புதல்வனும் பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத் திலனே நினையின்
யாதனிற் பிரிவா மடந்தை
காத றானுங் கடலினும் பெரிதே'' - இல்லகத்துத் தலைமகளைத்தேற்றியது.

## 3.48 ஓதற்பிரிவுக்குக் காலம்

அவற்றுள்,

ஓதற் பிரிவுடைத்து ஒருமூன்று ஆண்டே.

மேற்சொல்லப்பட்ட பிரிவுகளுள் ஓதற்குப் பிரியும் பிரிவு மூன்றாண்டு எல்லையினை உடையது. எ

''வேண்டிய கல்வியாண்டு மூன் றிறவாது'' என்பது தொல்காப்பியம்

## 3.49 தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள்வயிற் பிரிவு

தூதிற் பிரிவும் துணைவயிற் பிரிவும்

பொருள்வயிற் பிரிவும் ஓர்ஆண்டு உடைய.

தூது காரணமாகப் பிரியும் பிரிவும், உதவி காரணமாகப் பிரியும் பிரிவும், பொருள் காரணமாகப் பிரியும் பிரிவும் ஓர் ஆண்டெல்லையினை உடையது.

''வேந்துறு தொழிலே யாண்டின தகமே'' எனவும்,

''பிரிவின் நீட்டம் நிலம்பெயர்ந் துறைவோர்க்
குரிய தன்றே யாண்டுவரை யறுத்தல்'' எனவும்,

''தூதும் பொருளும் ஓதிய வாகும்''

எனவும் தொல்காப்பியம். பரத்தையிற் பிரிவுக்கும் காவற்பிரிவுக்கும் ஆண்டு வரையறுக்காமைக்குக் காரணம், அவை காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரியப்படாமையால் ஆகும்.

## 3.50 பரத்தையிற் பிரிவு நிகழ்தற்காகாக் காலம்

பூத்த காலைப் புனையிழை மனைவியை

நீரா டியபின் ஈராறு நாளுங்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

பூப்பு நிகழுங் காலத்து நீராடியபின் பன்னிரண்டு நாளுங் கருப்படுங் காலமாதலால் பரத்தையிற் பிரிந்த தலைமகன் அப்பன்னிரண்டு நாளுந் தலைமகளைப் பிரியப் பெறான்.

"பூப்பின் புறப்பா டீரறு நாளும்
நீத்தகன் றுறையா ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான" - எனத் தொல்காப்பியர் எடுத்துரைத்தனர்.

## 3.51 ஓதற்குப் பிரிந்தவன் செய்தற்காகாதன

ஓதற் ககன்றோன் ஒழிந்திடை மீண்டு
போதற் கியையவும் புலம்பவும் பெறாஅன்.

ஓதற்குப் பிரிந்த தலைமகன் அவ் ஓதலையொழிந்து இடையிட்டு மீண்டு வருதற்குடம்படவும், அவ்விடத்துத் தலைமகளை நினைந்து புலம்பவும் பெறான்.

## 3.52 தூதும், துணையும் காரணமாகச் சென்றாற்கொரு சிறப்பி விதி

தூதுந் துணைமையும் ஏது வாகச்
சென்றோன் அவ்வினை நின்றுநீட்டித்துழிப்
புலந்து பாசறைப் புலம்பவும் பெறுமே.

தூது காரணமாகவும், உதவி காரணமாகவும் பிரிந்த தலைமகன் அத்தொழில்கள் பிரிவிற்குரியதோர் ஆண்டின்கண் முடியாது நீட்டித்த காலத்துப் பாசறைக்கண்ணே இருந்து தலைமகளை நினைந்து புலம்புதல் பெறும்.

## 3.53 கற்புக் காலத்துத் தலைமகளுக்கு உரிய ஒழுகலாறு

பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தலும்
நீத்தமை பொறாது நின்றுகிழ வோனைப்
பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறலும்
கிழவோற் கழறலும் வழிமுறை மனைவியைக்
கொழுநனொடு வந்தெதிர் கோடலும் அவனொடு
பாங்கொடு பரத்தையைப் பழித்தலும் நீங்கிப்
புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச்
சோலையுங் காவும் மாலையங் கழனியும்
மாலைவெள் ளருவியும் மலையுங் கானமும்
கண்டுவிளை யாடலும் கடும்புனல் யாறும்
வண்டிமிர் கமல வாவியும் குளனும்

ஆடிவிளை யாடலுங் கூடும் கிழத்திக்கு.

பூத்தமை சேடியிற் புரவலற்குணர்த்தல், பிரிந்தமை பொறாது நின்று தலைவனைப் பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறல்,கிழவோற் கழறல், வழிமுறை மனைவியைக் கொழுநனொடு வந்தெதிர் கோடல், அவனொடு பாங்கொடு பரத்தையைப் பழித்தல், நீங்கிப் புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச் சோலையுங் காவும் மாலையங் கழனியும் மாலைவெள் ளருவியும் மலையுங் கானமும் கண்டுவிளையாடல், கடும்புனல் யாறும் வண்டிமிர் கமல வாவியும் குளனும் ஆடிவிளை யாடல் ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கற்புக்காலத்துத் தலைமகட்குப் பொருந்தும்.

குறிப்பு

## 3.54 வாயில்களுள் பாணர்க்கு உரிய செயல்:

தமிழகத்தின் தொன்மையான இசைக்குடி மரபினைச் சேர்ந்தவர்கள் பாணர்கள் என்பவர்கள் ஆவர்.இவர்கள்தம் வாழ்க்கை பரிசில் வாழ்க்கை. தலைவன் மாட்டுத் தலைவி ஊடல் கொள்ளும் காலத்து இவர்கள் ஊடல் தீர்க்கும் வாயில்களாய் வந்தமைவர்.

வாயில் வேண்டலும் வாயினேர் வித்தலும்
சேயிழை யூடல் தீர்த்தலும் போயுழி
அவணலந் தொலைவுகண் டழுங்கலும் அவன்வயிற்
செல்ல லிரும்பலுஞ் சென்றவற் குணர்த்தலும்
சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன்
வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தலும்
அணிநலம் பெற்றமை யறியான் போன்றவட்
பணிவொடு வினாதலும் பாணற் குரிய.

வாயில் வேண்டல், வாயில் நேர்வித்தல், தலைவி ஊடல் தீர்த்தல், தலைவன் பிரிந்த வழி தலைவியின் தொலைவுகண்டு அழுங்கல், அவன்வயிற் செல்லவிரும்பல்,சென்றவற் குணர்த்தல், சொல்லிய கூற்றெனச் சொல்லலுங் கிழவோன் வரவு மீண்டுவந் தரிவைக் குணர்த்தல், அணிநலம் பெற்றமை யறியான் போன்றவட் பணிவொடு வினாதல் போன்றன பாணற் குரிய கிளவிகள் ஆகும்.

## 3.55 விறலிக்கு உரிய செயல்

செலவிற் றேற்றலும் புலவியிற் றணித்தலும்
வாயில் வேண்டலும் வாயில்நேர் வித்தலும்
தெரியிழை விறலிக் குரிய வாகும்.

தலைவன் செலவில் தேற்றல், புலவியில் தணித்தல், வாயில் வேண்டல், வாயில்நேர் வித்தல் என்பன விறலிக் குரிய வாகும்.

## 3.56 கூத்தர்க்கு உரிய செயல்

செல்வம் வாழ்த்தலும் நல்லறிவு கொளுத்தலும்
கலனணி புணர்த்தலும் காமநுகர் புணர்த்தலும்

குறிப்பு

புலவிமுதிர் காலைப் புலங்கொள வேதுவிற்
ரேற்றலும் சேய்மை செப்பலும் பாசறை
மேற்சென் றுரைத்தலும் மீண்டுவர வுணர்த்தலும்
கூற்றரு மரபிற் கூத்தர்க் குரிய.

செல்வம் வாழ்த்தல் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கூத்தர்க்கு உரியனவாம்.

## 3.57 இளையோர்க்கு உரிய செயல்

மடந்தையை வாயில் வேண்டலும் வாயில்
உடன்படுத் தலும்அவள் ஊடல் தீர்த்தலுங்
கொற்றவற் குணர்த்தலுங் குற்றேவல் செய்தலும்
சென்றுமுன் வரவு செப்பலும் அவன்றிறம்
ஒன்றிநின் றுரைத்தலும் வினைமுடி புரைத்தலும்
வழியியல்பு கூறலும் வழியிடைக் கண்டன
மொழிதலும் இளையோர் தொழிலென மொழிப.

மடந்தையை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் இளையோர்க்குரியனவாம்..

## 3.58 கண்டோர்க்கு உரிய செயல்

தீதுடைப் புலவி தீர்த்தலும் அவன்வரல்
காதலிக் குரைத்தலும் கண்டோர்க் குரிய.

புலவிதீர்த்தல் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாங் கண்டோர்க் குரியனவாம்.

## 3.59 பார்ப்பனப் பாங்கர்க்கு உரிய செயல

இளமையும் யாக்கையும் வளமையும் ஏனவும்
நிலையாத் தன்மை நிலையொடுத் துரைத்தலும்
செலவழுங்கு வித்தலும் செலவுடன் படுத்தலும்
பிறவு மெல்லா மறையோர்க் குரிய

இளமை முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பார்ப்பனப் பாங்கர்க் குரியனவாம்.

## 3.60 சூத்திரப்பாங்கர்க்கு உரிய செயல்

நன்மையின் நிறுத்தலுந் தீமையின் அகற்றலுஞ்
சொன்னவை பிறவுஞ் சூத்திரர்க் குரிய.

நன்மையின் நிறுத்தல் முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாஞ் சூத்திரப் பாங்கர்க்கு உரியனவாம்.

சொன்னவையும் பிறவும் என்றதனால் வாயில் வேண்டல் முதலாயினவும் அமையும்.

## 3.61 பாகற்கு உரிய செயல

சேயிழைக் கிழத்தியை வாயில் வேண்டலும்
வாயினோர் வித்தலும் வயங்குதுனி தீர்த்தலும்

வினைமுடித் ததன்பின் வியன்பதி சேய்த்தனெ

இனைவோற் றேற்றலும் பாகற் கியல்பே.

தலைமகளை வாயில்வேண்டல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாம் பாகற்கியல்பாம்.

குறிப்பு

### 3.62 செவிலிக்கும் அறிவர்க்கும் உரிய செயல்

முன்வரு நீதியும் உலகியல் முறைமையும்

பின்வரும் பெற்றியும் பிறவு மெல்லாந்

தெற்றெனக் கூறல் செவிலித் தாய்க்கும்

உற்ற வறிவர்க்கும் உரியன வாகும்.

முன்வருநீதி முதலாகச் சொல்லப்பட்டனவெல்லாந் தெளியச் சொல்லுதல் செவிலித்தாய்க்கும், பொருந்திய அறிவர்க்கும் உரியனவாம். "பிறவும்" என்றதனால் வாயில்வேண்டல் முதலாயினவுங் கொள்க.

### 3.63 காமக் கிழத்தியர்க்கு உரிய செயல்

குடிப்பிறந் தோரை வடுப்படுத் துரைத்தலும்

மனைவியைப் பழித்தலும் வாடா ஊடலுட்

டலைவற் கழறலும் மனைவிக் கமைந்த

ஒழுக்கமும் காமக் கிழத்தியர்க் குரிய.

குடிப்பிறந்தோரை வடுப்படுத்துரைத்தல் முதலாகச் சொல்லப்பட்டன வெல்லாங் காமக்கிழத்தியர்க்கு உரியனவாம்.

### 3.64 பரத்தையர்க்கு உரிய செயல்

கிழவோன் தன்னையுங் கிழத்தி தன்னையும்

இகழ்தலும் தம்மைப் புகழ்தலும் நிகழ்பொருள்

காத்தலும் பரத்தையர் கடனென மொழிப.

தலைமகனையுந் தலைமகளையும் இகழ்தல், தம்மைப் புகழ்தல் நிகழ்பொருள் காத்தல் பரத்தையர் முறைமையாகும்.

### 3.65 பரத்தையர்க்கு உரிய சிறப்புவிதி

பரத்தையரத் காதற் பரத்தையைப் புகழ்தலும்

தம்மை இகழ்தலும் தம்முளுங் கூறுப.

காதற் பரத்தையைப் புகழ்தலும், தங்களை இகழ்தலும் தம்முளேயும் கூறுவர் பரத்தையர்

### 3.66 இளையர் தலைமகற்கு இன்ன உரிமையர்

இளையர் கிழவோற் கிரவும் பகலும்

களைத லில்லாக் கவசம் போல்வார்.

இளையராவார் தலைமகற்கு இரவும் பகலும் நீங்காக் கவசம் போலுந் தன்மையர்.

### 3.67 இருவகைப் பாங்கர் உரிமை

இருவகைப் பாங்கரும் ஒருபெருங் குரிசிற்

கின்னுயிர்த் துணையா இருபெருங் குரவரும்
தன்னை யளித்த தகைமை யோரே.

பார்ப்பனப் பாங்கரும் சூத்திரப் பாங்கரும் என்னும் இருவருந் தலைமகற்கினிய உயிர்த்துணையாக அவன் தாயுந் தந்தையும் அவனை அடைக்கலமாகக் கொடுக்கப்பட்ட தன்மையோர் ஆவர்.

## 3.68 தோழி உரிமை

தோழி செவிலி மகளாய்ச் சூழ்தலோ
டுசாத்துணை யாகி அசாத்தணி வித்தற்
குரிய காதல் மருவிய துணையே.

தோழி என்பவள் செவிலிக்கு மகளாய் நன்மையும் தீமையும் ஆராய்தலுடனே தலைமகட்கு உசாத் துணையாய் அவளது வருத்தந் தீர்த்தற்குரிய அன்பு பொருந்திய துணையாய் அமைவாள்.

## 3.69 செவிலி உரிமை

செவிலி நற்றாய் தோழி யாகி
அவல நீக்கி அறிவுமா சாரமுங்
கொளுத்தித் தலைவியை வளர்த்த தாயே.

செவிலி என்பவள் தலைமகளுடைய நற்றாய்க்குத் தோழியாகி அத் தலைமகட்கு வருந் துக்கங் களைந்து நல்லறிவும் ஆசாரமுங் கொளுத்தித் தலைமகளை வளர்த்த தாயாவாள்.

## 3.70 அறிவர் உரிமை

அறிவர் கிழவோன் கிழத்தியென் றிருவர்க்கும்
உறுதி மொழிந்த உயர்பெருங் குரவர்.

அறிவரென்பார் தலைமகற்குந் தலைமகட்கும் உறுதியைப் பயக்கும் உபதேசங்களைச் சொல்லும் மேம்பட்ட குருக்கள் ஆவர்,

## 3.71 காமக்கிழத்தியர் இலக்கணம்

ஒருவன் தனக்கே உரிமை பூண்டு
வருகுலப் பரத்தையர் மகளி ராகிக்
காமக்கு வரைந்தோர் காமக் கிழத்தியர்.

காமக்கிழத்தியர் என்பார் சேரிப்பரத்தையர் போலப் பலர்க்கும் உரியரன்றி ஒருவற்கே உரிமை பூண்டு வருங்குலப் பரத்தையர். மகளிராய்க் காமங் காரணமாகத் தலைமகனால் வரைந்துகொள்ளப்பட்டார் ஆவர்.

## 3.72 காதற்பரத்தையர் இலக்கணம்

யாரையும் நயவா இயல்பிற் சிறந்த
சேரிப் பரத்தையர் மகளி ராகிக்
காதலிற் புணர்வோர் காதற் பரத்தையர்.

காதற்பரத்தையர் என்பவர்கள் யாவரையும் விரும்பாத இயல்பினால் மிக்க சேரிப்பரத்தையருடைய மகளிராய்த் தம் அன்பினால் தலைமகனோடு கூடுவார்.

## 3.73 காதற்பரத்தையர் உரிமை

அவருளும் வரைதற் குரியோ ருளரே.

காதற்பரத்தையருள்ளும் தலைமகனால் வரைந்துகோடற்கு உரியரும் உளர்.

குறிப்பு

## 3.74 தலைமகனும் தலைமகளும் துறவறம் கொள்ளுங் காலம்

மக்கெளாடு மகிழ்ந்து மனையறங் காத்து
மிக்க காம வேட்கை தீர்ந்துழித்
தலைவனுந் தலைவியுந் தம்பதி நீங்கித்
தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப.

மக்கெளாடு கூடி மகிழ்ந்து இல்லறத்தினைக் காத்துத் தமக்குப் பெருகிய காம வேட்கை யெல்லாம் தீர்ந்தகாலத்துத் தலைமகனும் தலைமகளும் தம்மூர் நீங்கி வனத்தின் கட் சென்று எல்லையில்லாச் சுற்றத்தொடு துறவறத்தினைக் காப்பர்.

**பயிற்சி வினாக்கள்:**

1.வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் என்பதனை விளக்குக.

வரைவிடை வைத்துப்பொருள்வயிற் பிரிவோர்
இருதுவின் கண்ணுடைத் தென்மனார் புலவர்.

வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதல் காடிடையிட்டும் நாடிடையிட்டும் பிரிதலின்,அது இரண்டு திங்களின் இகவாமையை உடைத்தென்று சொல்லுவர் ஆசிரியர்.

2. பரத்தையிற் பிரிவு நிகழ்தற்காகாக் காலம் குறித்து எழுதுக.

பூத்த காலைப் புனையிழை மனைவியை
நீரா டியபின் ஈராறு நாளுங்
கருவயிற் றுறூஉங் கால மாதலிற்
பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்.

பூப்பு நிகழுங் காலத்து நீராடியபின் பன்னிரண்டு நாளுங் கருப்படுங் காலமாதலால் பரத்தையிற் பிரிந்த தலைமகன் அப்பன்னிரண்டு நாளுந் தலைமகளைப் பிரியப் பெறான்.

3. தலைவன் செலவழுங்கற்குக் காரணம் யாது?

தலைவி தன்னையும்தன்மனந் தன்னையும்
அலமர லொழித்தற் கழுங்குவ தல்லது
செல்வத் தோன்றல் செல்லா னல்லன்.

இல்லத்தில் தலைமகளையும் தன்னெஞ்சினையும் தேற்றுதல் காரணமாகவும்,இடைச்சுரத்தில் தன்னெஞ்சினைத் தேற்றுதல் காரணமாகவும் அழுங்குதல் மாத்திரமல்லது தலைமகன் போகானல்லன் என்பதாம்.

குறிப்பு

4. களவில் ஊடல் தணிக்கும் வாயில்கள் யாவர்?

கொளைவல் பாணன்பாடினி கூத்தர்
இளையர் கண்டோர் இருவகைப் பாங்கர்
பாகன் பாங்கி செவிலி அறிவர்
காமக் கிழத்தி காதற் புதல்வன்
விருந்தாற் றாமை யென்றிவை ஊடல்
மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள் ஆகும்.

பாணன், பாடினி, கூத்தர், இளையர், கண்டோர், இருவகைப் பாங்கர்,பாகன் பாங்கி, செவிலி அறிவர், காமக் கிழத்தி, புதல்வன் விருந்தினர் எனப்படும் இவர்கள் அனைவரும் தலைமகள் ஊடலைத் தீர்க்கும் வாயில்களாவர்.

5. தூதிற் பிரிவுக்கு உரியவர்களைச் சுட்டியுரைக்க.

வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்கும்
தூது போதல் தொழிலுரித் தாகும்.

தூது போதல் தொழில் பார்ப்பாரும் வேந்தரும் என்னும் இருவர்க்கும் உரித்தாகும். பகைதணிவினை எனினும், தூதுவினை எனினும் ஒன்றேயாம்.

# கூறு: 4 - களவியல் - கைக்கிளை வகை – பாங்கி மதியுடன்பாடு

குறிப்பு

**நோக்கம்:.களவின் இலக்கணம் அறிதல் -எண்வகை மணம் குறித்துத் தெளிதல் - சிறப்புடை மரபின் களவினை அறிதல் - பாங்கர் கூட்டம் - பாங்கி மதியுடம்பாடு – பிரிவுழி மகிழ்ச்சி – கலங்கல் போன்றவற்றை தெரிந்து தெளிதல்.**

## 4.1 களவின் இலக்கணம்

உளமலி காதற் களவெனப் படுவது
ஒருநான்கு வேதத்து இருநான்கு மன்றலுள்
யாழோர் கூட்டத்து இயல்பின தென்ப.

இவ்வோத்து களவுணர்த்தினமையால் களவியல் என்னும் பெயரினை உடையதாகும். இதனுள் இத் தலைச் சூத்திரம் களவு கற்பு என்னுங் கைகோள் இரண்டனுள் களவென்னும் கைகோளினது இலக்கணம் உணர்த்திற்று.

உளம் மலிதற்குக் காரணமாகிய அன்பினையுடைய களவென்று சொல்லப்படுகிறது. நான்காகிய வேதத்துட் சொல்லப்பட்ட எட்டாகிய மணத்துட் காந்தருவ மணத்தோடு ஒத்த இயல்பினை உடையதென்று சொல்லுவர் புலவர்.

“இன்பமும் பொருளு மறனு மென்றாங்
கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கிற்
காமக் கூட்டங் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்ற லெட்டனுட்
டுறையமை நல்லியாழ்த் துணைமையோ ரியல்பே”

என்பது தொல்காப்பியம். வேதம் நான்காவன, இருக்கு முதலாயின, மன்றல் எட்டாவன, பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம் தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாம்.

**எண்வகை மணம்:**

**பிரமம்**: பிரமசாரியாய்த் தக்கானுமாய் இருப்பானுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

**பிரசாபத்தியம்**: தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரும் மறாதே உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

**ஆரிடம்**: ஒன்றானுமிரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

**தெய்வம்:** வேள்வியாசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

குறிப்பு

**காந்தருவம்:**கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது.

**ஆசுரம்:** தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்வது.

**இராக்கதம்:** தலைமகடன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது. பைசாசமாவது, துயின்றோள்மாட்டும் களித்தோள் மாட்டும் சென்று சேர்வது. இவற்றுள், ஆசுர முதலாகிய மூன்றும் கைக்கிளைக்கு உரியதாகும். தெய்வம் ஈறாகிய நான்கும் பெருந்திணைக்கு உரியதாகும்.

"முன்னைய மூன்றுங் கைக்கிளைக் குறிப்பே
பின்னைய நான்கும் பெருந்திணை பெறுமே"- தொல்காப்பியம்.

## 4.2 கைக்கிளையின் பாகுபாடு

காட்சி ஐயந் துணிவு குறிப் பறிவென
மாட்சி நான்கு வகைத்தே கைக்கிளை.

கைக்கிளை, காட்சி, ஐயம்,துணிவு, குறிப்பறிதல் எனச் சொல்லப்பட்ட நான்கு வகையினை உடைத்தாகும்.

## 4.3 காட்சி

புணர்ப்பதும் பிரிப்பது மாகிய பால்களுட்
புணர்க்கும் பாலிற் பொருவிறந் தொத்த
கறைவேற் காளையுங் கன்னியுங் காண்ப
இறையோன் உயரினுங் குறைவின் றென்மனார்.

முற்பிறப்பினுள் காமம் நுகர்ந்த தலைவனும் தலைவியும் ஆகிய இருவரையும் மறுபிறப்பிலும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள் நல்வினை வயத்தால் தனியிடத்து எதிர்ப்படுவர். குலத்தானுஞ் செல்வத்தானும் அறிவானும் பிறவாற்றாலும் தம்மோடு ஒத்தாரு மிக்காரும் இன்றித் தம்மில் தாமே ஒத்த தலைமகனும் தலைமகளும், அவருள் தலைமகன் உயர்ந்தவனாயினும் குற்றமின்றென்று சொல்லுவர் புலவர். எனவே, தலைமகள் உயர்தல் குற்றம் ஆகும்.

"புயலே சுமந்து பிறையே யணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமல மலர்ந்தொரு கற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை யன்னஞ்செந்நெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே",எனவும் வரும்

## 4.4 ஐயம்

மடமா னோக்கி வடிவுங் கண்ட
இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்.

தலைமகள் வடிவும் அவளைத் தான்கண்ட இடமுஞ் சிறப்புடையதாகிய காலத்துத் தலைமகன்பால் ஐயம் நிகழும். எனவே, அவை சிறப்புடைய

அல்லாத காலத்து ஐயம் நிகழாது. எனவே தலைவன் தலைவி மண்மகளோ, தெய்வ மகளோ என்று ஐயுற்று நிற்பான்.

"அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு"

## 4.5 துணிவு

குறிப்பு

தலைவியின்பால் ஐயுற்ற தலைவன் அவளிடத்து மானிடப் பெண்டிர்க்குத் தோன்றும் குறிப்புக் கண்டு துணிதல்

எழுதிய வல்லியுந் தொழில்புனை கலனும்
வாடிய மலரும் கூடிய வண்டும்
நடைபயில் அடியும் புடைபெயர் கண்ணும்
அச்சமும் பிறவும் அவன்பா னிகழுங்
கச்சமில் ஐயங் கடிவன வாகும்.

எழுதிய வல்லி, தொழில்புனை கலன், வாடிய மலர், வண்டு, நிலத்தில் தோயா அடி இடமையா கண், அச்சம் எனச் சொல்லப்பட்ட ஏழும் அவைபோல்வன பிறவுந் தலைமகன்மாட்டு உள்ளதாகிய ஐயங்களைப் போக்கும் கருவிகள் ஆகும்..

"திருநுதல் வேரரும்புந் தேங்கோதை வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயு-மரிபரந்த
போகித முண்கணு மிமைக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே"

## 4.6 குறிப்பறிதல்

அரிவை நாட்ட மகத்துநிகழ் வேட்கை
தெரிய வுணர்த்துங் குரிசிற் கென்ப.

தலைமகள் உள்ளத்து நிகழ்ந்த வேட்கையினைத் அவள் கண் தலைமகற்கு விளங்க அறிவிக்கும்.

"இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து"

## 4.7 களவிற்கு உரிய கிளவித் தொகை

இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே இரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்

குறிப்பு

பொருள்வயிற் பிரிதலென் றொருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு,பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல்,இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்,பாங்கிமதி யுடம்பாடு, பாங்கியிற் கூட்டம், பகற்குறி, பகற்குறி யிடையீடு,இரவுக் குறி, இரவுக்குறி யிடையீடு, வரைவு வேட்கை, வரைவு கடாதல்,ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப்பொருள்வயிற் பிரிதல் என்னும் பதினேழும் களவென்னுங் கைகோளிற்கு உரிய கிளவியின் தொகையாம்.

**இயற்கைப் புணர்ச்சி**

## 4.8 இயற்கைப் புணர்ச்சியின் இலக்கணம்

தெய்வம் புணர்ப்பச் சிந்தைவே றாகி
எய்துங் கிழத்தியை இறையோ னென்ப.

தெய்வங் கூட்டத் தன்மனம் வேறாய்த் தலைமகளைக் கூடுந் தலைமகன் என்று சொல்லுவர் புலவர்.

## 4.9 தெய்வத்தின் எய்தும் புணர்ச்சியின் விரி

கலந்துழி மகிழ்தலும் நலம்பா ராட்டலும்
ஏற்புற வணிதலும் என்னுமிம் மூன்றும்
போற்றிய தெய்வப் புணர்ச்சியின் விரியே.

கலந்துழி மகிழ்தலும் நலம்பாராட்டலும் ஏற்புற அணிதலும் என்னும் இம் மூன்று கிளவியும் அகத்திணையியலுட் போற்றப்பட்ட தெய்வப் புணர்ச்சியின் விரியாகும்.

## 4.10 தலையிவின் எய்தும் புணர்ச்சியின் வகை

வேட்கை யுணர்த்தல் மறுத்தல் உடன்படல்
கூட்டமென் றிறைவியிற் கூட்டநால் வகைத்தே.

வேட்கையுணர்த்தல், மறுத்தல், உடன்படல், கூட்டம் ஈறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினை உடையன தலைமகளாற் புணரும் புணர்ச்சி ஆகும்..

## 4.11 தலைவியின் எய்தும் புணர்ச்சியின் விரி

இரந்துபின் னிற்றற் கெண்ணலும் இரந்து
பின்னிலை நிற்றலும் முன்னிலை யாக்கலும்
மெய்தொட்டுப் பயிறலும் பொய்பா ராட்டலும்
இடம்பெற்றுத் தழாஅலும் வழிபாடு மறுத்தலும்
இடையூறு கிளத்தலும் நீடுநினைந் திரங்கலும்
மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும்
முறுவற்குறிப் புணர்தலும் முயங்குத லுறுத்தலும்
புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் பிறவும்
உணர்த்திய தலைவியிற் புணர்ச்சியின் விரியே.

இரந்து பின்னிற்றற்கு எண்ணல், இரந்து பின்னிலை நிற்றல், முன்னிலை யாக்கல், மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல்,இடம்பெற்றுத்தழால், வழிபாடு மறுத்தல், இடையூறு கிளத்தல், நீடுநினைந் திரங்கல்,மறுத்தெதிர் கோடல், வறிதுநகை தோற்றல், முறுவற்குறிப் புணர்தல், முயங்குத லுறுத்தல், புணர்ச்சியின் மகிழ்தல், புகழ்தல் எனச் சொல்லப்பட்ட பதினைந்தும் பிறவும் மேற்சொல்லப்பட்ட தலைமகளாற் புணரும் புணர்ச்சியின் விரியாகும்.

**இரந்து பின் நிற்றற்கு எண்ணல் - சான்று**

“தேங்கிய காதர வாதரஞ் செப்பித்தண் செப்பிணைபோல்
வீங்கிய மாமுலை மேவுதும் யாம்விச யக்கொடிமேல்
வாங்கிய சாப முயர்த்தவன் போர்வென்ற வாணன்வையந்
தாங்கிய மாலனை யான்றஞ்சை சூழ்வரைத் தாழ்குழற்கே”

**முன்னிலையாக்கல்- சான்று**

“வழுதியர் நாமம் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவண்டு
கொழுதிய லார்செய் குழன்மட வீர்நுங்குற் றேவல்செய்து
தொழுதிய லாயத் தொகுதியோ டாடிச் சுனைகுடையா
தெழுதிய பாவையைப் போனின்றவாறென் னியம்புமினே”

**மெய்தொட்டுப் பயிறல் - சான்று**

“நல்லார் விழிபோ லிருந்து மளியெனு நாமம்பெற்றும்
அல்லார் குழிலி லமர்ந்திருந் தாலம ராரைவெல்ல
வல்லான் வரோதயன் வாணன்றென் மாறை மதுகரங்கா
ணில்லா திடையுமக் கேபழி சால நிலைநிற்குமே”

**பொய்பாராட்டல் - சான்று**

“மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி”

**இடம்பெற்றுத் தழாஅல் - சான்று**

“படம்பட்ட வானர வல்குலி லேதளை பட்ட நெஞ்சம்
விடம்பட்ட வாள்பட்ட வேதனை தீரவிண் டோய்பொழிலுந்
தடம்பட்ட வாவியுஞ் சூழ்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநா
மிடம்பட்ட வார முலைத்தடந் தோய்தற் கிடமிதுவே”

**நீடுநிளைந் திரங்கல் - சான்று.**

“தமிழ்தங் கியதஞ்சை காவலன் வாணன் றடஞ்சிலம்பிற்
குமிழ்தங் கியமதிக் கொம்பரன் னீர்குளிர் வெண்ணிலவூ
டுமிழ்தண் டரளப் பவளச்செங் கேழ்வள்ளத் துள்ளிருக்கும்
அமிழ்தந் தருவதென் றோபெரு வேட்கையென் னாருயிர்க்கே”

குறிப்பு

**மறுத்தெதிர்கோடல் - சான்று**

"பண்டுநாம், வேறல்ல மென்பதொன் றுண்டா லவனொடு
மாறுண்டோ நெஞ்சே நமக்கு"

**வறிதுநகை தோற்றல்: சான்று**

"அன்னையோ, மன்றத்துக் கண்டாங்கே சான்றார் மகளிரை
யின்றி யமையோனென் றின்னவுஞ் சொல்லுவாய்"

**முறுவற்குறிப்புணர்தல் -சான்று**

"முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு"

முயங்குதலுறுத்தற்குச் செய்யுள்.

கோட லெதிர்முகைப் பசுவீ முல்லை
நாறிதழ்க் குவளையோ டிடைப்பட விரைஇ
யைதுதொடைமாண்ட கோதைபோல
நறிய நல்லோண் மேனி
முறியினும் வாய்வது முயங்கற்கு மினிதே"

**புணர்ச்சியின் மகிழ்தல் - சான்று**

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடி கண்ணே யுள"

**புகழ்தல் - சான்று**

"திரண்மா மரகதச் செய்குன்று காளென்றுஞ் செல்வன நீர்
முரண்மா தவங்கண் முயன்றுசெய் தாலு முளரிமங்கை
சரண்மாறை வாணன் றமிழ்த்தஞ்சை நாட்டென் றனியுயிர்க்கோர்
அரண்மா னனையகண் ணாள்கொங்கை போற லரிதுமக்கே"

இவற்றுள் இரந்து பின்னிற்றற்கெண்ணல் முதலாக நீடு நினைந்திரங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதனுள், வழிபாடு மறுத்தல் ஒன்றுமொழித்தல்லதன எட்டும் வேட்கையுணர்த்தற்குரியவாம்.. வழிபாடு மறுத்தலாய ஒன்றுந் தலைமகள் மறுத்தற்குரித்தாம்.. மறுத்தெதிர் கோடலும் வறிதுநகை தோற்றலும் என்னுமிரண்டுந் தலைமகள் உடன்பாட்டிற்குரியவாம்.. முறுவற் குறிப்புணர்தலும் முயங்குதலுறுத்தலும் தலைமகள் உடன்பாட்டிறிகுரியவாம்.. புணர்ச்சியின் மகிழ்தலும் புகழ்தலும் என்னும் இரண்டுந் தலைமகன் கூட்டத்திற்குரியவாம். "பிறவும்" என்றதனால் அணிதலும் கொள்ளப்படும்.

**வன்புறை**

## 4.12 வன்புறையின் வகை

குறிப்பு

இயற்கைப்புணர்ச்சியின்கண் தலைவியைச் சந்தித்த தலைவன் பிரியும் இடத்துத் தலைவி வருந்துவாள்.அது கண்ட தலைவன் தாங்கள் மீண்டும் சந்திப்பதற்கான வாய்ப்பினை உருவாக்கும் வண்ணம் தலைவியிடம் அந்தப் பொழிலிடத்துச் சென்று திரும்பி வருகிறேன் என்று கூறுவான். அத்தகைய பிரிவினைப் பொறுக்க இயலாத தலைவி வருந்துவாள்.அந்த நிலையில் தலைவன் அவளிடத்து உன்னைப் பிரியேன், பிரியின் உயிர் தரியேன் என வற்புறுத்திக் கூறுவான் இத்தகைய செயலே வன்புறை எனப்படும்.

ஐயந்தீர்த்தல் பிரிவறி வுறுத்தலென்
றெய்திய வன்புறை யிருவகைத் தாகும்.

வன்புறை ஐயந்தீர்த்தலும் பிரிவறிவுறுத்தலும் என இரண்டு கூற்றினையுடைத்தாம்

## 4.13 வன்புறையின் விரி

அணிந்துழி நாணிய துணர்ந்துதெளி வித்தலும்
பெருநயப் புரைத்தலும் தெய்வத்திறம் பேசலும்
பிரியே னென்றலும் பிரிந்துவரு கென்றலும்
இடமணித் தென்றலும் என்றிவை யாறும்
மடனறத் தெரிந்த வன்புறை விரியே.

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல்,பெருநயப் புரைத்தலும் தெய்வத்திறம் பேசல்,பிரியேன் என்றல், பிரிந்துவரு கென்றல், இடமணித் தென்றல் எனும் ஆறும் தலைமகன் தலைமகளது அறிவின்மை நீங்க ஆராய்ந்து சொன்ன வன்புறையின் விரியாகும். இவற்றுள், முன்னைய மூன்றும் ஐயந்தீர்த்தற்குரியதாகும்.பின்னைய மூன்றும் பிரிவறிவுறுத்தற்குரியதாகும்.

வன்புறுத்தலான் வன்புறை என்று பெயராயிற்று.

**அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் - சான்று.**

"காவியுங் காரகி லாவியுந் தோய்குழ னாணியஞ்சேல்
வாவியுஞ்சோலையுஞ் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவயற்
காயிவுஞ் சேலுங் கமலமுங் காட்டுநின் கண்மலரும்
ஆவியும் போலினி யாரணி யாக வணிந்தனனே"

**பெருநயப் புரைத்தல் -சான்று**

"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைந் தும்பி
காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
செறியெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோ நீ யறியும் பூவே"

**தெய்வத்திறம் பேசல் - சான்று**

''மன்னிய பார்புகழ் வாணன் றென்மாறையின் மாந்தணீர்போன்
மின்னிய மாமை விளர்ப்பதென் னேவிதி கூட்டநம்மிற்
பின்னிய காதல் பிரிப்பவர் யாரினிப் பேரருவி
இன்னிய மாக விளமயி லாடு மிரும்பொழிற்கே''

குறிப்பு

**பிரியேன் என்றல் - சான்று.**

''யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதுஞ்
செம்புலப் பெய்ந்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே''

**பிரிந்து வருகென்றற்குச் சான்று**

''சென்றே பகைவென்ற திண்படை வாணன் செழுந்தஞ்சைசூழ்
நன்றே தருவையை நாடனை யாய்நம தாருயிர்போல்
ஒன்றே யென துரை யூங்குயர் சோலையி னூடொளித்து
நின்றே வருவலிங் கேவிளை யாடுக நீசிறிதே''

**இடமணித் தென்றற்குச் சான்று**

''மணிபொன் சொரியுங்கை வாணன்றென் மாறை மருவினர்போல்
தணிபொன் சொரியுந் தடமுறை யாயுயர் சந்தமுந்தி
அணிபொன் சொரியு மருவியெஞ் சார லகத்தலர்தேங்
கணபொன் சொரியுநன் சாரன்மென் காந்தளங் கையகத்தே''

இவற்றுள், முன்னைய மூன்றும் ஐயந்தீர்த்தற்குரியதாம். பின்னைய மூன்றும் பிரிவறிவுறுத்தற்குரியதாகும்.

**தெளிவு**

## 4.14 தெளிவு:

பிரிந்து சென்ற தலைமகன் வாராதது கண்டு வருந்திய தலைவி அவன் கூறிச் சென்ற உறுதி மொழியால் மனம் அவ்விடத்து இருந்து அகறல் தெளிவு என்பதாகும்.

தலைவன் மாற்றந் தலைவி தேற்றம்
தெளிவாம் என்பர் தெளிந்திசி னோரே.

தலைமகன் சொல்லைத்தலைமகள் தெளிதலைத் தெளிதலென்று சொல்லுவர்புலவர்.

**சான்று:**

''எத்துந் தமதுரை தேறிநின் றேனையீங் கேதணியே
வைத்தங் கான்று மறந்துறை யார்வறி யோர்கவர
முத்துந் துகிரு மிரங்குந் தரங்க முகந்தெறிந்து

தத்துங் கரைவையை சூழ்தஞ்சை வாணன் தமிழ்வெற்பரே''

**பிரிவுழி மகிழ்ச்சி:**

தலைவியை அவ்விடத்து விட்டுப் பிரிய வேண்டும் எனக் கருதும் தலைவன் இதோ போய்வருகிறேன் என்று சொல்லி செல்வான் போன்று காட்டி அவ்வாறு செல்லாது மறைவிடத்து இருந்து தலைவியின் அழகினைக் கண்டு மகிழ்தல் பிரிவுழி மகிழ்ச்சி எனப்படும்.

குறிப்பு

## 4.15 பிரிவுழி மகிழ்ச்சியின் விரி

செல்லும் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலும் இரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

தலைவியை அவ்விடத்து விட்டுப் நீங்கிய தலைவன் தலைவி தன்னைக் காணா இயலாத இடத்து நின்று கொண்டு தான் அவளின் செலவு கண்டு தன்னெஞ்சொடு கூறலும் பாகனொடு கூறலுமாகிய இவ்விரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாம்.

**செல்லும் கிழத்தி செலவுகண்டு உளத்தொடு சொல்லல் -சான்று**

''காணாமரபிற் றுயிரென மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே -----
மழைக்கண் மாதர் பணைபெருந் தோட்டே''

**பாகனொடு சொல்லல் - சான்று**

''தென்பாற் றிலகமன் னான்றஞ்சை வாணன்றென் -----
பின்பார்த் தொதுங்குதல் காண்வல வாவொரு
பெண்ணணங்கே''

## 4.16 பிரிவுழிக் கலங்கலின் வகை:

தலைவியை அவ்விடத்து விட்டுப் நீங்கிய தலைவன் சிறிது கலக்கம் அடைவான். தான் அவளை நாளை சந்தித்தல் இயலுமோ இயலாதோ என எண்ணி வருந்துவான். இது பிரிவுழிக் கலங்கல் எனப்படும்.

மருளுற் றுரைத்தல் தெருளுற் றுரைத்தலென்று
இருவகைத் தாகும் பிரிவுழிக் கலங்கல்.

இது மருளுற்றுரைத்தல், தெருளுற்றுரைத்தல் என இரண்டு வகையினை உடைத்தாகும்

## 4.17 பிரிவுழிக் கலங்கலின் விரி:

.ஆய வெள்ளம்வழிபடக் கண்டிது
மாயமோ வென்றலும் வாயில்பெற் றுய்தலும்
பண்புபா ராட்டலும் பயந்தோர்ப் பழிச்சலுங்
கண்படை பெறாது கங்குனோ தலுமெனும்
ஐந்தும் பிரிவுழிக் கலங்கல் விரி யாகும்.

குறிப்பு

தலைமகளை ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ என்றல், வாயில்பெற்றுய்தல், பண்புபா ராட்டல், பயந்தோர்ப் பழிச்சல்,கண்படை பெறாது கங்குல் நோதல் என்னும் ஐந்தும் பிரிவுழிக் கலங்கலின் விரியாம். இவற்றுள் ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோ என்பதாகிய ஒன்று மருளுற்றுரைத்தற்குரிதாகும். ஏனைய நான்குந் தெருளுற்றுரைத்தற்குரியன ஆகும்.

**ஆயவெள்ளம் வழிபடக் கண்டிது மாயமோவெனல்:**

“மனவே ரல்குன் மடந்தை கூட்டங்
கனவே தெரியினும் யாவது
நனவே தெரியினு நண்ணலோ வரிதே”

**வாயில்பெற்றுய்தல்:**

“பெருமான் மருந்தொன்று பெற்றனம்
யாநெஞ்சம் பேதுறல்பார் -----
வொருமா னகைமுக மாமல ரோடை யுலாவருமே”

**பண்பு பாராட்டல்:**

“மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில் வாய்ந்தவர்கண் ----
இயலா மனைத்தையும் வேறென்ன பேரீட்டியம்புவதே”

**பயந்தோர்ப் பழிச்சல்:**

“அணியுஞ் சுடர்விரி சங்குபங் கோருக மாடகமும்
மணியுந் தரமன்னி வாழிய ரோதஞ்சை வாணன் வெற்பில்
தணியுந் தொழிலொழித் தின்பமுந் துன்பமுந் தன்பதமே
பணியும் பணியெனக் குப்பயந் தாளைப் பயந்தவரே”

**கண்படை பெறாது கங்குனோதல்:**

“வாமக் கலையல்குல் வாணுத லார்தஞ்சை வாணன்வெற்பில்
காமக் கலவி நலங்கவர் போது நமக்களித்த
காமக் கனலவர் கையகல் காலைக் கடும்பனிகூர்
யாமக் கடலகத் துந்தணி யாதினி யென்செய்துமே”

**இடந்தலைப்பாடு:**

தலைவியை முதல்நாள் சந்தித்த இடத்தே தந்த தெய்வம் தரும் எனக் கருதி வந்து அவளைச் சந்தித்து மகிழ்வது இடந்தலைப்பாடு எனப்படும்.

## 4.18 இடந்தலைப்பாட்டின் வகை

தெய்வந் தெளிதல் கூடல் விடுத்தலென்
றிவ்வோர் மூவகைத் திடந்தலைப் பாடே.

இடந்தலைப்பாடு தெய்வந்தெளிதல், கூடல், விடுத்தல் என்னும் மூன்றுவகையினை உடையதாகும்

## 4.19 இடந்தலைப்பாட்டின் இலக்கண விரி

குறிப்பு

தந்த தெய்வந் தருமெனச் சேறலும்
முந்துறக் காண்டலும் முயங்கலும் புகழ்தலும்
உடன்புண ராயத் துய்த்தலும் எனவைந்
திடந்தலைப் பாட்டி னிலக்கண விரியே.

தந்த தெய்வந் தருமெனச் சேறல்,முந்துறக் காண்டல்,முயங்கல் உடன்புணராயத் துய்த்தல் என்னும் ஐந்தும் இடந்தலைப்பாட்டின் இலக்கணவிரியாம்.இவற்றுள், தந்ததெய்வந் தருமெனச் சேறலாகிய ஒன்று தெய்வந் தெளிதற்கு உரித்தாம். காண்டலும் முயங்கலும் புகழ்தலுமாகிய மூன்றும் கூடற்குரியதாகும்.ஆயத்துய்த்தலாகிய ஒன்று விடுத்தற்கு உரித்தாகும்.

**தந்ததெய்வந் தருமெனச் சேறல்:**

“மன்றும் பொதியினு மாமயில் சேர்தஞ்சை வாணன்வெற்பில்
துன்றும் புயலிளஞ் சோலையின் வாய்ச்சுற வுக்குழையைச்
சென்றுந்து சேல்விழி மின்னைமுன் னாட்டந்த தெய்வநமக்
கின்னுந் தருநெஞ்ச மேயெழு வாழியிங் கென்னுடனே”

**முந்துறக் காண்டறல்:**

“மருவாய நாப்பண் மயிலுரு வாய்நென்னல் வாணன்றஞ்சைத்
தருவாய்த் தழைகொய்து தண்புனங் காத்துத் தடங்குடைந்து
திருவாய் மலர்ந்து சிலம்பெதிர் கூயின்றொர் தெய்வதப்பெண்
உருவா யொருதனி யேநின்ற தாலென் னுயிர்க்குயிரே”

**முயங்கற்குச் செய்யுள் :**

“மானா கரன்றஞ்சை வாணன் வரோதயன் மறையன்னான்
தானாவி நின்றலர் தாமரை யேயத் தடமலர்வா
யானா தொழுகுசெந் தேனல்லி மேவு மரசவன்னம்
யானா கிடைப்பது வேயின்ன பான்மை யிருவர்க்குமே”

**புகழ்தற்குச் செய்யுள்:**

“அரும்பா மளவிற் றனத்தொடவ் வாயல ராமளவிற்
கரும்பா மொழிவதனத்தொடொவ் வாய்களி யானைசெம்பொன்
தரும்பாரி வாணன் றமிழ்த்தஞ்சை யான்றரி யாரின்முன்செய்
பெரும்பாவ மல்லது நீர்நின்ற பேறல்லி பெற்றிலையே”

**ஆயத்துய்த்தல்:**

“மேவிக் கலைக்கட லென்புலன் மீனுண்டு மீண்டுவந்த
ஆவிக் கமலத் தமரன்ன மேநின் னயில் விழிபோல்
வாவிக் கயலுக ளுந்தஞ்சை வாணன் வரையினுடன்

குறிப்பு

கூவிக் கயங்குடை நின்குயி லாயங் குறுகுகவே”

**பாங்கற் கூட்டம்:**

இரண்டு நாட்கள் சந்தித்து மகிழ்ந்த தலைமக்கள் மூன்றாம்நாள் தோழனின் கூட்டத்தால் சேரல் பாங்கற் கூட்டம் எனப்படும்.

## 4.20 பாங்கற் கூட்டத்தின் வகை

சார்தல் கேட்டல் சாற்றல் எதிர்மறை
நேர்தல் கூடல் பாங்கிற் கூட்டலென்று
ஆங்கெழு வகைத்தே பாங்கற் கூட்டம்.

பாங்கற் கூட்டம் சார்தல், கேட்டல், சாற்றல், எதிர்மறை,நேர்தல், கூடல், பாங்கிற் கூட்டல் என்னும் எழு வகையினை உடைத்தாம்.

## 4.21 பாங்கற் கூட்டத்தின் விரி

தலைவன் பாங்கனைச் சார்தலும் பாங்கன்
றலைவனை யுற்றது வினாதலும் தலைவன்
உற்ற துரைத்தலும் கற்றறி பாங்கன்
கழறலும் கிழவோன் கழற்றெதிர் மறுத்தலும்
கிழவோற் பழித்தலும் கிழவோன் வேட்கை
தாங்கற் கருமை சாற்றலும் பாங்கன்
தன்மனத் தழுங்கலும் தலைவனோ டழுங்கலும்
எவ்விடத் தெவ்வியற் றென்றலும் அவன.
திவ்விடத் திவ்வியற் றென்றலும் பாங்கன்
இறைவனைத் தேற்றலும் குறிவழிச் சேறலும்
இறைவியைக் காண்டலும் இகழ்ந்ததற் கிரங்கலும்
தலைவனை வியத்தலும் தலைவியை வியத்தலும்
தலைவன் றனக்குத் தலைவிநிலை கூறலுங்
தலைவன் சேறலும் தலைவியைக் காண்டலும்
கலவியின் மகிழ்தலும் புகழ்தலும் தலைவியைப்
பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்
கூட்டலும் என்றீங் கீட்டுநா லாறுங்
காட்டிய பாங்கற் கூட்டத்து விரியே.

தலைவன் பாங்கனைச் சார்தல், பாங்கன் தலைவனை உற்றது வினாதல், தலைவன் உற்ற துரைத்தல், பாங்கன் கழறல், கிழவோன் கழற்றெதிர் மறுத்தல், கிழவோற் பழித்தல், கிழவோன் வேட்கை தாங்கற் கருமை சாற்றல், பாங்கன் தன்மனத் தழுங்கல், தலைவனோ டழுங்கல்,எவ்விடத்து எவ்வியற்று என்றல், இவ்விடத்து இவ்வியற்று என்றல், பாங்கன் இறைவனைத் தேற்றல்,குறிவழிச் சேறல், இறைவியைக் காண்டல், இகழ்ந்ததற் கிரங்கல், தலைவனை வியத்தல், தலைவியை வியத்தல்,தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல், தலைவன் சேறல்,

தலைவியைக் காண்டல், கலவியின் மகிழ்தல், புகழ்தல், தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல் பாங்கிற் கூட்டல் ஈறாக இவ்விடத்துத் தொகுத்த இருபத்துநான்கும் பாங்கற்கூட்டத்து விரியாம். இவற்றுள், முன்னைய மூன்றும் சார்தல் கேட்டல் சாற்றல் என்னும் மூன்றற்கும் உரியவாம். பாங்கன் கழறல் முதலாகக் கிழவோன் வேட்கை தாங்கற்கு அருமை சாற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட நான்கும் எதிர்மறுத்தற்கு உரியவாம். பாங்கன் தன் மனத்து அழுங்கல் முதலாகத் தலைவன் தனக்குத் தலைவிநிலை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்றும் நேர்தற்குரியவாம். தலைவன் சேறல் முதலாகத் தலைவியைப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட நான்குங் கூடற்குரியவாம். தலைவன் பாங்கியொடு வருகெனப் பகர்தலும் பாங்கிற்கூட்டலும் ஆகிய இரண்டும் பாங்கிற்கூட்டற் குரியவாகும்.

**தலைவன் பாங்கனைச் சார்தல்**

‘‘புனையாழி யங்கைப் புயல்வளர் பாற்கடற் பூங்கொடிவாழ்
மனையா கியதஞ்சை வாணனொன்னாரென மற்றிங்ஙனே
இனையா தெழுமதி நன்னெஞ்ச மேநமக் கின்னுயிரே
அனையா னருட்புன லாலனங் காலை மாற்றுதற்கே’’

**பாங்கன் தலைவனை உற்றது வினாதல்**

‘‘வலம்புரி போற்கொடை வாணன்றென் மாறை மழைவளர்பூஞ்
சிலம்புறை சூர்வந்து தீண்டின போலொளி தேம்பியிவ்வா
றுலம்புனை தோளுநின் னுள்ளமும் வாடி யுருகிநின்று
புலம்புல தென்னைகொல் லோசொல்ல வேண்டும் புரவலனே’’

**தலைவன் உற்றது உரைத்தல்:**

‘‘மலைமுழு துங்கொற்றம் வைக்கின்ற வாணன்றென் மாறை நண்பா
சிலைமுழு துஞ்சுற்று முற்றுமெய் யாநிற்பச் செந்நிறத்தே
கொலைமுழு துங்கற்ற கூரிய வாளி குளிப்பவின்றென்
கலைமுழு தும்பட்ட தாலொரு மான்முடிக் கண்ணியிலே’’

**பாங்கன் கழறல்:**

‘‘தருகற் பசுமன்ன சந்திர வாணன் றடஞ்சிலம்பின்
முருகக் கடவுளனையவெற் பாமுகி லும்பிறையுஞ்
செருகக் கிளர்வரை வந்தவொர் பேதைக்குன் சிந்தையெல்லாம்
உருகக் கலங்கினை நீதகு மோமற் றுனக்கிதுவே’’

**கிழவோன் கழற்றெதிர் மறுத்தல்:**

‘‘மாலாய் மதம்பொழி வாரண வாணன்றென் மாறையன்னா
சேலார் கருங்கண்ணுஞ் செங்கனி வாயுஞ் சிறிய நுண்ணேர்
நூலார் மருங்கும் பெருந்தன பாரமு நும்மையன்றி

குறிப்பு

மேலா னவருங்கண் டாலுரை யாரிந்த வீரங்களே"

**பாங்கன் கிழவோற் பழித்தல்:**

"சூரார் சிலம்பிற் சிலம்பிமென் னூல்கொண்டு சுற்றவெற்றிப்
போரார் களிறு புலம்பிநைந் தாங்கொரு பூவைகொங்கை
வாரா லணைப்ப வருந்தினை நீதஞ்சை வாணன்வெற்பா
வோராழி சூழுல கத்தவெ ரேநின்னை யொப்பவரே"

**கிழவன் வேட்கை தாங்கற்கருமை சாற்றல்:**

"பொறைகொண்ட தாமரைப் போதன்ன கொங்கையும் பொங்கரிசேர்
கறைகொண்ட வாளன்ன கண்களுங் கொண்டொரு கன்னிதெவ்வைத்
திறைகொண்ட வாணன் செழுந்தஞ்சை குழுஞ் சிலம்பிலின்றென்
நிறைகொண்ட வாறறி யாதிக மூாநிற்றி நீயுநின்றே"

**பாங்கன் தன்மனத் தழுங்கல்:**

"சீதள வாரங் கமழ்தஞ்சை வாணன்றென் மாறையன்னான்
காதள வாவெங் கடுவள வாவொளிர் காவியந்தண்
போதள வாவிழி யென்னுமென் னாசைப் புறத்தனவா
சூதள வாமுலை யென்னுமென் னாமினிச் சொல்லுவதே"

**பாங்கன் எவ்விடத்து எவ்வியற்று என்றல்:**

"முகத்திற் பகழி யிரண்டுடை யார்க்கிட மூரிமுந்நீர்
அகத்திற் பிறந்த வரவிந்த மோவடை யார்தமக்கு
மகத்திற் சனியன்ன சந்திர வாணன்றென் மாறைவெற்பா
நுகத்திற் பகலனை யாய்தன்மை யேது நுவலெனக்கே"

**தலைவன் இவ்விடத்திவ்வியற்று எனல்:**

"கனமே குழல்செங் கயலே விழிமொழி கார்க்குயிலே
தனமே முகையென் தனிநெஞ்ச மேயிடை தன்பகைக்கு
வுளமே யருளிய வாணன்றென் மாறை மணிவரைசூழ்
புனமே யிடமிங்ங னேயென்னை வாட்டிய பூங்கொடிக்கே"

**பாங்கன் இறைவியைக் காண்டல்:**

"கானே யளகங் கரும்புய லேயியல் கார்மயிலே
மானே விழிமுக மாமதி யேதஞ்சை வாணன்வெற்பிற்
றேனேய் தொடை யலச் சேயனையான் சொன்ன சேயிழையாள்
தானே யிவளிது வேயிட மாகிய தண்புனமே"

**பாங்கன் தலைவனை வியத்தல்:**

"தலங்கா வலன் தஞ்சை வாணன்முந் நீர்பொருந் தண்பொருந்தத்
திலங்கார வலவடக் கொங்கைவெற் பாலிணை நிலவுண்கண்
பொலங்காம வல்லி கடைந்தவப் போது புடைபெயர்ந்து
கலங்கா திருந்ததெவ் வாறெம் பிரான்றன் கலைக்கடலே"

குறிப்பு

**தலைவன் குறிவழிச் சேறல்:**

“புறங்கூ ரிருட்கங்குல் போன்ற நண்பகல் போன்ற பொங்கர்
நிறங்கூர் படைக்கண்ணி நின்றன ளேநிழ லைச்சுளித்து
மறங்கூர் களிற்றண்ணல் வாணன்றென் மாறையில் வாணுதலாள்
அறங்கூர் மனத்தரு ளானின்ற தாமென தாருயிரே”

**தலைவன் கலவியின் மகிழ்தல்:**

“யாரும்பர் தம்பத மென்போல செய்தின ரிம்பரம்பொன்
வாருந் துறைவையை சூழ்தஞ்சை வாணன் மலயவேற்பில்
தேருந் தொறுமினி தாந்தமிழ் போன்றிவள் செங்கனிவா
யாருந் தொறுமினி தாயதமிழ் தாமென தாருயிர்க்கே”

**பாங்கி மதிஉடன்பாடு:**

தலைவி தலைவனுடன் கொண்ட களவொழுக்கத்தின் காரணமாக தலைவியிடத்து இதற்கு முன் தோன்றிடாத மாற்றங்கள் புதிதாய்த் தோன்றும். அவற்றைக் கண்டு ஐயுற்ற தோழி அதன் காரணத்தை தன் கூர்ந்த மதியினைக் கொண்டு ஆய்ந்து அறிதல் பாங்கி மதியுடன்பாடு எனப்படும்.

## 4.22 பாங்கிமதி உடன்பாட்டின் வகை:

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றொருமூன்று வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு”

பாங்கிமதியுடன்பாடு முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என்னும் மூன்று வகையினை உடையது ஆகும்.

**முன்னுறவுணர்தல்:**பாங்கி தலைமகளது வடிவு வேறுபாடு கண்டு, அதனானே கூட்டம் உண்மையறிதல்.

**குறையுறவுணர்தல்**: தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பது கண்டு அதனாலே கூட்டம் உண்மையறிதல்.

**இருவருமுள்வழி அவன் வரவுணர்தல்**: தலைமகளும் தானும் ஒருங்கிருந்த இடத்துத் தலைமகன் அவ்வாறு வரக் கண்டு அதனாலே கூட்டம் உண்மை அறிதல்.

## 4.23 முன்னுறவுணர்தல்:

தோழி குறிப்பால் தலைவியிடம் காணப்படும் மாற்றத்திற்கான உண்மையான காரணத்தினைக் கண்டறிதல் முன்னுற உணர்தல் எனப்படும்.

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பும் செலவம் பயில்வுமென்
றிவ்வகையேழினும் ஐயமுற் றோர்தலும்
அவ்வகை தன்னால் ஐயந் தீர்தலும்

குறிப்பு

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் சொல்லினா டலுமென
முன்னுற உணர்தல் மூன்றா கும்மே.

நாற்றம், தோற்றம், ஒழுக்கம், உண்டி, செய்வினை மறைப்பு, செலவு, பயில்வு ஈறாகச் சொல்லப்பட்ட அவ்வகையுடைய ஏழினானும் பாங்கி ஐயமுற்றாராய்தலும், அவற்றாலே ஐயம் தீர்தலும் மெய்யினாலும் பொய்யினாலும் குற்றேவல் தப்பாமல் பலவாய் வேறுபட்ட இருபொருட்பட்ட சொற்களான் ஆராய்தலும் என முன்னுறவுணர்தல் மூவகையாம். அவற்றுள், நாற்றமாவது, தான் பண்டு பயின்றறியாததொரு நாற்றம். தோற்றமாவது கூட்டத்தாற் பிறந்ததோர் அழகு. ஒழுக்கமாவது, தெய்வந்தொழாமை முதலாயின. உண்டியாவது, பண்டையிற் குறைந்த உண்டி. செய்வினை மறைத்தலாவது, தலைமகள் தான் செய்யுந் தொழிலைப் பாங்கிக்கு மறைத்தல். செலவாவது, ஆயத்தை நீக்கித் தனியே பெயர்தல். பயில்வாவது, எப்பொழுதும் ஓரிடத்தே நிற்றல்.

நாற்றமுந் தோற்றமு மொழுக்கமு முண்டியுஞ்
செய்வினை மறைப்பினுஞ் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி யெதிர்ப்பா டுள்ளுறுத்து வருஉ
முணர்ச்சி யேழினு முணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொரு ணாட்டத் தானும்" – என்பது தொல்காப்பியம்

**பாங்கி அவற்றான் ஐயமுற்று ஓர்தல்:**

"வண்டலை யாயத் துடனயர்ந் தோவன்றி வண்டிமிர்பூந்
தண்டலை யாரத் தழைகள்கொய் தோதஞ்சை வாணன்வெற்பிற்
புண்டலை வேலினுங் கண்சிவப் பாரப் பொலஞ்சுனைத்தேன்
கொண்டலை நீர்குடைந் தோவிவள் மேனி குழைந்ததுவே"

**ஐயந் தீர்தல்:**

"திளைக்குந் திரைமே லுனக்குமுன் றோன்றலிற் செம்பொன்வெற்பை
வளைக்கும் பிரான்முடி வைகுத லாற்றஞ்சை வாணன் மண்மேல்
விளைக்கும் புகழ்போல் விளங்குத லாற்செக்கர் விண்பிறைகார்
தளைக்குங் குழற்றிரு வேதொழ வேதகுந் தன்மையதே"

மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர்பொருட் சொல்லி நாடல் என்பதனுள்,

**சுனைநயப்புரைத்தல்:**

"பூட்டிய வார்சிலை வீரரை வென்றெப் பொருப்பினுஞ்சீர்
தீட்டிய வாணன்றென் மாறையன் னீரிதழ்ச் செம்மையுமை
பூட்டிய வாளின் கருமையுந் தான்கொண் டுமக்கிங்ஙனே

குறிப்பு

சூட்டிய வாறுநன் றான்முல்லை மாலை சுனைப்புனலே”

**சுனைவியந்துரைத்தல்:**

“மறலா யெதிர்ந்த மறமன்னர் வேழ மலையெறிவேல்
திறலார் முருகன் கெழுந்தஞ்சை வாணன்றென் மாறைவையை
யறலார் குழலாய் நுதற்குறு வேர்வு மழகுநின்போற்
பெறலா மெனிற்குடை வேனடி யேனும் பெருஞ்சுனையே”

**தகையணங்குறுத்தல்:**

“குவளை சிவந்து குமுதம் வெளுத்த குறையல்லவேல்
அவளை மறைந்துன்னைக் காட்டலு மாமலர்த் தேன்குதிக்கத்
தவளை குதிக்குந் தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன்வெற்பில்
இவளை வரக்கண்டு நீயணங் கேபின் னெழுந்தருளே”

**நடுங்க நாட்டம்:**

“பால்போன் மொழிவஞ்சி யஞ்சிநின் றேணிந்தப் பார்முழுது
மால்போற் புரந்தவன் மாறை வரோதயன் வாணன்வென்றி
வேல்போற் சிவந்து நெறிமுறை கோடிய வேந்தன்வெய்ய
கோல்போற் கொடியன வாங்கொலை யானையின் கோடு கண்டே”

இவற்றுள், முன்னைய மூன்றும் மெய்யினாற் சொல்லியதாம். பின்னைய மூன்றும் பொய்யினாற் சொல்லியதாம்

## 4.24 குறையுற உணர்தல்:

தலைவியும் தோழியும் பூப்பறிதல் போனற் காரணங்களால் மலைப்பகுதி போன்றவற்றிற்குச் சென்ற இடத்து தலைவன் தோழியின் உதவியைப் பெறுதல் வேண்டி தான் தலைவிக்காக வாங்கி வந்த தழை, கண்ணி முதலியவற்றைக் கையில் ஏந்தி ஊர், பேர், கெடுதி போன்றன வினவி நிற்பான். இதன்வழி தோழி தலைமகளின் களவொழுக்கத்தினை அறிதல் குறையுற உணர்தல் எனப்படும்.

பெட்ட வாயில்பெற் றிரவுவலி யுறுத்தோன்
கண்ணியுந் தழையும் ஏந்தி நண்ணி
ஊர்பெயர் கெடுதியோடு ஒழிந்தவும் வினாவுழி
யாரே இவர்மனத்து எண்ணம் இயாதனெத்
தேர்தலும் எண்ணந் தெளிதலும் எனவாங்கு
ஓரிரண் டாகும் குறையுறை வுணர்தல்.

இயற்கைப் புணர்ச்சிக்குப் பின் தலைமகளாற் பேணப்பட்ட வாயிலைப் பெற்றுப் பின் இரந்து குறையுறுதலை வலியுறுத்த தலைமகன், கண்ணியும் தழையும் ஏந்திச் சார்ந்து நின்று ஊரும் பெயரும் கெடுதியும் ஒழிந்தவும் வினாயவிடத்து, இவர் யாரெனவும் இவர் மனத்தின்கண் உளதாகிய

குறிப்பு

எண்ணம் யாது எனவும் பாங்கி ஆராய்தலும் அவனகத்து எண்ணத்தினைத் தெளிதலும் என குறையுறவுணர்தல் இரண்டாகும்.

**பாங்கியை இரவு வலியுறுத்தல்:**

"பொருமணி லெண்டிரைப் பைங்கடல் வங்கம் பொருந்திமுன்பு
தருமணி பின்பெற் றணிபவர் போற்சென்று சார்ந்திரந்து
பருமணி நன்கலப் பாங்கியை நீங்கியப் பாவையைநா
மருமணி வண்டுறை தார்வாணன் மாறை மருவுதுமே"

**ஊர் வினாதல்:**

"புதியேன் மிகவிப் புனத்திற் கியான்றனிப் போந்தனனும்
பதியேது செல்லும் படிசொல்லு வீர்படி மேற்படிந்த
மதியேய் சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்றென் மாறைவையை
நதியேய் சுழிநிக ரும்பழி திருந்தி நல்லவரே"

## 4.25 இருவருமுள்வழி அவன் வரவுணர்தலின் திறம்.

கையுறை ஏந்திவந் தவ்வகை வினாவுழி
எதிர்மொழி கொடுத்தலும் இறைவனை நகுதலும்
மதியின் அவரவர் மனக்கருத் துணர்வுமென்று
இருவரும் உள்வழி அவன்வர வுணர்தல்
ஒருமூன் றாகும் தெரியுங் காலே

இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என்பது தலைமகன் தழையும் கண்ணியும் ஏந்தி முன்போல ஊர் பெயர் முதலியன வினாவிய இடத்து தோழி அதற்கெதிர்மொழி கொடுத்தலும் தலைவனை நகுதலும் மதியினின் அவரவர் மனக்கருத்துணர்தலும் என மூன்றாகும்.

**கையுறை யேந்தி வருதல்:**

"தண்டா மரைமலர்ப் பொன்னையும் பார்மங்கை தன்னையும் போல்
வண்டார் குழன்மட வார்மணந் தார்சென்று வாணன்றஞ்சை
நுண்டா தணிபொங்கர் நீழலின் கீழந் நுடங்கிடையார்க்
கண்டா தரவையெல் லாஞ்சொல்ல வேநல்ல காலமிதே"

**தலைவன் அவ்வகை வினாதல்:**

"வல்லா ரிளங்கொங்கை வஞ்சியன் னீர்தஞ்சை வாணனைக்கண்
டொல்லார் களத்தி னுடைந்தது போல வொருதலைபோர்
வில்லார் கணைதைப்ப மெய்கோர்ந் தினம்விட்டு வெய்துயிர்த்துப்
புல்லார் வதுமின்றி யேவந்த தோநும் புனத்தயலே"

**பாங்கி எதிர்மொழி கொடுத்தல்:**

"வாக்குந் திறனு மதனையொப் பீர்தஞ்சை வாணன் மஞ்சு
தேக்குங் குடுமிச் சிறுமலைக் கேதிரி கோட்டிரலை
கோக்குஞ் சரமுங் குருதியுஞ் சோரக் கொடிச்சியரேங்

காக்கும் புனமருங் கேதனி யேவரக் கண்டிலமே”

**பாங்கி மதியின் அவரவர் மனக்கருத்துணர்தல்:**

“புனங்காவ லன்றிவள் பூண்டது மாண்டகை போந்ததுமா
னினங்காவ லின்கலை யெய்யவன் றாலிக லாழிவிந்தை
தனங்காவ லன்றஞ்சை வாணனன் னாட்டிவர் தங்களிற்றா
மனங்காவல் கொண்டதெல் லாங்கண்க ளேசொல்லும் வாய்திறந்தே”

குறிப்பு

## 4.26 பாங்கி மதியுடன்பாட்டின் விரி

ஈங்ஙனம் இயம்பிய இருநான்கு கிளவியும்
பாங்கி மதியுடன் பாட்டது விரியே.

ஐயமுற்றோர்தல் முதலாக மதியின் அவரவர் மனக் கருத்துணர்தல் இறாகச் சால்லப்பட்டஎட்டுக் கிளவியும் பாங்கி மதியுடன் பாட்டது விரியாம்.

**பாங்கியிற் கூட்டம்**

பாங்கி மதியுடன்பாட்டின் பின் தலைவன் தோழியின் உதவியால் தலைவியைச் சந்திக்கும் முறைமை பாங்கியிற் கூட்டம் எனப்படும்.

## 4.27 பாங்கியிற் கூட்டத்தின் வகை

இரந்துபின் நிற்றல் சேட்படை மடற்கூற்று
மடல்விலக்கு உடன்படன் மடற்கூற் றொழிதல்
குறைநயப் பித்தல் நயத்தல் கூட்டல்
கூடல் ஆயங்கூட்டல் வேட்டலென்று
ஈராறு வகைத்தே யிகுளையிற் கூட்டம்.

பாங்கியிற் கூட்டம் இரந்து பின்னிற்றல், சேட்படை,மடற்கூற்று,மடல்விலக்கு உடன்படல், மடற்கூற்று ஒழிதல், குறைநயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு வகையினை உடையதாம்..

## 4.28 இரந்துபின் நிற்றலும் சேட்படையும்

தலைவனுட்கோள் சாற்றலும் பாங்கி
குலமுறை கிளத்தலும் தலைவன் தலைவி
தன்னை யுயர்த்தலும் நன்னுதற் பாங்கி
அறியாள் போன்றுவினாதலும் இறையோன்
இறைவி தன்மை யியம்பலும் பாங்கி
தலைவி அருமை சாற்றலும் தலைவன்
இன்றியமை யாமையியம்பலும் பாங்கி
நின்குறை நீயேசென்றுரை யென்றலும்
பாங்கியைத் தலைவன் பழித்தலும் பாங்கி
பேதைமை யூட்டலும் காதலன் தலைவி
மூதறி வுடைமை மொழிதலும் பாங்கி
முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறலும்

குறிப்பு

தன்னிலை தலைவன் சாற்றலும் பாங்கி
லகியல் உரைத்தலும் தலைமகன் றுத்தலும்
பாங்கியஞ்சியச் சுறுத்தலும் ஆங்கவன்
கையுறை புகழ்தலும் தையல் மறுத்தலும்
ஆற்றா நெஞ்சினோ டவன்புலத் தலுமவள்
ஆற்றுவித் தகற்றலும் ஆகுநா லைந்தும்
இரந்துபின் னிற்றற்குஞ் சேட்படுத் தற்கும்
பொருந்துவ என்மனார் தெரிந்திசி னோரே.

தலைவனுட்கோள் சாற்றல், பாங்கிகுலமுறை கிளத்தல், தலைவன் தலைவி தன்னை யுயர்த்தல், பாங்கி அறியாள் போன்றுவினாதல், இறையோன் இறைவி தன்மை யியம்பல், பாங்கி தலைவி அருமை சாற்றல், தலைவன் இன்றியமை யாமையியம்பல், பாங்கி நின்குறை நீயேசென்றுரை யென்றல், பாங்கியைத் தலைவன் பழித்தல், பாங்கி பேதைமை யூட்டல், காதலன் தலைவி மூதறி வுடைமை மொழிதல், பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல், தன்னிலை தலைவன் சாற்றல், பாங்கி உலகியல் உரைத்தல், தலைமகன் றுத்தலும் பாங்கியஞ்சியச் சுறுத்தல், ஆங்கவன் கையுறை புகழ்தல், தையல் மறுத்தலும் ஆற்றா நெஞ்சினோ டவன்புலத் தலுமவள் ஆற்றுவித்தகற்றல் எனப்பட்ட இருபதும் இரந்து பின்னிற்றற்கும் சேட்படுத்தற்கும் பொருந்தும் கிளவியாகும். இவற்றுள், தலைமகன் கூற்றாயினவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும் பாங்கிகூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்கும் உரியனவாகும்.

**தலைவன் உட்கோள் சாற்றல்**

“வாவுங் கலைவிந்தை காவலன் வாணன்றென் மாறையன்ன
ஏவுந் தொழிலெனக் கேதிய லாததிங் கேநுமக்கோர்
மேவுஞ்செய் குன்றமுஞ் சோலையு மாகப்பொன் வெற்பும் விண்ணோ
காவுந் தரவும்வல் லெனெனை யாளுங் கடைக்கண் வைத்தே”

**பாங்கி குலமுறை கிளத்தல்:**

“நீவே றுரைக்கின்ற தென்குற மாதெங்க ணேரிழைபோர்
மாவேழ வன்படைவாணன்றென் மாறை மணியையன்றித்
தாவேது மில்லாத் தமனிய மீது தலம்புரக்குங்
கோவே யழுத்துவ ரோவறி யோருங் குருவிந்தமே”

**தலைவன் தலைவியை உயர்த்திக் கூறல்:**

“மிக்கா ருளரல்லர் மெல்லியன் மாதரின் மேதினிமேல்
தக்கார் புகழ்தஞ்சை வாணர் பிரான்றமிழ் நாடனையாய்
மைக்கார் நிகர்குழல் வள்ளிசெவ் வேளுக்கு வல்லவையாம்
இக்கா ரணமுண ராதென்கொ லோநின் றியம்புவதே!”

குறிப்பு

**பாங்கி அறியாள் போன்று வினாதல்:**

“வாங்கிருங் கானலுள் வண்ட லயருந்
தேங்கமழ் கூந்தன் மகளிருள்
யாங்கா கியதோ பாங்குனின் னருளே”

**இறையோன் இறைவி தன்மை இயம்பல்:**

“முலையே முகிழ்முகிழ்த் தனவே தலையே
கிளைஇய மென்குரல் கிழக்குவீழ்ந் தனவே
செறிநிரை வெண்பலும் பறிமுறை நிரம்பின
சுணங்குஞ் சிலதோன் றினவே யணங்குத
கியான்ற னறிவலே தானறி யலளே
யாங்கா குவள்கொ றானே
பெருமுது செல்வ னொருமட மகளே”

**பாங்கி தலைவியருமை சாற்றல்::**

“புகழார் வரையெம் புரவலன் காதற்புதல்வியைநீர்
இகழா வெளியளென் றெண்ணப் பெறீரெமக் கென்றும் வண்மை
திகழா பரணன் செழுந்தஞ்சை வாணன் சிலம்பினுள்ளீர்
அகழார் கலியுல கிற்புல னான வணங்கவளே”,

**பாங்கி நின் குறை நீயே சென்றுரை எனல்:**

“மருப்பா வியதொங்கல் வாணன்றென் மாறை வனசமலர்த்
திருப்பாவை யன்னவென் சேயிழை யாட்குன் றிருவுளத்து
விருப்பா கியகுறை யுள்ளதெல் லாஞ்சொல்லி வேண்டுகநீ
பொருப்பா மொழியப் பெறாரெம்ம னோரிவை போல்வனவே”

**பாங்கியைத் தலைவன் பழித்தல்:**

“வில்லார் நுதல்வெய்ய வேலார் விழிக்கென் மெலிவுசொல்ல
வல்லா ரிலைசொல்ல வல்லையென் றியான்றஞ்சை வாணன்றெவ்வின்
ஒல்லா திதுநுமக் கென்றுண ரேனின் றுணங்கியிந்நாள்
எல்லா மிரந்தது நின்குறை யேயல்ல வென்குறையே”

**பாங்கி முன்னுறு புணர்ச்சி முறையுறக் கூறல்:**

“செறிவளர் காவி வயற்றஞ்சை வாணன் சிறுமலைமேல்
நெறிவளர் வார்குழ னேரிழை யாளன்ன நீர்மையளேற்
குறிவளர் காவின்முன் கூடிய வாறின்னுங் கூடுகநீ
கறிவளர் காரல்வெற் பாபிற ராலென்ன காரியமே”

**பாங்கி உலகியல் உரைத்தல்:**

“கோடீ ரெல்வளைக் கொழும்பல் கூந்தல்
ஆய்தொடி மடவரல் வேண்டுதி யாயின்
தெண்கழிச் சேயிறாப் படூஉந்

குறிப்பு

தண்கடற் சேர்ப்ப வரைந்தனை கொண்மோ”

**பாங்கி அஞ்சி அச்சுறுத்தல்:**

“மல்லார் புயன்றஞ்சை வாணன்வெற் பாவெமர் வந்தி யினிக்
கல்லார் வியன்புனங் காவல் விடாரவர் காணின்மிகப்
பொல்லா திருண்டது போதுமற் றியாங்களும் போதுமிங்கு
நில்லா தெழுந்தரு ணீயுமிப் போது நெடுந்தகையே”

**தலைமகன் கையுறை புகழ்தல்:**

“சிமையார் மலையத் தமிழ்த்தஞ்சை வாணன் சிறுமலைமேல்
அமையா கியதடந் தோளன்ன மேயணி யத்தகுமால்
உமையா ளிறைவன் பயில்கயி லாயத்து மும்பர்தங்கும்
இமையா சலத்துமெல் லாமில்லை யானிக ரித்தழைக்கே”

**பாங்கி கையுறை மறுத்தல்:**

“மல்குற்ற தண்புனல் சூழ்தஞ்சை வாணன் மலயவெற்பா
நல்குற் றவையிந்த நாட்டுள வன்மையி னன்னுதலாள்
அல்குற் றடத்தமெர் கண்டா லயிர்ப்ப ரதுவுமன்றிப்
பல்குற் றமும்வரு மால்யாங்கள் வாங்கேம் பசுந்தழையே”

**பாங்கி ஆற்றுவித்து அகற்றல்:**

“சாலையில் வாழிளந் தோகையன் னாளைத் தாழுதிரந்திம்
மாலையில் வாழி வரங்கொள்வல் யான்தஞ்சை வாணன்வெற்ப
வேலையில் வார்துகி ரன்னவெய் யோன்வெயில் வெற்பின்மல்குந்
காலையில் வாபின்னை யென்கைய தாகுநின் கையுறையே”

இவற்றுள், தலைமகன் கூற்றாயினவெல்லாம் இரந்து பின்னிற்றற்கும் பாங்கிகூற்றாயினவெல்லாஞ் சேட்படுத்தற்கும் உரியன.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** எண்வகை மணம் குறித்து எழுதுக.

பிரமம்: பிரமசாரியாய்த் தக்கானுமாய் இருப்பானுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

பிரசாபத்தியம்: தலைமகன் குரவர் வேண்டத் தலைமகள் குரவரும் மறாதே உடன்பட்டுத் தலைமகளை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

ஆரிடம்: ஒன்றானுமிரண்டானும் ஆவும் ஆனேறும் வாங்கிக்கொண்டு கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

தெய்வம்: வேள்வியாசிரியனுக்குக் கன்னியை அலங்கரித்துத் தீ முன்னர்க் கொடுப்பது.

காந்தருவம்:கொடுப்பாரும் கேட்பாரும் இன்றித் தலைமகனும் தலைமகளும் தனியிடத்தெதிர்ப்பட்டுத் தாமே கூடுவது.

ஆசுரம்: தலைமகட்குப் பொன்பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்வது.

இராக்கதம்: தலைமகடன்னினும் தமரினும் பெறாது வலிதிற் கொள்வது.

பைசாசமாவது, துயின்றோள்மாட்டும் களித்தோள் மாட்டும் சென்று சேர்வது.

2. பாங்கிமதி உடன்பாட்டின் வகைகள் யாவை?

குறிப்பு

முன்னுற வுணர்தல் குறையுற வுணர்தல்
இருவரு முள்வழி யவன்வர வுணர்தலென்
றொருமூன்று வகைத்தே பாங்கிமதி யுடன்பாடு”

பாங்கிமதியுடன்பாடு முன்னுறவுணர்தல், குறையுறவுணர்தல், இருவருமுள்வழி அவன் வரவுணர்தல் என்னும் மூன்று வகையினை உடையது ஆகும்.

முன்னுறவுணர்தல்:பாங்கி தலைமகளது வடிவு வேறுபாடு கண்டு, அதனானே கூட்டம் உண்மையறிதல்.

குறையுறவுணர்தல்: தலைமகன் தழையும் கண்ணியும் கொண்டு தன்பாற் குறையுற்று நிற்பது கண்டு அதனாலே கூட்டம் உண்மையறிதல்.

இருவருமுள்வழி அவன் வரவுணர்தல்: தலைமகளும் தானும் ஒருங்கிருந்த இடத்துத் தலைமகன் அவ்வாறு வரக் கண்டு அதனாலே கூட்டம் உண்மை அறிதல்.

3. தெளிவு என்றால் என்ன?

பிரிந்து சென்ற தலைமகன் வாராதது கண்டு வருந்திய தலைவி அவன் கூறிச் சென்ற உறுதி மொழியால் மனம் அவ்விடத்து இருந்து அகறல் தெளிவு என்பதாகும்.

தலைவன் மாற்றந் தலைவி தேற்றந்
தெளிவா மென்பர் தெளிந்திசி னோரே.

தலைமகன் சொல்லைத்தலைமகள் தெளிதலைத் தெளிதலென்று சொல்லுவர்புலவர்

4. களவிற்கு உரிய கிளவித் தொகைகன் யாவை?

இயற்கைப் புணர்ச்சி வன்புறை தெளிவே
பிரிவுழி மகிழ்ச்சி பிரிவுழிக் கலங்கல்
இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்
பாங்கிமதி யுடம்பாடு பாங்கியிற் கூட்டம்
பாங்கமை பகற்குறி பகற்குறி யிடையீ
டிரவுக் குறியே இரவுக்குறி யிடையீடு
வரைவு வேட்கை வரைவு கடாதல்
ஒருவழித் தணத்தல் வரைவிடை வைத்துப்
பொருள்வயிற் பிரிதலென் றொருபதி னேழுங்
களவிற் குரிய கிளவித் தொகையே.

குறிப்பு

இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு,பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக் கலங்கல்,இடந்தலைப் பாடு பாங்கற் கூட்டம்,பாங்கிமதி யுடம்பாடு, பாங்கியிற் கூட்டம், பகற்குறி, பகற்குறி யிடையீடு,இரவுக் குறி, இரவுக்குறி யிடையீடு, வரைவு வேட்கை, வரைவு கடாதல்,ஒருவழித் தணத்தல், வரைவிடை வைத்துப்பொருள்வயிற் பிரிதல் என்னும் பதினேழும் களவென்னுங் கைகோளிற்கு உரிய கிளவியின் தொகையாம்.

5. பிரிவுழி மகிழ்ச்சியின் விரிகளை விவரி?

செல்லும் கிழத்தி செலவுகண் டுளத்தொடு
சொல்லலும் பாகனொடு சொல்லலும் இரண்டும்
பிரிவுழி மகிழ்ச்சியின் விரியெனக் கொளலே.

தலைவியை அவ்விடத்து விட்டுப் நீங்கிய தலைவன் தலைவி தன்னைக் காணா இயலாத இடத்து நின்று கொண்டு தான் அவளின் செலவு கண்டு தன்னெஞ்சொடு கூறலும் பாகனொடு கூறலுமாகிய இவ்விரண்டும் பிரிவுழி மகிழ்ச்சியின் விரியாம்.

## பிரிவு – II – மடல் ஏறுதல் - வரைவியல் - கற்பியல்

# கூறு: 5 – நம்பியகப்பொருள் - மடற் கூற்றும் (மடல் ஏறுதல்) மடல் விலக்கும்

குறிப்பு

**நோக்கம்: தலைவன் குறைநேர்தல் - மடல் கூற்று – மடல் விலக்கு - கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல் - பகற்குறி இடையீட்டின் விரி போன்றவற்றை அறிதல்**

### 5.1 மடல் கூற்றும் மடல் விலக்கும்:

தலைவியை அடைய முடியாது என்று தெரிந்தால் தலைவன் அவளை அடைந்தே தீர்வது என்ற உறுதியான முடிவிற்கு வரும் நிலையில் மடல் கூற்றினைத் தொடங்குவான். இதன் வழி மடல் ஏறுவேன் என்பான். மடல் ஏறுதல் என்பது பனை ஓலைகளின் நறுக்குகளால் குதிரை போலச் செய்து கொண்டு ஊரின் முச்சந்தியில் பலர் அறிய தலைவியின் உருவம் எழுதிய கொடியைக் கையில் பிடித்துக் கொண்டு ஊர்ந்து வரல் என்பதாகும்.தலைவன் இவ்வாறு ஊர்ந்து வருவேன் என்று உரைத்தல் மடல் கூற்று எனப்படும்.அதனைக் கேட்ட தோழி தலைவனிடம் நீ இரக்கம் இல்லாதவன். பனை ஓலைகளை நறுக்கும் பொழுது அந்த மரத்தில் இருக்கும் குருவிகள் தன் கூட்டினை இழந்து வாடும். மேலும் அவ்வாறு குருவிகள் துன்புறும் வண்ணம் ஓலைகளைப் பெற்றாய் ஆகிலும் தலைவியின் உருவம் முழுவதையும் எழுதுதல் என்பதும் உன்னால் இயலாது. அவளின் இல்லாத இடையினையும் கண்ணால் காண இயலாத வாய் உரையினையும் எழுத இயலாது என்று மறுத்துரைப்பாள்.அதனைக் கேட்ட தலைவன் தான் மடல் ஏறுவேன் என்று கூறியதனை விலக்கித் தோழியிடம் மீண்டும் குறை நயந்து நிற்பான். தலைவனின் இச்செயலை விலக்கி தோழியின் நிலை மடல் விலக்கு எனப்படும்.

இறந்து குறைபெறாது வருந்திய கிழவோன்
மடலே பொருளென மதித்தலும் பாங்கிக்
குலகின் மேல்வைத் துரைத்தலும் அதனைத்
தன்மேல் வைத்துச் சாற்றலும் பாங்கி
தலைமக ளவயவத் தருமை சாற்றலும்
தலைமகன் தன்னைத் தானே புகழ்தலும்
அலர்முலைப் பாங்கி அருளியல் கிளத்தலும்
கொண்டுநிலை கூறலும் என்றிவை யேழும்
மடற்கூற் றிற்கு மடல்விலக் கிற்குங்
கடவ என்மனார் கற்றறிந் தோரே.

குறிப்பு

இரந்து குறைபெறாது வருந்தி கிழவோன் மடலே பொருளென மதித்தல், பாங்கி உலகின் மேல்வைத் துரைத்தல், அதனைத் தலைவன் தன்மேல் வைத்துச் சாற்றல், பாங்கி தலைமகள் அவயவத் தருமை சாற்றல், தலைமகன் தன்னைத் தானே புகழ்தல், பாங்கி அருளியல் கிளத்தல், கொண்டுநிலை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழுந் தலைமகன் மடற்கூற்றிற்குந் தோழி மடல் விலக்கிற்கும் உரிய கிளவி என்று சொல்லுவர் கற்றுணர்ந்தோர். இது தலைமகன் நிலையைத் தாங்கிக்கொண்டு ஈற்றிலாத கொண்டு நிலையாயிற்று. இச் சூத்திரத்துள் தலைவன் கூற்றாயினவெல்லாம் மடற் கூற்றிற்கும்பாங்கி கூற்றாயினவெல்லாம் மடல் விலக்கிற்கும் உரியன.

**பாங்கியை இரந்து குறைபெறாது வருந்திய தலைவன் மடலே பொருளென மதித்தல்:**

“காம முழந்து வருந்தினார்க் கேம
மடலல்ல தில்லை வலி”

**பாங்கிக்குத் தலைமகன் மடலேற்றினை உலகின்மேல் வைத்துரைத்தல்:**

“மாவென மடலு மூர்ப பூவெனக்
குவிமுகி ழெருக்கங் கண்ணியுஞ் சூடுப
மறுகி னார்க்கவும் படுப
பிறிது மாகுப காமங்காழ்க் கொளினே”

**அம்மடலேற்றினைத் தலைமகன் தன்மேல் வைத்துச் சாற்றல்:**

“தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்”

**பாங்கி,தலைமகள் அவயவத்தருமை சாற்றல்:**

“தொடையே யெருக்கென்பு நீயணிந் தாலென்னை சூல்வளையூர்
மடையேய் வயற்றஞ்சை வாணன்வெற் பாமல ரோன்வகுத்த
படையே நயனம் படைத்தபொற் பாவை படியெடுக்க
விடையே தெனத்தெரியா துரை யாணி யிடவரிதே”

**பாங்கி அருளியல் கிளத்தல்:**

“செயலார் குடம்பையிற் செந்தலை யன்றிற் சினையுளபைங்
கயலார் வனவெண் குருகின்வண் பார்ப்புள கைக்கடங்கா
மயலார் களிற்றண்ணல் வாணன்றென் மாறைவையைத்துறைவா
வியலா தருளுடை யார்க்கென்று மாமட லேறுவதே”

பாங்கிகொண்டு நிலை கூறற்குச் செய்யுள்:

முளவுமா வல்சி யெயினர் தங்கை
யிளமா வெயிற்றிக்கு மிந்நிலை யறியச்
சொல்லினெ னிரக்கு மனவை

வெள்வேல் விடலை விரையா தீமே”

## 5.2 குறை நேர்தலும் மடற்கூற்றொழிதலும்:

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலும் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி
செவ்வி யருமை செப்பலும் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
என்னை மறைப்பி னெளிதனெ நகுதலும்
அந்நகை பொறாஅ தவன்புலம் பலும்அவள்
தேற்றலும் கையுறை யேற்றலும் கிழவோன்
ஆற்றலும் என்னும் அவ்வொன் பானும்
குறைநேர் தற்குமடற் கூற்றொழி தற்கும்
முறைமையி னுரிய முன்னும் காலே.

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல், தலைவன் தலைவி வருத்திய வண்ண முரைத்தல், பாங்கி செவ்வி யருமை செப்பல், தலைவன் செவ்வி எளிமை செப்பல், பாங்கி என்னை மறைப்பின் எளிதனெ நகுதல், அந்நகை பொறாது அவன் புலம்பல், அவள் தேற்றலும் கையுறை யேற்றல், கிழவோன் ஆற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் பாங்கி குறைநேர்தற்கும் தலைமகன் மடற்கூற்றொழிதற்கும் முறையானே உரியவாகும். இதனுள், பாங்கி கூற்றாயினவெல்லாம் குறைநேர்தற்கும், தலைமகன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும் உரியனவாகும்.

**தலைவியின் இளமைத்தன்மையைப் பாங்கி தலைவற்குணர்த்தல்:**

“களவரும் பாகரு நீலங்கள் காமக் கடவுளுமால்
கொளவரும் பாபைங் குரும்பைக் குலஞ்செங் குமுதத்து வெண்
டளவரும் பாநண்ப னேதஞ்சை வாணன் றமிழ்வையைநாட்
டிளவரும் பாமிவண் மாட்டென்கொ லோநின் றிரப்பதுவே”

**தலைவன் தலைவி வருந்தியவண்ணம் உரைத்தல்:**

“குன்றக் குறவன் காதன் மடமகள்
வண்டுபடு கூந்தற் றண்டழைக் கொடிச்சி
வளையண் முளைவா ளெயிற்றள்
இளைய ளாயினு மாரணங் கினளே”

**பாங்கி தலைமகள் செவ்வியருமை செப்பல்:**

“ஏடா ரலங்க லிலங்கிலை வேல்வெற்ப வேழுலகும்
வாடாமல் வந்தருள் வாணன்றென் மாறையில் வல்லியன்னாள்
சூடாள் குவளையு முல்லையஞ் சூட்டுஞ் சுனையும்பந்து
மாடா டனக்கென்கொ லோவடி யேன்சென் றறிவிப்புதே”



குறிப்பு

குறிப்பு

**தலைவன் தலைவி செவ்வியெளிமை செப்பல்:**

“தேன்வந்த வாயிதழ்ச் சேயிழை யாயிளஞ் செவ்விநவ்வி
மான்வந்த வாள்விழி வஞ்சிக்கு நீதஞ்சை வாணன்வெற்பில்
யான்வந்த வாசென் றியம்புதி யேலவர் யாவரென்னாள்
தான்வந் தவாவுட னேநின்னை யாரத் தழீஇக்கொளுமே”

**பாங்கி என்னை மறைப்பின் எளிதனெ நகுதல்:**

“மண்ணும் பயில்வித்து மொன்றினுஞ் சந்திர வாணன்வெற்பா
நண்ணும் புனலின்றி யங்குரி யாதுங்க ணல்வினையாற்
கண்ணுங் கருத்துங் கலந்தன வாயினுங் கண்ணினும்முள்
எண்ணுரு குறையென்னை நீர்மறைத் தாலிங் கியல்வதன்றே”

**பாங்கி தலைமகனைத் தேற்றல்:**

“தன்கண் ணனையதன் பாங்கிய ருள்ளுந் தனக்குயிரா
மென்கண் ணருள்பெரி தெம்பெரு மாட்டிக் கிகன்மலைந்தார்
வன்கண் ணமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்தவளாற்
புன்கண் ணடையலை நீயினி வாடல் புரவலனே”

**பாங்கி கையுறை ஏற்றல்:**

“ஒலிதெண் கடல்புடை சூழுல கேழினு மூழ்வினைதான்
வலிதென் பதனை வயக்கிய தாற்றஞ்சை வாணன்வெற்பா
கலிதெங்கு மாவுங் கமுகும் பலாவுங் கதலிகளும்
பொலிதென் பொதியிலின் மேற்சந்த னாடவிப் பூந்தழையே”

## 5.3 குறை நயப்பித்தலும் மறுத்தலும்:

இறைவன் றனக்குக் குறைநேர் பாங்கி
இறைவிக் கவன்குறை உணர்த்தலும் இறைவி
அறியாள் போன்று குறியாள் கூறலும்
பாங்கி இறையோற் கண்டமை பகர்தலும்
பாங்கியைத் தலைவி மறைத்தலும் பாங்கி
என்னை மறைப்ப தென்னெனத் தழாஅலும்
கையுறை புகழ்வுமென் றிவ்வுரு மூன்றும்
மெலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
வலிதாகச் சொல்லி மறுத்தற்கு முரிய.

இறைவன் தனக்குக் குறைநேர் பாங்கி இறைவிக்கு அவன்குறை உணர்த்தல், இறைவி அறியாள் போன்று குறியாள் கூறல், பாங்கி இறையோற் கண்டமை பகர்தல், பாங்கியைத் தலைவி மறைத்தல், பாங்கி என்னை மறைப்ப தென்னெனத் தழாஅல், கையுறை புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் பாங்கி மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும், தலைமகள் வலிதாகச் சொல்லி மறுத்தற்கும் உரிய கிளவியாம். இதனுட்

பாங்கி கூற்றாயின எல்லாம் குறைநயப்பித்தற்கும் தலைமகன் கூற்றாயின எல்லாம் குறைமறுத்தற்கும் உரியனவாகும்.

**தலைவன் தனக்குக் குறைநேர் பாங்கிக்கு அவன் குறையுணர்த்தல்**

குறிப்பு

"இருவர்கண் டால்வரு மேதமென் றெண்ணி யெனக்கெதிரே
வருவர்வந் தாலுந்தம் வாய்திற வார்தஞ்சை வாணன்வெற்பி
னொருவர்நஞ் சார லுழையகலார் தழை யுள்ளதெல்லாந்
தருவர்வம் பார்முலை யாயென்கொ லோசெயத் தக்கதுவே"

**இறைவி அறியாள்போன்று குறியாள் கூறல்:**

"கலைதொடக் கீண்ட கருவியந் தேன்பல கால்கொடுமா
மலைதொடுத் தூர்ந்து வருகின்ற தாற்றஞ்சை வாணன்வென்றிச்
சிலைதொடுத் தாங்கெழில் சேர்நுத லாய்பயில் செம்பழுக்காய்க்
குலைதொடுத் தோங்குபைங் கேழ்ப்பூக நாகக் குழாங் கவர்ந்தே"

**பாங்கி இறையோற் கண்டமை பகர்தல்:**

"வளையணி முன்கை வாலெயிற் றமர்நகை
யிளைய ராடுந் தளையவிழ் கானற்
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோ ளண்ணற் கண்டிகும் யாமே"

## 5.4 குறைநேர்தல் குறை நயப்பித்தல்:

தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தலும்
மறுத்தற் கருமை மாட்டலும் தலைவன்
குறிப்புவே றாகநெறிப்படக் கூறலும்
தலைவியை முனிதலும் தலைவி பாங்கி
தன்னை முனிதலும் தன்கைக் கையுறை
ஏற்றலும் எனமுறை சாற்றிய ஆறும்
வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும்
மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய.

தோழி கிழவோன் துயர்நிலைகிளத்தல்,மறுத்தற் கருமை மாட்டல், தலைவன் குறிப்புவேறாக நெறிப்படக் கூறல்,தலைவியை முனிதல், தலைவி பாங்கி தன்னை முனிதல், தன்கைக் கையுறை ஏற்றல் ஈறாக முறையே சொல்லப்பட்ட ஆறும் வலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தற்கும் மெலிதாகச் சொல்லி மேவற்கும் உரிய கிளவிகளாம். இதனுட் பாங்கி கூற்றாயின எல்லாம் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்றாயினவெல்லாம் குறைநேர்தற்கும் உரிய கிளவியாகும்.

**தோழி கிழவோன் துயர்நிலை கிளத்தல்:**

"வனையுங் குழல்வஞ்சி வாணன்றென் மாறை வரைக்களிறு
தினையுந் தழையும் பிடியொடு மேய்ந்து தெளிந்தவின்னீற்

குறிப்பு

சுனையுண் டசோக நிழற்சோக நீங்கித் துயில்வதுகண்
டெனையிங் கடைக்கணி யாவினை யாநிற்ப ரேதிலரே"

**தோழி தலைமகனை மறுத்தற்கருமை மாட்டல்:**

"கையுந் தழையுமுன் காண்டொறுங் காண்டொறுங் கட்டுரைத்த
பொய்யுந் தொலைந்தன பூந்தழை போலரி போர்த்துநஞ்சு
மையுங் கலந்துண்ட வாள்விழி யாய்தஞ்சை வாணன்வெற்பர்
மெய்யுந் துவண்டதென் னான்முடியாது வெளிநிற்கவே"

**தோழி தலைமகள் குறிப்பு வேறாக நெறிப்படக் கூறல்:**

"மறவல் வாழி தோழி துறைவர்
கடல்புரை பெருங்கிளை நாப்பண்
மடல்புனைந் தேறிநிற் பாடும் பொழுதே"

**தோழி தலைவியை முனிதல்:**

"தூற்றா தலரை மறைப்பவர்க் கேகுறை சொல்லுகுற்ற
மேற்றா தொழியெனை யெம்பெரு மாட்டிசென் றேற்றவர்க்கு
மாற்றா தருள்செங்கை வாணன்றென் மாறையில் வந்துநெஞ்சம்
போற்றாது நின்றய லேன்சொன்ன தீங்கு பொறுத்தருளே"

**தலைவி பாங்கியை முனிதல்:**

"விட்ட குதிரை விசைப்பி னன்ன
விசும்புதோய் பசுங்கழைக் குன்ற நாடன்
யாந்தற் படர்ந்தமை யறியான் றானும்
வேனி லானேறு போலச்
சாயின னென்பநம் மாணல நயந்தே"

**தலைவி பாங்கிதன்கைக் கையுறை ஏற்றல்:**

"ஆற்றுந் தலைவ ரருந்துய ராற்றினு மாற்றிலனாண்
மாற்றும் புனையின் மயிலனை யாய்தஞ்சை வாணன்றெவ்விற்
போற்றுங் கொடுவினை யேன்புனை யாவிடிற் போந்தலரே
தூற்றுந் தழையென்றி தொன்றெங்கு னேவந்து தோன்றியதே"

இதனுள் பாங்கி கூற்றாயின எல்லாம் குறைநயப்பித்தற்கும், தலைவி கூற்றாயினவெல்லாங் குறைநேர்தற்கும் உரிய கிளவியாகும்.

## 5.5 கூட்டல், கூடல், ஆயங்கூட்டல், வேட்டல்:

இறைவி கையுறை யேற்றமை பாங்கி
இறைவற் குணர்த்தலும் குறியிடங் கூறலும்
குறியிடத் திறைவியைக் கொண்டு சேறலும்
குறியிடத் துய்த்து நீங்கலும் இறையோன்
இடத்தெதிர்ப் படுதலும் இயைதலும் புகழ்தலும்
விடுத்தலும் பாங்கி மெல்லியற் சார்ந்து

கையுறை காட்டலும் மையுறை கண்ணியைப்
பாங்கிற் கூட்டலும் நீங்கித் தலைவற்
கோம்படை சாற்றலும் உலகியன் மேம்பட
விருந்து விலக்கலும் பெருந்தகை விருந்திறை
விரும்பலும் என்னத் தெரிந்தபன் மூன்றுங்
கூட்டல் முதலா வேட்டல் ஈறாப்
பாங்கிக்கு வகுத்த நான்கிற்கு முரிய.

குறிப்பு

இறைவி கையுறை ஏற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல், குறியிடங் கூறல்,குறியிடத் திறைவியைக் கொண்டு சேறல், குறியிடத் துய்த்து நீங்கல், இறையோன் இடத்தெதிர்ப் படுதல், இயைதலும் புகழ்தல், விடுத்தல், பாங்கி மெல்லியற் சார்ந்து கையுறை காட்டல், மையுறை கண்ணியைப் பாங்கிற் கூட்டல், நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல், உலகியன் மேம்பட விருந்து விலக்கல், தலைவன் விருந்திறை விரும்பல் ஈறாக ஆராய்ந்த பதின்மூன்றும் கூட்டலும், கூடலும், பாங்கிற்கூட்டலும், வேட்டலும் என நான்கிற்கும் உரியவாம். இதனுட் பாங்கி கூற்றாயின எல்லாம் கூட்டற்கும், வேட்டற்கும் உரியன. தலைமகன் கூற்றாயினவெல்லாங் கூடற்கும், கூட்டற்கும் உரியனவாகும்.

**இறைவி கையுறையேற்றமை பாங்கி இறைவற்குணர்த்தல்:**

“போயா னளித்தலுங் கைகுவித் தேற்றபின் போற்றியன்பாற்
சாரியாத கொங்கையின் மேலணைத் தாடஞ்சை £ணன்வெற்பா
காயா மலரன்ன மேனிமெய் யாகநின் கையுறையே
நீயாக வல்லது மாந்தழை யாக நினைந்திலளே”

**பாங்கி தலைமகற்குக் குறியிடங் கூறல்:**

“கடும்புலால் புன்னை கடியுந் துறைவ
படும்புலாற் புட்கடிவான் புக்க - தடம்புலாந்
தாழைமா ஞாழற் றதைந்துயர்ந்த தாழ்பொழி
லேழைமா னோக்கி யிடம்”

**பாங்கி குறியிடத்து இறைவியைக் கொண்டுசேறல்:**

“நாமாவி மூழ்கி நறுமலர் குற்றுநந் தாவனத்துத்
தேமா விளந்தளிர் செவ்வண்ணங் கொய்து சிலம்பெதிர்கூய்
வாமா னெடுங்கண் மடந்தைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பிற்
பூமா தவிப்பந்தர் வாய்விளை யாடுதும் போதுகவே”

**பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்து நீங்கல்:**

“செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பின் செங்கோட்டியானைக்
கழறெடிச் சேஎய் குன்றங்

குறிப்பு

குருதிப் பூவின் குலைக்காந் தட்டே"

**புணர்ச்சியின் மகிழ்தல்:**

"தருந்தாரு வஞ்சுங் கொடையுடை யான்றஞ்சை வாண னின்சொற்
செருந்தார் பசுந்தமிழ்த் தென்வரை மேற்செம்பொன் மேருவெற்பாற்
கருந்தாரை நஞ்சுமிழ் வாசுகி யால்வெண் கடல்கடைந்து
வருந்தா வமுதளித் தாள்வல்ல ளாமிம் மடக்கொடியே"

**பாங்கி தலைவியை நீங்கித் தலைவற்கு ஓம்படை சாற்றல்:**

"அவரை பொருந்திய பைங்குர லேனற்
கவரி மடமா கதூஉம் படர்சாரற்
கானக நாட மறவல் வயங்கிழைக்
கியானிடை நின்ற புணை"

**பாங்கி தலைமகனை உலகியன் மேம்பட விருந்து விலக்கல்:**

"வலைப்பெய்த மான்றசை தேன்றோய்த்தருந்தி மரைமுலைப்பா
லுலைப்பெய்த வார்தினை மூரலு முண்டுளங் கூருவகை
தலைப்பெய்த நாளனை யான்றஞ்சை வாணன் சயிலத்தெம்மூ
ரிலைப்பெய்த தாழ்குரம் பைத்தங்கி னாலுமக் கென்வருமே"

**தலைமகன் விருந்திறை விரும்பல்:**

"மஞ்சூட்டி யன்ன சுதைமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பிற்
பஞ்சூட் டியமென் பதயுகத் தீருங்கள் பாடியின்மான்
வெஞ்சூட் டிழுதன்ன வூனும்பைந் தேனும் விருந்தினர்க்குச்
செஞ்சூட் டிளகுபொன் போற்றினை மூரலுந் தெள்ளமுதே"

**பகற்குறி:**

சிறப்புடை மரபில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாட்டின்கண் சந்தித்த தலைவன் தலைவியைப் பகல்பொழுதின்கண் குறிக்கப்பெற்ற இடத்தில் சந்திப்பான். தலைமக்கள் இவ்வாறு சந்திக்கும் இடம் பகற்குறி எனப்படும்.

## 5.6 பகற்குறியின் வகை:

அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

தலைமகன் உட்கோள் சாற்றல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாச் சொல்லப்பட்ட இவ்வறுபத்தொரு கிளவியும் பாங்கியிற் கூட்டத்து விரியாகும்.

## 5.7 குறை நேர்தலும் மடற்கூற்றொழிதலும்:

கூட்டல் கூடல் பாங்கிற் கூட்டல்
வேட்டலென் றொருநால் வகைத்தே பகற்குறி.

கூட்டல்,கூடல்,பாங்கியற் கூட்டல், வேட்டல் ஈறாக நான்குவகையினை உடைத்துப்பகற்குறி.

## 5.8 பகற்குறியின் விரி:

குறியிடங் கூறல் முதலாப் பெறலரும்
விருந்திறை விரும்பல் ஈறாப் பொருந்தப்
பகர்ந்தபன் னிரண்டும் பகற்குறி விரியே.

குறியிடங் கூறல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாக மேற் பாங்கியிற் கூட்டத்துள் எடுத்தோதப்பட்ட பன்னிரண்டும் பகற்குறி விரியாம்.

குறிப்பு

## 5.9 ஒருசார் பகற்குறியின் வகை:

இரங்கல் வன்புறை யிற்செறிப் புணர்த்தலென்
றொருங்கு மூவகைத் தொருசார் பகற்குறி.

இரங்கல், வன்புறை: இச்செறிப்பு உணர்த்தல் என மூன்று வகையினை உடைத்து ஒருகூற்றுப் பகற்குறி.

## 5.10 ஒருசார் பகற்குறியின் விரி:

கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்
பொழுதுகண் டிரங்கலும் பாங்கி புலம்பலும்
தலைவன் நீடத் தலைவி வருந்தலும்
தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி
முன்னிலைப் புறமொழி மொழிதலும் இன்னுயிர்ப்
பாங்கியொடு பகர்தலும் பாங்கியச் சுறுத்தலும்
நீங்கற் கருமை தலைவிநினைந் திரங்கலும்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும்
சிறைப்புறமாகச் செறிப்பறி வுறுத்தலும்
முன்னிலைப் புறமொழி மொழிந்தறி வுறுத்தலும்
முன்னின் றுணர்த்தலும் முன்னின் றுணர்த்தி
ஓம்படை சாற்றலும் மேம்படு கிழவோன்
தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தலும்
என்றவீ ரேழும் எல்லுக்குறி விரியே.

இவற்றுள், கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம் பொழுது கண்டிரங்கலும், பாங்கி புலம்பலுந், தலைவனிடத் தலைவி வருந்தலும், முன்னிலைப்புறமொழி மொழிதலும், பாங்கியோடு பகர்தலும், நீங்கற்கருமை தலைவி நினைந்திரங்கலும், கிழவோன் தஞ்சம்பெறாது நெஞ்சொடு கிளத்தலும் ஆகிய ஏழும் இரங்கற்குரிய, இவற்றுள், கிழவோன் தஞ்சம் பெறாது நெஞ்சொடு கிளத்தல் ஒன்று மொழித்து ஏனைய ஆறும் வரைதல் வேட்கைக் குரியவாம். தலைவியைப் பாங்கி கழறலும், தலைவியைப் பாங்கி அச்சுறுத்தலும், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றலுமாகிய மூன்றும், வன்புறைக்குரிய; சிறைப்புறமாகச் செறிப்பறிவுறுத்தலும், முன்னிலைப்புறமொழி மொழிந்தறிவுறுத்தலும், முன்னின்றுரைத்தலும், முன்னின்றுணர்த்தி ஓம்படை சாற்றலுமாகிய நான்கும்

இற்செறிப்புணர்த்தற்குரிய எனக்கொள்க. இந் நான்கும் வரைவுகடாதற்கும் உரியவாம்.

குறிப்பு

**கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலையம்பொழுது கண்டு இரங்கல்:**

“ஆழ்ந்தார் தமக்கரு ளாதவர் போலிவ் வளவிலன்பு
சூழ்ந்தார் செலத்தொங்கல் சூழ்குழ லாய்சொற் பொருள் படைத்து
வாழ்ந்தார் புகழ்தஞ்சை வாணனைப் பேணலர் மானவெய்யோன்
வீழ்ந்தார் கலிக்கரந் தான்பனி மாலை வெளிப்படவே”

**பாங்கி புலம்பல்:**

“தலைவன் நீடத் தலைவி வருந்தற்குச் செய்யுள்:
ஆராத வின்ப விடந்தொறு நீங்கிய வாயமென்பால்
வாராத முன்னம் வருகில ராற்றஞ்சை வாணன்வெற்பிற்
கூரா தரநல்கி வல்வினை யேனலங் கொள்ளை கொண்டு
தேரா தவனுடனேநென்னன் மாலையிற் சென்றவரே”

**தலைவியைப் பாங்கி கழறல்:**

“சிறந்தார் தெரிந்த செழுந்தமிழ் வாணன்றென் மாறைவெற்ப
துறந்தா ரெனையென்று சோருவ தேனிந்தத் தொல்லுலகிற்
பிறந்தா ரெவர்க்கும் பிரிவெய்து மால்வெய்ய பேரமர்க்கட்
புறந்தாழ் கரிய குழற்செய்ய வாயைய பூங்கொடியே”

**தலைவி முன்னிலைப் புறமொழி மொழிதல்:**

“பூவலர் வாவியி னீரற்ற போதுற்ற புன்மையல்லாற்
காவலர் காமந் துறக்கிலென் னாங்கடம் பாய்மதுகை
மாவல வாணன் வயற்றஞ்சை வேந்தனை வாழ்த்தல் செய்ய
மேவலர் போலுங் கழற்றுரை யாளர் வியனறிவே”

**தலைவி பாங்கியொடு பகர்தல்:**

“நோமென் னெஞ்சே நோமென் னெஞ்சே
புன்புலத் தமன்ற சிறியிலை நெருஞ்சி
கட்கின் புதுமலர் முட்பயந் தாஅங்
கினிய செய்தநங் காதல
ரின்னா செய்த னோமென் னெஞ்சே”

**தலைவியைப் பாங்கி அச்சுறுத்தல்:**

“பேணற் கரியநின் பெண்மையு நாணமும் பேணியவர்
காணத் தகுமென்று காண்பதல் லாற்கழி காதனெஞ்சு
பூணத் தருகினும் பொற்பல்ல வாகுதல் கற்பல்லவால்
யாணர்த் தமிழுடையான்வாணன் மாறையி னின்னமுதே”

**தோழி தலைமகற்கு முன்னிலைப்புறமொழி மொழிந்து இற்செறிப்புணர்த்தல்:**

“பயில்காள பந்திப் புயலன்ன வோதியைப் பைங்கிள்ளைகாண்

மயில்காள் சிறிது மறக்கப்பெ றீர்தஞ்சை வாணன்வெற்பிற்
குயில்காள மெங்கு மியம்புதண் சோலையிற் கூடியின்ப
மயில்காள வெங்கதிர் வேலன்பர் சால வயர்ப்பினுமே”

**பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்பறிவுறுத்தல்:**

“கானலங் கான்மலர்க் கள்வாய்க் கருங்கணி கட்டுரையாற்
கூனலஞ் சாய்பொற் குரலுங்கொய் தாரெமர் கொற்றவயாம்
ஏனலங் காவலு மின்றே யொழிந்தன மேழ்புவிக்குந்
தானலங் காரமன் னான்றஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே”

**பாங்கி தலைமகன் முன்னின்று செறிப்புணர்த்தி ஓம்படை சாற்றல்:**

“கனஞ்சாய நல்கிய கையுடை யானெதிர் கன்றினர்தம்
மனஞ்சாய வென்றருள் வாணன் வரோதயன் மாறைவெற்பிற்
சினஞ்சாலும் வேலண்ண லேமற வேலெம்மைச் செவ்வியிரு
தனஞ்சா யினுமினி நின்னையல் லாதில்லைத் தாழ்குழற்கே”

குறிப்பு

**பகற்குறி இடையீடு:**

பகற்குறியில் தலைவியைச் சந்தித்து மகிழ்ந்த தலைவன் தலைவி வீட்டினுள் இற்செறிக்கப்பட்ட நிலையில் பகற்குறியிடத்து வந்தபொழுதும் சந்திக்க இயலாது வருந்துவான்.அங்குள்ள பொருள்களிடத்து தன் குறையினைக் கூறித் தலைவன் வருந்துதல் பகற்குறி இடையீடு எனப்பெறும்.

## 5.11 பகற்குறி இடையீட்டின் வகை.

விலக்கல் சேறல் கலக்க மென்றாங்
சிகப்பின்மூ வகைத்தே பகற்குறி யிடையீடு.

பகற்குறி யிடையீடு விலக்கலும், சேறலும், கலக்கமும் என மூன்று வகையினை உடைத்தாம்.

## 5.12 பகற்குறி இடையீட்டின் விரி

இறைவனைப் பாங்கி குறிவால் விலக்கலும்
இறைவியைக் குறிவால் விலக்கலும் இறைமகள்
ஆடிட நோக்கி அழிதலும் பாங்கி
ஆடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்னாள்
நெடுந்தகை குறிவயின் நீடுசென் றிரங்கலும்
வறுங்கள நாடி மறுகலும் குறுந்தொடி
வாழுமூர் நோக்கி மதிமயங் கலுமெனும்
ஏழும் பகற்குறி யிடையீட்டு விரியே.

இறைவனைப் பாங்கி குறிவரல்விலக்கல், இறைவியைக் குறிவால் விலக்கல், இறைமகள் ஆடிட நோக்கி அழிதல், பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல், பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல், வறுங்கள நாடி மறுகல், குறுந்தொடி வாழுமூர் நோக்கி மதிமயங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட

குறிப்பு

ஏழும் பகற்குறி இடையீட்டின் விரியாம். இவற்றுள், முன்னைய இரண்டும் விலக்கற்குரிய; பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறலாகிய ஒன்றும் சேறற்குரித்து; ஏனைய நான்கும் கலக்கத்திற்குரியதாகும்.

**இறைவனைப் பாங்கி குறிவரல் விலக்கல்:**

“புனமும் பசுந்தினைச் செங்குர லேந்தும் புகன்றகிள்ளை
யினமுங் குழீஇவந் திறைகொள்ளு மாலிறை யார்வளையும்
மனமுங் கவர்வெற்ப வாணன்றென் மாறை மடப்பிடியு
மனமுந் தொழுநடை பாற்பல கால்வரு மன்னையுமே”

**இறைமகள் ஆடிடம் நோக்கி அழிதல்:**

“அளிய தாமே செவ்வாய்ப் பைங்கிளி
குன்றக் குறவர் கொய்தினைப் பைங்கால்
இருவி நீள்புனங் கண்டும்
பிரித ரேற்றாப் பேரன் பினவே”

**பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டகறல்:**

“உள்ளிக் காண்பென் போல்வன் முள்ளெயிற்
றமிழ்த மூறுமஞ் செவ்வாய்க் கமழகில்
ஆர நாறு மறல்போற் கூந்தற்
பேரமர் மழைக்கண் மடந்தை
மூரன் முறுவலொடு மதைஇய நோக்கே

**தலைமகன் வறுங்களம் நாடி மறுகல்:**

“கள்ளாவி நாறுங் கமழ்கூந்தற் காரிகையென்
உள்ளாவி சென்ற வழியறியேன்-றள்ளாத
மல்ல லருவி மலைநாடி வாய்திறந்து
சொல்லல் புரியாய் துணிந்து”

**தலைமகன் தலைமகள் வாழும் ஊர்நோக்கி மதிமயங்கல்:**

“ஆடமை புரையும் வனப்பிற் பணைத்தோட்
பேரமர்க் கண்ணி யிருந்த வூரே
நெடுஞ்சே ணாரிடை யதுவே நெஞ்சே
யீரம் பட்ட செவ்வீப் பைம்புனத்
தோரே ருழவன் போலப்
பெருவிதுப் புற்றன்றா னோகோ யானே”

**பயிற்சி வினாக்கள்:**

**1.**குறை நேர்தல் மடற்கூற்றொழிதல் பற்றி விவரி?

தலைவி யிளமைத் தன்மை பாங்கி
தலைவற் குணர்த்தலும் தலைவன் றலைவி
வருத்திய வண்ண முரைத்தலும் பாங்கி

குறிப்பு

செவ்வி யருமை செப்பலும் தலைவன்
செவ்வி யெளிமை செப்பலும் பாங்கி
என்னை மறைப்பி னெளிதனெ நகுதலும்
அந்நகை பொறாஅ தவன்புலம் பலும்அவள்
தேற்றலும் கையுறை யேற்றலும் கிழவோன்
ஆற்றலும் என்னும் அவ்வொன் பானும்
குறைநேர் தற்குமடற் கூற்றொழி தற்கும்
முறைமையி னுரிய முன்னும் காலே.

தலைவி இளமைத்தன்மை பாங்கி தலைவற்குணர்த்தல், தலைவன் தலைவி வருத்திய வண்ண முரைத்தல், பாங்கி செவ்வி யருமை செப்பல், தலைவன் செவ்வி எளிமை செப்பல், பாங்கி என்னை மறைப்பின் எளிதனெ நகுதல், அந்நகை பொறாது அவன் புலம்பல், அவள் தேற்றலும் கையுறை யேற்றல், கிழவோன் ஆற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பதும் பாங்கி குறைநேர்தற்கும் தலைமகன் மடற்கூற்றொழிதற்கும் முறையானே உரியவாகும். இதனுள், பாங்கி கூற்றாயினவெல்லாம் குறைநேர்தற்கும், தலைமகன் கூற்றாயினவெல்லாம் மடற்கூற்றொழிதற்கும் உரியனவாகும்.

2. பகற்குறியின் வகை யாவை?

அற்றமில் சிறப்பினிவ் வறுபத் தொன்றுங்
குற்றமில் பாங்கியிற் கூட்டத்து விரியே.

தலைமகன் உட்கோள் சாற்றல் முதலாக விருந்திறை விரும்பல் ஈறாச் சொல்லப்பட்ட இவ்வறுபத்தொரு கிளவியும் பாங்கியிற் கூட்டத்து விரியாகும்.

3. பகற்குறி இடையீட்டின் விரி குறித்து எழுதுக.

இறைவனைப் பாங்கி குறிவால் விலக்கலும்
இறைவியைக் குறிவால் விலக்கலும் இறைமகள்
ஆடிட நோக்கி அழிதலும் பாங்கி
ஆடிடம் விடுத்துக்கொண் டகறலும் பின்னாள்
நெடுந்தகை குறிவயின் நீடுசென் றிரங்கலும்
வறுங்கள நாடி மறுகலும் குறுந்தொடி
வாழுமூர் நோக்கி மதிமயங் கலுமெனும்
ஏழும் பகற்குறி யிடையீட்டு விரியே.

இறைவனைப் பாங்கி குறிவரல்விலக்கல், இறைவியைக் குறிவால் விலக்கல், இறைமகள் ஆடிட நோக்கி அழிதல், பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறல், பின்னாள் நெடுந்தகை குறிவயின் நீடுசென்றிரங்கல், வறுங்கள நாடி மறுகல், குறுந்தொடி வாழுமூர் நோக்கி மதிமயங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் பகற்குறி இடையீட்டின் விரியாம். இவற்றுள், முன்னைய இரண்டும் விலக்கற்குரிய; பாங்கி ஆடிடம் விடுத்துக்கொண்டு அகறலாகிய ஒன்றும் சேறற்குரித்து; ஏனைய நான்கும் கலக்கத்திற்குரியதாகும்.

# கூறு:6-நம்பியகப்பொருள்-இரவுக்குறி இடையீடு –வரைவு வேட்கை-வரைவு கடாதல் - பொருள்வயிற் பிரிதல்

**நோக்கம்: இரவுக் குறி - இரவுக்குறி இடையீடு – வரைவு வேட்கை – வரைவு கடாதல் -பொருள்வயிற் பிரிதல் - அல்லகுறி – ஒரு வழித்தணத்தல் போன்ற அக இலக்கண மரபுகளை அறிதல்**

குறிப்பு

**இரவுக்குறி:**

தலைவன் தலைவியைப் பகற்குறியில் சந்திக்க இயலாது போனமையால் இரவுப் பொழுதில் சந்திப்பான். தலைவன் இவ்வாறு சந்திக்கும் இடம் இரவுக்குறி எனப்படும்.

## 6.1 இரவுக்குறியின் வகை

வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கியிற் கூட்டல்
உயங்கல் நீங்கலென் றொன்பது வகைத்தே
இயம்பிப் போந்த இரவுக் குறியே.

வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல்பாராட்டல், பாங்கியிற் கூட்டல்,உயங்கல் நீங்கல் ஈறாக ஒன்பது வகைத்து மேற்சொல்லப் பெற்ற இரவுக்குறி ஆகும்.

## 6.2 இரவுக்குறியின் விரி

இறையோன் இருட்குறி வேண்டலும் பாங்கி
நெறியின தருமை கூறலும் இறையோன்
நெறியின தெளிமை கூறலும் பாங்கி
அவனாட் டணியியல் வினாதலும் கிழவோன்
அவணாட் டணியியயல் வினாதலும் அவற்குத்
தன்னாட் டணியியல் பாங்கி சாற்றலும்
இவைவிக் கிறையோன், குறையறி வுறுத்தலும்
நேரா திறைவி நெஞ்சொடு கிளத்தலும்
நேரிழை பாங்கி யொடுநேர்ந் துரைத்தலும்
நேர்ந்தமை பாங்கி நெடுந்தகைக் குரைத்தலும்
குறியிடை நிறீஇத் தாய்துயி லறிதலும்
இறைவிக் கிறைவன் வரவறி வுறுத்தலும்
அவட்கொண்டு சேறலுங் குறியுய்த் தகறலும்
வண்டுறை தாரோன் வந்தெதிர்ப் படுதலும்
பெருமகள் ஆற்றின தருமைநினைந் திரங்கலும்
புரவலன் தேற்றலும் புணர்தலும் புகழ்தலும்
இறைமகள் இறைவனைக் குறிவிலக் கலும்அவன்

குறிப்பு

இறைவியை இல்வயின் விடுத்தலும் இறைவியை
எய்திப் பாங்கி கையுறை காட்டலும்
இற்கொண் டேகலும் பிற்சென் றிறைவனை
வரவு விலக்கலும் பெருமகன் மயங்கலும்
தோழி தலைமகள் துயர்கிளந்து விடுத்தலும்
திருமகட் புணர்ந்தவன் சேறலும் என்றாங்கு
இருபத் தேழும் இரவுக்குறி விரியே.

இறையோன் இருட்குறி வேண்டல் முதலாகத் திருமகட் புணர்ந்தவன் சேறல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தேழும் இரவுக்குறியின் விரியாகும். இவற்றுள், இறையோன் இருட்குறி வேண்டலும், நெறியினது எளிமை கூறலும், அவள் நாட்டணியியல் வினாதலும், பாங்கியிறைவிக்கு இறையோன் குறையறிவுறுத்தலுமாகிய நான்கும் வேண்டற்குரிய; பாங்கி நெறியினது அருமை கூறலும் இறைமகள் இறைவனைக் குறிவிலக்கலும், பாங்கி இறைவனை வரவு விலக்கலுமாகிய மூன்றும் மறுத்தற்குரிய;பாங்கி அவன் நாட்டணியியல் வினாதலும், அவர்க்குத் தன்னாட்டணியியல் சாற்றலும், தலைமகள் நேர்ந்து பாங்கியொடு சாற்றலுமாகிய மூன்றும் உடன்படற்குரிய;தலைமகள் நேர்ந்ததும், பாங்கி தலைமகற் குணர்த்தலும், குறியிடை நிறீஇத் தாய் துயில் அறிதலும், இறைவிக்கு இறைவன் வரவறிவுறுத்தலும், அவட்கொண்டு சேறலுமாகிய நான்கும் கூட்டற்குரிய; தலைமகளை யெதிர்ப்படுதலும், தேற்றலும், புணர்தலுமாகிய மூன்றும் கூடற்குரிய; தலைமகள் நலம்பாராட்டலும், கையுறை காட்டலுமாகிய இரண்டும் பாராட்டற்குரிய; தலைமகன் இறைவியை இல்வயின் விடுத்தலும், பாங்கி தலைமகளைக் கொண்டேகலுமாகிய இரண்டும் பாங்கி கூட்டற்குரிய; நேராது இறைவி நெஞ்சொடு கிளத்தலும், தலைமகள் ஆற்றினதருமை நினைந்திரங்கலும், பெருமகன் மயங்கலும், தோழி தலைமகள் துயர் கிளந்து விடுத்தலுமாகிய நான்கும் முயங்கற்குரிய; பாங்கி குறியுய்த்தகறலும், திருமகட் புணர்ந்து அவன் சேறலுமாகிய இரண்டும் நீங்கற்குரியவாம் எனக் கொள்க. இவற்றுள் நேராதிறைவி நெஞ்சொடு கிளத்தலும், பெருமகள் ஆற்றின தருமை நினைந்திரங்கலும் இறைமகள் இறைவனைக் குறிவிலக்கலுமாகிய மூன்றும் வரைதல் வேட்கைக்குரிய; பாங்கி நெறியினதருமை கூறலும், இறைவனை வரவு விலக்கலும், தலைமகள் துயர் கிளந்து விடுத்தலுமாகிய மூன்றும் வரைவுகடாதற்குரியவாகும்.

**இறையோன் இருட்குறி வேண்டல்:**

“கருவிருந் தெண்டிசையுங்கன மாமழை கான்றதுள்ளம்
வெருவிருந் தெம்பதிக் கேகவொண்ணாது விதம்விதமாய்
வருவிருந் தென்றும் புரந்தருள் வாணன்றென் மாறையன்னீர்

குறிப்பு

ஒருவிருந் தெங்களைப் போலெய்து மோகங்கு லுங்களுக்கே''

**பாங்கி நெறியினதருமை கூறல்:**

''மலைமாது வல்லவன் வாணன் வரோதயன் மாறைவெற்பிற்
சிலைமா லுருமெங்குந் தீயுமி ழூநிற்குஞ் சிங்கமெங்கும்
கொலைமா கரியிரை தேர்ந்துழ லாநிற்குங் கொற்றவபொற்
கலைமா னுறைபதி நீவரு மாறென்கொல் கங்குலிலே''

**தலைமகன் நெறியின்தெளிமை கூறல்:**

''வடுவரி நீள்கண்ணி யஞ்சலம் யாந்தஞ்சை வாணன்வெற்பிற்
கொடுவரி கேழற் குழாம்பொரு கொல்லையுங் குஞ்சரந்தேர்ந்
தடுவரி தாவு மடுக்கமுஞ் சூர்வழங் காமைவாய்க்
கடுவரி நாகந் தவர்மல்கு கல்லளைக் கானமுமே''.

**பாங்கி அவனாட்டு அணியியல் வினாதல்:**

''பூந்தழை யாது மலைமலர் யாது புனையிழையுஞ்
சாந்தமும் யாது தடம்பொழில் யாது தரணியின்மேல்
மாந்தரில் வேளன்ன வாணன்றென் மாறைவளநகர்சூழ்
தேந்தரு சோலைவெற் பாவுங்க ணாட்டுறை செல்வியர்க்கே''

**தலைமகன் அவள் நாட்டணியியல் வினாதல்:**

''எந்நாட்டவரணி கூறியென் பேறிங் கிகல்வடிவேன்
மைந்நாட்ட வெண்முத்த வாணகை யாய்தஞ்சை வாணன்மண்மேல்
உந்நாட் டரியைய ராடிடஞ் சாந்த மொளியிழைபூ
மொய்ந்நாட் டழையொடெல் லாமொழி யாமன்மொழி யெனக்கே.''

**தலைமகற்குப் பாங்கி தன்னாட்டணியியல் சாற்றல்:**

''ஆம்ப லணித்தழை யாரந் துயல்வருந்
தீம்புன லூரன் மகளிவ ளாய்ந்தநறுந்
சேமலர் நீலம் பிணையல் செறிமலர்த்
தாமரை தன்னையர் பூ''

**பாங்கி தலைமகட்குத் தலைமகன் குறையறிவுறுத்தல்:**

''புயலே றதிர்தொறும் பொங்குளை மீதழெப் போதகந்தேர்ந்
தியலே றதிரு மிருங்கங்குல் வாய்முத்த மீன்றுசங்கம்
வயலே றணைவள ருந்தஞ்சை வாணன் வரையிலுண்கண்
கயலே றனையநின் பால்வரல் வேண்டினர் காதலரே.''

**தலைமகள் நேராது நெஞ்சொடு கிளத்தல்:**

''விடவார் கணைவிழி மெல்லியன் மாதரை மேதினியோர்
மடவா ரெனுமுரை வாய்மைநெஞ்சே தஞ்சை வாணன்றெவ்விற்
கடவா ரணந்திரி கங்குனங் கண்ணன்ன காதலர்முட்

பிடவார் சிறுநெறி வாய்வரல் வேண்டினள் பெண்ணணங்கே.''

**தலைமகள் நேர்ந்தமை பாங்கி தலைமகற்குரைதல்:**

''பரவாத வண்ணம் பரவியும் பாதம் பணிந்துநெஞ்சங்
கரவாத பொன்னைநின் காரணமாகக் கயிலையென்றே
வரவா தவனஞ்சும் வெண்மா ளிகைத்தஞ்சை வாணன்வெற்பா
இரவாத வண்ணமெல் லாமிரந் தேனிவ் விரவிடையே''

குறிப்பு

**பாங்கி தலைமகனைக் குறியிடத்து நிறுத்திவந்து தாய்துயில் அறிதல்:**

''மாகந் தரியலர்க் கீந்தருள் வாணன்றென் மாறைவெற்பின்
மேகந் தருமின் னிடையன்ன மேவிரை நாண்மலர்வேய்
நாகந் தழுவுங் குடம்பையின் வாய்நடு நாளிரவிற்
சோகந் தவிர்வில வாய்த்துயி லாததென் றோகைகளே.''

**பாங்கி தலைமகளைக் குறியிடத்துக் கொண்டு சேறல்:**

''மின்னே யயிலொடு மின்விளக் காவந்த வெற்பரைநாம்
பொன்னே யெதிர்கொளப் போதுகம் வாபுவி யேழினுக்குந்
தன்னேயம் வைத்தருள் சந்திர வாணன் றமிழ்ச்சிலம்பின்
நின்னே ரியன்மயில் கண்டுயி னாக நிழலகத்தே.''

**பாங்கி தலைமகளைக் குறியிடத்துய்த்துநீங்கல்:**

''மந்தார மன்னகை வாணன்றென் மாறை மயிலனையாய்
நந்தா வனப்பொய்கை நான்கொய்கு வேன்குழ னாணுங்கங்குற்
கொந்தார் தெரியனின் செங்கனி வாயொடுங் கொங்கையொடும்
பைந்தா மரையையுஞ் சேதாம் பலையும் பகைப்பித்ததே.''

**தலைமகள் ஆற்றினதருமை நினைந்து இரங்கல்:**

''பெயல்கண் மறைத்தலின் விசும்புகா ணலையே
நீர்பரந் தொழுகலி னிலங்கா ணலையே
யெல்லை சேறலி னிருள்பெரிது பட்டன்று
பல்லோர் துஞ்சும் பானாட் கங்குல்
யாங்வந் தனையோ வோங்கல் வெற்ப
வேங்கை கமழுமெஞ் சிறுகுடி
யாங்கறிந் தனையோ நோகோ யானே.''

**புணர்தல்:**

''தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்றா
லம்மா வரிவை முயக்கு.''

**தலைமகனைத் தலைமகள் குறிவிலக்கல்:**

''இருள்பே ருலகின் வார லான்ற
கோட்டுமா வழங்குங் காட்டக நெறியே.''

**தலைமகன் தலைமகளை இல்வயின் விடுத்தல்:**

குறிப்பு

"மல்லையம் போர்வென்ற வாணன்றென் மாறைநின் மாளிகையாந்
தொல்லையம் போருகந் தேடவுங் கூடுந் தொடித்தளிரான்
முல்லையும் போது முகையுங்கொய் யாது முகிழ்முலையாய்
செல்லையம் பொற்பளிங் கிற்றலம் பாதஞ் சிவப்பிக்கவே."

**பாங்கி தலைமகளை எய்திக் கையுறை காட்டல்:**

"முகையா யலராய் முலைக்குநின் வாய்க்கு முறைமுறையே
பகையா முளரியுஞ் சேதாம் பலுமிவை பைங்கழுநீர்
வகையார் தொடைபுனை வாணன்றென் மாறையின் மௌவலன்ன
நகையா யவையிவை நின்குழற் காமுல்லை நாண்மலரே."

**இரவுக்குறி இடையீடு:**

இரவுக்குறியிடத்து வரும் தலைவன் தான் வந்ததனை அறிவிக்கும் பொருட்டு சில குறியீடுகளை உணர்த்துவான்.அதனை அறிந்த தலைவி தலைவனை வந்து சந்திப்பாள். சிலபோது தலைவன் வருவதற்கு முன்னமே பறவைகள் சப்தம் எழுப்பல், கிணற்றில் கல் விழுந்த ஓசை எழுதல் போன்ற குறியீடுகள் இயற்கையாகவே எழுந்து விடுதல் உண்டு. அதனை நம்பி வந்த தலைவி தலைவனைக் காணாது திரும்பிச் செல்லலும் உண்டு. பின் தலைவன் வந்து குறி எழுப்பிய போதும் தலைவி அதனை முன்போல் இயற்கையாய் நிகழ்ந்ததாய் எண்ணி வராது இருத்தலும் உண்டு. சில பொழுதுகளில் தலைவி தலைவனைச் சந்திக்க விரும்பிய இடத்தும் தாய் தூங்காமை போன்ற காரணங்களால் சந்திக்க முடியாமல் போவதும் உண்டு. அதனால் தலைவியைச் சந்திக்க முடியாத தலைவன் வருத்தமுறுவான். இத்தகைய செயல் இரவுக்குறி இடையீட்டில் அல்லகுறிப்படுதல் என வழங்கப்படும்.

## 6.3 இரவுக்குறி இடையீட்டின் வகை

அல்லகுறி வருந்தொழிற் கருமை யென்றாங்
கெல்லிக்குறி யிடையீ டிருவகைத் தாகும்.

இரவுக்குறியிடையீடு அல்லகுறியும், வருந்தொழிற் கருமையும் என இரண்டு வகையினை உடைத்தாகும் அல்லகுறி என்பது குறியல்ல என்றவாறு. அதனை முன்றில் என்பதுபோலக் கொள்க. அல்லகுறியாவது தலைமகனான் நிகழ்த்தப்படுவனவாகிய புள்ளெழுப்பல் முதலியன பிறிதொன்றினான் நிகழ்தல். வருந்தொழிற்கருமையாவது, தலைமகன் வருகின்ற தொழிற்கு அருமையாம்.

## 6.4 அல்லகுறி

இறைவிக் கிகுளை யிறைவர வுணர்த்துழித்
தான்குறி மருண்டமை தலைவியவட் குணர்த்தலும்
பாங்கி தலைவன் றீங்கெடுத் தியம்பலும்

குறிப்பு

புலந்தவன் போதலும் புலர்ந்தபின் வறுங்களந்
தலைவிகண் டிரங்கலும் தன்றுணைக் குரைத்தலும்
தலைமக ளவலம் பாங்கி தணித்தலும்
இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றலும்
இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றலும்
அவள்குறி மருண்டமை அவளவற் கியம்பலும்
அவன்மொழிக் கொடுமைசென் றவளவட் கியம்பலும்
என்பிழைப் பன்றென் றிறைவிநோ தலுமென
ஒன்றுபன் னொன்று மல்லகுறிக் குரிய.

இறைவிக்கு இகுளையிறை வரவுணர்த்துழித்தான் குறிமருண்டமை தலைவி அவட்குணர்த்தல் பாங்கி தலைவன் தீங்கெடுத் தியம்பல், புலந்தவன் போதல், புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண் டிரங்கல், தன்றுணைக் குரைத்தல், தலைமகளவலம் பாங்கி தணித்தல்,இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல், இறைவிமேல் இறைவன் குறிபிழைப் பேற்றல், அவள்குறி மருண்டமை அவளவற் கியம்பல், அவன்மொழிக் கொடுமைசென்று அவளவட்கியம்பல் என் பிழைப்பன்று என்று இறைவி நோதல் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டும் அல்லகுறிக்கு உரியவாகும்.

**இறைவிக்கு இகுளை இறைவரவுணர்தல்:**

“அம்ம வாழியோ வன்னைநம் படப்பைப்
பொம்ம லோதி யம்மென் சாயன் ----
வெண்ணினை யுரைமோ வுணர்குவல் யானே.”

**தான்குறி மருண்டமை தலைவி பாங்கிக்குணர்த்தல்:**

“அணிகடற் றண்சேர்ப்பன் றேர்ப்பரிமாப் பூண்ட
மணியரவ மென்றெழுந்து போந்தேன்-கனிவிரும்பும்
புள்ளரவங் கேட்டுப் பெயர்ந்தே னொளியிழா
யுள்ளுருகுநெஞ்சினேனாய்.”

**பாங்கி தலைமகன் தீங்கெடுத்தியம்பல்:**

“கொடுமுண் மடற்றாழைக் கூம்பவிழ்ந்த வொண்பூ
விடையு ளிழுதொப்பத் தோன்றிப் - புடையெலாந்
தெய்வங் கமழுந் தெளிகடற் றண்சேர்ப்பன்
செய்தான் றெளியாக் குறி.”

**தலைமகன் புலந்து போதல்:**

“தேனுற்ற வாகையந் தார்த்தஞ்சை வாணனைச் சேரலர்போன்
மானுற்ற பார்வை மயில்பொருட்டாக வழிதெரியாக்
கானுற்ற கானற் சுனையிருள் வாய்வரக் கற்பித்தநீ

குறிப்பு

யானுற்ற நோய்களெல் லாம்படு வாயினி யென்னெஞ்சமே.''

**வறுங்களந் தலைவி கண்டிரங்கல்:**

''தாதகை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றடந்துறைவாய்
நீதகை கொண்டென்முன் னின்றனை யேசெந் நிறக்கனிவாய்
மேதகு முள்ளெயிற் றொண்முகைக் கொங்கை வெண்மென்பூங்
கேதகை யென்னுநல் லாய்கொண்கர் மாலை கிடைத்ததென்றே.''

**தலைமகள் குறிமருண்டமை தோழி தலைவற்குரைத்தல்:**

''தனையா வரும்புக ழுத்தரும் வாணன் றமிழ்த்தஞ்சைமா
னனையா ளவள்குறி யாமிதென் றேநினைந் தல்லதொன்று
நினையா வருங்கங்கு னின்குறி யாவந்து நின்றதுநம்
வினையால் விளைந்ததென் றேவெறி தேயன்ப மீண்டனளே.''

**தலைமகன் சொல்லிய கொடுமையைத் தலைமகட்குத் தோழி சொல்லல்:**

''பல்லியம் போலுரு மேறெங்கு மார்ப்பதும் பார்ப்பதின்றி
வல்லியம் போதகம் போர்பயில் கான்வந்து வாணன்றஞ்சை
யல்லியம் போருகை யன்னநின் கேளருளா சையினின்
றெல்லியம் போதுசென் றேனென்று கேள்வ ரியம்பினரே.''

**என் பிழைப்பன்றென்று இறைவி நோதல்:**

''கொன்னூர் துஞ்சினும் யாந்துஞ் சலமே
யெம்மி லயல தேழி லும்பர்
மயிலடி யிலைய மாக்குர னொச்சி
யணிமிகு மென்கொம் பூழ்த்த
மணியருள் பூவின் பாடுநனி கேட்டே.''

முன்னை ஞான்றும் நிகழ்ந்தவை அறிந்திருந்தும் மற்றை ஞான்று தலைமகள் இவ்வாறு சொல்லியாற்றுதல் காரணமாகவும், பாங்கி சொல்லி ஆற்றுவித்தல் காரணமாகவும் வந்தன.

## 6.5 வருந்தொழிற் கருமை.

தாயும் நாயும் ஊருந்துஞ் சாமை
காவலர் கடுகுதல் நிலவுவெளிப் படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய.

தாய்துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவுவெளிப் படுதல்,கூகை குழறுதல், கோழிகுரற் காட்டுதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் இரவுக்குறிக்கண் தலைமகன் வருந்தொழிலருமை சாற்றலுக்கு உரியனவாகும்.

குறிப்பு

**தாய் துஞ்சாமை:**

“ஆழி யகன்புவி யுள்ளன யாவு மடங்கி நள்ளென்
றூழி முடிந்தன்ன வோங்கிருள் யாமத்து மோடையினுந்
தாழி யினும்போ தலர்தஞ்சை வாணன் றரியலர்போல்
தோழிநம் மன்னைகண் ணேதுயில் கோட றுறந்தனவே.”

**நாய் துஞ்சாமை:**

“தண்ணென் புனல்வையை சூழ்தஞ்சை வாணன் றரியலர்போற்
பெண்ணென் பிறவியும் பேருடைத் தன்றிப் பெரும்பதிநங்
கண்ணென் பவர்வரக் கங்குலின் ஞானிக் கணங்கு துத்
துண்ணென் கடுங்குரல் வாயன்னை துஞ்சினுந் துஞ்சிலவே”

**ஊர் துஞ்சாமை:**

“ஓங்கண்ணல் வெம்பசூ டுந்திவந் தோரை யுடன்று தும்பைத்
தேங்கண்ணி சூடிச் செருவென்ற வாணன்றென் மாறைமின்னே
தாங்கண் ணனையர் தமைப்பிரிந் தோநந் தனிமைகண்டோ
நாங்கண் ணுறங்கினு மோவுறங் கார்கண் ணகரவரே.”

**காவலர் கடுகுதல்:**

“புயற்கண் ணியதலைப் பூகமென் பாளைப் புதுமதுநீர்
வயற்கண் ணிறைதஞ்சை வாணன்றென் மாறையில் வஞ்சியன்னாள்
கயற்கண் ணிணையஞ்சி நீர்மல்கக் காவலர் கைப்பறையின்
செயற்கண் ணிணையல்ல வோபடு கின்றன திண்கடிப்பே.”

**நிலவு வெளிப்படல்:**

“கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்
இரும்புலிக் குருளையிற் றோன்றுங் காட்டிடை
யெல்லி வருநர் களவிற்கு
நல்லை யல்லை நெடுவெண் ணிலவே.”

**கோழி குரற்காட்டுதல்:**

“கள்வ ரைக்கண் காட்டுவர் போலக்
கொள்ளுங் குரல்கூவுங் கோழி.”

## 6.6 இரவுக்குறி இடையீட்டின் விரி:

திரட்டியிவ் வாறு செப்பிய வொன்பதிற்
றிரட்டியு மிரவுக்குறி யிடையீட்டு விரியே.

சொல்லப்பட்ட பதினெட்டும் இரவுக்குறியிடையீட்டு விரியாகும்.

**வரைதல் வேட்கை:**

தலைவன் பகலிலும் இரவிலும் தலைவியைச் சந்திக்க இயலாமல் போதல்,தலைவன் வரும் வழியின் அருமை எண்ணித் தலைவி அஞ்சல் போன்ற காரணங்களை முன்னிட்டு தலைவன் களவொழுக்கத்தினை விடுத்து

குறிப்பு

கற்பொழுக்கம் மேற்கொள்ள விரும்பல் வரைதல் வேட்கை என்று அழைக்கப்படும்.

## 6.7 வரைதல் வேட்கையின் வகை

அச்ச முவர்த்த லாற்றா மையென
மெச்சிய வரைதல் வேட்கைமூ வகைத்தே.

வரைதல் வேட்கை அச்சமும் உவர்த்தலும் ஆற்றாமையும் என மூன்று வகையினை உடைத்தாம்.

## 6.8 வரைதல் வேட்கையின் விரி.

பருவரல் வினவியபாங்கிக் கிறைவி
அருமறை செவிலி அறிந்தமை கூறலும்
தலைமகன் வருந்தொழிற் கருமை சாற்றலும்
தலைமக னூர்க்குச் செலவொருப் படுதலும்
பாங்கி யிறைவனைப் பழித்தலும் பூங்கொடி
இறையோன் றன்னைநொந் தியற்பட மொழிதலும்
கனவுநலி புரைத்தலும் கவினழி வுரைத்தலும்
தன்றுயர் தலைமகற் குரைத்தல் வேண்டலும்
துன்புறல் பாங்கி சொல்லெனச் சொல்லலும்
அலர்பார்த் துற்ற வச்சக் கிளவியும்
ஆறுபார்த் துற்ற வச்சக் கிளவியுங்
காம மிக்க கழிபடர் கிளவியும்
தன்னுட் கையா றெய்திடு கிளவியும்
நெறிவிலக்கு வித்தலும் குறிவிலக்கு வித்தலும்
வெறிவிலக்கு வித்தலும் பிறவிலக்கு வித்தலும்
குரவரை வரைவெதிர் கொள்ளுவித் தலுமென
வுரைபெற வகுத்த வொன்பதிற் றிரட்டியும்
வரைதல் வேட்கை விரியெனப் படுமே.

பருவரல் வினவிய பாங்கிக்கு இறைவி அருமறை செவிலி அறிந்தமை கூறல் முதலாகக் குரவரை வரைவெதிர் கொள்ளுவித்தல் ஈறாகச் சொற்பெற வகுத்த பதினெட்டும் வரைதல் வேட்கைவிரியாம். பருவரல் வினவிய பாங்கிக் கிறைவி யருமறை செவிலியறிந்தமை கூறலும், தலைமகன் வருந்தொழிற்கருமை சாற்றலும் ஆக இரண்டும், அலர்பார்த்துற்ற அச்சக்கிளவியும் ஆறுபார்த்துற்றலச்சக்கிளவியும் ஆகவிரண்டும் நெறிவிலக்குவித்தல்முதலிய நான்குமாகிய எட்டும் அச்சத்திற்குரியன; பாங்கி இறைவனைப் பழித்தலும் துன்புறு பாங்கிசொல்லெனச் சொல்லலுமாகிய இரண்டும், உவர்த்தற்குரியன;தலைமகனூர்க்குச் செலவொருப்படுதலும், பூங்கொடி இறையோன்றன்னை நொந்தியற்பட மொழிதலும், கனவு நலிவுரைத்தலும், கவினழி புரைத்தலும்,

குறிப்பு

தன்றுயர்தலைவர்க்குணர்த்தல் வேண்டலும், காமமிக்க கழிபடர் கிளவியும் தன்னுட் கையாறெய்திடு கிளவியும், குரவரைவரைவெதிர் கொள்ளுவித்தலுமாகிய எட்டும் ஆற்றாமைக் குரியன.

**தலைமகளைப் பாங்கி பருவரல் வினவுதல்::**

“விண்டார் பதிகொண்ட வேற்படை வாணன் விசைகமழ்பூந்
தண்டா மரைமங்கை தங்கிய தஞ்சைநின் ாயர்தம்மோ
டுண்டா கியமுனி வோவன்றி யாயத்தொ டுற்றதுண்டோ
வண்டார் குழலிசொல் லாய்செல்ல லேதுன் மனத்திடையே.”

**தலைமகள் அருமறை செவிலியறிந்தமைகூறல்:**

“மாணிக்க மென்கொம்பரென்சொல்லு கேன்றஞ்சை வாணன்வெற்பர்
பேணிப் புணர்ந்து பிரிந்தபின் றோன்றலும் பேதைமுகம்
பாணித்த லின்றி மதிகண்டு நாணிய பங்கயம் போல்
நாணிக் கவிழ்ந்தத னாலறிந் தாளன்னை நங்கனவே.”

**தலைமகள் தலைமகன் வருந்தொழிற்கருமைசாற்றல்:**

“ஓவலில் வாயன்னை ஞாளியிவ் வூர்கண் ணுறங்கினுமூர்க்
காவலர் காய்வர் நிலாமதி காலுங் கடுங்குடிஞைச்
சேவலும் வாரண முந்தஞ்சை வாணனைச் சென்றிறைஞ்சா
மேவலர் போல்வெய்ய வாயடை யாவென் மெலிவறிந்தே.”

**பாங்கி இறைவனைப் பழித்தல்:**

“வறியார் புகழ்தஞ்சைவாணன்றென் மாறை மடந்தையன்னாள்
அறியா டுயர்முன் னறிந்தவர் தாமத னாலழலின்
பொறியா ருயிர்வெம் பணிமா மணியும் புதையிருள்கூர்
நெறியா ரருள்பெற நாநடு நாளிடை நீந்துதுமே,”

**தலைமகன் இயற்பட மொழிதல்:**

“இப்பியீன் றுகுத்த நித்திலம்
இருளற விமைக்கு மல்கிருந் துறைவன்
அருளா துறைவா னாகவும்
இறையிறந் தனவாற் றோழியென் வளையே.”

**தலைமகள் கனவு நலிபுரைத்தல்:**

“சினவாகை சூடிச் செருவென்ற வாணன்றென் மாறையினம்
மனவாழ் மனையவர் வந்துநல் லியாம மணந்ததெல்லாம்
நனவா மெனவே மகிழ்ந்தே விழித்தொன்று நான் கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னையென் னேயென்ன கைதவமே”

**தலைமகள் கவினழிபுரைத்தல்:**

“முடக்கா லிறவின் முடங்குபுறப்பெருங்கிளை
புணரி யிகுதிரை தரூஉந் துறைவன்

குறிப்பு

புணரிய விருந்து ஞான்றும்

இன்னது மன்னோ நன்னுதற் கவினே''.

**தலைமகள் அலர்பார்த்துற்ற அச்சக்கிளவி:**

''மலருந் தொடைவஞ்சி வஞ்சக மாதரு மாரனும்வா

யலருந் தடங்கை யலருந் தொடாநிற்ப வஞ்சிநெஞ்சம்

பலரும் புகழ்தஞ்சை வாணர் பிரானைப் பணியலர்போற்

புலரும் பெயருங்கண் ணீர்புல ராது புலரினுமே.''

**தலைமகள் ஆறுபார்த்துற்ற அச்சக் கிளவி:**

'குன்றக் கூகை குழறினுமுன்றிற்

பலவி னிருஞ்சினைக் கலைபாய்ந் துகளினும்

அஞ்சும னளித்தெ னெஞ்ச மினியே

ஆரிருட் கங்கு லவர்வரிற்

சார னீளிடைச் செலவா னாதே.''

**காமமிக்க கழிபடர் கிளவி:**

'புன்கண்கூர் மாலைப்புலம்புமென் கண்ணேபோல்

துன்பம் உழவாய் துயிலப் பெறுதியால்

இன்கள்வாய் நெய்தால்நீ யெய்துங் கனவினுள்

வன்கணார் கானல் வரக்கண் டறிதியோ.''

**தலைமகள் குறிவிலக்குவித்தல்:**

''வெற்றி யவாவிய வாணர் பிரான்றஞ்சை வெற்பகத்திப்

பெற்றிய சோலைப் பிறங்கிருள் வாரன்மின் பேதையின்னும்

முற்றிய வேனற் படுகிள்ளை யோப்பு முறைமையளென்

றெற்றிய காதலி னாலிசைத் தாளன்னை யென்றுரையே."

**வெறிவிலக்குவித்தல்:**

''வெறிகமழ் வெற்பனென்மெய்ந்நீர்மை கொண்ட

தறியாண்மற் றன்னோ வணங்கணங்கிற் றென்று

மறியீர்த் துதிரந்தூய் வேலன் தரீஇ

வெறியோ டலம்வரும் யாய்."

**வரைவு கடாதல்:**

தலைவன் தலைவியை மணம் செய்து கொள்ளலின் இன்றியமையாமையை பல்வேறு காரணங்களான் எடுத்துரைத்துக் கூறுதல் வரைவுகடாதல் எனப்படும்.

## 6.9 வரைவு கடாதலின் வகை:

பொய்த்தல் மறுத்தல் கழறல்மெய்த்தலென்

றொருநால் வகைத்தே வரைவு கடாதல்.

பொய்த்தல், மறுத்தல்,கழறல், மெய்த்தல் ஈறாக நான்கு வகையினை யுடைத்து வரைவுகடாதல் என்பதாம்.

குறிப்பு

## 6.10 வரைவு கடாதலின் விரி:

வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பலும்
அலரறி வுறுத்தலும் தாயறி வுணர்த்தலும்
வெறியச் சுறுத்தலும் பிறர்வரை வுணர்த்தலும்
வரைவெதிர் வுணர்த்தலும் வரையுநா ளுணர்த்தலும்
அறிவறி வுறுத்தலும் குறிபெயர்த் திடுதலும்
பகல்வரு வானை யிரவுவரு கென்றலும்
இரவுவரு வானைப் பகல்வரு கென்றலும்
பகலினும் இரவினும் யின்றுவரு கென்றலும்
பகலினும் இரவினும் அகலிவண் என்றலும்
உரவோன் நாடும் ஊரும் குலனும்
மரபும் புகழும் வாய்மையும் கூறலும்
ஆறுபார்த் துற்ற அச்சம் கூறலும்
ஆற்றாத் தன்மை ஆற்றக் கூறலும்
காவன்மிக வுரைத்தலும் காமமிக வுரைத்தலும்
கனவுநலி வுரைத்தலும் கவினழி வுரைத்தலும்
எனமுறை நாடி இயம்பிய விருபதும்
வரைவு கடாதல் விரியெனப் படுமே.

வினவிய செவிலிக்கு மறைத்தமைவிளம்பல் முதலாகக் கவினழிவுரைத்தல் ஈறாகச்சொல்லப்பட்ட இருபதும் வரைவு கடாதல் விரி எனப்படும். இவற்றுள், வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல் முதலாகப் பிறர்வரைவுணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் பொய்த்தற்குரியன ஆகும்.குறிபெயர்த்திடுதல் முதலாகப் பகலினும் இரவினும் அகலிவண் என்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் மறத்தற்குரிய; உரவோன் நாடும் ஊரும் குலமும் மரபும் புகழும் வாய்மையும் கூறலாகிய ஒன்று கழறற்குரியது; வரைவெதிர்வுணர்த்ததலும், வரையுநாளுணர்த்தலும், அறிவறிவுறுத்தலும், ஆறுபார்த்துற்ற அச்சங்கூறலும், ஆற்றாத்தன்மை ஆற்றக்கூறலும், காவல் மிகவுரைத்தலும், காமம்மிகவுரைத்தலும், கனவு நலிபுரைத்தலும், கவினழிபுரைத்தலுமாகிய ஒன்பதும் மெய்த்தற்குரியன ஆகும்.

**வினவிய செவிலிக்கு மறைத்தமைதலைவர்க்குத் தோழி விளம்பல்:**

“தளரா விளமுலை தாங்ககில் லாது தளரிடைகண்
வளராத தென்கங்குல் வாரா யெனத்தஞ்சை வாணன்வெற்பா
விளரார் திருநுத லன்னைக்கொர் மாற்றம் விளம்பியுய்ந்தேன்
உளரா மவர்வலை யுட்பட்டு வாழ்வ துணர்ந்தருளே.”

குறிப்பு

**அலர் அறிவுறுத்தல்:**

“மணிவரை மாளிகை மாறை வரோதயன் வாணன்வெற்பா
பணிமொழி யாளென்னுங் கொள்கொம்பு மூடிப் படர்ந்தயலார்
அணிமனை தோறுங் கொழுந்துவிட் டம்ப லரும்பிமண்மேல்
தணிவில தாகவிப் போதலர் பூத்ததுன் றண்ணளியே.”

**தாயறிவுணர்த்தல்:**

“திரையிற் பவளம் வடவா முகத்தெழுந் தீக்கொழுந்தின்
கரையிற் படருங் கடற்றுறை நாட கயற்கொடிபொன்
வரையிற் றிகழ்வித்த வாணன்றென் மாறை மலர்ந்தமௌவல்
விரையிற் களவையெல் லாமறிந் தாளன்னை மெய்யுறவே.”

**வெறி அச்சுறுத்தல்:**

“மையுற்ற நீலக்கண் மாமங்கை கோன்றஞ்சை வாணன்வெற்பி
னெய்யுற்ற வேலன்ப நீதணி யாமையி னெஞ்சினுள்ளே
யையுற் றயர்வுற்றெம் மன்னையு மாயுமென் னாரணங்கின்
மெய்யுற்ற நோய்தணிப் பான்வெறி யாடல் விரும்பினரே.”

**தலைமகள் அறிவு தலைமகற்கு அறிவுறுத்தல்:**

“வனநாண் முளரி முகைவென்று வாணன்றென் மாறைவெற்பிற்
கனநா ணணிந்துபொற் கச்சற வீசிக் கதித்தெழுந்த
தனநாணு நுண்ணிடைத் தையனல் லாள்பழி சாற்றுவல்யா
னெனநாணி நின்பழி தான்மறைத் தாளன்ப வென்னையுமே”

**பகல் வருவானை இரவு வருகென்றல்:**

“முத்தணி நீல மணித்தகட் டுள்ளெங்கு மொய்கொளவே
வைத்தணி சேர வகுத்தது போற்றஞ்சை வாணன்வையைப்
பைத்தணி வார்திரை தோய்கருந் தாட்புன்னைப் பாசிலைவெண்
தொத்தணி பூந்துறை வாவரு வாயிருள் ங்கிரவே.”

**இரவு வருவானைப் பகல் வருகென்றல்:**

“இழைவிளை யாடு மிளமுலை சாயற் கிடைந்தமஞ்ஞை
கழைவிளை யாடுங் கடிப்புனங் காத்துங் கலையகலா
துழைவிளை யாடு முயர்சிலம் பாவின்னு முன்பொருட்டாண்
மழைவிளை யாடு மதிற்றஞ்சை வாணன் மலயத்திலே.”

**பகலினும் இரவினும் பயின்றுவருகென்றல்:**

“குரவுங் கணியும்விரவும்வெற் பாவெய்ய குஞ்சரமேல்
வரவுந் தியதெவ்வை மாற்றிய வாணன்றென் மாறைமின்னும்
அரவும் பணியு நுடங்கிடை யாற்றல ளாற்பகலும்
இரவுங் குறிவயி னீவரல் வேண்டு மிவள்பொருட்டே.”

குறிப்பு

**ஆறுபார்த் துற்ற அச்சங் கூறல்:**

“கரைபொரு கான்யாற்றங் கல்லத ரெம்முள்ளி வருதிராயின்
அரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வௌவுத லஞ்சுதும் வாரலையே.’

**காவன் மிகவுரைத்தல்:**

“நஞ்சா ரரவந் திரிதரு கானடு நாளிரவில்
அஞ்சாது செங்கை யயில்விளக் காவணங் கின்பொருட்டான்
மஞ்சார் மதிற்றஞ்சை வாணன்வெற் பாவரல் வன்சொலன்னை
துஞ்சாள் கடுந்துடிக் கைநகர் காவலர் துஞ்சினுமே.”

**காம மிகவுரைத்தல்:**

“வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரனாட செவ்வியை யாகுமதி
யார.். தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச சிறிது காமமோ பெரிதே.”

**கனவு நலிபுரைத்தல்:**

“மின்னவிர் வயங்கிழை ஞெகிழச் சாஅய்
நன்னுதல் பசத்தல் யாவது துன்னிக்
கனவிற் காணு மிவளே
நனவிற் காணாணின் மார்பே தெய்யோ.”

**கவினழி புரைத்தல்:**

“ஏரேற்ற கொங்கை யிளங்கொடி மாந்தளி ரேய்ந்தவண்ணங்
காரேற்ற கங்குலிற் பீரலர் போன்றது காவியுண்கண்
வாரேற்ற பைங்கழல் வாணன்றென் மாறையில் வாவியின்கண்
நீரேற்ற செங்கழு நீர்மலர் போன்றது நின்பொருட்டே.”

**ஒருவழித்தணத்தல்:**

பொய்த்தல், மறுத்தல்,கழறல், மெய்த்தல் என்னும் நான்கு வகையான் தோழி வற்புறுத்திக் கூறியமையால் மனம் தெளிந்த தலைவன் வரைதல் காரணமாகச் சிறிது நாள் பிரிந்து போய் இருப்பதாய்த் தெரிவிப்பான்.இச் சிறு பிரிவிற்கு ஒருவழித்தணத்தல் என்று பெயர்.

## 6.11 ஒருவழித்தணத்தலின் வகை

.செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற்று வித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே

ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்.

ஒருவழித்தணத்தல் செலவறிவுறுத்தல்,செலவுடன் படாமை, செலவுடன் படுத்தல்,சென்றுழிக் கலங்கல், தேற்றியாற்று வித்தல், வந்துழிநோதல் ஈறாக எழுவகையினையுடைத்தாம்.

## 6.12 ஒருவழித்தணத்தலின் விரி

குறிப்பு

.தன்பதிக் ககற்சி தலைவன் சாற்றலும்
மென்சொற் பாங்கி விலக்கலும் தலைவன்
நீங்கல் வேண்டலும் பாங்கி விடுத்தலும்
தலைவிக் கவன்செல வுணர்த்தலும் தலைவி
நெஞ்சொடு புலத்தலும் சென்றோன் நீடலிற்
காமம் மிக்க கழிபடர் கிளவியுங்
கோற்றொடிப் பாங்கி ஆற்றுவித் தலுமவன்
வந்தமை உணர்த்தலும் வந்தோன் றன்னொடு
நொந்து வினாதலும் வெந்திறல் வேலோன்
பாங்கியொடு நொந்து வினாதலும் பாங்கி
இறைவியை ஆற்றுவித் திருந்த வருமை
கூறலும் என்னும் ஆறிரு கிளவியும்
ஒருவழித் தணத்தலின் விரியெனப் படுமே.

தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல் முதலாகத் தலைவியைப் பாங்கி ஆற்றுவித்திருந்த அருமைகூறல் ஈறாகச் சொல்லப்பட்ட பன்னிரண்டு கிளவியும் ஒருவழித்தணத்தலின் விரி ஆகும். இவற்றுள், தன்பதிக்ககற்சி தலைவன்சாற்றலும், பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டும் செலவறி வுறுதற்குரிய; தலைமகனைப் பாங்கி விலக்கலாகிய ஒன்றும் செலவுடன் படாமைக்குரித்து; தலைவன் நீங்கல் வேண்டலாகிய ஒன்றும் செலவுடன் படுத்தற்குரித்து; தலைமகனைப் பாங்கி விடுத்தலாகிய ஒன்றும் செலவுடன்படுத்தற்குரித்து; தலைமகன் நெஞ்சொடு புலத்தலும், காமமிக்க கழிபடர் கிளவியுமாகிய இரண்டும் சென்றுழிக் கலங்கற்குரிய; தலைமகளைப் பாங்கி ஆற்றுவித்தலும்,தலைமகன் வந்தமை தலைமகட் குணர்த்தலுமாகிய இரண்டும் தேற்றியாற்றுவித்தற்குரிய; பாங்கி வந்தோன் தன்னொடு நொந்து வினாதன் முதலாகிய மூன்றும் வந்தவழி நொந்து உரைத்தற்குரியதாகும்.

**தன்பதிக்ககற்சி தலைவன் சாற்றல்:**

“திரைகே தகைமணங் கூடுமெம் பாடியிற் சென்றுவந்தியான்
வரைகேன் வருந்துணை வல்லியை நீதஞ்சை வாணன்செவ்வேல்
புரைகேழ் மதர்விழிக் கோங்கரும் பேர்முலைப் பூசல்வண்டு
நிரைகேச வஞ்சியஞ் சேலென்று தேற்றுத னின்கடனே.”

குறிப்பு

**பாங்கி தலைமகனைச் செலவுவிலக்கல்:**

"வருவை யல்லை வாடைநனி கொடிதே
யருவரை மருங்கி னாய்மணி வரன்றி
யொல்லென விழிதரு மருவிநின்
கல்லுடை நாட்டுச் செல்லல் தெய்யோ."

**தலைமகனைப் பாங்கி விடுத்தல்:**

"இல்லத் துறையு மிவள்பொருட் டானுமக் கியானுமொன்று
சொல்லத் தவிர்கிலன் சூழ்கழ லீர்சுடர் தோய்புரிசை
வல்லத் தமர்வென்ற வாணன்றென் மாறையில் வந்துவந்து
செல்லத் திருவுளம் வைத்தகல் வீர்நுந் திருநகர்க்கே."

**பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தல்:**

"சாரற் பலவின் கொழுந்துணர் நறும்பழ
மிருங்கல் விடரளை வீழ்ந்தனெ வெற்பிற்
பெருந்தே னிறாஅல் கீறு நாடன்
பேரமர் மழைக்கண் கலிழத்தன்
சீருடை நன்னாட்டுச் செல்லு மன்னாய்."

**தலைவி நெஞ்சொடு புலத்தல்:**

"அளித்தஞ்ச லென்றவர்நீப்பிற் றெளித்தசொல்
தேறியார்க் குண்டோ தவறு."

**சென்றோன் நீடலில் காமமிக்க கழிபடர்கிளவி:**

"சிறுவெள்ளாங் குருகேசிறுவெள்ளாங் குருகே
துறைபோ கறுவைத் தூமடி யன்ன
நிறங்கிளர் தூவிச் சிறுவெள்ளாங் குருகே
யெம்மூர் வந்தெம் மொண்டுறைத் துழைஇச்
சினக்கெளிற் றார்கையை யவரூர்ப் பெயர்தி
யனையவன் பினையோ பெருமற வியையோ
ஆங்கட் டீம்புன லீங்கட் பரக்கும்
கழனி நல்லூர் மகிழ்நர்க்கென்
இழைநெகிழ் பருவரல் செப்பா தோயே."

**தலைவியைப் பாங்கி ஆற்றுவித்தல்:**

"ஆடுகம் வாநம் மகன்றவ ரூரக லாப்புதுநீர்
பாடுகம் வாபொற் பசலைதந் தார்திறம் பாங்கினெல்லாந்
தேடுகம் வாதஞ்சை வாணனன் னாட்டன்பர் தேர்வழிநாஞ்
சூடுகம் வாகவ லாதவர் கானற் றுறைமலரே,"

**பாங்கி தலைமகட்குத் தலைமகன் வந்தமை உணர்த்தல்:**

"அம்ம வாழி தோழி நம்மலை

குறிப்பு

நறுந்தண் சிலம்பி னாறுகுலைக் காந்தட்
கொங்குண் வண்டிற் பெயர்ந்துபுற மாறிநின்
வன்புடை விறற்கவின் கொண்ட
வன்பி லாளன் வந்தன னினியே.''

**தலைவன் பாங்கியொடு நொந்து வினாதல்:**

''ஐவா யரவுற்ற தன்னவின்னாவிட ராற்றியென்போல்
எவ்வா றிருந்திர்நீ ரெல்வளை யீரெதிர்ந் தாரைவென்று
மைவா ரணங்கொண்ட வாணன்றென் மாறை மருவலர்போல்
ஒவ்வா வலரையுங் கேட்டிரு வீரு பொருதனியே,''

**பாங்கி தலைவியை ஆற்றுவித்திருந்த அருமை தலைமகற்குச் சொல்லல்:**

''போதார் கூந்த லியலணி யழுங்க
வேதி லாட்டியை நீபிரிந் ததற்கே
யழலவிர் மணிப்பூ ணனையப்
பெயலா னாவென் கண்ணே தய்யோ,''

**வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவு:**

ஒருவழித்தணத்தலில் தலைவியைச் சந்திக்க இயலாத தலைவன் தோழியைச் சந்தித்து தன் வருகையை உணாத்தி இறுதியாகத் திருமணத்திற்காகப் பொருள் ஈட்டும் பொருட்டு பிரிந்து செல்வதாய்க் கூறிப் பிரிந்து செல்லல் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனப்படும்.

## 6.13 வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலின் வகை

.பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய ஒன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல், பிரிவறிவுறுத்தல், பிரிவுடன் படாமை, பிரிவுடன் வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி ஈறாக ஒன்பது வகையினையுடைத்தாம்.

## 6.14 வரைவிடைவைத்துப் பொருள்வயிற் பிரிதலின் விரி

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக் கென்றலும்
நின்பொருட் பிரிவுரை நீயவட் வென்றலும்
நீடே னென்றவ னீங்கலும் பாங்கி
ஓடரிக் கண்ணிக் கவன்செல வுணர்த்தலும்
பூங்குழை யிரங்கலும் பாங்கி கொடுஞ்சொற்
சொல்லலும் தலைவி கொடுஞ்சொற் சொல்லலும்

குறிப்பு

வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும்
பருவங் கண்டு பெருமகள் புலம்பலும்
இகுளைவம் பென்றலும் இறைமகள் மறுத்தலும்
அவர்தூ தாகிவந் தடைந்ததிப் பொழுதனெத்
துணைவி சாற்றலும் பிணைவிழி ஆற்றலும்
அவனவண் புலம்பலும் அவன்வருங் காலைப்
பாகன் றன்னோடும் மேகந் தன்னொடும்
சோகங் கொண்டவன் சொல்லலும் பாங்கி
வலம்புரி கேட்டவன் வரவறி வுறுத்தலும்
வலம்புரி கிழத்தி வாழ்த்தலும் வந்துழி
நினைத்தமை வினாதலும் நினைத்தமை செப்பலும்
அனைத்தகை அவளை ஆற்றுவித் திருந்தமை
பாங்கிகூ றலுமென வாங்கெழு மூன்றும்
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவின்
விரியென விளம்பினர் தெரிமொழிப் புலவர்.

என்பொருட் பிரிவுணர்த் தேந்திழைக்கென்றல் முதலாகத் தலைமகளை யாற்றுவித்திருந்தமை பாங்கிகூறல் ஈறாகச் சொல்லப்பட்ட இருபத்தொன்றும் வரைவிடைவைத்துப் பொருள்வயிற்பிரிவின் விரியென மொழிந்தனர் ஆராய்ந்தறிந்தோர். இவற்றுள், என்பொருட் பிரிவுணர்த்தேந்திழைக்கென்றலும், பாங்கி தலைவிக்கு அவன் செலவுணர்த்தலுமாகிய இரண்டும் பிரிவறிவுறுத்தற்குரிய, பாங்கி நின்பொருட்பிரிவுரை நீயவட்கென்றலாகிய ஒன்றும் பிரிவுடன் படாமைக்குரித்து; தலைமகன் நீடேனென் றவனீங்கலாகிய ஒன்றும் பிரிவுடன்படுத்தற்கும் பிரிவுடன்படுதற்கு முரித்து;தலைமகள் இரங்கலும், பாங்கி கொடுஞ்சொற்சொல்லலும், பருவங்கண்டு பெருமகள் புலம்பலும், இறைமகள் மறுத்தலும், அவனவண்புலம்பலுமாகிய ஐந்தும் பிரிவுழிக் கலங்கற்குரிய; தலைவி கொடுஞ்சொற்சொல்லலும், வருகுவர் மீண்டெனப் பாங்கி வலித்தலும், இகுளை வம்பென்றலும், அவர் தூதாகி வந்தடைந்த திப்பொழுதென்றலுமாகிய நான்கும் வன்புறைக்குரிய; தலைமகளாற்றலாகிய ஒன்றும் வன்பொறைக்குரித்து; தலைமகன் மீண்டுவருங்காலைப் பாகன்றன்னொடு சொல்லலும், மேகந்தன்னொடு சோகங்கொண்டவன் சொல்லலுமாகிய இரண்டும் வரும் வழிக் கலங்கற்குரியதாகும். பாங்கி வலம்புரி கேட்டு அவன் வரவறிவுறுத்தல் முதலாகிய ஐந்தும் வந்துழி மகிழ்ச்சிக்குரியவாகும்.

**என்பொருட் பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்:**

“கழைபோல் வளர்நெற் கவின்பெற வாரி கவர்ந்துவரும்
மழைபோல் வருகுவன் வன்சுரம்போய்த் தஞ்சை வாணன்வெற்பில்

குறிப்பு

இழைபோ லிடையாண் முலைவிலைக் காவன யாவையுங்கொண்
டுழைபோ லரிநெடுங் கண்மயி லேசென் றுணர்த்திதுவே,''

**பாங்கி நின்பொருட் பிரிவுரை நீயவட்கென்றல்:**

''வசையும் புகழுநின் மேலன வாந்தஞ்சை வாணன்வெற்பா
மிசையுங் கரும்பினில் வேம்புவைத் தாலன்ன வேட்கையெல்லாத்
திசையும் பரவுந் திருவனை யாடன் றிருவுளத்துக்
கிசையும் படிவல்லை யேற்சொல்லி நீபின் னெழுந்தருளே.''

**நீடேனென்று அவன் நீங்கல்:**

''காலைப் பொழுது கடும்பரித் தேர்பண்ணிக் கானகம்போய்
மாலைப் பொழுது வருகுவல் யான்றஞ்சை வாணனன்னாட்
டாலைப் பழனமணிந்தவெம் மூர்நும் மகங்குளிரச்
சோலைப் பயில்குயில் போன்மொழி யாயென் றுணிவிதுவே.''

**பாங்கி தலைமகட்குத் தலைமகன் செலவுணர்த்தல்:**

''வில்லேய் குறும்பு மிறும்புமெவ் வாயும் விராயவெவ்வாய்க்
கல்லேய் கவலைக் கடங்கடந் தார்நமர் காய்ந்தெதிர்ந்தார்
செல்லேய் முரசச் செருவென்ற வாணன்றென் மாறையினின்
வல்லேய் முலைவிலை தான்தந்து நாளை மணம்பெறவே.''

**தலைமகள் இரங்கல்:**

''செல்வா ரல்லரென் றியானிகழ்ந் தனனே
ஒல்வா ளல்லளென் றவரிகழ்ந் தனரே
யாயிடை, யிருபே ராண்மை செய்த பூசல்
நல்லராக் கதுவி யாங்கென்
அல்ல னெஞ்ச மலமலக் குறுமே.''

**பாங்கி கொடுஞ்சொற் சொல்லல்:**

''ஆரணத் தானருள் பாரளித் தானடங் காதவரை
வாரணத்தால்வென்ற வாணன்றென் மாறை வயங்கொளிசேர்
பூரணத் தார்மதி போன்முகத் தாயென் புலம்புதிநின்
காரணத் தாலல்ல வோபிரிந் தாரின்று காதலரே.''

**தலைவி கொடுஞ்சொற் சொல்லல்:**

''மண்டுந் திரைவையை சூழ்தஞ்சை வாணற்கு வன்புலியுஞ்
செண்டுங் கொடுத்தகல் செம்பியர் போலன்பர் சென்றுழிமுன்
இரண்டுங் கழையும் பயிலும்வெங் கானியல் கேட்டுமிந்நோய்
கண்டுங் கலங்கல்செல் லாதிந்த வூரெற் கழறனன்றே.''

**பருவங் கண்டு பெருமகள் புலம்பல்:**

''அணிநிற மஞ்ஞை யகவ விரங்கி
மணிநிற மாமலைமேற் றாழ்ந்து - பணிமொழி

கார்நீர்மை கொண்ட கலிவானங் காண்டொறும்

பீர்நீர்மை கொண்டன தோள்,''

**தலைமகன் பாகனொடு சொல்லல்:**

குறிப்பு

''பெரும்புன் மாலை யானாது நினைஇ

யரும்பட ருழத்தல் யாவ தென்றும்

புல்லி யாற்றாப் புரையோட் காண

வள்புதெரிந் தூர்மதி வலவநின்

புள்ளியற்கலிமாபபூண்டதேரே''

**தலைமகன் வந்துழிப் பாங்கி நினைத்தமை வினாதல்:**

''நினையீர் பொருட்குப் பிரிந்தய னாட்டுழி நின்றுழிவேள்

அனையீர் நினைந்து மறிதிர்கொல் லோவஞ்சொ லாலறிவோர்

வனையீ ரிதழ்க்கண்ணி வாணன்றென் மாறையை வாழ்த்தலர்போ

னனையீ ரிதழ்க்கண்வை காவெவ்வ நோயுற்ற நவ்வியையே.''

**பயிற்சி வினாக்கள்:**

1. இரவுக்குறியின் வகைகள் யாவை?

வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல்
கூடல்பா ராட்டல் பாங்கியிற் கூட்டல்
உயங்கல் நீங்கலென் றொன்பது வகைத்தே
இயம்பிப் போந்த இரவுக் குறியே.

வேண்டல், மறுத்தல், உடன்படல், கூட்டல், கூடல்பாராட்டல், பாங்கியிற் கூட்டல்,உயங்கல், நீங்கல் ஈறாக ஒன்பது வகைத்து மேற்சொல்லப் பெற்ற இரவுக்குறி ஆகும்.

2. ஒருவழித்தணத்தலின் வகைகள் யாவை?

.செலவறி வுறுத்தல் செலவுடன் படாமை
செலவுடன் படுத்தல் செலவுடன் படுதல்
சென்றுழிக் கலங்கல் தேற்றியாற்று வித்தல்
வந்துழி நொந்துரை யென்றெழு வகைத்தே
ஒன்றக் கூறிய ஒருவழித் தணத்தல்.

3. வருந்தொழிற் கருமை சாற்றல் என்பதனை விளக்குக.

.தாயும் நாயும் ஊருந்துஞ் சாமை
காவலர் கடுகுதல் நிலவுவெளிப் படுதல்
கூகை குழறுதல் கோழிகுரற் காட்டுதல்
ஆகிய ஏழும் அல்லுக்குறித் தலைவன்
வருந்தொழிற் கருமை பொருந்துத லுரிய.

**குறிப்பு**

தாய்துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவுவெளிப் படுதல்,கூகை குழறுதல், கோழிகுரற் காட்டுதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் இரவுக்குறிக்கண் தலைமகன் வருந்தொழிலருமை சாற்றலுக்கு உரியனவாகும்.

4.வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதலின் வகை விவரி.

.பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய ஒன்பது வகைத்தே
வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிவே.

வரைவிடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல், பிரிவறிவுறுத்தல், பிரிவுடன் படாமை, பிரிவுடன் வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி ஈறாக ஒன்பது வகையினையுடைத்தாம்.

# கூறு: 7 - வரைவியல் - வரைவியல் - வரைவு மலிதல் -அறத்தொடு நிற்றல்

**நோக்கம்: வரைவின் இலக்கணம் - வரைவு மலிதல் - அறத்தொடு நிற்றல் - அறத்தொடு நிற்றலின் வகை என்பனவற்றை அறிதல்.**

குறிப்பு

தலைவன் தலைவியை வரைந்து கொள்ளும் நிலை பற்றிய செய்திகளைத் தரும் பகுதி இது என்பதால் இவ் இயல் வரைவியல் எனப்பட்டது. களவு ஒழுக்கத்தின்கண் ஈடுபட்ட தலைவன் தலைவியைக் கொடுப்போர் ஆகிய தலைவியின் பெற்றோர் கொடுக்கக் கொள்வதும் உண்டு. சில சமயங்களில் கொடுப்போர் உடன்படாத வழி மணம் உடன்போக்கில் கொடுப்போர் இன்றியும் நடைபெறுவதும் உண்டு. இவ்விரு நிலைகளும் இவ் வரைவியலில் பேசப்படுகின்றன.

## 7.1 வரைவின் இலக்கணம்

வரைவெனப் படுவது உரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்
கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

வரைவு என்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கொள்ளல் என்பதாகும்.

## 7.2 வரைவிற்குரிய கிளவித் தொகை

வரைவு மலிவே அறத்தொடு நிற்றலென்று
உரையமை யிரண்டும் வரைவிற் குரிய
கிளவித் தொகையெனக் கிளர்ந்தனர் புலவர்.

வரைவு மலிவும் அறத்தொடு நிலையும் என்கின்ற இரண்டும் வரைவிற்குரிய கிளவியின்தொகை என்று கூறினார் அறிவோர்.

## 7.3 வரைவு மலிதல்:

திருமணத்திற்கு முந்தைய முயற்சி ஆகும். தோழி தலைவியிடம் தலைவன் உன்னைத் திருமணம் செய்து கொள்வதற்காக பரிசுப் பணம் போன்றவற்றைக் கொண்டு வந்துள்ளான் என்று கூற அது கேட்ட தலைவி மகிழ்ந்து நம்மைக் காட்டிலும் நற்றாய் பெரிதும் மகிழ்வாள் என எண்ணுவாள். இந்நிலையில் தோழி பெற்றோர் வரைவிற்கு உடன்பட்டனர் எனக் கூறத் தலைவி தலைவனைப் பெரிதும் வாழ்த்துவாள்.தெய்வத்தினை வழிபாடு செய்வாள்.இத்தகைய செயல்கள் வரைவு மலிதல் எனப்படும்.

.வரைவுமுயல் வுணர்த்தல் வரவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

வரைவு முயல்வுணர்த்தல், வரவெதிர் உணர்த்தல், வரைவறிந்து மகிழ்தல், பராவல்கண்டு உவத்தல் ஈறாக நான்கு வகையினையுடைத்தாகும் வரைவுமலிதல்.

குறிப்பு

## 7.4 வரைவுமலிதலின் விரி

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி
காதலிக் குணர்த்தலும் காதலி நற்றாய்
உள்ள மகிழ்ச்சி யுள்ளலும் பாங்கி
தமர்வரை வெதிர்ந்தமை தலைவிக் குணர்த்தலும்
வளுவகை யாற்றா துளத்தொடு கிளத்தலும்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவி
மணப்பொருட்டாக அணங்கைப் பராநிலை
காட்டலும் கண்டோன் மகிழ்வுமென் றீட்டிய
இருமூன்று மொன்றும் வரைவு மலிதற்காம்
விரியென விளம்பினர் மெய்யுணர்ந் தோரே.

காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல் முதலாகக் கண்டோன் மகிழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் வரைவுமலிதலின்விரி யென விளம்பினர் மெய்யுணர்ந்தோர். இவற்றுள்,காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தலும், தலைவி மணப்பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டலுமாகிய இரண்டும் வரைவுமுயல்வுணர்த்தற்குரிய; பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தலாகிய ஒன்றும் வரைவெதிர் வுணர்த்தற்குரித்து; தலைவி நற்றாய் உள்ள மகிழ்ச்சியுள்ளலும், அவள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தலும், தலைமகனைப் பாங்கி வாழ்த்தலுமாகிய மூன்றும் வரைவறிந்து மகிழ்தற்குரிய; தலைமகள் அணங்கைப் பராநிலைகண்டோன் மகிழ்தலாகிய ஒன்றும் பராவல்கண்டு உவத்தற்குரித்தாம்.

**காதலன் முலைவிலைவிடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல்:**

“தொலைவிலை யாகிய பல்பொருள் காதலர் சூதமர்நின்
முலைவிலை யாக முகந்தளித் தார்முனை வேந்தர்தம்மைத்
தலைவிலை யாகத் திறைகொண்ட வாணன் தமிழ்த்தஞ்சைநீ
யுலைவிலை யாகுக பொன்வண்ண மாறுக வொண்ணுதலே,”

**காதலி நற்றாய் உள்ளமகிழ்ச்சி உள்ளல்:**

“கயமா மலரெனுங் கண்ணியை வண்டெனுங் காளைபல்புள்
இயமா மணம்புண ரீர்ந்துறை நாடரெதிர்ந்தவர்மேல்
வயமா நடத்திய வாணன்றென் மாமறை வருகுவரேல்
நயமா மணவணி கண்டியாயு மின்புறு நம்மினுமே.”

குறிப்பு

**பாங்கி தமர்வரைவெதிர்ந்தமை தலைமகட்குணர்த்தல்:**

"அம்ம வாழி தோழி நம்மொடு
சிறுதினைக் காவல னாகிப் பெரிதுநின்
மென்றோண் ஞெகிழவந் திருநுதல் பசப்பவும்
பொன்போல் விறற்கவின் றொலைத்த
குன்ற நாடற் கயர்வர்நன் மணனே."

**தலைமகள் உவகையாற்றாது உளத்தொடு கிளத்தல்:**

"சோகா குலமெய்தல் காண்டுநெஞ் சேநந் துறைவரெனும்
நீகா னுடன்பள்ளி நீள்வங்க மேறி நிலம்புரக்கும்
மாகா விரியன்ன வாணன்றென் மாறைமன் னன்பகையும்
ஏகா விருட்கங்கு லாங்கடற் காலை யெனுங்கரையே."

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்:**

"எரிமருள் வேங்கை யிருந்த தோகை
யிழையணி மடந்தையிற் றோன்று நாட
இனிதுசெய் தனையா னுந்தை வாழியர்
நன்மனை வதுவை யயரவிவள்
பின்னிருங் கூந்தன் மலரணிந் தோயே."

**தலைவி மணம்பொருட்டாக அணங்கைப் பராநிலை பாங்கி தலைமகற்குக் காட்டல்:**

"உரவிப் பெருங்கலித் துன்பங்கள் போய்முத லூழியின்பம்
வரவிப் படிதன்னை வாழ்வித்த வாணன்றென் மாறையன்னான்
புரவிப் புனைநெடுந் தேரண்ண லேநின் பொருட்டணங்கைப்
பரவிப் பரவிநின் றேவரம் வேண்டுதல் பார்த்தருளே."

**தலைமகள் அணங்கைப் பராநிலைகண்ட தலைமகன் மகிழ்தல்:**

"குன்றக் குறவன் காதன் மடமகள்
மன்ற வேங்கை மலர்சில கொண்டு
மலையுறை கடவுள் குலமுதல் வழுத்தித்
தேம்பலிச் செய்த வீர்நறுங் கையள்
மலர்ந்த காந்த ணாறிக்
கவிழ்ந்த கண்ணளெம் மணங்கி யோளே."

**அறத்தொடு நிலை:**

தலைவன் பேசி வந்த மணத்தினைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக் கொண்ட வழித் திருமணம் நிகழ்வுறும். ஏற்காதவிடத்து அறத்தொடு நிற்றல் நிகழும் என்பது அகப்பொருள் மரபாகும். தலைமக்களின் களவொழுக்கம் கற்பொழுக்கமாக மாறுதலே அறம் ஆகும். அந்நிலையினை இப்பகுதி ஏற்படுத்துதலின் அறத்தொடு நிற்றல் எனப்பட்டது.

குறிப்பு

## 7.5 அறத்தொடு நிலையின் வகை:

முன்னிலை முன்னிலைப் புறமொழி என்றாங்
அன்ன விருவகைத் தறத்தொடு நிலையே.

அறத்தொடுநிலை முன்னிலைமொழியும் முன்னிலைப் புறமொழியுமென இருவகையினை யுடைத்தாம்.

## 7.6 தலைவி அறத்தொடு நிற்றல்:

தலைவி அறத்தொடு நிற்கும் காலங்களைக் கீழ்க்கண்ட நூற்பா விளக்கியுரைக்கின்றது.

கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலும் தலைவன்
தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறலும் இகந்தமை யியம்பலும்
இயற்பழித் துரைத்துழி இயற்பட மொழிதலும்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலும்
இல்வயிற் செறித்தமை சொல்லலும் செவிலி
கனையிருள் அவன்வரக் கண்டமை கூறலும்
எனமுறை யியம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலைதனக் குரிய.

கையறுதோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற் காரணங்கூறல் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல், இகந்தமை யியம்பல், இயற்பழித் துரைத்துழி இயற்பட மொழிதல்,தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல், இல்வயிற் செறித்தமை சொல்லல், செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் தலைமகள் அறத்தொடு நிற்றற்குரிய கிளவியாம். இவற்றுள், கலுழ்தற் காரணங் கூறலாகிய ஒன்றும் ஒழித்து ஏனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவும் தலைமகள் அறத்தொடு நிற்றற்கு உரியதாம்.

**கையறுதோழி கண்ணீர் துடைத்தல்:**

"எழாஅ யாகலி னெழினலந் தொலைய
வழாஅ தீமோ நொதுமலர் தலையே
யேனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த
பகழி யன்ன சேயரி மழைக்க
ணல்ல பெருந்தோ ளோயே கொல்ல
னெறிபொற் பிதிரிற் சிறுபல் காய
வேங்கை வீயுகு மோங்குமலைக் கட்சி
மயிலறி பறியா மன்னோ
பயில்குரல் கவரும் பைம்புறக் கிளியே"

**தலைமகள் கலுழ்தற் காரணங்கூறல்:**

"தாரணி கொண்ட விருதோ ளொருவர் தனித்துழியென்
வாரணி கொங்கை மணந்துசென் றார்தஞ்சை வாணனொன்னார்
தேரணி வென்ற செழும்புகர் வேல்விழித் தேனினஞ்சூழ்
காரணி மென்குழ லாயது வேகலுழ் காரணமே."

குறிப்பு

**தலைமகன் தெய்வங்காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல்:**

"துதித்தே னணங்கொடு சூளுமுற்றேனென்ற சொல்லைமெய்யா
மதித்தே னயர்ந்து மதியிலி யேன்றஞ்சை வாணன்வையை
நதித்தே னினம்புணர் மாதர்கண் போல நகைக்குநெய்தற்
பொதித்தே னுகர்ந்தக லுங்கழிக் கானற் புலம்பர்வந்தே."

**தலைமகன் இகந்தமை தலைமகள் பாங்கிக்கு இயம்பல்:**

"யாரு மில்லைத் தானே கள்வன்
றானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசு ங்கால
வொழுகுநீ ராரல் பார்க்குங்
குருகு முண்டுதான் மணந்த ஞான்றே."

**இது தெளிவிடை விலங்கல், அதுகேட்ட பாங்கி இயற்பழித்துரைத்தல்:**

"மழவே துறந்து மறந்தவர் போற்றஞ்சை வாணன்வென்றி
முழவேய முந்நீர் முழங்கிருங் கானன் முழுதுலகுந்
தொழவே தருந்தெய்வ நோக்கிச்செல் லேனென்று சொல்லியுநீ
யழவே துறந்தன ரானல்லர் நல்லரவ் வாடவரே."

**தலைமகள் இயற்பட மொழிதல்:**

"மாகப் புயன்மண்ணில் வந்தன்ன வாணன்றென் மாறைமுந்நீர்
நாகப் புகர்ச்செய்ய புள்ளிப்பைங் கான்ஞெண்டு நாகிளந்தண்
பூகக் குளிர்நிழற் பேடையொ டாடும் புலம்பரின்னா
ராகக் கருதினல் லாயினி யாரினி யாருளரே."

## 7.7 பாங்கி அறத்தொடு நிற்றல்:

தோழி அறத்தொடு நிற்கும் நிலை கீழ்க்கண்டவாறு அமையும்.

எறிவளை வேற்றுமைக் கேதுவி னாவினும்
வெறிவிலக் கியவழி வினாவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்.

செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்பினும் தான் வெறிவிலக்கிய விடத்துக் காரணங்கேட்பினும் பாங்கி பூவும் புனலுங் களிறுமாகிய இவை காரணமாகப் பாங்கி செலிக்குப்புணர்ச்சியினை அறிவிப்பாள்

குறிப்பு

**செவிலி தலைமகள் வேற்றுமை கண்டு பாங்கியை வினாதல்:**

பொன்னுற்ற கொங்கையு முத்துற்ற கண்ணுமிப் போது கண்டேன்
பன்னுற்ற சொல்லுமின் பாலுங்கொள் ளாள்பதி னாலுலகும்
மன்னுற்ற வண்புகழ் வாணன்றென் மாறையென் மானனையாட்கு
என்னுற்ற தென்றறி யேன்புனங் காவ லிருந்தபின்னே.''

**வெறி விலக்கல்:**

''கடவுட் கற்சுனை யடையிறந் தவிழ்ந்த ---
கார்நறுங் கடம்பின் கண்ணி சூடி
வேலன் வேண்ட வெறிமனை வந்தோய்
கடவு ளாயினு மாக
மடவை மன்ற வாழிய முருகே.''

**செவிலி தோழியை வினாதல்:**

''மண்குன்ற வந்த கலியினை மாற்றிய வாணன் றஞ்சை
யொண்குன்ற மங்கையர் முன்னர்மின் னேயுமை யாள்மகனைப்
பண்குன்ற வென்றசொல் வள்ளிதன் கோனைப்பைந் தாரயிலால்
வெண்குன் றெறிந்தசெவ் வேளையிவ் வாறென் விளம்பியதே.''

**தோழி பூத்தருபுணர்ச்சியால் அறத்தொடுநிற்றல்:**

''போருறை தீக்கணை போலுநின் கண்கண்டு போதவஞ்சி
நீருறை நீலமு நீயுநண் பாகென்று நின்மகட்கோர்
தாருறை தோளவர் தந்தனர் வாணன் றமிழ்த்தஞ்சைசூழ்
காருறை சோலையில் யாம்விளை யாடிய காலையிலே.''

**நொதுமலர் வரைவின்கண் அறத்தொடு நிற்றல்:**

''தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்னநாள்
வந்தார்க்கே யாமென்பார் வாய்காண்பாம் - வந்தார்க்கே
காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்
பூவா விளஞாழற் போது.''

**புனல்தரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்:**

''ஒழிதோற் றியசொல்ல லுன்மக ளோதிக் குடைந்தகொண்டல்
பொழிதோற் றிரளுந்தி வந்தசெந் நீருந்திப் பொற்பினுக்கோர்
சுழிதோற் றிடும்பகை தீர்க்கின்ற போதொரு தோனற்லுமவ்
வழிதோற்றி வந்தெடுத் தான்றஞ்சை வாணன்றென் வையையிலே.''

**களிறுதரு புணர்ச்சியால் அறத்தொடு நிற்றல்:**

''மண்ணலை யாமல் வளர்க்கின்ற வாணன்றென் மாறைவெற்பில்
அண்ணலை யாயிழை பாகனென் றஞ்சின மஞ்சனந்தோய்
கண்ணலை நீரிடப் பாகமு மேல்வந்த கைக்களிற்றின்
புண்ணலை நீர்வலப் பாகமுந் தோயப் பொருதவன்றே.''

## 7.8 செவிலி அறத்தொடு நிற்றல்

செவிலி அறத்தொடு நிற்கும் நிலை கீழ்க்கண்டவாறு அமையும்.

மின்னிடை வேற்றுமை கண்டுதாய் வினாவுழி
முன்னிலை மொழியான் மொழியுஞ் செவிலி

குறிப்பு

தலைமகள் வேறுபாடு கண்டு நற்றாய் செவிலியை வினாவியவிடத்து செவிலி நற்றாய்க்கு முன்னிலை மொழியானே சொல்லுவாள்

**தலைமகள் வேற்றுமை கண்டு நற்றாய் செவிலியை வினாதல்:**

"கண்ணுஞ் சேயரி பந்தன்று நுதலு
நுண்வியர் பொடித்து வண்டார்க் கும்மே
வாங்கமை மென்றோண் மடந்தை
யாங்கா யினள்கொ லென்னுமென் னெஞ்சே."

**செவிலி நற்றாய்க்கு முன்னிலைமொழியான் அறத்தொடு நிற்றற்குச் செய்யுள்:**

"மலைவந்த தோவெனு வாரண வாணன்றென் மாறைமதிச்
சிலைவந்த தோவெனு நன்னுத லாயொருசெல்வரிங்கோர்
கலைவந்த தோவென வந்து வினாவி நங்காரிகைக்கு
முலைவந்த தோவில்லை யோவென்னு நாளின் முயங்கினரே"

நற்றாய் குறிப்பின் அன்றி அறத்தொடு நிற்கப் பெறாள் என்றமையாற் செய்யுளில்லை.

## 7.9 அறத்தொடு நிற்றலின் விரி

என்றுடன் இயம்பிய எல்லாங் களவியல்
நின்றுழி அறத்தொடு நிற்றலின் விரியே.

கையறு தோழி கண்ணீர் துடைத்துழித் தலைமகள் கலுழ்தற் காரணங் கூறல் முதலாகத் தலைமகள் வேறுபாடு கண்டு நற்றாய் வினாவியவழிச் செவிலி முன்னிலை மொழியான் மொழிதல் ஈறாகச் சொல்லப்பட்டன வெல்லாங் களவொழுக்கம் வெளிப்படாது நின்றவிடத்து அறத்தொடு நிற்றலின் விரியாம்.

## 7.10 களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை

போக்கே கற்பொடு புணர்ந்த கவ்வை
மீட்சியென் றாங்கு விளம்பிய மூன்றும்
வெளிப்படைக் கிளவியின் வழிப்படு தொகையே.

உடன்போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி ஈறாகச் சொல்லப்பட்ட மூன்றும் களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித்தொகை ஆகும்.

பயிற்சி வினாக்கள்:

1. வரைவின் இலக்கணம் யாது?

.வரைவெனப் படுவது உரவோன் கிழத்தியைக்
குரவர் முதலோர் கொடுப்பவும் கொடாமையும்

குறிப்பு

கரணமொடு புணரக் கடியயர்ந்து கொளலே.

வரைவு என்று சொல்லப்படுவது தலைமகன் தலைமகளைக் குரவர் முதலாயினோர் கொடுப்பவும் கொடாதொழியவும் வதுவைச் சடங்கொடு பொருந்த மணஞ்செய்து கொள்ளல் என்பதாகும்.

2. வரைவு மலிதல் என்பதனை விவரி?

திருமணத்திற்கு முந்தைய முயற்சி ஆகும். தோழி தலைவியிடம் தலைவன் உன்னைத் திருமணம் செய்து கொள்வதற்காக பரிசுப் பணம் போன்றவற்றைக் கொண்டு வந்துள்ளான் என்று கூற அது கேட்ட தலைவி மகிழ்ந்து நம்மைக் காட்டிலும் நற்றாய் பெரிதும் மகிழ்வாள் என எண்ணுவாள். இந்நிலையில் தோழி பெற்றோர் வரைவிற்கு உடன்பட்டனர் எனக் கூறத் தலைவி தலைவனைப் பெரிதும் வாழ்த்துவாள்.தெய்வத்தினை வழிபாடு செய்வாள்.இத்தகைய செயல்கள் வரைவு மலிதல் எனப்படும்.

.வரைவுமுயல் வுணர்த்தல் வரவெதிர் வுணர்த்தல்
வரைவறிந்து மகிழ்தல் பராவல்கண் டுவத்தலென்
றொருநால் வகைத்தே வரைவு மலிதல்.

வரைவு முயல்வுணர்த்தல், வரவெதிர் உணர்த்தல், வரைவறிந்து மகிழ்தல், பராவல்கண்டு உத்தல் ஈறாக நான்கு வகையினையுடைத்தாம் வரைவுமலிதல்**.**

**3.**பாங்கி அறத்தொடு நிற்றல் குறித்து எழுதுக**.**

தோழி அறத்தொடு நிற்கும் நிலை கீழ்க்கண்டவாறு அமையும்.

எறிவளை வேற்றுமைக் கேதுவி னாவினும்
வெறிவிலக் கியவழி வினாவினும் பாங்கி
பூவே புனலே களிறே யென்றிவை
யேது வாகத் தலைப்பா டியம்பும்.

செவிலி தலைமகள் வேற்றுமைக்குக் காரணங் கேட்பினும் தான் வெறிவிலக்கிய விடத்துக் காரணங்கேட்பினும் பாங்கி பூவும் புனலுங் களிறுமாகிய இவை காரணமாகப் பாங்கி செலிக்குப்புணர்ச்சியினை அறிவிப்பாள்.

4.தலைவி அறத்தொடு நிற்றல் குறித்து எழுதுக.

தலைவி அறத்தொடு நிற்கும் காலங்களைக் கீழ்க்கண்ட நூற்பா விளக்கியுரைக்கின்றது.

கையறு தோழி கண்ணீர் துடைத்துழிக்
கலுழ்தற் காரணங் கூறலும் தலைவன்
தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை
எய்தக் கூறலும் இகந்தமை யியம்பலும்
இயற்பழித் துரைத்துழி இயற்பட மொழிதலும்
தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றலும்

இல்வயிற் செறித்தமை சொல்லலும் செவிலி
கனையிருள் அவன்வரக் கண்டமை கூறலும்
எனமுறை யியம்பிய ஏழும் புனையிழைத்
தலைவி அறத்தொடு நிலைதனக் குரிய.

குறிப்பு

கையறுதோழி கண்ணீர் துடைத்துழிக் கலுழ்தற் காரணங்கூறல் தெய்வங் காட்டித் தெளிப்பத் தெளிந்தமை எய்தக் கூறல், இகந்தமை யியம்பல், இயற்பழித் துரைத்துழி இயற்பட மொழிதல்,தெய்வம் பொறைகொளச் செல்குவ மென்றல், இல்வயிற் செறித்தமை சொல்லல், செவிலி கனையிருள் அவன்வரக் கண்டமை கூறல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் தலைமகள் அறத்தொடு நிற்றற்குரிய கிளவியாம். இவற்றுள், கலுழ்தற் காரணங் கூறலாகிய ஒன்றும் ஒழித்து ஏனையவெல்லாம் பாங்கி வினவாதொழியவும் தலைமகள் அறத்தொடு நிற்றற்கு உரியதாம்

குறிப்பு

# கூறு: 8 – நம்பியகப்பொருள் -வரைவியல் - உடன்போக்கு – மீட்சி

**நோக்கம்:உடன் போக்கு – உடன் போக்கின் வகை - கற்பொடு புணர்ந்த கவ்வை – செவிலி தேடிச் செல்லல் - நற்றாய் புலம்பல் - மனை மருட்சி – உடன் போக்கு – மீட்சி போன்றவற்றை அறிதல்**

**உடன்போக்கு:**

தலைவனும் தலைவியும் பல்வேறு பட்ட காரணங்களால் அயலார் அறியா வண்ணம் தன் ஊரினை விட்டுச் செல்வது உடன்போக்கு எனப்படும்.

## 8.1 உடன்போக்கின் வகை:

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை உடன்போக் கிருநான்கு வகைத்தே.

உடன்போக்கு, போக்கு அறிவுறுத்தல் போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் ஈறாக எட்டு வகையினையுடைத்தாம்.

## 8.2 உடன்போக்கின் விரி.

பாங்கி தலைவற் குடன்போக் குணர்த்தலும்
ஆங்கவன் மறுத்தலும் அவளுடன் படுத்தலும்
தலைவன் போக்குடன் படுதலும் பாங்கி
தலைவிக் குடன்போக் குணர்த்தலும் தலைவி
நாணழி பிரங்கலும் கற்புமேம் பாடு
பூண்முலைப் பாங்கி புகறலும் தலைவி
ஒருப்பட் டெழுதலும் விருப்புடைப் பாங்கி
சுரத்தியல் உரைத்துழிச் சொல்லலும் பாங்கி
கையடை கொடுத்தலும் வைகிருள் விடுத்தலும்
அவன்சுரத் துய்த்தலும் அசைவறிந் திருத்தலும்
உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந் துரைத்தலும்
கண்டோ ரயிர்த்தலும் காதலின் விலக்கலும்
தம்பதி அணிமை சாற்றலும் தலைவன்
தன்பதி அடைந்தமை தலைவிக் குணர்த்தலும்
என்றிவை ஒன்பதிற் றிருவகைக் கிளவியும்
ஒன்றிய அன்பின் உடன்போக்கு விரியே.

பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல் முதலாகத் தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினெட்டும் பொருந்திய அன்பினையுடைய உடன்போக்கு விரியாம். இவற்றுள், பாங்கி

குறிப்பு

தலைமகற்கு உடன்போக்குணர்த்தலும், தலைவிக்கு உடன்போக்குணர்த்தலுமாகிய இரண்டும் போக்கு அறிவுறுத்தற்கு உரியதாகும். தலைமகன் மறுத்தலும், தலைவி நாணழிபிரங்கலுமாகிய இரண்டும் போக்கு உடன்படாமைக்குரியன ஆகும். பாங்கி தலைவனை உடம்படுத்தலும் தலைவிக்குக் கற்பு மேம்பாடு கூறலுமாகிய இரண்டும் போக்கு உடன்படுதற்குரியதாம். தலைவன் போக்குடன்படுதலும், தலைவி ஒருப்பட்டெழுதலும், பாங்கி சுரத்தியலுரைத்துழிச் சொல்லலுமாகிய மூன்றும் போக்குடன்படுதற்குரியன. பாங்கி கையடை கொடுத்தலும், வைகிருள் விடுத்தலும், தலைமகன் தலைமகளைச் சுரத்துய்த்தலுமாகிய மூன்றும் போக்கற்குரியன. தலைவன் தலைவி அசைவறிந்திருத்தலும், கண்டோர் காதலின் விலக்கலுமாகிய இரண்டும் விலக்கற்குரியன ஆகும். தலைவன் தலைவியை உவந்தலர் சூட்டி உண்மகிழ்ந்துரைத்தலும், கண்டோர் அயிர்த்தலுமாகிய இரண்டும் புகழ்தற்குரியதாம். கண்டோர் தன்பதி அணிமை சாற்றலும் தலைவன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தலுமாகிய இரண்டும் தேற்றற்குரியதாகும்.

**பாங்கி தலைவற்கு உடன்போக்கு உணர்த்தற்குச் செய்யுள்:**

“மைந்நீர் நெடுங்கண் மடந்தை யுடன்றஞ்சை வாணன்வெற்பா
செந்நீர் விழவணி நின்னகர்க் கேகொண்டு சேர்ந்தருணமற்
றிந்நீர்மை யல்லதொ ராறுமின் றாலிங்கெம் மையரென்றான்
முந்நீ ருலகுங்கொள் ளார்விலை யாக முலையினுக்கே.”

**தலைவன் உடன்போக்கு மறுத்தற்குச் செய்யுள்:**

“பாரோ முலைவிலை யென்பர்நின் கேளிரென் பல்கிளைவாழ்
ஊரோ வணியதன் றொண்டொடி யாய்விந்தை யுண்கண்கேளா
தாரோ வளரும் புயன்றஞ்சை வாணன் றரியலர்போல்
யாரோ தனிநடப் பாரருங் கான மிவளுடனே.”

**பாங்கி தலைமகனை உடன்படுத்தல்:**

“சுருளேய் குழலுஞ் சுணங்கேய் முலையுஞ் சுமந்துகற்புப்
பொருளே யெனச்சுரம் போதுமப் போது புகழ்வெயிலான்
மருளேய் கலியிருண் மாற்றிய வாணன்றென் மாறையினி
னருளே யொழியவுண் டோநிழ லாவ தணங்கினுக்கே”

**தலைவன் போக்குடன் படுதற்குச் செய்யுள்:**

“ஆறுசெல் வருத்தத்துச் சீறடி சிவப்பவுஞ்
சினைநீங்கு தளிரின் வண்ணம் வாடவுந்
தான்வர றுணிந்த விவளினு மிவளுடன்
வேய்பயி லழுவ முவக்கும்
பேதை நெஞ்சம் பெருந்தக வுடைத்தே.”

குறிப்பு

**பாங்கி தலைவிக்கு உடன்போக்கு உணர்த்தல்:**

“பாலன்ன பாயற் பகையென்னுஞ் சீறடி பட்டுருவும்
வேலன்ன கூர்ங்கன் மிதிக்குங்கொ லென்றனர் மேதினிக்கு
மாலன்ன வாணன்றென் மாறைநன் னாட்டு வயலுகளுஞ்
சேலன்ன நீள்விழி யாய்தெரி யாதன்பர் சிந்தனையே”

**தலைவி நாணழி விரங்கல்:**

“மறவாகை வேலங்கை வாணனை மாறையர் மன்னனைத்தம்
உறவாக வெண்ணி யுறாதவர் போலுயி ரோம்பியென்றுந்
துறவாத நாணந் துறப்பது வேண்டலிற் றொல்லுலகிற்
பிறவா தொழிகைநன் றேயொரு காலமும் பெண்பிறப்பே”
“கற்புமேம்பாடு பூண்முலைப்பாங்கி புகறற்குச் செய்யுள்:
செந்நாண் மலரிற் றிருவன்ன கோலத் தெரிவையர்க்கு
மெய்ந்நா ணுயிரினு மிக்கதென் றால்விர வாவரசர்
தந்நாண் முறைமை தவிர்த்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைநாட்
டந்நா ணமுமட வாய்கற்பு நோக்க வழகிதன்றே”

**தலைவி ஒருப்பட்டு எழுதல்:**

“சிலரும் பலருங் கடைக்க ணோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டி ரம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தன ளன்னை யலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமா பூண்ட நெடுந்தேர் கடைஇ
நடுநாள் வரூஉ மியறோ்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
யலர்சுமந் தொழிகவிவ் வழுங்க லூரே”

**பாங்கி சுரத்தியல் உரைத்தவழித் தலைமகள் சொல்லல்:**

“செல்லிற் கொடிய களிற்றண்ணல் வாணன்றென் மாறைமன்னன்
வில்லிற் கொடிய புருவமின் னேயென் விளம்புதிநீ
சொல்லிற் கொடியநம் மன்னையைப் போல்பவர் சூழ்ந்திருக்கும்
இல்லிற் கொடியகொல் லோசெல்லு நாட்டவ் விருஞ்சுரமே”

**பாங்கி தலைமகளைத் தலைமகற்குக் கையடை கொடுத்தல்:**

“இவளே நின்னல திலளே யாயுங்
குவளை யுண்க ணிவளல திலளே
யானு மாயிடை யேனே,
மாமலை நாட மறவா தீமே”

குறிப்பு

**தலைமகளைத் தலைமகன் சுரத்துய்த்தல்:**

"தளிபோற் கொடைபயில் சந்திர வாணன் றமிழ்த்தஞ்சையான்
அளிபோற் குளிர்ந்த விளமரக் காவு மவன்புகழின்
ஒளிபோல் விளங்கிய வெண்மணல் யாறு முவந்துகண்டு
நளிபோ தவிழ்குழ லாய்மெல்ல மெல்ல நடந்தருளே"

**தலைமகன் தலைமகளை உவந்தலர்சூட்டி உண்மகிழ்ந்துரைத்தல்:**

"அடிமலர் போற்றவும் போற்றியன் பாலிவ ளாய்முடிக்கியான்
கடிமலர் சூட்டவுங் காட்டிய தாற்கள்வர் காய்ந்தெரியுந்
துடிமலர் சீர்க்கெதிர் கூகை யிரட்டுஞ் சுரத்திடையோர்
வடிமலர் வேற்படை யான்வாணன் மாறையென் மாதவமே"

**கண்டோர் அயிர்த்தல்:**

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலன சிலம்பே நல்லோர்
யார்கொ லளியர் தாமே யாரியர்
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயி லழுவ முன்னி யோரே"

**கண்டோர் காதலின் விலக்கல்:**

"எம்மூ ரல்ல தூர்நணித் தில்லை
வெம்முரட் செல்வன் கதிரு மூழ்த்தனன்
சேந்தனை சென்மோ பூந்தார் மார்ப
இளையள் மெல்லியள் மடந்தை
யரிய சேய பெருங்க லாறே"

**கண்டோர் தன்பதி அணிமை சாற்றல்:**

"தொடங்கும் பிறைநுதற் றோகையு நீயுமுன் றோன்றுகின்ற
கடங்குன் றிரண்டுங் கடந்துசென் றாற்கம லத்தடமுங்
கிடங்கும் புரிசையுஞ் சூழ்ந்தெதிர் தோன்றுங் கிளைத்தபைந்தார்த்
தடங்குங் குமநெடுந் தோள்வாணன் மாறையுந் தஞ்சையுமே"

**தலைமகன் தன்பதி அடைந்தமை தலைவிக்குணர்த்தல்:**

"சந்தனந் தோய்ந்து தயங்குமுத் தாரந் தரித்துவிம்மு
நந்தனந் தாங்கி நடுங்கிடை போல நடந்திங்ஙனே
நொந்தனங் காலென்று நோவல்பொன் னேயொரு நோயுமின்றி
வந்தனங் காணிது காண்வாணன் மாறை வளநகரே."

**கற்பொடு புணர்ந்த கவ்வை:**

உடன்போக்கு அறிவுறுத்தல் முதலாக தேற்றுதல் ஈறாகச் சொல்லப்பெற்ற கிளவிகளான் களவு வெளிப்பட நேர்ந்தாலும் இந் நிகழ்ச்சி பலருக்கும்

குறிப்பு

தெரியவரும்.இதற்கு ‘கற்பொடு புணர்ந்த கவ்வைச் என்று பெயர். உயிரினும் சிறந்த நாணத்தை உடைய தலைவி அதனைத் துறந்து தலைவன் பின் உடன்போக்கு மேற்கொண்டது கற்பின் திறத்தால் என்பதாலே இது கற்பொடு புணாந்த கவ்வை எனப்பட்டது. அதன் வகைகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

## 8.3 கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை:

செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் தேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே.

கற்பொடு புணர்ந்தகௌவை செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின்தேடிச் சேறல் ஈறாக ஐந்து வகையினையுடைத்தாகும்.

## 8.4 செவிலி புலம்பல்:

தலைவனும் தலைவியும் உடன்போக்கு போனதும் செவிலி அ∴தறிந்து வருந்துவாள்.தோழியர் கூட்டத்தை மறந்து நம்மையெல்லாம் துறந்து தலைவி எங்கே சென்றனள் எனச் செவிலியை வினவுவாள்.தலைவி தந்த குறிப்புகளை எல்லாம் உணராது போயினனே என்றும் வருந்துவாள். எனினும் தலைவியின் மீது கொண்ட அன்பினால் அவள் உடன்போக்குச் செல்லும் வழியில் துன்பம் நேராது இருக்கட்டும் என வேண்டி நிற்பாள்.

வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
இனைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலும்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலும்
தெய்வம் வாழ்த்தலும் இவ்வொரு மூன்றும்
இலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

வினவிய பாங்கியின் உணர்ந்தகாலை இனையலென்போர்க்கு எதிரழிந்து மொழிதல் தன்னறி வின்மை, தன்னைநொந் துரைத்தல், தெய்வம் வாழ்த்தல் ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வொரு மூன்றும் தலைமகள் செவிலித்தாய் புலம்பற்குச் உரியவாம்.

**செவிலி பாங்கியை வினவல்:**

“நலம்புனை யாயமு நீயுநற் றாயொடு நானுநன்பொன்
சிலம்புயர் சோலையுஞ் சிற்றிலும் பேரிலுந் தெண்டிரைமேல்
வலம்புரி யூர்வயல் சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
புலம்புற மாதரெங் கேமக ளேதனிப் போயினளே.

பாங்கி செவிலிக்கு உணர்த்தற்குச் செய்யுள்:

செவ்வாய்க் கரியகட் சீரினாற் கேளாதுங்
கவ்வையாற் காணாது மாற்றாது - மவ்வாயந்

தார்த்தத்தை வாய்மொழியுந் தண்கயத்து நீலமும்
ஓர்த்தொழிந்தா ளென்பேதை யூர்ந்து.''

**பாங்கியின் உணர்ந்த செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல்:**

''மாறா வளவயல் சூழ்தஞ்சை வாணன்றென் மாறையென்க
ணாறா வருந்துய ராற்றுகின் றீரறி வேகொளுத்தி
யூறா வனகடிந் தென்முலை யூறமிர் தூட்டியின்சொல்
கூறா வளர்த்ததற் கோவென்னை நீத்ததென் கோல்வளையே''

**செவிலி தன்னறிவின்மை தன்னை நொந்துரைத்தல்:**

''முலைக்கண்ணு முத்து முழுமெய்யும் புல்லும்
இலக்கணம் யாது மறியேன் - கலைக்கணம்
வேங்கை வெரூஉ நெறிசெலிய போலுமென்
பூம்பாவை செய்த குறி''

**செவிலி தெய்வம் வாழ்த்தல்:**

''இணங்கிப் புவனத் தவெருமில் லாவென் னிளங்கொடியாள்
உணங்கிக் கழித லொழியவென் பால்வர வுன்னையன்பால்
வணங்கிப் பலமுறை வாழ்த்துகின் றேன்றஞ்சை வாணன்றெவ்வை
யணங்கித் திரள்புயத் தான்மல யாசலத் தாரணங்கே''

## 8.5 நற்றாய் புலம்பல்:

குறிப்பு

செவிலி அறத்தொடு நிற்றலால் நற்றாய் தலைவியின் தோழியை கேட்டறிந்து உடன்போக்கு போனதற்கு வருந்துவாள்.தலைவி விளையாடிய இடங்கள்,பொம்மை,கிளி,பந்து போன்றன தனித்துக் கிடப்பது கண்டு புலம்புவாள்.

செவிலி யறத்தொடு நிற்றலிற் கவலையிற்
பாங்கி தன்னொடும் பாங்கியர் தம்மொடும்
அயலார் தம்மொடும் பயிலிடந் தம்மொடும்
தாங்கல ளாகிச் சாற்றிய வெல்லாம்
பூங்கொடி நற்றாய் புலம்பற் குரிய.

செவிலி அறத்தொடு நிற்றலில் கவலையில் பாங்கி தன்னொடு புலம்பல் பாங்கி, பாங்கியர் தம்மொடும் புலம்பல், அயலார் தம்மொடும் புலம்பல், பயிலிடந் தன்னொடு புலம்பல் ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் தலைமகள் நற்றாய் புலம்பற்குரியவாம்.

**செவிலி நற்றாய்க்கு அறத்தொடு நிற்றல்:**

''பறைபடப் பணில மார்ப்ப விறைகொள்பு
தொன்மூ தாலத்துப் பொதியிற் றோன்றிய
நாலூர்க் கோசர் நன்மொழி போல
வாயா கின்றே தோழி யாய்கழற்

குறிப்பு

சேயிலை வெள்வேல் விடலையொடு
தொகுவளை முன்கை மடந்தை நட்பே.''

**நற்றாய் பாங்கி தன்னொடு புலம்பல்:**

''தன்னம ராயமொடு நன்மண நுகர்ச்சியி
னினிதாங் கொல்லோ தனக்கே பனிவரை
யினக்களிறு வழங்குஞ் சோலை
வயக்குறு வெள்வே லவற்புணர்ந்து செலவே''

**தோழி அழுங்கல் கண்டுநற்றாய் புலம்பல்:**

''இல்லுங் கழங்கா டிடங்களு நோக்கி யிரங்கல்வம்பும்
வல்லும் பொருங்கொங்கை மங்கைநல் லாய்தஞ்சை வாணனொன்னார்
புல்லுந் துணைவியர் போல்வினை யேன்பெற்ற பூவையன்னாள்
செல்லுஞ் சுரத்தழ லன்றுன்கண் ணீரெற் றெறுகின்றதே.''

**நற்றாய் பாங்கியர் தம்மொடு புலம்பல்:**

''இதுவென் பாவைக் கினியநற் பாவை
இதுவென் பைங்கிளி யெடுத்த பைங்கிளி
இதுவென் பூவைக் கினியசொற் பூவையென்று
அலமரு நோக்கி னலம்வரு சுடர்நுதல்
காண்டொறுங் காண்டொறுங் கலங்க
நீங்கின ளோவென் பூங்க ணோளே''

**நற்றாய் அயலார் தம்மொடு புலம்பல்:**

''ஒருமக ளுடையேன் மன்னே யவளுஞ்
செருமிகு மொய்ம்பிற் கூர்வேற் காளையொடு
பெருமலை யருஞ்சுர நெருநற் சென்றனள்
இனியே, தாங்குநின் னவல மென்றீ ரதுமற்
றியாங்கன மொல்லுமோ வறிவுடை யீரே
யுள்ளி னுள்ளம் வேமே யுண்கண்
மணிவாழ் பாவை நடைகற் றன்னவென்
அணியியற் குறுமக ளாடிய
மணியேர் நொச்சியுந் தெற்றியுங˙ கண்டே''

**நற்றாய், தலைமகள் பயிலிடந் தம்மொடு புலம்பல்:**

''செயலைத் தருவின் றிருநிழ லேபெருஞ் சிற்றில்லமே
வயலைக் கொடிநொச்சி மண்டப மேதஞ்சை வாணனொன்னார்
இயலைத் தனித்தனி தந்தன ளேநமக் கின்றிதன்றோ
கயலைப் பொருதகண் ணாள்மேலும் வாழ்விக்குங் கட்டளையே.''

## 8.6 மனைமருட்சி (அனை மருட்சி)

மனை என்பது இல்லம் என்பதனைக் குறித்து நிற்கும். தலைவி உடன்போக்கு போனதைக் கண்டு இல்லத்தின்கண் உள்ளோர் மயங்குவதனை உணர்த்துவதால் இது மனை மருட்சி எனப்பட்டது.இது பெரும்பான்மை நற்றாயின் செயலாகவே அமைவதால் மனை என்ற சொல்லினை அனை என்பதாகக் கொண்டு அன்னை மருட்சி என ஆக்கி அதனை இடைக்குறையாக அனை மருட்சி எனக் குறிக்கும் வழக்கும் காணப்படுகிறது.

குறிப்பு

.நிமித்தம் போற்றலும் சுரந்தணி வித்தலும்
தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கலும்
இளமைத் தன்மைக் குளமெலிந் திரங்கலும்
அச்சத் தன்மைக் கச்சமுற் றிரங்கலும்
எனவிவை ஐந்துமனை மருட்சிக் குரிய.

நிமித்தம்போற்றல் சுரந்தணி வித்தல்,தன்மகள் மென்மைத் தன்மைக் கிரங்கல்,இளமைத் தன்மைக் உளமெலிந் திரங்கல்,அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல் ஈறாகச் சொல்லப்பட்ட ஐந்தும் அனைமருட்சிக்குரியவாம்.

**நிமித்தம் போற்றல்:**

“வடியேய் புகர்முக வாள்வல வாணன்றென் மாறையுள்யா
னடியே தொழுந்தெய்வ மாகநிற் பேணி யரும்பலியிப்
படியே தருகுவ லென்றுமின் னேயிப் பதியுவகைக்
கொடியே வரக்கரை நீகொடியேன்பெற்ற கொம்பினையே,”

**நற்றாய் சுரந்தணிவித்தல்:**

வெஞ்சுர நாடு வியன்சுர லோகமும் வெங்கடுங்கா
னைஞ்சுர தாரு வனங்களு மாக வகிற்புகைபோல்
மஞ்சுர வாடக மாமதில் சூழ்தஞ்சை வாணன்வெற்பிற்
பஞ்சுர மாகு மொழிச்சுரு ளோதியென் பைந்தொடிக்கே,”

**நற்றாய் தன்மகள் மென்மைத்தன்மைக்கு இரங்கல்:**

“உவக்கின்ற வல்லி மலர்த்தாளென் கண்களி லொற்றிக்கண்கள்
சிவக்கின்ற தற்குமுன் னேசிவந் தேறுஞ் செயலதன்றோ
பவக்குன் றிடிப்பவ ராரூர்த் தியாகர் பனிவரைமேல்
நிவக்கின்ற வெஞ்சுரத் தேசென்ற வாறென் னினைப்பதுவே”

**நற்றாய் தன்மகள் இளமைத்தன்மைக்கு உளமெலிந்திரங்கல்:**

“பல்லூழ் நினைப்பினு நல்லென் றூழ
மீளி முன்பிற் காளை காப்ப
முடியகம் புகாஅக் கூந்தலள்
கடுவனு மறியாக் காடிறந் தோளே”

**நற்றாய் தன்மகள் அச்சத்தன்மைக்கு அச்சமுற்றிரங்கல்:**

“கேளாய் வாழியோ மகளைநின் றோழி
திருநகர் வரைப்பகம் புலம்ப வவனொடு -----
சேக்கோ ளறையுந் தண்ணுமை
கேட்குநள் கொல்லெனக் கலுழுமென் னெஞ்சே.”

குறிப்பு

## 8.7 கண்டோர் இரங்கல்:

தலைவி உடன்போக்கு போனமை அறிந்து தோழியும் செவிவியும் நற்றாயும் வருந்துவதனைக் கண்டவர்கள் தலைவி அவர்களுக்கு துன்பத்தினைத் தந்து போனாளே என வருந்துதல் கண்டோர் வருந்துதல் எனப்படும்.

ஆயமும் தாயும் அழுங்கக் கண்டோர்
காதலின் இரங்கல் கண்டோ ரிரக்கம்.

தலைமகள் சுற்றத்தாரும், நற்றாயும் இரங்குமாறு கண்டு அன்பினால் இரங்குதல் கண்டோரிரக்கம் எனப்படும்.

நொந்துங் கலுழ்ந்துந் துணைவிய ராற்றலர் நோக்கொடின் சொல்
தந்துங் கவையுந் தணந்துசென் றாளெனத் தாள்பணியார்
மைந்துங் கதமுங் கடிந்தருள் வாணன்றென் மாறையன்னாள்
பந்துங் கழங்குமெல் லாங்கண்டு வாழும் பயந்தவளே.”

## 8.8 செவிலி பின்தேடிச் செல்லல்:

நற்றாய் உடன்போக்குச் சென்ற தலைவியை எண்ணி வருந்துவதனைக் கண்ட செவிலி நற்றாயை ஆற்றுதல் வேண்டி தலைவியை இடைச்சுர மருங்கில் தேடிச் செல்வாள்.அவ்வாறு செல்லும் வழியிடைக் கண்டோரிடத்து தன்மகளையும் பிறன் மகனையும் இச்சுரத்திடைக் கண்டீரா என வினவிச் செல்லலும் சுரத்திடைக் கண்ட பொருள்களிடத்துப் புலம்பிக் கூறலும் செவிலி பின் தேடிச் செல்லலில் அமையும்.

ஆற்றாத் தாயைத் தேற்றலும் ஆற்றிடை
முக்கோற் பகவரை வினாதலும் மிக்கோர்
ஏதுக் காட்டலும் எயிற்றியோடு புலம்பலும்
குரவொடு புலம்பலும் சுவடுகண் டிரங்கலும்
கலந்துடன் வருவோர்க் கண்டுகேட் டலும்அவர்
புலம்பல் தேற்றலும் புதல்வியைக் காணாது
கவலைகூர் தலும்எனும் இவையொன் பானும்
செவிலிபின் தேடிச் சேறற் குரிய.

ஆற்றாத் தாயைத தேற்றல் முதலாகப் புதல்வியைக் காணாது கவலை கூர்தல் ஈறாகச்சொல்லப்பட்ட ஒன்பதும் செவிலி பின்தேடிச் சேறற்குரியவாம்.

**செவிலி ஆற்றாத் தாயைத்தேற்றல்:**

“ன்றே யிதென்று முகமுகநோக்கி நகைநகையா
மன்றே யலர்சொல்லு மாதர்முன் னேதஞ்சை வாணன்றொல்சீர்

சென்றே பரந்த திசைகளெல் லாஞ்சென்று தேர்ந்தணங்கை
யின்றே தருவனன் னேவருந் தாதிங் கிருந்தருளே."

**ஆற்றிடை முக்கோற்பகவரை வினாதல்:**

"ஒருவெண் குடையிரு நீழன்முக்கோல்கொண் டொழுக்கத்தினால்
அருவெங் களரியைந் தாறுசெல் வீரரு ளீரெழுபார்
மருவெண் டிசைபுகழ் வாணன்றென் மாறையென் வஞ்சியன்னாள்
பொருவெஞ் சுடரிலை வேலொரு காளைபின்போயினளே."

குறிப்பு

**செவிலி குரவொடு புலம்பல்:**

"தான்றாயாக்கோங்கந் தளர்ந்து முலைகொடுப்ப
ஈன்றாய்நீ பாவை யிருங்குரவே - யீன்றாள்
மொழிகாட்டா யாயினு முள்ளெயிற்றாள் சென்ற
வழிகாட்டா யீதென்று வந்து.

**செவிலி சுவடுகண்டு இரங்கல்:**

"தொடுசிலைக் கானவரோடிய வேற்றுச் சுவடுவையே
யடுசிலைக் காளை யடியவை யேயறிந் தோரறிய
இடுசிலைப் பார்புரக் குந்தஞ்சை வாண னிசைக்குருகப்
படுசிலைப் பாவை பதமிவை யேவண்டு பாடுகவே."

**செவிலி கலந்துடன் வருவோர்க்கண்டு கேட்டல்:**

"யானகம் போதவருந்தநும் போல்வனப் பெய்திவெய்ய
கானகம் போயினர் கண்டனி ரோகற்ப காடவிசூழ்
வானகம் போர்பயில் வானவற் கீந்தருள்வாணன்றஞ்சைத்
தேனகம் போருக மாதனை யாளுமொர் செல்வனுமே."

**கலந்துடன்வருவோர் புலம்பல்தேற்றல்:**

"நண்ணீர் சென்மி னமரவ ராபவேல்
எண்ணிய வெண்ண மெளிதரோ - எண்ணிய
வெஞ்சுட ரன்னானை யான்கண்டேன் கண்டாளாந்
தண்சுட ரன்னாளைத்தான்."

**செவிலி புதல்வியைக் காணாதுகவலைகூர்தல்:**

"காலே பரிதப் பினவேகண்ணே
நோக்கி நோக்கி வாளிழந் தனவே
யகலிரு விசும்பின் மீனினும்
பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே."

## 8.9 கற்பொடு புணர்ந்த கவ்வையின் விரி:

.முற்பட மொழிந்த முறையெழு மூன்றுங்
கற்பொடு புணர்ந்த கௌவையின் விரியே.

குறிப்பு

செவிலி தேற்றுவார்க்கு எதிரழிந்து மொழிதல் முதலாகச் செவிலி புதல்வியைக் காணாது கவலைகூர்தல் ஈறாகச் சொன்ன இருபத்தொன்றும் கற்பொடுபுணர்ந்த கௌவையின் விரியாம்.

## 8.10 மீட்சியின் வகை

களவு வெளிப்பாட்டிற்கு உரிய மூன்றாவது வகை மீட்சி எனப்படும்.தலைமக்களைத் தேடிச் சென்ற செவிலி அவர்களைக் காண இயலாது திரும்பி வருவாள்.இந் நிலையில் தலைவனும் தலைவியும் உடன்போக்குப் போய் மனம் தெளிந்து கண்டோர் கூறிய அறிவுரையினை ஏற்பர். உடன் தலைவன் தன் தலைவியுடன் தன் மனைக்கண் எய்துவான். தலைவி தன் வருகையினை தன் முன் செல்வோரிடம் பாங்கிக்குக் கூறுமாறு சொல்லியனுப்புவாள்.இதைத் தோழி தாயார்களிடம் கூறத் தலைவியை அழைத்து வர ஏற்பாடு செய்யப்பெறும். இந்நிலையில் தாய் வெறியாடும் வேலனிடம் தன் மகள் தன் இல்லத்திற்கு வருவாளோ என்று வேலனிடம் கேட்டு மனம் தெளிவாள்.இத்தகைய செயல்கள் தெளித்தல், மகிழ்ச்சி, வினாதல், செப்பல் எனப்படும்.

தெளித்தல் மகிழ்ச்சி வினாதல் செப்பலென
வெளிப்பட வுரைத்த மீட்சிநால் வகைத்தே.

தெளித்தல், மகிழ்ச்சி, வினாதல், செப்பல் ஈறாக நான்கு வகையினை யுடைத்தாம் மீட்சி.

## 8.11 மீட்சியின் விரி

.தலைவிசே ணகன்றமை செவிலிதாய்க் குணர்த்தலும்
தலைவன் றம்மூர் சார்ந்தமை சாற்றலும்
தலைவிமுன் செல்வோர் தம்மொடு தன்வரல்
பாங்கியர்க் குணர்த்தி விடுத்தலும் ஆங்கவர்
பாங்கியர்க் குணர்த்தலும் ஆங்கவர் கேட்டு
நற்றாய்க் குணர்த்தலும் நற்றாய் கேட்டவன்
உளங்கோள் வேலனை வினாதலும் எனவுடன்
விளம்பிரு மூன்று மீட்சியின் விரியே.

தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல் முதலாக நற்றாய் கேட்டு அவன் உளங்கோள் வேலனை வினாதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் மீட்சியின் விரியாம். இவற்றுள், தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தலும், தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றலுமாகிய இரண்டும் தெளித்தற்குரிய; தலைவி முன் செல்வோர் தம்மொடு தன்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தலும், பாங்கியர் நற்றாய்க்குணர்த்தலுமாகிய இரண்டும் மகிழ்ச்சிக்குரிய; நற்றாய் தலைமகன் உளங்கோள் வேலனை வினாதலாகிய ஒன்றும் வினாதற்குரித்து; முன் செல்வோர் பாங்கியர்க்கு உணர்த்தலாகிய ஒன்றுஞ் செப்பற்குரித்து.

**தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்கு உணர்த்தல்:**

“ஏடார் மலர்க்குழல் வல்லியை யன்னையித் தீவினையே
னாடா விடமில்லை ஞாலத் தகல்வயி னன்கமலக்
காடார் பழனக் கழனிநன் னாடு கடந்துதன்னூர்
வாடா வளமனை கொண்டுசென் றானொரு வள்ளலின்றே.”

**தலைவன் தம்மூர் சார்ந்தமை சாற்றல்:**

குறிப்பு

“முளிவயிர்ப் பிறந்த வளிவளர் கூரெரிச்
சுடர்விடு நெடுங்கொடி விடர்முகை முழங்கும்
இன்னா வருஞ்சுரந் தீர்ந்தன மென்மெல
வேகுமதி வாழியோ குறுமகள் போதுகலந்து
கறங்கிசை யருவி வீழும்
பிறங்கிருஞ் சோலைநம் மலைகெழு நாட்டே.”

**தலைவி முன்செல்வோர் தம்மொடும் தன்வரல் பாங்கியர்க்கு உணர்த்திவிடுத்தல்:**

“புனையல ரேதிலர் காதலந் தாயர் பொறாமையிற்போ
யினைதுயர் யாதொன்று மின்றிவெங் கானிகந் தியானுமம்பொன்
வனைகழ லானும் வருவதெல் லாஞ்சென்று வாணன்றஞ்சை
துனைவுட னேகுகின் றீர்சொல்லு வீரென் றுணைவியர்க்கே.”

**பாங்கியர் கேட்டு நற்றாய்க்கு உணர்த்தல்:**

“வாளேய் விழிநின் மயிலனை யாடஞ்சை வாணன்வெற்பில்
வேளே யனைய விடலைபின் னேசுர மீண்டினிநங்
கேளேய் பதிவரு மென்னநல் லோர்சொல்லக் கேட்டனமிந்
நாளே யனையநன் னாளுள வோசென்ற நாள்களிலே.”

**நற்றாய் தலைமகனுளங்கோள் வேலனை வினாதல்:**

“வேறாக நின்னை வினவுவேன் றெய்வத்தாற்
கூறாயோ கூறுங் குணத்தினனாய் - வேறாக
என்மனைக் கேறக் கொணருமோ எல்வளையைத்
தன்மனைக்கே யுய்க்குமோ தான்,”

உடன்போய் வரைந்து மீளுதற்கும், வரையாமல் மீண்டு அவள் மனையின்கண் ணாதல் தன் மனையின் கண்ணாதல்வரைதற்கும் உரிய கிளவிகள்.

## 8.12 செவிலி கூற்றொலித்தன:

.மடந்தையை யுடன்போய் வரைந்து மீடற்கும்
அவள்மனை வரைதற்கும் தன்மனை வரைதற்கும்
இவையைந்து முரிய செவிலிகூற் றொழித்தே.

மடந்தையை உடன்போய் வரைந்து மீடற்கும், வரையாமல் மீண்டு அவள் மனையின்கண்ணேயாதல் தன்மனையின் கண்ணேயாதல் வரைந்து கோடற்கும் இலக்கணத் தினுரியவாம் செவிலி கூற்றாய ஒன்றையும் ஒழித்து அல்லாத ஐந்தும் என்றவாறு.

**தன்மனை வரைதல்**

குறிப்பு

## 8.13 தன்மனை வரைதலின் வகை

வினாதல் செப்பல் மேவலென் றிறைவன்
தனாதில் வரைதல் தான்மூ வகைத்தே.

தலைமகன் மீண்டு வந்து தன் மனையின் கண்ணே வரைதல் வினாதல், செப்பல், மேவுதல் என மூன்று வகையினையுடைத்தாம்,

## 8.14 தன்மனை வரைதலின் விரி

பணிமொழி நற்றாய் மணனயர் வேட்கையிற்
செவிலியை வினாதலும் செவிலிக் கிகுளை
வரைந்தமை யுணர்த்தலும் வரைந்தமை செவிலி
நற்றாய்க் குணர்த்தலும் உற்றாங் கிருவருந்
தலைவியில் வந்துழித் தலைவன் பாங்கிக்
கியான்வரைந் தமைநுமர்க் கியம்புசென் றென்றலும்
தானது முன்னே சாற்றிய துரைத்தலும்
என்னுமிவ் வைந்து மின்னிலை வேலோன்
மன்னிய தன்மனை வரைதலின் விரியே.

இவற்றுள் நற்றாய் மணனயர் வேட்கையிற் செவிலியை வினாதலாகிய ஒன்றும் வினாதற்குரித்து; செவிலிக்கு இகுளை வரைந்தமை யுணர்த்தலும், வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தலும், பாங்கி தனது முன்னே சாற்றியதுரைத்தலுமாகிய மூன்றும் செப்பற்குரிய; தலைமகன் யான் வரைந்தமை நுமர்க்கியம்பு சென்று என்றலாகிய ஒன்றும் மேவுதற்குரித்து.

**செவிலிக்கு இகுளை வரைந்தமை உணர்த்தல்:**

''என்னா மியம்புவ தியாய்க்கினி நாமன்னை யின்றுதம்மிற்
கொன்னாரு நித்திலக் கோதைநம் மாதைக் கொடிநெடுந்தேர்க்
கன்னாடர் மண்கொண்ட வாணன்றென் மாறையிற் காதலர்தாம்
நன்னாள் மணம்புணர்ந் தாரென்று தூதர் நவின்றனரே.''

**வரைந்தமை செவிலி நற்றாய்க்கு உணர்த்தல்:**

''எனைக்கே ளிருநின் றியற்றவங் கேமண வின்பமெய்தி
யனைக்கேண்மை நண்ணிய வண்ணல்பின் னாகநம் மன்னையின்றிம்
மனைக்கே வருமென வந்துசொன் னார்தஞ்சை வாணன்வெற்பிற்
சுனைக்கேழ் நனைக்கமு நீர்க்குழ லாய்சில தூதரின்னே.

**பாங்கி தானது முன்னே சாற்றியதுரைத்தல்:**

"அன்னைக் கியம்பின னாண்டகை யான்முன் னறிந்துதென்னன்
தன்னைப் பணிந்துகுற் றேவல்செய்யாது சமர்க்கெழுந்த
மன்னைப் புறங்கண்ட வாணன்றென்மாறை வரையிலெங்கள்
பொன்னைப் புணர்ந்துநுங் கேண்முன்னர் நீபொன் புனைந்ததுவே."

குறிப்பு

## 8.15 உடன்போய் வரைந்து மீளுதலின் விரி

.ஆதி யொன்றொழித் தல்லன நான்கும்
மாதினை யுடன்போய் வரைந்து மீடற்கு
நீதியி னுரிய நினையுங் காலை.

நற்றாய் மணனயர்வேட்கை யொழித்து அல்லாத நான்கும் தலைமகன் புணர்ந்துடன்போய்த் தலைமகளைத் தன்னூரின்கண் வரைந்துமீடற்கு உரியவாம்.

## 8.16 ஒருவகை மீண்டுவரைதலின் விரி

இருவரில் லிற்கும் இயைந்தபன் னொன்றும்
ஒருவகை மீண்டு வரைதலின் விரியே.

தலைமகன் தம்மூர் சார்ந்தமை யுணர்த்தல் முதலாகப் பாங்கி தானது முன்னே சாற்றியது உரைத்தல் ஈறாகச் சொல்லப்பட்டன அவள்மனை வரைதற்கும் தன்மனை வரைதற்கும் உரிய கிளவி பதினொன்றும் உடன்போய் மீண்டு வரைந்து கோடலின் விரியாம்.

**உடன்போக்கிடையீடு**

## 8.17 உடன்போக்கிடையீட்டின் வகை

போக்கறி வுறுத்தல் வரவறி வுறுத்தல்
நீக்கம் இரக்கமொடு மீட்சி யென்றாங்கு
உடன்போக் கிடையீ டொருநால் வகைத்தே.

போக்கறிவுறுத்தல்,வரவறிவுறுத்தல்,நீக்கம்,இரக்கமொடு மீட்சி ஈறாக நான்குவகையினையுடையது உடன்போக்கிடையீடு.

## 8.18 உடன்போக்கிடையீட்டின் விரி

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தலும் தலைமகள்
தன்செல ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தலும்
ஈன்றாட்கு அந்தணர் மொழிதலும் ஈன்றாள்
அறத்தொடு நிற்றலிற் தமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தலும்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலும்
தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக்
கவன்றாற் றலுமென நுவன்றவை ஆறும்
உடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

குறிப்பு

நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல் முதலாகத் தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றாற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் உடன்போக்கிடையீட்டு விரியாம். இவற்றுள், முன்னைய மூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய; பின்னைய மூன்றும் வரவறிவுறுத்தல் முதலாகிய மூன்றற்குந் தனித்தனி உரியன

**நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல்:**

"வளவேய் மிடைந்த வழிபடர் வீர்செங்கை வாணன்றஞ்சைத்
சேட்புல முன்னிய வசைநடை யந்தணிர்
நும்மொன் றிரந்தனென் மொழிவ லெம்மூர்
யாய்நயந் தெடுத்த வாய்நலங் கவின
வாரிடை யிறந்தன ளென்மின்
நேரிறை முன்கையென் னாயத் தோர்க்கே.

**தலைமகள் தன்செலவு ஈன்றாட்கு உணர்த்திவிடுத்தல்:**

"கடுங்கட் காளையொடு நெடுந்தே ரேறிக்
கோள்வல் வேங்கை மலைபிறக் கொழிய
வேறுபல் லருஞ்சுர மிறந்தன ளவளெனக்
கூறுமின் வாழியோ வாறுசென் மாக்கள்
நற்றோ ணயந்துபா ராட்டி
யெற்கெடுத் திருந்த வறனில் யாய்க்கே."

**நற்றாய்க்கு அந்தணர் மொழிதல்:**

"புன்கண் யானையொடு புலிவழங் கத்த
நயந்த காதலற் புணர்ந்துசென் றனளே
நெடுஞ்சுவர் நல்லின் மருண்ட
இடும்பை யுறுவிநின் கடுஞ்சூன் மகளே."

**தலைமகளைத் தலைமகன் விடுத்தல்:**

"ஆறலை வெஞ்சிலைக் கானவ ரேலென்கை யம்பொன்றினா
னூறலை யஞ்சலெ னுண்ணிடை யாய்நும ரேலவர்முன்
சேறலை யஞ்சுவல் செல்வல்பைம் பூகச் செழும்பழுக்காய்த்
தாறலை தண்டலை சூழ்தஞ்சை வாணன் றமிழ்வெற்பிலே."

**தமருடன் செல்பவள் அவன்புறம் நோக்கிக் கவன்றால்:**

"அறஞ்சா லியரோ வறஞ்சா லியரோ
வறனுண் டாயினு மறஞ்சா லியரோ
வாள்வனப் புற்ற வருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே."

## 8.19 வரைதல்

தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்

என்னுமிவ் விரண்டொழித் தவெற்றினுங் கிழவோன்
அந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலம்
தந்து வரைதல் தகுதி யென்ப

உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலும் மீண்டு வந்து தன்மனைக்கண்ணே வரைதலுமாகிய இரண்டும் ஒழித்து அல்லாத எல்லா வரைவின்கண்ணும் தலைமகன் அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு அருங்கலங் கொடுத்து வரைதல் உலகத்தியற்கை எனச் சொல்லுவர் புலவர்.

**வரைந்துகொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியது:**

“கயற்க ணாளையுங் காமனன் னானையும்
இயற்றி னார்மண மேத்தருந் தன்மையார்
மயற்கை யில்லவர் மன்றலின் மன்னிய
இயற்கை யன்புடை யாரியைந் தார்களே”

**பயிற்சி வினாக்கள்:**

1.உடன்போக்கின் வகைகள் யாவை?

போக்கறி வுறுத்தல் போக்குடன் படாமை
போக்குடன் படுத்தல் போக்குடன் படுதல்
போக்கல் விலக்கல் புகழ்தல் தேற்றலென்
றியாப்பமை உடன்போக் கிருநான்கு வகைத்தே.

உடன்போக்கு, போக்கு அறிவுறுத்தல் போக்கு உடன்படாமை, போக்கு உடன்படுத்தல், போக்கு உடன்படுதல், போக்கல், விலக்கல், புகழ்தல், தேற்றல் ஈறாக எட்டு வகையினையுடைத்தாம்.

2. செவிலி புலம்பல் குறித்து எழுதுக.

தலைவனும் தலைவியும் உடன்போக்கு போனதும் செவிலி அஃதறிந்து வருந்துவாள்.தோழியர் கூட்டத்தை மறந்து நம்மையெல்லாம் துறந்து தலைவி எங்கே சென்றனள் எனச் செவிலியை வினவுவாள்.தலைவி தந்த குறிப்புகளை எல்லாம் உணராது போயினனே என்று வருந்துவாள். எனினும் தலைவியின் மீது கொண்ட அன்பினால் அவள் உடன்போக்குச் செல்லும் வழியில் துன்பம் நேராது இருக்கட்டும் என வேண்டி நிற்பாள்.

.வினவிய பாங்கியி னுணர்ந்த காலை
இனைய லென்போர்க் கெதிரழிந்து மொழிதலும்
தன்னறி வின்மை தன்னைநொந் துரைத்தலும்
தெய்வம் வாழ்த்தலும் இவ்வொரு மூன்றும்
இலங்கிழைச் செவிலி புலம்புதற் குரிய.

வினவிய பாங்கியின் உணர்ந்தகாலை இனையலென்போர்க்கு எதிரழிந்து மொழிதல் தன்னறி வின்மை, தன்னைநொந் துரைத்தல், தெய்வம் வாழ்த்தல்

குறிப்பு

ஈறாகச் சொல்லப்பட்ட இவ்வொரு மூன்றும் தலைமகள் செவிலித்தாய் புலம்பற்குச் உரியவாம்.

3. கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகைகளைச் சுட்டியுரைக்க.

.செவிலி புலம்பல் நற்றாய் புலம்பல்
கவர்மனை மருட்சி கண்டோ ரிரக்கம்
செவிலிபின் தேடிச் சேறலென் றாங்குக்
கற்பொடு புணர்ந்த கௌவையை வகைத்தே.

கற்பொடு புணர்ந்தகௌவை செவிலி புலம்பல், நற்றாய் புலம்பல், மனை மருட்சி, கண்டோர் இரக்கம், செவிலி பின்தேடிச் சேறல் ஈறாக ஐந்து வகையினையுடைத்தாகும்.

4. உடன்போக்கிடையீட்டின் விரிகள் யாவை?

நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத்
தன்செல வுணர்த்தி விடுத்தலும் தலைமகள்
தன்செல ஈன்றாட்கு உணர்த்தி விடுத்தலும்
ஈன்றாட்கு அந்தணர் மொழிதலும் ஈன்றாள்
அறத்தொடு நிற்றலிற் தமர்பின் சேறலைத்
தலைவி கண்டு தலைவற் குணர்த்தலும்
தலைமக டன்னைத் தலைமகன் விடுத்தலும்
தமருடன் செல்பவள் அவன்புற நோக்கிக்
கவன்றாற் றலுமென நுவன்றவை ஆறும்
உடன்போக் கிடையீட்டு விரியா கும்மே.

நீங்குங்கிழத்தி பாங்கியர் தமக்குத் தன்செலவுணர்த்தி விடுத்தல் முதலாகத் தமருடன் செல்பவள் அவன்புறநோக்கிக் கவன்றாற்றல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறும் உடன்போக்கிடையீட்டு விரியாம். இவற்றுள், முன்னைய மூன்றும் போக்கறிவுறுத்தற்குரிய; பின்னைய மூன்றும் வரவறிவுறுத்தல் முதலாகிய மூன்றற்குந் தனித்தனி உரியன.

5. வரைதல் என்றால் என்ன?

தன்னூர் வரைதலும் தன்மனை வரைதலும்
என்னுமிவ் விரண்டொழித் தவெற்றினுங் கிழவோன்
அந்தணர் சான்றோர் முன்னிட் டருங்கலம்
தந்து வரைதல் தகுதி யென்ப

உடன்போய்த் தன்னூரின்கண்ணே வரைதலும் மீண்டு வந்து தன்மனைக்கண்ணே வரைதலுமாகிய இரண்டும் ஒழித்து அல்லாத எல்லா வரைவின்கண்ணும் தலைமகன் அந்தணரையும் சான்றோரையும் முன்னிட்டு அருங்கலங் கொடுத்து வரைதல் உலகத்தியற்கை எனச் சொல்லுவர் புலவர்.

# கூறு:9-கற்பியல்-கற்பின் இலக்கணம்- பிரிவுகள்

**நோக்கம்: கற்பின் இலக்கணம் - கற்பிற்குரிய கிளவித் தொகை - இல்வாழ்க்கையின் வகை – விரி - பிரிவுகள் - உணர்த்த உணரும் ஊடல் -உணர்த்த உணரா ஊடல் போன்ற அக மரபுகளை அறிதல்**

குறிப்பு

வரைவியலின் இறுதியில் தலைவன் தலைவியருக்கிடையே வரைவு நடைபெறும்.இவர்கள் இல்லற வாழ்வினைத் தொடங்கி நடத்தத் தொடங்குவர்.அவ் இல்லற வாழ்வு பற்றியும் அதனுள் ஏற்படும் பிரிவு வகைகளைப் பற்றியும் உணர்த்தும் பகுதி என்பதால் இப்பகுதி கற்பியல் எனப்பட்டது.

## 9.1 கற்பின் இலக்கணம்

பொற்பமை சிறப்பிற் கற்பெனப் படுவது
மகிழ்வும் ஊடலும் ஊட லுணர்த்தலும்
பிரிவும் பிறவும் மருவிய தாகும்.

பொலிவமைந்த சிறப்பினையுடைய கற்பென்று சொல்லப்படுவது உள்ள மகிழ்ச்சியும் ஊடலும் ஊடலுணர்த்தலும் பிரிவும் பொருந்தியதாம். பிற என்றதனாற் பிரிந்துழி வரும் விகற்பம் எல்லாம் கொள்ளப்படும்.

## 9.2 கற்பிற்குரிய கிளவித் தொகை

.இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
ஓதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய ஏழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே

இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு,ஓதற் பிரிவு, காவற் பிரிவு,தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு பொருள்வயிற்பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் கற்பின் கிளவித்தொகைகள் ஆகும்.

**இல்வாழ்க்கை**

## 9.3 இல்வாழ்க்கையின் வகை

கிழவோன் மகிழ்ச்சி கிழத்தி மகிழ்ச்சி
பாங்கி மகிழ்ச்சி செவிலி மகிழ்ச்சியென்
றீங்கு நால்வகைத் தில்வாழ்க் கையே.

இல்வாழ்க்கை கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, பாங்கி மகிழ்ச்சி,செவிலி மகிழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்ட நான்குவகையினையுடைத்தாம்,.

## 9.4 இல்வாழ்க்கையின் விரி

தலைவன் றலைவிமுன் பாங்கியைப் புகழ்தலும்
தலைவனைப் பாங்கி வாழ்த்தலும் தலைவியை
வரையுநா ளளவும் வருந்தா திருந்தமை

குறிப்பு

உரையா யென்றலும் பெருமக ளுரைத்தலும்
தலைவனைப் பாங்கி வரையுநா ளளவும்
நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதலும்
மன்றல் மனைவரு செவிலிக் கிகுளை
அன்புற வுணர்த்தலும் வாழ்க்கைநன் றறைதலும்
மணமனைச் சென்று வந்த செவிலி
பொற்றொடி கற்பியல் நற்றாய்க் குணர்த்தலும்
நன்மனை வாழ்க்கைத் தன்மை யுணர்த்தலும்
அன்னவர் காதல் அறிவித் தலுமெனும்
இன்னவை பத்தும்இல் வாழ்க்கை விரியே.

தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தல் முதலாக அன்னவர் காதல் அறிவித்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பத்தும் இல்வாழ்க்கை விரியாம். இவற்றுள், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய ஒன்றும், கிழவோன் மகிழ்ச்சிக்குரியது. தலைவனைப் பாங்கி வாழ்த்தல் முதலாகச் செவிலிக்கு வாழ்க்கை நன்றென்றறைதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறனுள், பெருமகள் உரைத்தலாகிய ஒன்றுங் கிழத்தி மகிழ்ச்சிக்குரியது. அல்லாத ஐந்தும் பாங்கி மகிழ்ச்சிக்குரியதாம். செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பியல் உணர்த்தல் முதலாகிய மூன்றுஞ் செவிலி மகிழ்ச்சிக்குரியதாகும்.

**தலைவன் தலைவிமுன்பாங்கியைப் புகழ்தல்:**

“நின்மே லடுத்த பசலையின் காரண நின்றுணைவி
யென்மே லடுத்த வியல்பினன் றோபெற்ற தேழுலகுந்
தன்மே லடுத்த புகழ்த்தஞ்சை வாணன் றமிழ்க்கிரிநுண்
பொன்மே லடுத்தன போற்சுணங் கீன்ற புணர்முலையே.”

**தலைவனைப் பாங்கி வாழ்த்தல்:**

“எக்கர் ஞாழற் பூவி னன்ன
சுணங்கு வள ரிளமுலை மடந்தைக்
கணங்குவளர்த் தகறல் வல்லா தீமே.”

**பாங்கி, தலைவியை வரையு நாளளவும் வருந்தாதிருந்தமை வினாதல்:**

“கோங்கநன் மாமுகைக் கொங்கைநல் லாய்மணங் கூடுமெல்லை
யாங்கன மாற்றி யிருந்தனை நீயிப மாசயிலந்
தாங்கன மாறத் தலம்புனை வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
பூங்கன மார்குழ லாரலர் மாலைப் பொறைசுமந்தே.”

**தலைமகள் வருந்தாதிருந்ததற்குக் காரணங்கூறல்:**

“மைதொய்ந் தலர்ந்த மலர்த்தடஞ் சூழ்தஞ்சை வாணனொன்னார்
மெய்தோய்ந்த செந்நிற வேல்விழி யாய்துயர் வெள்ளம்வெற்பர்
கைதோய்ந் தளிப்ப வசோகத்த வாய்நிறங் கால்வனவாய்

நெய்தோய்ந் தனதழை யேபுணை யாக்கொண்டு நீந்தினனே.”

**பாங்கி தலைவனை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினாதல்:**

“அயிரை பரந்த வந்தண் பழனத்
தேந்தெழின் மலர தூம்புடைத் திரள்கால்
ஆம்பல் குறுநர் நீர்வேட் டாங்கிவள்
இடைமுலைக் கிடந்து நடுங்க லானீர்
தொழுதுகாண் பிறையிற் றோன்றி யாநுமக்
கரிய மாகிய காலைப்
பெரிய நோன்றனிர் நோகோ யானே.”.



**மன்றல்மனை வரும்செவிலிக்கு இகுளை அன்புறவுணர்த்தல்:**

“வளங்கொண்ட தஞ்சை வரோதயன் வாணன்றென் மாறையன்னாள்
இளங்கொங்கை கொண்டுமு தீரங்கொள் மார்பின்முத் தேற்பவித்தி
விளங்கொண் பிறைநுதல் வேர்தரும் போகம் விளைத்தன்புசேர்
உளங்கொண் டருத்துத லாலன்னை யூர னுவப்புறுமே”

**பாங்கி இல்வாழ்க்கை நன்றென்று செவிலிக்குணர்த்தல்:**

“சினவேய் சுளியுங் களிற்றண்ணல் வாணன்றென் மாறையினம்
மனவே யகலல்குல் வல்லியன் னாள்மறை யோர்முதலாம்
சனவே தனைகெடத் தானங்க ளீதலிற் சாலவுநன்
றெனவே நடக்கின்ற தாலன்னை நாடொறு மில்லறமே.”

**செவிலி நற்றாய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தல்:**

“முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்
குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்
தான்றுழந் தட்ட தீம்புளிப் பாகர்
இனிதனெக் கணவ னுண்டலி
னுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன் முகனே.”

**செவிலி நற்றாய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்:**

“கானங் கோழிக் கவர்குரற் சேவல்
ஒண்பொறி யெருத்திற் றண்சித ருறைப்பப்
புதனீர் வாரும் பூநாறு புறவிற்
சீறூ ரோளே மடந்தை வேறூர்.
வேந்துவிடு தொழிலொடு செலினுஞ்
சேந்துவர லறியாது செம்மல் தேரே.”

குறிப்பு

இவற்றுள், தலைவன் தலைவிமுன் பாங்கியைப் புகழ்தலாகிய ஒன்றும், கிழவோன் மகிழ்ச்சிக்குரித்து; தலைவனைப் பாங்கி வாழ்த்தல் முதலாகச் செவிலிக்கு வாழ்க்கை நன்றென்றுறைதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஆறனுள், பெருமகள் உரைத்தலாகிய ஒன்றுங் கிழத்தி மகிழ்ச்சிக்குரித்து; அல்லாத ஐந்தும் பாங்கி மகிழ்ச்சிக்குரிய; செவிலி நற்றாய்க்குத் தலைமகள் கற்பியல் உணர்த்தல் முதலாகிய மூன்றுஞ் செவிலி மகிழ்ச்சிக்குரிய எனக்கொள்க.

**பரத்தையிற் பிரிவு:**

தலைவியுடன் இல்லற வாழ்வினை மேற்கொண்டு ஒழுகும் தலைவன் தன் மனைவியை விடுத்து பிற மகளிரை நாடிச் செல்வது பரத்தையர் பிரிவு எனப்படும். தலைவன் பிற பெண்டிரை நாடிச் சென்றதனை அறிந்த தலைவி ஊடல் கொள்வாள்.அப்பொழுது ஊடல் தீர்க்கும் வாயில்கள் ஊடல் தீர்க்க முயல்வர். இவை அனைத்தும் பரத்தையர் பிரிவில் அடங்கும். தலைவி கொள்ளும் ஊடலானது உணர்த்த உணரும் ஊடல், உணர்த்த உணரா ஊடல் என இரு திறப்படும்.

## 9.5 பரத்தையிற்பிரிவின் வகை

வாயில் வேண்டல் வாயில் மறுத்தல்
வாயினோர் வித்தல் வாயி னோர்தலென்
றாய பரத்தையின் அகற்சிநால் வகைத்தே.

வாயில்வேண்டல், வாயில் மறுத்தல், வாயினோர் வித்தல், வாயில் நேர்தல் நான்கு வகையினை யுடைத்தாம் பரத்தையிற்பிரிவு.

## 9.6 உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள்:

ஊடல் என்பது தலைவியிடத்து ஏற்படும் மன வேறுபாடு ஆகும்.தலைவனின் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவியிடம் ஏற்படும் ஊடலானது தலைவன் ஆறுதல் மொழிகளைக் கூறுதல் காரணமாக படிப்படியாக நீங்கித் தெளிதல் உணர்த்த உணரும் ஊடல் எனப்படும்.அதற்கான கிளவிகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

காதலன் பிரிவுழிக் கண்டோன் புலவிக்
கேதுவீ தாமிவ் விறைவிக் கென்றலும்
தனித்துழி இறைவி துனித்தழு திரங்கலும்
ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதலும்
இறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலும்
தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்
உலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்

வரவுகண் டுவந்து வாயில்கள் மொழிதலும்
வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தலும்
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுரைத்த பன்னொன்றும்
உணர்த்த உணரும் ஊடற் குரிய.

குறிப்பு

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கென்றல் தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல், ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல், இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல், தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல், பரத்தையர் கண்டு பழித்தல், பரத்தை யுலகியல் நோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதல், வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தல், முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதல் புணர்ச்சியின் மகிழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்னுறம் உணர்த்தவுணரும் ஊடற்குரியவாம்.

**காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கென்றல்:**

"மாறையர் காவலன் வாணன்றென் றஞ்சையில் வாணுதற்கிவ்
வாறயர் காரண மாகுமென் றேகொங்கை யானையுடன்
சாறையர் வீதிய ரிப்பறை யார்ப்பத் தயங்குகுழல்
சூறையர் சூறைகொள் வான்வய லூரனைச் சூழ்ந்தனரே."

**தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்:**

"வன்போ தணிதொங்கல் வாணன்றென் மாறை மகிழ்நர்நம்மேல்
அன்போடு நன்னெஞ் சறிவறை போக வழலுள்வெந்த
பொன்போ னிறங்கொண் டிரவுங்கண் ணீரும் புலர்வதுபார்த்
தென்போ லெவரிங்ங னேயிமை யாம லிருப்பவரே."

**ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல்:**

"எம்மா திரமும் புரவலர்த் தேடி யிரந்துழல்வோர்
தம்மா துயரந் தணித்தருள் வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
நம்மாவி யன்னவர் நாடொறு நாடொறு நல்கவுநீ
விம்மா வருந்துவ தென்பிரிந் தாரின் விளங்கிழையே."

**இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்:**

"தாராக நல்கினர் காரிகை யாய்தஞ்சை வாணன்றன்னைச்
சேரா தவரென்னத் தீவினை யேனையச் செங்கண்வன்கட்
காரா கழனிக் கரும்பினஞ் சாயக் கதழ்ந்துசெந்நெல்
ஆரா தயலிற்பஞ் சாயாரு மூர ரயலவர்க்கே."

**தலைவியைப் பாங்கி கழறல்:**

"புனையலங் காரநங் கற்பியல் போற்றியும் போற்றருஞ்சீர்

குறிப்பு

மனையறம் பாலித்தும் வாழ்வதல் லாற்றஞ்சை வாணனன்னா
டனையவண் டார்குழ லாரணங் கேநமக் கன்பரிந்நாள்
இனையரென் றார்வமில் லாவுரை யாட லியல்பல்லவே."

**தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்:**

"வேளாண் மரவு விளக்கிய வாணன்மின் னார்கழல்சூழ்
தாளான் வளங்கெழு தஞ்சையன் னீர்சங்கந் தந்தநன்னீர்த்
தோளா மணியன்ன தொல்குல வோடையிற் றோன்றியபூ
வாளா வலர்தொடுப் பார்க்கெங்ங னேவந்து வாய்த்ததுவே."

**பரத்தையர் கண்டு பழித்தல்:**

"படியொன்று சாலி யனையவர் சேரிப் படர்பவளக்
கொடியொன்று நீல மலர்ந்தது காட்டக் கொடிய வெம்போர்
வடியொன்று கூரிலை வேல்வல்ல வாணன்றென் மாறையிற்பொற்
றொடியொன்று தோள்மட வார்சேரி வாய்வந்து தோன்றியதே."

**பரத்தை யுலகியல் நோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதல்:**

"வாருந்து பச்சிள நீர்முலை யார்மதன் வாணன்றஞ்சை
யாருந் தொழத்தகு மெம்பெரு மாட்டிதன் னேவலினாற்
சேரும் பரத்தையர் சேரியி லேசென்ற சேடியைக்கண்
டுருந் திரைப்புன லூரன்வந் தானின் றுலகியற்கே."

**தலைமகன் வரவு பாங்கி அரிவைக்குணர்த்தல்:**

"தள்ளா வளவயல் சூழ்தஞ்சை வாணன் றரியலர்போல்
உள்ளா துனைப்பண் டகன்றன ராயினு முள்ளியிப்போ
தெள்ளாது வந்துன் கடையினின் றார்நம் மிறைவர்குற்றங்
கொள்ளா தெதிர்கொள்வ தேகுண மாவது கோமளமே."

**தலைவனைத் தலைவி எதிர்கொண்டு பணிதல்:**

"மருவிற் பெருநல மன்னுவ தாந்தஞ்சை வாணன்வெற்பர்
ஒருவிற் பசலை யுருக்குவ தாநமக் கூடலெவ்வாறு
இருவிற் புருவ விளங்கொடி யேயெய்து மெய்தலில்லாத்
திருவிற் புனைநறுந் தார்வரை மார்பர் திருமுனின்றே."

**புணர்ச்சியின் மகிழ்தல்:**

"மன்னவர் காம நெடுங்கடல் வாணன்றென் மாறையன்னான்
தொன்னலம் வார்முலை மத்தந் தழீஇத்தடந் தோளிணையாம்
பன்னக நாணிற் கடைந்திதழ் வார்திரைப் பட்டநன்னீர்
இன்னமிழ் தார்ந்திமை யோரமை யாவின்ப மெய்தினரே."

## 9.7 உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகள்:

குறிப்பு

தலைவனின் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவியிடம் ஏற்படும் ஊடலானது தலைவன் ஆறுதல் மொழிகளைக் கூறுதல் காரணமாக நீங்காமல் தொடருமானால் அது உணர்த்த உணரா ஊடல் எனப்படும்.அதற்கான கிளவிகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்
தலைவிநெய் யாடிய திகுளை சாற்றலும்
தலைவன் தன்மனத் துவகை கூறலும்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும்
தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தலும்
பாணன் முதலாப் பாங்கன் ஈறாப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலும் இறைமகள் விருந்துகண்
டொளித்த வூடல் வளிப்பட நோக்கிச்
சீறே லென்றவள் சீறடி தொழலும்இ∴.
தெங்கையர் காணின் நன்றன் றென்றலும்
அங்கவர் யாரையும் அறியே னென்றலும்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலும்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலும்
தணியா ளாகத் தலைமகன் ஊடலும்
அணிவளைப் பாங்கி அன்பிலை கொடியையென்
றிணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவும்
உணர்த்த உணரா ஊடற் குரிய.

வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டல், தலைவிநெய் யாடிய இகுளை சாற்றல்,தலைவன் தன்மனத்து உவகை கூறல், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்,தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்,பாணன் முதலாகப் பாங்கன் ஈறாகிய வாயில்களைத் தலைவன் விடுத்தவழித் தலைவி மறுத்தல்,விருந்தொடு வந்தவழி தலைவி பொறுத்தல்கண்டு தலைவன் மகிழ்தல், இறைமகள் விருந்துகண்டு ஒளித்த ஊடல் வளிப்பட நோக்கிச் சீறேல் என்றவள் சீறடி தொழல்,இ∴.தெங்கையர் காணின் நன்றன் றென்றல், அங்கவர் யாரையும் அறியேன் என்றல், காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல், தாமக் குழலியைப் பாங்கி தணித்தல், தணியாளாகத் தலைமகன் ஊடல், பாங்கி அன்பிலை கொடியையென்ற தலைவனை இகழ்தல் என்பனவும் பிறவும் உணர்த்த உணரா ஊடற்குரியவாகும்.

குறிப்பு

**வெள்ளணியணிந்து விடுத்துழிப் புள்ளணி மலைவேல் அண்ணல் வாயில் வேண்டல்:**

“என்பாற் குறையை நினைந்து மறாதெதிர் கொள்ளவல்லே
தன்பாற் புலவி தணிசென்று நீதஞ்சை வாணன்வைய
மன்பாற் பரவும் புகழுடை யானரு ளேயனையா
யுன்பாற் புலவி யுறாள்வண்ண வார்குழ லொண்ணுதலே.”

**தலைவி நெய்யாடியது இகுளை சாற்றல்:**

“குவளை மேய்ந்த குறுந்தா ளெருமை
குடநிறை தீம்பால் படுஉம் ஊர
புதல்வனை யீன்றிவள் நெய்யா டினளே.”

**தலைவன் தன்மனத்துவகை கூறல்:**

“மையணி வேல்விழி வாணுதல் கூர்ந்தது வாணன்றஞ்சைக்
கொய்யணி நாண்மலர்க் கொம்பரன் னாள்குழ விப்பயந்து
நெய்யணி மேனியி லையவி பூண்ட நிலையறிந்தே
கையணி வால்வளை யைக்கண்ட நாளினுங் காதன்மையே.’’

**தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்:**

“ஏரார் புதல்வன் பிறந்தனன் வாழிய வென்னுமுன்னே
வாரார் வளமனை வந்துநின் றார்கங்குல் வாணன்றஞ்சை
நீராவி நீல் நெடுங்கண்மின் னேநின்னை நீப்பதல்லால்
தேரா தொழிகுவ ரோபெரி யோர்தஞ் சிறுவனையே.”

**தலைவி உணர்ந்து தலைமகனொடு புலத்தல்:**

“கரும்புநடு பாத்தியிற் கலித்த வாம்பல்
சுரும்புபசி களையும் பெரும்புன லூர
புதல்வனை யீன்றவெம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே.”

**பாணன் முதலாகப் பாங்கன் ஈறாகப் பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலைமகள் பாணனை மறுத்தல்:**

“புலைமக னாதலிற்பொய்ந்நின் வாய்மொழி
நில்லல் பாண செல்லினிப் பரியல்
பகலெஞ் சேரி காணினகல்வய லூர னாணவும் பெறுமே.”

**வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல்:**

“நினக்கே தகுநின் னெடும்புன லூரனு நீயுமவன்
தனக்கே தகுவை தமிழ்த்தஞ்சை வாணன் றடங்கிரிசூழ்
புனக்கே கயமன்ன நின்னடி போற்றிப் புகன்றுகன்றும்
எனக்கே தகுமிகை யாலெம்பி ராட்டி யெறிந்தகல்லே.”

**தலைமகள் விறலிவாயின் மறுத்தல்:**

"வண்புன லூர்வையை சூழ்தஞ்சை வாணனை வாழ்த்தலர்போற்
கண்புன லூருமென் காதல்கண் டேநின் கடைத்தலைக்கே
தண்புன லூரன்வந் தானென்று சாற்றினை தானமுறப்
பண்புன லூர்களெல் லாம்பாடி யேற்றுண்ணும் பாண்மகளே."

குறிப்பு

**விருந்தொடு வந்துழித் தலைமகள் பொறுத்தல்கண்டு தலைமகன் மகிழ்தல்:**

"தடமருப் பெருமை மடநடைக் குழவி
தூண்டொறும் யாத்த காண்டகு நல்லில் ------
எமக்கே, வருகதில் விருந்தே சிவப்பா ளன்று
சிறியமுள் ளெயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகங்காண் கம்மே."

**இ∴து எங்கையர் காணின் நன்றன்றெனல்:**

"எண்போன நெஞ்சமு நீருமென் பாதமிறைஞ்சுதல் நுங்
கண்போலு மெங்கையர் காணினன் றோகயன் மாதிரத்துத்
திண்போ தகந்தொறுந் தீட்டிய வாணன் செழுந்தஞ்சைசூழ்
வண்போ தளவிய நீர்வையை நாட்டுறை மன்னவரே"

**அங்கவர் யாரையும் அறியேன் என்றல்:**

"பாவைநீ புலவியி னீடல் பாவியேற்கு
ஆவியொன் றிரண்டுடம் பல்ல தூற்றுநீர்க்
கூவல்வாய் வெண்மணல் குறுகச் செல்லுமே
மேவிப்பூங் கங்கையுள் விழைந்த வன்னமே."

**தலைமகள் காமக்கிழத்தியைக் கண்டமை பகர்தல்:**

"போயே தெருவிற் றனிவிளை யாடும் புதல்வற்புல்ல
நீயே திலையல்லை நின்மக னேயிவ னீயுமவன்
தாயே வருகெனச் சேயன்ன வாணன் றமிழ்த்தஞ்சைமான்
ஏயே யெனநிற்ற லானறிந் தேன்தன்னை யெங்கையென்றே."

**தலைமகளைப் பாங்கி புலவி தணித்தல்:**

"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்."

**தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடற்குச் செய்யுள்:**

எவ்வி யிழந்த வறுமையர் பாணர்
பூவில் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே மனைமரத்
தெல்லுரு மௌவ னாறும்
பல்லிருங் கூந்தல் யாரேளா நமக்கே."

குறிப்பு

**பாங்கி அன்பிலை கொடியை என்று இணர்த்தார் மார்பனை இகழ்தல்:**

“வேம்பின் பைங்கா யென்றோழி தரினே
தேம்பூங் கட்டி யென்றனி ரினியே
பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கட் டண்ணிய தரினும்
அதுவே, வெய்ய வுவர்க்கு மென்றனிர்
ஐய வற்றா லன்பின் பாலே.”

## 9.7.1 உணர்த்த உணரா ஊடற்குரியவை:

ஆயிழை மைந்தனும் ஆற்றா மையுமே
வாயி லாக வரவெதிர் கோடலும்
மணந்தவன் போயபின் வந்த பாங்கியோ
டிணங்கிய மைந்தனை யினிதிற் புகழ்தலும்
தலைவனைப் புகழ்தலும் சிலைநுதற் பாங்கி
மனைவியைப் புகழ்தலும் இனையவை பிறவும்
அனைவகை மொழிந்த அதன்பாற் படுமே.

ஆயிழை மைந்தனும் ஆற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்டனவும், பிறவும் அத்தன்மைத்தாகிய உணர்த்த ஊணரா ஊடற்குரியவாம்.

**மகனும் ஆற்றாமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர்கோடல்:**

“வெள்ளம் பரந்தன்ன வேட்கையென் றாலு மிகப்பெரியோர் ----
தண்ணறும் பழனத்துக் கிளையோ டாலு
மறிவில் யாணர் மலிகே மூரநீ
சிறுவரி னினைய செய்தி
நகாரோ பெருமநிற் கண்டிசி னோரே.”

**தலைமகனைப் புணர்ந்து நீங்கியபின் வந்த பாங்கியொடு தன்மகனைப் புகழ்தல்:**

“இம்மை யுலகத் திசையொடும் விளங்கி
மறுமை யுலகமு மறுவின் றெய்துப
செறுநரும் விழையுஞ் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோரெனப் ----
பல்லோர் கூறிய பழமொழி யெல்லாம்
வாயே யாகுதல் வாய்த்தனைம் தோழி
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை யயர்தல் வேண்டிப் புதுவதின்

குறிப்பு

இயன்ற வணியன் இத்தெரு விறப்போன்
மாண்டொழின் மாமணி கறங்கக் கடைகழிந்து
காண்டல் விருப்பொடு தளர்புதளர் போடும்
பூங்கட் புதல்வனை நோக்கி நெடுந்தேர்
தாங்குமதி வலவவென் றிழிந்தனன் றாங்காது
மணிபுரை செவ்வாய் மார்பகஞ் சிவணப்
புல்லிப் பெரும செல்லினி யகத்தனெ
கொடுப்போற் கொல்லான் கலுழ்தலின் தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்மென மகனொடு
தானே புகுதந் தோனே ------"

**தலைவி தலைவனைப் புகழ்தல்:**

"கொண்டானிற் றுன்னிய கேளிர்மற் றில்லை குறிப்பினென்று
தண்டா தவர்சொன்ன சல்புகண் டேன்றல மேழ்புரக்கும்
வண்டார் மலர்ப்பயன் வாணன்றென் மாறை மகிழ்நர்முன்னாள்
உண்டா கியபழங் கேண்மையிந் நாளு மொழிந்திலரே."

**பாங்கி மனைவியைப் புகழ்தல்:**

"யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய --------
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு னாணிக் கரப்பா டும்மே."

## 9.8 பரத்தையிற் பிரிவின்விரி

மூன்றுசூத் திரத்து மொழிந்தவை யெல்லாம்
ஆன்ற பரத்தையி னகற்சியின் விரியே.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் அவ்விறைவிக்கு என்றல் முதலாகப் பாங்கி மனைவியைப் புகழ்தல் ஈறாகச் சொல்லப்பட்டனவெல்லாம் பரத்தையிற் பிரிவின் விரியாம்.

## 9.9 ஓதற் பிரிவு முதலிய மற்றைய பிரிவுகளுக்கு உரிய கூற்றுகள்:

பிரிவறி வுறுத்தல் பிரிவுடன் படாமை
பிரிவுடன் படுத்தல் பிரிவுடன் படுதல்
பிரிவுழிக் கலங்கல் வன்புறை வன்பொறை
வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சியென்
றொருமையிற் கூறிய வொன்பது வகைய
கல்வி முதலா வெல்லாப் பிரிவும்.

கல்வி முதலாகிய ஐவகைப் பிரிவு, பிரிவறிவுறுத்தல், பிரிவுடன் படாமை,பிரிவுடன் படுத்தல், பிரிவுடன் படுதல்,பிரிவுழிக் கலங்கல், வன்புறை,

குறிப்பு

வன்பொறை,வருவழிக் கலங்கல் வந்துழி மகிழ்ச்சி ஈறாகச் சொல்லப்பட்ட ஒன்பது வகையினை உடையதாகும்.

**ஓதற் பிரிவு – கல்வி காரணமாகப் பிரியும் பிரிவு.**

**ஓதற் பிரிவு தலைமகனான் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்:**

"மல்லித் தகங்கொண்ட தோளுடை யான்றஞ்சை வாணன்றொல்சீர்
நல்வித் தகன்புவி நாவில்வைத் தோன்வையை நாடனையாய்
கல்வித் தடங்கட னீந்திய காதலர் கற்றவர்முன்
சொல்வித்த வென்றழ லார்சுரம் போகத் துணிந்தனரே."

**தலைமகன் ஓதற்குப் பிரிந்துழித் தலைமகள் கார்ப்பருவங் கண்டு புலம்பல்:**

"யாணர்க் குழன்மொழி யென்செய்கு வேன்கல்வி யெல்லையெல்லாங்
காணப் பிரிந்தவர் காண்கில ராற்கடன் மேய்ந்துதஞ்சை
வாணற் கெதிர்ந்தவர் மங்கையர் போலுமென் வல்லுயிரின்
ஊணற்ப மென்னவெண் ணாவரு மேக முருமுடனே."

**ஓதற்குப் பிரிந்துழிக் கார்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்:**

"காதற் கயம்படிந் துன்னொடு காமக் கனிநுகரா
தோதற் ககன்ற வுணர்வுடை யோருடை நீருலகம்
மாதர்க் கமைந்தருள் வாணன்றென் மாறை வரக்கடவர்
ஆதற் கணங்கனை யாய்புய லேது அறிந்தருளே."

**காவற் பிரிவு – நாடுகாவல் பொருட்டுப் பிரிதல்.**

**காவற் பிரிவு தலைமகனான் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்:**

"விண்காவல் கொண்ட திலோத்தமை தான்முதன் மெல்லியலார்
கண்காவல் கொண்டருள் காரிகை காவலர் கார்க்கடல்சூழ்
மண்காவல் கொண்ட மனத்தின ராயினர் வாணன்றஞ்சைப்
பண்காவல் கொண்ட மொழிச் செய்ய வாயிதழ்ப் பைங்கிளியே."

**தலைமகன் காவற்குப் பிரிந்துழித் தலைமகள் கூதிர்ப்பருவங் கண்டு வருந்தல்:**

"மன்னுயிர் காவலன் வாணன்றென் மாறையில் வந்தளியார்
என்னுயிர் காவல ரேந்திழை யாயித யம்புலர்த்திக்
கொன்னுயிர் வாடை கொடும்பனி நீரிற் குளிர்குழைத்துப்
பின்னுயி ராமலென் மேற்பூசு நாளுமென் பேசுவதே."

**காவற்குப் பிரிந்துழிக் கூதிர்ப்பருவங் கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்**

"வரற்கால மென்றென் றெனப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால வின்று மெலியன்மின் னேசென்று மேதினிகாத்
துரற்கால குஞ்சர மஞ்சமஞ் சூர்ந்துறை வீசுகின்ற

குறிப்பு

சரற்காலம் வந்தடைந் தார்தஞ்சை வாணன் றமிழ்வெற்பரே.

**தூதிற் பிரிவு – தூது காரணமாகப் பிரிதல்.**

**தூதிற்குப் பிரிவு தலைமகனான் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்:**

“தூதாக வன்பர் செலத்துணிந் தாரென்றுஞ் சொற்புலவோர்
மாதாக வன்பசி தீர்த்தருள் வாணன்றென் மாறையிந்து
மீதாக வம்பு கிடந்தன போலுண்கண் மெல்லியலிப்
போதாக வம்புகல் வோரிக லார்தம் புரம்புகவே.”

**தலைமகன் தூதிற்குப் பிரிந்துழித் தலைமகள் முன்பனிப் பருவங் கண்டு வருந்தல்:**

“மலிகின்ற வண்புகழ் வாணன்றென் மாறையை வாழ்த்தலர்போன்
மெலிகின்ற சிந்தையு மேனியுங் கொண்டு விளர்ப்பெனும்பேர்
பொலிகின்ற கஞ்சுகம் போர்த்திருந் தேனைப் புரந்தருளார்
நலிகின்ற முன்பனி நாளினண் ணார்முனை நண்ணினரே.”

**துணைவயிற் பிரிவு – துணையாய் இருப்போர் பொருட்டுப் பிரிதல்**

**வேந்தர்க்குற்றுழி பிரிவு தலைமகனால் உணர்ந்த தோழி தலைமகட்கு உணர்த்தல்:**

“நண்பான மன்னர்க் கிடர்தணிப் பானெண்ணி நல்லுதவிப்
பண்பான மன்னர் படர்தலுற் றார்பணி நீர்பொழியுந்
தண்பா னலந்தொடை யம்புய வாணன் றமிழ்த்தஞ்சைவாழ்
வெண்பா னலங்கொள்செவ் வாயன்ன மேயன்ன மென்னடையே”

**தலைமகன் வேந்தர்க்குற்றுழி பிரிந்துழித் தலைமகள் பின்பனிப் பருவங்கண்டு வருந்தியது.:**

“இன்னற் படுகின்ற வென்னையெண் ணார்தமக் கின்றுணையாம்
மன்னர்க் குதவிப் பிரிந்தநங் காதலர் வாணன்றஞ்சைக்
கன்னற் கடிகை யறிவதல் லாற்பகல் காண்பரிதாம்
பின்னற் கனையிருள் கூர்துன்ப மேவிய பின்பனியே.”

**வேந்தர்க்குற்றுழிப் பிரிந்துழித் பின்பனிப் பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்:**

“வடுக்கண் டனையகண் மங்கைநல் லாய்தஞ்சை வாணன்வெற்பின்
அடுக்கங் குளிர வசைகின்ற வாடை யகன்றவர்க்கு
நடுக்கஞ்செய் பின்பனி நாளின்வந் தாரமர் நண்பனுற்ற
இடுக்கண் களையவென் றேயகன் கான மிகந்தவரே.”

**பொருள்வயிற் பிரிவு – பொருள் தேடுதல் பொருட்டுப் பிரிதல். இல்லறத்தின் கடமைகளைச் செய்தற்குப் பொருள் இன்றியமையாதலால் அத்தகைய பொருள் வேண்டிப் பிரிதல்.**

குறிப்பு

**பொருள்வயிற்பிரிவு தலைமகனால் உணர்ந்ததோழி தலைமகட்கு உணர்த்தியது**

"மஞ்சைப் புனைமதின் மாறை வரோதயன் வாணர்பிரான்
தஞ்சைப் பதியண்ண லெண்ணலர் போற்றனி நாமிருக்க
நெஞ்சைப் பொருள் வயின் வைத்துநங் கேள்வர்நன் னீண்மதியின்
பிஞ்சைப் புரைநுத லாய்பிரி வானின்று பேசினரே."

**தலைமகன் பொருள்வயிற் பிரிந்துழித் தலைமகள் இளவேனிற் பருவங்கண்டு வருந்தல்::**

"நங்க ணிரங்க வரும்பொருள் தேட நடந்தவன்பர்
செங்க ணிருங்குயி லார்ப்பது கேட்கிலர் செந்தமிழோர்
தங்க ணிடும்பை தவிர்த்தருள் வாணன்றென் றஞ்சைவஞ்சி
திங்க ணிவந்தது போற்கவி னார்முகத் தேமொழியே"

**பொருள்வயிற் பிரிந்துழி இளவேனிற் பருவங்கண்டு வருந்திய தலைமகளைத் தோழி ஆற்றுவித்தல்:**

"வார்த்தன பார மடமயி லேகுயின் மாருதமாந்
தேர்த்தனி வீரன் திருநாளும் வந்தது சேர்மின்சென்றார்
தார்த்தட மேரு வெனும்புய வாணன்றஞ் சாபுரிநின்
றார்த்தது கேட்டுவந் தார்பொருள் தேட வகன்றவரே."

சில பிரிவுகளின் பொதுக் கிளவிகள்

**பாசறைமுற்றி மீண்டு ஊர்வயின் வந்ததலைமகன் பாகற்குச் சொல்லியது:**

"மால்கொண்ட வாரண வாணன்றென் மாறை வலவநண்ணார்
கால்கொண்ட வாளமர் கையகல் பாசறைக் கைவயின்முட்
கோல்கொண்ட வாறுநின் னேவல்கொண் டியானிக் கொடி நெடுந்தேர்
மேல்கொண்ட வாறுநம் மூர்வந்த வாறும் வியப்பெனக்கே"

**தலைமகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங்கண்டு உவந்து சொல்லியது:**

"கொத்தல ரோதியங் கொம்பரன் னாள்பொங்கு கொங்கை விம்ம
முத்தல ராக முயங்கினம் யாமுழு நீர்விழிபோல்
மைத்தலர் நீல மலர்வயல் சூழ்தஞ்சை வாணன்வண்மைக்
கைத்தல மான வினிப்பொழி வாழிய கார்முகிலே

**பயிற்சி வினாக்கள்:**

1. கற்பிற்குரிய கிளவித் தொகைகள் யாவை?

இல்வாழ்க் கையே பரத்தையிற் பிரிவே
ஓதற் பிரிவே காவற் பிரிவே
தூதிற் பிரிவே துணைவயிற் பிரிவே
பொருள்வயிற் பிரிவெனப் பொருந்திய ஏழும்
வளமலி கற்பின் கிளவித் தொகையே

இல்வாழ்க்கை, பரத்தையிற் பிரிவு,ஓதற் பிரிவு, காவற் பிரிவு,தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு பொருள்வயிற்பிரிதல் ஈறாகச் சொல்லப்பட்ட ஏழும் கற்பின் கிளவித்தொகைகள் ஆகும்.

2. உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகளை விவரி?

குறிப்பு

ஊடல் என்பது தலைவியிடத்து ஏற்படும் மன வேறுபாடு ஆகும்.தலைவனின் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவியிடம் ஏற்படும் ஊடலானது தலைவன் ஆறுதல் மொழிகளைக் கூறுதல் காரணமாக படிப்படியாக நீங்கித் தெளிதல் உணர்த்த உணரும் ஊடல் எனப்படும்.அதற்கான கிளவிகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

காதலன் பிரிவுழிக் கண்டோன் புலவிக்
கேதுவீ தாமிவ் விறைவிக் கென்றலும்
தனித்துழி இறைவி துனித்தழு திரங்கலும்
ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதலும்
இறைமகன் புறத்தொழுக் கிறைமக ளுணர்த்தலும்
தலைவியைப் பாங்கி கழறலும் தலைவி
செவ்வணி யணிந்து சேடியை விடுப்புழி
அவ்வணி யுழையர்கண் டழுங்கிக் கூறலும்
பரத்தையர் கண்டு பழித்தலும் பரத்தையர்
உலகிய னோக்கி விடுத்தலிற் றலைவன்
வரவுகண் டுவந்து வாயில்கள் மொழிதலும்
வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தலும்
முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதலும்
புணர்ச்சியின் மகிழ்வுமென் றுரைத்த பன்னொன்றும்
உணர்த்த உணரும் ஊடற் குரிய.

காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கென்றல் தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல், ஈங்கிது என்னெனப் பாங்கி வினாதல், இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல், தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல், பரத்தையர் கண்டு பழித்தல், பரத்தை யுலகியல் நோக்கி விடுத்தலிற் றலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதல், வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தல், முதிரா மென்முலை யெதிர்கொண்டு பணிதல் புணர்ச்சியின் மகிழ்தல் ஈறாகச் சொல்லப்பட்ட பதினொன்னுறம் உணர்த்தவுணரும் ஊடற்குரியவாம்.

3. உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளை விரித்தெழுதுக.

தலைவனின் புறத்தொழுக்கம் காரணமாகத் தலைவியிடம் ஏற்படும் ஊடலானது தலைவன் ஆறுதல் மொழிகளைக் கூறுதல் காரணமாக

குறிப்பு

நீங்காமல் தொடருமானால் அது உணர்த்த உணரா ஊடல் எனப்படும்.அதற்கான கிளவிகள் கீழ்க்கண்டவாறு அமையும்.

வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணி
மலைவேல் அண்ணல் வாயில் வேண்டலும்
தலைவிநெய் யாடிய திகுளை சாற்றலும்
தலைவன் தன்மனத் துவகை கூறலும்
தலைவிக் கவன்வரல் பாங்கி சாற்றலும்
தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தலும்
பாணன் முதலாப் பாங்கன் ஈறாப்
பேணிய வாயில்கள் பெரியோன் விடுத்துழி
மறுத்தலும் விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்
டிறையோன் மகிழ்தலும் இறைமகள் விருந்துகண்
டொளித்த வூடல் வளிப்பட நோக்கிச்
சீரே லென்றவள் சீறடி தொழலும்இ∴
தெங்கையர் காணின் நன்றன் றென்றலும்
அங்கவர் யாரையும் அறியே னென்றலும்
காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தலும்
தாமக் குழலியைப் பாங்கி தணித்தலும்
தணியா ளாகத் தலைமகன் ஊடலும்
அணிவளைப் பாங்கி அன்பிலை கொடியையென்
றிணர்த்தார் மார்பனை யிகழ்தலும் பிறவும்
உணர்த்த உணரா ஊடற் குரிய.

வெள்ளணியணிந்து விடுத்துழித் தலைவன் வாயில் வேண்டல், தலைவிநெய் யாடிய இகுளை சாற்றல்,தலைவன் தன்மனத்து உவகை கூறல், தலைவிக்கு அவன்வரல் பாங்கி சாற்றல்,தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல்,பாணன் முதலாகப் பாங்கன் ஈறாகிய வாயில்களைத் தலைவன் விடுத்தவழித் தலைவி மறுத்தல்,விருந்தொடு வந்தவழி தலைவி பொறுத்தல்கண்டு தலைவன் மகிழ்தல், இறைமகள் விருந்துகண்டு ஒளித்த ஊடல் வளிப்பட நோக்கிச் சீறேல் என்றவள் சீறடி தொழல்,இ∴தெங்கையர் காணின் நன்றன் றென்றல், அங்கவர் யாரையும் அறியேன் என்றல், காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல், தாமக் குழலியைப் பாங்கி தணித்தல், தணியாளாகத் தலைமகன் ஊடல், பாங்கி அன்பிலை கொடியையென்ற தலைவனை இகழ்தல் என்பனவும் பிறவும் உணர்த்த உணரா ஊடற்குரியவாகும்.

# பிரிவு – III யாப்பருங்கலக் காரிகை

**நோக்கம்: யாப்பு இலக்கணம் பற்றி அறிதல் - யாப்பருங்கலக்காரிகை அமைப்பு முறைமை அறிதல் - யாப்பருங்கலக்காரிகையின் ஆசிரியர் பற்றி அறிதல் - பாயிரக் கருத்து - அவையடக்கக் கருத்துகளை அறிதல்.**

## கூறு: 10 யாப்பருங்கலக்காரிகை –விளக்கம்

குறிப்பு

தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கண மரபினை உடையதாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் செய்யுள் வடிவிலே அமைந்தவை. இத்தகைய செய்யுளை படைத்தற்கு அடிப்படைக் கருவியாய் அமைவது எழுத்து ஆகும். அவ் எழுத்துக்களே தனித்தும் சேர்ந்தும் பொருளை உணர்த்தும் இடத்து சொல்லாகவும் அசையாகவும் சீராகவும் தளையாகவும் தொடையாகவும் பெயர் பெற்று அமையும். இவ்வாறு செய்யுள் ஆக்கப்படும் தன்மையினை விளக்குதல் யாப்பிலக்கணம் எனப்படும். தமிழுக்கு யாப்பிலக்கணம் அருங்கலம் போன்றது ஆகையால் அது யாப்பருங்கலம் எனப்பட்டது. இந்நூல் முழுமையும் ஓர் பெண்ணை (காரிகை) முன்னிலைப்படுத்தி சொல்லும் வகையால் அமைந்தமையால் யாப்பருங்கலக்காரிகை எனப்பட்டது.

## 10.1பாயிரம்

**இறை வணக்கமும் நுவலப்படும் பொருளும்**

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
கந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே.

என்பது காரிகையாகும். நூல் உரைக்கு மிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும் உரைத்திற்று. நாலடி நாற்பதும் போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங்கக் காரிகை என்னும் பெயர் பெற்றது.

இந்நூல் பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவை யோரை நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது.

இந்நூல், ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகை ஆக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்தசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இந்நூல் ஓத்துவகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும் இருபத்தெட்டு

குறிப்பு

எழுத்தும் கொண்டு செய்யப்பட்டது. அவற்றுள் ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யு மாகிய முப்பத்திரண்டு எழுத்து ஆகும். அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும் நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்றும் எனக்கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும் நிரையசை முதலாகிய காரிகை ஒன்றனுக்கு அறுபத்தெட்டு எழுத்தும் ஆகும்.

இவற்றைக் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டெழுத்தாம் என அறிக. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் எனக் கொண்டு அமையும்.

இந்நூலால் ஆகிய பயன் யாப்பு ஆராய்தல் பயன். யாப்பு ஆராயவே பாத் தாழிசை துறை விருத்தங்களால் ஆக்கப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அவற்றின் மெய்ம்மை அறிந்து விழுப்பம் எய்தி இம்மை மறுமை வழுவாமை ஆகும்.

இந்நூல் உறுப்பியல் ஓத்துஞ் செய்யுளியல் ஓத்தும் ஒழிபியல் ஓத்தும் எனமூன்று வகைப்படும். இவ் வோத்தென்ன பெயர்த்தோ எனின், எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் என்னும் ஆறு உறுப்பினையும் உணர்த்திற்றாதலால் 15உறுப்பிய லோத்து என்னும் பெயர்த்து.

இம் முதற்காரிகை சிறப்புப்பாயிரம் உணர்த்திற்று.

முருகு விரியும் மொய் மலர் அசோகின் கீழ் அருகன் தனது அடி வணங்கி எழுத்தும் அசையுஞ் சீரும் தளையும் அடியுந் தொடையும் பாவும் பாவினமு மாமாறு உரைப்பன் தளிப்புரையுஞ் சிறுமெல்லடித்தகை நெடுங்குழற் றையலாய் என்றவாறு. இது பொழிப்புரை யெனக் கொள்க.

பல்லவத்தின் சந்த மடிய அடியான் மருட்டிய தாழ்குழலே“ என்பது மகடூஉ முன்னிலை.

## 10.2 அவையடக்கம்

தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண் ணீருருவிக்
கானார் மலயத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானா நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமால்
ஆனா வறிவி னவர்கட் கென் னாங்கொலென் னாதரவே.

நூலினது பெருந்தன்மையும் ஆசிரியனது பெருந் தன்மையும் தனது உள்ளக் குறைபாடும் உணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்திற்று.

வேப்ப மாலையைத் தரித்த பாண்டியன் கேட்கத் தெளிந்த அருவி நீரையுடைய பொதியமலையில் எழுந்தருளி இருக்கின்ற அரிய தவத்தினையுடைய முதலாசிரியராகிய அகத்தியமுனிவரால் அருளிச்செய்யப்பட்ட அழிவின்றி நிலைபெற்ற முத்தமிழுள் இயற்றமிழின்

கூறாகிய யாப்பிலக்கண நூலை, யானும் ஆசையினால் எனது புல்லிய நாவைக் கொண்டு சொல்லத் தொடங்கினேன். இது அறிவிலியாகிய எனக்கே நகைப்பைத் தருமாயின் குறை வில்லாத அறிவினை உடையவர்க்கு யாதாகுமோ!

குறிப்பு

சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்
பொருப்பகஞ்சேர்ந்தபொல்லாக்கருங்காக்கையும்பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ் விருநிலமே.

இக்காரிகை புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்திற்று.

பனிதோய்ந்த நெடிய இமயவரை இடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரிய காக்கையும் பொன்னிறம் உற்றிருக்கும் என்று இவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றந் தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியை யுடைய புலவர்க்கு முன் குற்றமுடைய அறிவில்லாத யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப்பொருளும். சிறந்த நுண் பொருள் ஆம்.

**பயிற்சி வினாக்கள்:**

1.யாப்பருங்கலக்காரிகை - விளக்குக.

பண்டைத் தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் ஐந்திலக்கண மரபினை உடையதாகும். பழந்தமிழ் இலக்கியங்கள் செய்யுள் வடிவிலே அமைந்தவை. இத்தகைய செய்யுளை படைத்தற்கு அடிப்படைக் கருவியாய் அமைவது எழுத்து ஆகும். அவ் எழுத்துக்களே தனித்தும் சேர்ந்தும் பொருளை உணர்த்தும் இடத்து சொல்லாகவும் அசையாகவும் சீராகவும் தளையாகவும் தொடையாகவும் பெயர் பெற்று அமையும். இவ்வாறு செய்யுள் ஆக்கப்படும் தன்மையினை விளக்குதல் யாப்பிலக்கணம் எனப்படும். தமிழுக்கு யாப்பிலக்கணம் அருங்கலம் போன்றது ஆகையால் அது யாப்பருங்கலம் எனப்பட்டது. இந்நூல் முழுமையும் ஓர் பெண்ணை (காரிகை) முன்னிலைப்படுத்தி சொல்லும் வகையால் அமைந்தமையால் யாப்பருங்கலக்காரிகை எனப்பட்டது.

2.யாப்பருங்கலக்காரிகையின் இறை வணக்கம் நுவலப்படும் பொருள் குறித்து விளக்குக.

இறை வணக்கமும் நுவலப்படும் பொருளும்:

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீழ்
எந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
கந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

குறிப்பு

என்பது காரிகையாகும். நூல் உரைக்கு மிடத்து நூற்பெயரும், காரணமும், ஆக்கியோன் பெயரும், அளவும், பயனும் உரைத்திற்று. நாலடி நாற்பதும் போல யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங்கக் காரிகை என்னும் பெயர் பெற்றது.

இந்நூல் பண்டையோர் உரைத்த தண்டமிழ் யாப்பிற் கொண்டிலாத குறியினோரைக் குறிக்கொளுவுதல் காரணமாகவும், தொல்லைப் பனுவல் துணிபொருள் உணர்ந்த நல்லவை யோரை நகுவிப்பது காரணமாகவும் செய்யப்பட்டது.

இந்நூல், ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகை ஆக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிர்தசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது.

இந்நூல் ஓத்துவகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும் இருபத்தெட்டு எழுத்தும் கொண்டு செய்யப்பட்டது. அவற்றுள் ஒரு கிரந்தமாவது ஒற்றொழித்து உயிரும் உயிர்மெய்யு மாகிய முப்பத்திரண்டு எழுத்து ஆகும். அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை இருபத்தொன்றும் நிரையசை முதலாகிய காரிகை இருபத்துமூன்றும் எனக்கொள்க. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒன்றினுக்கு எழுத்து அறுபத்து நான்கும் நிரையசை முதலாகிய காரிகை ஒன்றனுக்கு அறுபத்தெட்டு எழுத்தும் ஆகும்.

இவற்றைக் கூட்டி உறழ இரண்டாயிரத்துத் தொள்ளாயிரத்து எட்டெழுத்தாம் என அறிக. அவற்றுள் நேரசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினாறும், நிரையசை முதலாகிய காரிகை ஒற்றொழித்து ஓரடிக்கு எழுத்துப் பதினேழும் எனக் கொண்டு அமையும்.

இந்நூலால் ஆகிய பயன் யாப்பு ஆராய்தல் பயன். யாப்பு ஆராயவே பாத் தாழிசை துறை விருத்தங்களால் ஆக்கப்பட்ட அறம் பொருள் இன்பம் வீடு என்னும் அவற்றின் மெய்ம்மை அறிந்து விழுப்பம் எய்தி இம்மை மறுமை வழுவாமை ஆகும்.

இந்நூல் உறுப்பியல் ஓத்துஞ் செய்யுளியல் ஓத்தும் ஒழிபியல் ஓத்தும் எனமூன்று வகைப்படும். இவ் வோத்தென்ன பெயர்த்தோ எனின், எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் என்னும் ஆறு உறுப்பினையும் உணர்த்திற்றாதலால் 15உறுப்பிய லோத்து என்னும் பெயர்த்து.

3.பனிமால் இமயப் பொருப்பகம் சேர்ந்த பொல்லாக் கருங்காக்கை – உவமையை விளக்குக.

சுருக்கமில் கேள்வித் துகடீரி புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்

பொருப்பகஞ்சேர்ந்தபொல்லாக்கருங்காக்கையும்பொன்னிறமாய்
இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவிவ் விருநிலமே.

இக்காரிகை புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்கம் உணர்த்திற்று.

குறிப்பு

பனிதோய்ந்த நெடிய இமயவரை இடத்தைச் சேர்ந்த இழிவாகிய கரிய காக்கையும் பொன்னிறம் உற்றிருக்கும் என்று இவ்வுலகத்தவர் சொல்வர். இவ்வாறே குற்றந் தீர்ந்த அளவில்லாத நூற்கேள்வியை யுடைய புலவர்க்கு முன் குற்றமுடைய அறிவில்லாத யான் கூறிய சிறப்பில்லாத பிண்டப்பொருளும். சிறந்த நுண் பொருள் ஆம்.

# கூறு:11–யாப்பருங்கலக்காரிகை – உறுப்பியல் எழுத்து-அசை-சீர் - தளை – அடி – தொடை

**நோக்கம்: யாப்பருங்கலக்காரிகை உணர்த்தும் எழுத்து – அசை – சீர் – தளை – அடி – தொடை – தொடை விகற்பங்கள் போன்றவற்றை அறிதல்.**

குறிப்பு

## 11.1அசைக்கு உறுப்பாம் எழுத்துக்கள்:

**அசைக்கு உறுப்பாம் எழுத்துக்களைக் கீழ்க்கண்ட காரிகை விளக்கியுரைக்கும்.**

குறினெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்தமெய்யே
மறுவறு மூவினம் ஐதீர் உயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்யவாய் ஐயநுண்ணிடையாய்
அறிஞர் உரைத்த அளபும் அசைக்குறுப்பு ஆவனவே.

குறிலாவன : அ இ உ எ ஒ என இவை.

நெடில்: ஆ ஈ ஊ ஏ ஓ ஐ ஔ

ஆவியாவன: அகரமுதல் ஔகார மீறாய்க் கிடந்த பன்னிரண் டெழுத்தும் ஆகும்.

எட்டாவன : எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, இனம் என்பன.

குறுகிய மூவுயிராவன : குற்றியலிகரமும், குற்றிய லுகரமும், ஐகாரக் குறுக்கமும் ஆகும்.

ஆய்தமென்பது அ.ஃகேனம். அ.ஃகேனம் எனினும், ஆய்தம் எனினும், தனிநிலை எனினும், புள்ளி எனினும், ஒற்றெனினும் ஒக்கும்.

எ.ஃகு, க.ஃசு, க.ஃடு, க.ஃது, க.ஃபு, க.ஃறு எனவரும்.

மெய்யாவன : ககர முதல் னகர ஈறாய்க் கிடந்த பதினெட்டு எழுத்தும் ஆகும்.

மறுவறு மூவினமாவன: வல்லினம் மெல்லினம் இடையினம் என்பதாம்.

வல்லினம் : க ச ட த ப ற.

மெல்லினமாவன: ங ஞ ண ந ம ன.

இடையினமாவன : ய ர ல வ ழ ள.

உயிர் மெய்யாவன : உயிரும் மெய்யுங் கூட்டி உச்சரிக்கப்படா நின்ற பன்னிரு பதினெட்டு இருநூற் றொருபத்தாறெழுத்தும் ஆகும்.

மதிமருட்டும் சிறுநுதல் பேர் அமர்க்கண் செய்ய வாய் ஐய நுண்ணிடையாய் என்பது மகடூஉ முன்னிலை.

**குற்றியலுகரம்**:

குறுகிய ஓசை உடைய உகரம்.நெடிற்கீழும், நெடில் ஒற்றின் கீழும்,குறிலிணைக் கீழும், குறிலிணை ஒற்றின்கீழும், குறினெடிற்கீழும்,

குறிப்பு

குறினெடில் ஒற்றின் கீழும், குற்றொற்றின் கீழும் ஆகிய இவ் ஏழிடத்தும் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து உகரம் வந்தால் அது குற்றிய லுகரம் என்று வழங்கப்படும்.

நெடிற்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம். நாகு, காசு, காடு, காது, காபு, காறு

நெடி லொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: நாக்கு, காச்சு, காட்டு, காத்து, காப்பு, காற்று

குறிலிணைக் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: வரகு, முரசு, முருடு, மருது, துரபு, கவறு

குறிலிணையொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: அரக்கு, பொரிச்சு, தெருட்டு, குருத்து, பொருப்பு, சிரற்று

குறினெடிற் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: அசோகு, பலாசு, மலாடு, கொடாது, புதாபு, விராறு

குறினெடிலொற்றின்கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: தமாக்கு, தடாச்சு, பனாட்டு, கொடாத்து, புதாப்பு, விராற்று

குற்றொற்றின் கீழ் ஆறு வல்லெழுத்தினையும் ஊர்ந்து குற்றியலுகரம்: நக்கு, கச்சு, கட்டு, கத்து, கப்பு, கற்று

குற்றியலுகர எழுத்து ஆறுவகைப்படும் என்பாருமுளர். அவையாவன:

நெடில் தொடர் குற்றியலுகரம் - நாடு, காது

உயிர்த்தொடர் குற்றியலுகரம் - வரகு, அசோகு

இடைத்தொடர் குற்றியலுகரம்: மார்பு, நல்கு

வன்றொடர் குற்றியலுகரம்: நாக்கு, பாட்டு

மென்றொடர் குற்றியலுகரம் : வண்டு. பந்து

ஆய்தத் தொடர் குற்றியலுகரம் - அ∴து, எ∴கு

**குற்றியலிகரம்**:

குற்றியலுகரம் திரிந்தும் திரியாதும் யகரமோடு இயைபின் கண் வந்த இகரம் குற்றிய லிகரமென்று வழங்கப்படும்.

நாகியாது, காசியாது, காடியாது, காதியாது, காபியாது, காறியாது என வரும்.

இனி உகரம் திரியாது வந்த குற்றியலிகரம் : மியாவென்னும் முன்னிலை யசைச்

சொல்லின் கண் மகரம் ஊர்ந்து நின்ற இகரம் குற்றியலிகரமென்று வழங்கப்படும்.

கேண்மியா, சென்மியா

**ஐகாரக் குறுக்கம்:**

அளபெடுத்தற் கண்ணும் தனியே சொல்லுதற்கண்ணும் இன்றி அல்லாத வழி வந்த ஐகாரம் தன்னளவிற் சுருங்கி ஒன்றரை

குறிப்பு

மாத்திரையும் ஒரு மாத்திரையுமாகக் குறுகும்: ஐகாரம் குறுகுமிடத்து முதலிடை கடையென்னும் மூவிடத்தும் குறுகும்.

ஐப்பசி, மைப்புறம் என மொழி முதற்கண் ஐகாரங் குறுகின.

மடையன், உடைவாள் என மொழிக்கிடையின்கண் ஐகாரம் குறுகின.

குவளை, தவளை, பனை என மொழிக் கிறுதியின்கண் ஐகாரம் குறுகின.

**அளபெடை:**

எழுத்துகளின் கால அளவு. இதற்கு அளபு என்று பெயர்.இயல்பான ஒளியின் அளபை மாத்திரை என்றும் ஒலியின் நீட்சியை அளபெடை என்றும் கூறுவர். அளபெடை இருவகைப்படும். அவை உயிரளபெடை, ஒற்றளபெடை என்பதாம்.

**உயிரளபெடை:**

உயிருள் நெட்டெழுத்து ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்கு மிடத்து ஐகாரம் இகரத்தோடு அளபெடுக்கும்; ஔகாரம் உகரத்தோடு அளபெடுக்கும்; ஒழிந்தனவும் தமக்கு இனமாகிய குற்றெழுத்தோடு அளபெடுக்கும். அவை நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும்.

நான்கிடமாவன: தனிநிலையும், முதனிலையும், இடைநிலையும், கடைநிலையும் என்பதாம்.

ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ எனத் தனிநிலை யளபெடை.

ஆஅலமரம், ஈஇரிலை, ஊஉரிடம், ஏஎரிகள், ஐஇயவி, ஓஒரிகள், ஔஉவியம் -

முதனிலையளபெடை படாஅகை, பரீஇகம், கழூஉமணி, பரேஎரம், வளைஇயம், புரோஒசை, அநௌஉகம் - இடைநிலை அளபெடை

கடாஅ, குரீஇ, கழூஉ, மிலேஎ, கடைஇ, அரோஒ, அரௌஉ என இறுதிநிலையளபெடை

**ஒற்றளபெடை:**

ஒற்றுக்களுள், ங ஞ ண ந ம ன வ ய ல ள வாய்தம் என்னும் பதினோரொற்றும்

குறிற்கீழும் குறிலிணைக் கீழும் வந்து அளபெடுக்கும்.

மங்ங்கலம், பஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு, மின்ன்னு, தெவ்வ்வர், வெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு என இவை குறிற்கீழ்ப் பதினோரொற்றும் அளபெடுத்தது.

அரங்ங்கம், முரஞ்ஞ்சு, மருண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு முரன்ன்று, குரவ்வ்வை, அரைய்ய்யர், குரல்ல்கள், திரள்ள்கள், வரஃஃகு என இவை பதினோரொற்றும் குறிலிணைக் கீழ் அளபெடுத்தது.

"அறிஞர் உரைத்த அளபும்" என்று சிறப்பித்த வதனாற் குற்றெழுத்து ஒரு மாத்திரை, நெட்டெழுத்து இரண்டு மாத்திரை, உயிரளபெடை மூன்று மாத்திரை, ஆய்தமும் மெய்யும் குற்றிய லிகரமும் குற்றியலுகரமும்

ஒரோவொன்று அரைமாத்திரை, ஐகாரக் குறுக்கமும் ஔகாரக் குறுக்கமும் ஒரோவொன்று ஒன்றரை மாத்திரை, ஒற்றளபெடை ஒரு மாத்திரை, ஆய்தக் குறுக்கமும் மகரக் குறுக்கமும் ஒரோ வொன்று கான்மாத்திரை பெறும்.

குறிப்பு

## 11.2 அசை

ஓர் எழுத்து பிறிதோர் எழுத்துடன் சேர்ந்து அசைவைச் செய்யும் செயலைச் செய்வதால் அசை எனப்பட்டது. அது முறையே நேரசை, நிரையசை எனப்படும்

குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே
நெறியே வரினும் நிரைந்தொற்று எடுப்பினும் நேர்நிரையென்று
அறிவேய் புரையுமென் தோளி உதாரணம் ஆழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

நிரனிறைப் பொருள்கோள் வகையான் நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றுக்கு உதாரணம் ஆமாறும் உணர்த்திற்று.

குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும், நேரசையாம்.

நேரசைக்குச் சான்று: ஆ, ழி, வெள், வேல்

ஆ - தனிநெடில் நேரசை

ழி - தனிக்குறில் நேரசை

வெள் - குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை

வேல் - நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசை

குறில் இணைந்து வரினும், குறினெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறினெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம்

நிரையசைக்குச் சான்று: வெறி, சுறா, நிறம், விளாம்

வெறி - குறில் இணைந்து நிரையசை

சுறா - குறினெடில் இணைந்து நிரையசை

நிறம் - குறில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை,

விளாம் - குறினெடில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை

**சான்று:**

"போது சாந்தம் பொற்ப வேந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னு வாரே". இது நேரசை நான்கும் வந்த செய்யுள்.

"அணிநிழ லசோகமர்ந் தருணெறி நடாத்திய
மணிதிக ழவிரொளி வரதனைப்

பணிபவர் பவநனி பரிசறுப் பவரே.'' - இதுநிரையசை நான்கும் வந்த செய்யுள்.

குறிப்பு

## 11.3 சீர்

அசை தனித்தோ இணைந்தோ சீர்பெற நிற்பது சீர் எனப்படும்.அது ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் என நான்கு வகைப்படும்.அவ் நான்கு பிரிவில் சீர் முப்பது வகைப்படும்.

ஈரசை நாற்சீர் அகவற் குரியவெண் பாவினவாம்
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யானிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீர்
ஓரசை யேநின்றஞ் சீராம் பொதுவொரு நாலசையே.

இரண்டசையின் ஆகிய நான்கு சீரும் ஆசிரிய உரிச்சீர் எனப்படும். அகவல் எனினும் ஆசிரியம் எனினும் ஒன்றேயாம். நேரசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா வுரிச்சீர் எனப்படும். நிரையசை இறுதியாகிய மூவசைச்சீர் நான்கும் வெண்பா வஞ்சி உரிச்சீர் எனப்படும். ஓரசையே நின்றும் சீரா அமையும். நாலசையினாலாகிய சீர் பொதுச்சீர் எனப்படும். நிரையசை தானே நின்றும் சீராகும். அவை அசைச்சீர் எனப்படும்

"அசை மென்முலை மாதே'' - மகடூஉ முன்னிலை.

ஓரசைச்சீர்: ஓரசையே நின்று சீராவது.நேர், நிரை ஓரசைச்சீர் எனப்படும்.இதனை நாள், மலர் எனக் குறிப்பர்.

ஈரசைச்சீர் நான்காவன : நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்பன ஆகும்.

நேர் இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன : நேர்நேர்நேர், நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் என்பன ஆகும்.

நிரை இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன : நேர் நேர் நிரை, நிரைநேர்நிரை, நிரைநிரைநிரை, நேர்நிரை நிரை என்பன.

## 11.4 சீர்களின் வாய்பாடு.

தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்காம்
ஆமாங் கடைகாய் அடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலையல்குன் மாதே வருபவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த அசைச்சீர்க்கு உதாரண நாண்மலரே.

நேர்நேர்- தேமா

நிரைநேர் - புளிமா

நிரைநிரை - கருவிளம்

நேர்நிரை - கூவிளம்

என்னும் நான்கு சீரும் ஆசிரியவுரிச்சீ:ராம்.அவற்றின் கடைக்கண், காய் என்னும் சொற்பெற்றுத் தேமாங்காய், புளிமாங்காய், கருவிளங்காய், கூவிளங்காய் எனவரும் நான்கு சீரும் வெண்பாவுரிச்சீராம்.

ஈரசைச் சீரின் இறுதிக்கண், கனி என்னுஞ் சொற்பெற்றுத் தேமாங்கனி, புளிமாங்கனி, கருவிளங்கனி, கூவிளங்கனி என வரும் நான்கு சீரும் வஞ்சியுரிச்சீராம்.

ஓர் அசைச் சீர்க்கு சான்று நாள் மலராம். நாள் என்பது நேரசைச்சீர்க்கு சான்று மலர் என்பது நிரையசைச் சீர்க்குச் சான்றாம்.

"வாமாண் கலையல்குன் மாதே". மகடூஉ முன்னிலை.

குறிப்பு

## 11.5 நாலசைச்சீர்:

தண்ணிழல் தண்பூ நறுநிழல் நறும்பூ தந்துறந்தால்
எண்ணரு நாலசைசீர் வந்தணுகும் - இனியவற்றுள்
கண்ணிய பூவினம் காய்சீர் அனைய கனியொடொக்கும்
ஒண்நிழற்சீர் இயற்சீர் அசைச்சீர் ஒக்கும் ஒண்தளைக்கே

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்பனவற்றுடன் தண்ணிழல், தண்பூ, நறுநிழல்,நறும்பூ என்பன வந்து அமையுமானால் பதினாறு நாலசைச்சீர் வந்து அமையும். அவையாவன,

| | | | |
|---|---|---|---|
| 1. | தேமாந் தண்ணிழல் | 2. | புளிமாந் தண்ணிழல் |
| 3. | கருவிளந் தண்ணிழல் | 4. | கூவிளந் தண்ணிழல் |
| 5. | தேமாந் தண்பூ | 6. | புளிமாந் தண்பூ |
| 7. | கருவிளந் தண்பூ | 8. | கூவிளந் தண்பூ |
| 9. | தேமா நறும்பூ | 10. | கூவிள நறும்பூ |
| 11. | கருவிள நறும்பூ | 12. | கூவிள நறும்பூ |
| 13. | தேமா நறுநிழல் | 14. | புளிமா நறுநிழல் |
| 15. | கருவிள நறுநிழல் | 16. | கூவிள நறுநிழல் என்பதாம். |

அந் நாலசைச் சீர் பதினாறனுள் பூ என்னும் சொல்லை இறுதியாக உடைய நேரீற்றுப் பொதுச் சீரெட்டும் காய் என்னுஞ் சொல் இறுதியாகிய வெண்பாவுரிச்சீரே போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவும் கொண்டு வழங்கப்படும். நாள் மலர் என்னுஞ் ஓரசைச்சீர் ஆசிரியவுரிச்சீரே போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது ஆசிரியத் தளையாகவும்,ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும்.

இதனுள் நேரீற்றுப் பொதுச்சீர் எட்டும் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியது வெண்டளையாகவும் ஒன்றாதது கலித்தளையாகவுங் கொண்டு வழங்கப்படும். நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டும் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றியதும் ஒன்றாததும் வஞ்சித்தளை என்று வழங்கப்படும்.

கண்ணிய பூவினம் என்று சிறப்பித்த தனால், வெண்பாவினுள் நாலசைச்சீர்வாராது. ஆசிரியத் துள் குற்றுகரம் வந்தவழியன்றி வாராது. கலிப்பாவில் பெரும்பான்மையுங் குற்றுகரம் வந்தவழியன்றி வாராது.

குறிப்பு

வஞ்சியுட் குற்றுகரம் வாராதேயும் வரப்பெறும்; வஞ்சிப்பாவில் இரண்டு நாலசைச் சீர் ஓரடியுள் அருகி வரும். அல்லனவற்றுட் பெரும்பான்மையும் ஓரடியுள் ஒன்றன்றி வாராது. இரண்டு வரினும் நில்லாது. பாவின்றுணைப் பாவினத்துட் பயின்று வாராது என்பதும் வெளிப்பட்டு நிற்கும்.

‘‘குன்றக் குறவன் காதல் மடமகள்
ஐய எரும்பிய முலையள்
செய்ய வாயினண் மார்பினள் சுணங்கே.’’ (ஐங்-255.) நேரிசை யாசிரியப்பாவினுள் நான்கு ஆசிரியவுரிச்சீரும் வந்தது..

‘‘பொன்னார மார்பிற் புனைகழற்காற் கிள்ளிபோர்
உன்னேனென் றூழுலக்கை பற்றினேற் - கென்னோ
மனனோடு வாயெல்லா மல்குநீர்க் கோழிப்
புனனாடன் பேரே வரும’’ - இந்நேரிசை வெண்பாவினுள் வெண்பாவுரிச்சீர் நான்கும் வந்தது.

‘‘பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்றிரிதரும்
வளவயலிடைக் களவயின் மகிழ்
வினைக்கம்பலை மனைச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்
மகிழ மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.’’ இக்குறளடி வஞ்சிப்பாவினுள் நான்கு வஞ்சியுரிச்சீரும் வந்தது.

‘‘நன்றறி வாரிற் கயவர் திருவுடையார்
நெஞ்சத் தவல மிலர்.’’ - இக்குறள் வெண்பாவினுள் இலர் என நிரையசை சீராயினவாறு கண்டு கொள்க.

“பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்’’ இக்குறள் வெண்பாவினுள் நீர் என நேரசை சீராயினவாறு கண்டுகொள்க.

அள்ளற்பள்ளத் தகன்சோணாட்டு
வேங்கைவாயில் வியன்குன்றூரன்“ என்னும் பழம் பாட்டினுள் நாலசைப் பொதுச்சீர் வந்தவாறு கண்டு கொள்க.

‘‘அங்கண்வானத் தமரரரசரும் ------
நலங்கிளர்பூமழை நனிசொரிதரஇனிதிருந்
தருணெறி நடாத்திய வாதிதன்

றிருவடி பரவுதுஞ் சித்திபெறற் பொருட்டே.'' இக்குறளடி வஞ்சிப்பாவினுட் பொதுச்சீர் பதினாறும் அடிதோறும் முதற்கண்ணே வந்தது.

## 11.6 தளை

குறிப்பு

தளைக்கப்படுவது தளை; தளை - கட்டு. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாதும் வரும் தளை எனப்படும். அது ஏழு வகைப்படும். அவை முறையே நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை,இயற்சீர் வெண்டளை என்பதாகும்.

தண்சீர் தனதொன்றில் தன்றளை யாம்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவல் உரிச்சீர் விகற்பமும் ஒண்ணுதலே

தன்சீர் நின்று தனது வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது தன்றளையாம் எனவே, ஆசிரியவுரிச்சீர் நிற்ப ஆசிரியவுரிச்சீர் வந்து நேரா யொன்றுவது நேரொன்றாசிரியத்தளைநிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாம்.. வெண்பாவுரிச்சீர் நிற்கத் தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்.

வஞ்சியுரிச்சீர் நிற்கத் தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம். வஞ்சியுரிச்சீர் நிற்பத் தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையாம். 'வண்சீர்' என்று சிறப்பித்த ததனால் வஞ்சியுரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளை. வெண்பாவுரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததும் கலித்தளையாம். 'ஒண்சீர்' என்று சிறப்பித்த வதனால் ஆசிரிய உரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளையே ஆகும். இதனைக் கீழ்கண்டவாறு குறிக்கலாம்.

மா முன் நேர் - நேரொன்றாசிரியத்தளை;
விள முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை
மா முன் நிரை விள முன் நேர் - இயற்சீர் வெண்டளை
காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
காய் முன் நிரை – கலித்தளை
கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை.
கனி முன் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை.
ஒண்ணுதலே - மகடூஉ முன்னிலை

இத்தளைகளான் வந்த இலக்கியங்களுக்கு முதல் நினைப்பு காரிகை

''திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை

குறிப்பு

மருளறு வஞ்சிமந் தாநில மென்பமை தீர்கலியின்
தெரிவுறு பந்தநல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரிமையின் கண்ணின்மை யோரசைச் சீருக் குதாரணமே.''

''திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப்
பண்ணமைத் தவர்தேர் சென்ற வாறே''. - இது நிரையொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

''உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குகுலை யீந்தின் சிலம்பிபொதி செங்காய
துகில்பொதி பவள மேய்க்கும்
அகில்படு கள்ளியங் காடிறந் தோரே.'' இது நேரொன்றாசிரியத் தளையான் வந்த செய்யுள்.

''சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
முலைவிலங்கிற் றென்று முனிவாள் - மலைவிலங்கு
தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது.'' இது வெண்சீர் வெண்டளையானும் இயற்சீர் வெண்டளை யானும் வந்த செய்யுள்.

''மந்தாநில மருங்கசைப்ப
வெண்சாமரை புடைபெயர்தரச்
செந்தாமரை நாண்மலர்மிசையெனவாங்
கினிதி னொதுங்கிய விறைவனை
மனமொழி மெய்களின் வணங்குது மகிழ்ந்தே.'' மயக்கமற வகுத்த வஞ்சித்தளையுள் ஒன்றியதூஉம் ஒன்றாததூஉம் வந்த செய்யுள்.

''செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர் முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ விடைநுழையு மதியம்போல்
மல்லல்ஓங் கெழில்யானை மருமம் பாய்ந்தொளித்ததே''
-- கலித்தளையான் வந்த செய்யுள்

## 11.7 அடி

சீர்களால் இயைந்த தளைகளால் முடிவது அடி. இது குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை அளவொடு நேரடி ஐயொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

இருசீரால் வந்த அடி - குறளடி

முச்சீரால் வந்த அடி - சிந்தடி

நாற்சீரால் வந்தஅடி – அளவடி, நேரடி

ஐஞ்சீரால் வந்த அடி – நெடிலடி.

ஐஞ்சீரின் மிக்க சீரான் வந்த அடி - கழி நெடிலடி

“வேல்நெடுங் கண்ணி -. மகடூஉ முன்னிலை.

குறிப்பு

**அடிகளுக்கு உதாரண முதனினைப்பு**

திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றான்வினையின்
இரைக்குங் கணிகொண்டமூவடி வோடிடங் கொங்குமற்றுங்
கரிக்கைக் கவான்மருப் பேர்முலை மாதர் கழிநெடிலே.

**வஞ்சித்துறை:**

“திரைத்த சாலிகை
நிரைத்த போனிரைந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்” - இது குறளடியான் வந்த செய்யுள்.

வஞ்சிவிருத்தம்

“இருது வேற்றுமை யின்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்” இது சிந்தடியான் வந்த செய்யுள்.

**கலிவிருத்தம்**

“தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியும்
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே.” இது அளவடியான் வந்த செய்யுள்.

**விருத்தக் கலித்துறை:**

“வென்றான் வினையின் றொகையாய விரிந்துதன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூழொளி மூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.” இது நெடிலடியான் வந்த செய்யுள்.

ஆசிரியவிருத்தம்

“இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெய ரினவண்டு புடைசூழ
நுரைக்க ளென்னுமக் குழம்புக டிகழ்ந்தெழ நுடங்கிய விலயத்தால
திரைக்க ரங்களிற் செழுமலைச் சந்தனத் திரள்களைக கரைமேல்வைத்

தரைக்கு மற்றிது குணகடற் றிரையொடு பொருதல தவியாதே'' -அறுசீர்க் கழிநெடிலடியான் வந்த செய்யுள்.

## 11.8 பாக்களுக்கான அடிவரையறை:

குறிப்பு

வெள்ளைக்கு இரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்கு
எள்ளப் படாக்கலிக்கு ஈரிரண் டாகும் இழிபு உரைப்போர்
உள்ளக் கருத்தின் அளவே பெருமைஒண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

வெண்பாவிற்கு இரண்டடி சிறுமை
வஞ்சிப்பாவிற்கு மூன்றடி சிறுமை
ஆசிரியப்பாவிற்கு மூன்றடி சிறுமை
கலிப்பாவிற்கு நான்கடியே சிறுமை

பெருமை நான்கு பாவிற்கும் பெருமைக்கு எல்லை பாடுவோரது பொருண் முடிவு குறிப்பே, வரையறையில்லை

ஒண் போது அலைத்த கள்ளக் கருநெடுங்கண் சுரிமென் குழல் காரிகையே - மகடூஉ முன்னிலை.

எள்ளப்படாக் கலிக்கு என்று சிறப்பித்தவதனால், துள் ளலோசையிற் சிறிதும் வழுவாது நாற்சீர் நாலடியால் வருவது தரவு கொச்சகக் கலிப்பா என்றும், துள்ளலோசையிற் சிறிது வழுவி நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்றும் தெரிந்து உணரப்படும்.

''பூந்தண்சினை மலர்மல்கிய பொழிற்பிண்டி
வேந்தன் கழல் பரவாதவர் வினைவெல்லார்
அதனால் அறிவன தடியிணை பரவப்
பெறுகுவர் யாவரும் பிறவியி னெறியே.'' இதனை முச்சீர் வஞ்சியாக அலகிட்டு வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தான் இற்று இரண்டடியான் வந்தது

''செல்வப்போர்க் கதக்கண்ணன்....பாய்ந்தொளித்ததே.'' இது நான்கடியானே கலிப்பாவிற்குச் சிறுமை

''செங்கண்மேதி கரும்புழக்கி
அங்கணீலத் தலரருந்திப்
பொழிற்காஞ்சி நிழற்றுயிலுஞ்
செழுநீர் நல்வயற் கழனி யூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.'' இது தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தான் இற்று மூன்றடியான் வஞ்சிப்பாவிற்குச் சிறுமை

## 11.9 தொடை:

பாடலில் உள்ள ஓரடியின் சீர்களில் அமைந்த அழகம் அடிதோறும் அமைந்த அழகும் மிளிரத் தொடுப்பது தொடை எனப்படும்.

எழுவாய் எழுத்தோன்றின் மோனை இறுதி யியைபிரண்டாம்

வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு மொழிமுதற்கண்
அழியா தளபெடுத்து ஒன்றுவ தாகும் அளபெடையே.

அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத் தொடை எனப்படும்.

அடிதோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.

அடிதோறும் மொழிமுதற்கட் சொல்லானும் பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

அடிதோறும் மொழிமுதற்கட் கண் உயிரானும் ஒற்றானும் அளபெடுத்துத் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத் தொடை எனப்படும்.

குறிப்பு

அடிமோனை என்பது இணைமோனை பொழிப்புமோனை ஒரூஉமோனை கூழைமோனை மேற்கதுவாய்மோனை கீழக்கதுவாய்மோனை முற்று மோனை எனப்படும்.

அடியியைபு என்பது இணையியைபு பொழிப்பியைபு ஒரூஉவியைபு கூழையியைபு மேற்கதுவாயியைபு கீழ்க்கதுவாயியைபு முற்றியைபு எனப்படும்.

அடியெதுகை என்பத இணையெதுகை பொழிப்பெதுகை ஒரூஉ வெதுகை கூழையெதுகை மேற்கதுவா யெதுகை கீழ்க்கதுவா யெதுகை முற்றெதுகை எனப்படும்.

அடிமுரண் என்பது இணைமுரண் பொழிப்புமுரண் ஒரூஉமுரண் கூழைமுரண் மேற்கதுவாய் முரண் கீழ்க்கதுவாய்முரண் முற்று முரண் எனப்படும்.

அடியளபெடை என்பது இணையளபெடை பொழிப்பளபெடை ஒரூஉ வளபெடை கூழையளபெடை மேற்கதுலாயளபெடை கீழ்க்கதுவா யளபெடை முற்றளபெடை எனப்படும்.

## 11.10 ஏனைய தொடையும் தொடை விகற்பமும்:

அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி அடிமுழுதும்
வந்த மொழியே வருவது இரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால்
செந்தொடை நாமம் நறுமென்குழல் தேமொழியே

சீரானும், அடியானும் மற்றையடிக்கு ஆதியாகத் தொடுப்பது அந்தாதித்தொடை எனப்படும்.

ஓரடி முழுவதும் ஒரு சொல்லே வரத் தொடுப்பது இரட்டைத்தொடை எனப்படும்.

குறிப்பு

மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுப்பது செந்தொடை எனப்படும்

"நறுமென்குழல் தேமொழியே - மகடூஉ முன்னிலை

இறுதியடியின் இறுதியும் முதலடியின் முதலும் ஒன்றாய் வருவது மண்டல அந்தாதி. அங்ஙனம் வாராதன செந்நடை யந்தாதி ஒரு நூலுள் நின்ற கவியின் ஈறும் வருங்கவியின் முதலும் ஒன்றிவருவதும் அந்தாதியே. அங்ஙனம் ஒருநூலுள் இறுதிச் செய்யுளின் இறுதியும் முதற்செய்யுளின் முதலும் ஒன்றி வருவது மண்டலித்து வந்ததாகும், இவ்வித முறையை நான்மணிமாலை, மும்மணிக்கோவை, அந்தாதி நூல்கள் முதலியவற்றிற் காண்க. காராட்டை வெள்ளாடு என்றல்போல் செம்மைப்படாத தொடையினைச் செந்தொடை என்றார். செயற்கைத்தொடை விகற்பங்களை வேண்டாது சீர், அசை முதலியவற்றால் இணங்கி வருவதால் செந்தொடையாயிற்று என்பாரும் உளர்.

## 11.11 தொடை விகற்பங்களுக்கு முதனினைப்பக் காரிகை:

மாவும்புண் மோனை யியைபின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாஅவளிய
ஓவிலந் தாதி யுலகுட னாமொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.

"மாவும் புள்ளும் வதிவயிற் படர
மாநீர் விரிந்த பூவுங் கூம்ப
மாலை தொடுத்த கோதையுங் கமழ
மாலை வந்த வாடை
மாயோ ளின்னுயிர்ப் புறத்திறுத் தற்றே." இஃது அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் அடிமோனைத் தொடை.

"இன்னகைத் துவர்வாய்க் கிளவியு மணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி யூடலு மணங்கே
அரிமதர் மழைக்கணு மணங்கே
திருநுதற் பொறித்த திலதமு மணங்கே." இஃது அடிதோறும் இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியியைபுத் தொடை.

"வடியேர்க ணீர்மல்க வான்பொருட்குச் சென்றார்
கடியார் கனங்குழாய் காணார்கொல் காட்டுள்
இடியின் முழக்கஞ்சி யீர்க்கவுள் வேழம்
பிடியின் புறத்தசைத்த கை." இஃது அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றிவரத் தொடுத்தமையான் அடியெதுகைத் தொடை.

"இருள்பரந் தன்ன மாநீர் மருங்கின்

குறிப்பு

நிலவுகுவித் தன்ன வெண்மண லொருசிறை
இரும்பி னன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னி னன்ன நுண்டா திறைக்குஞ்
சிறுகுடிப் பரதவர் மடமகள்
பெருமதர் மழைக்கணு முடையவா லணங்கே.'' இ.்.து அடிதோறும் முதற்கண்ணே மறுதலைப்படத் தொடுத்தமையான் அடிமுரண்டொடை.

''ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோ
ஈஇரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்
ஊஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோள்
மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதால்
ஓஒ வுழக்குந் துயர்.'' இ.்.து அடிதோறும் முதற்கண் அளபெடை ஒன்றிவரத் தொடுத் தமையான் அடியளபெடைத் தொடை.

''உலகுடன் விளக்கு மொளிதிக ழவிர்மதி
மதிநல னழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழற் பொற்புடை யாசனம்
ஆசனத் திருத்த திருந்தொளி யறிவனவ்
வாசனத் திருந்த திருந்தொளி யறிவனை
யறிவுசே ருள்ளமோ டருந்தவம் புரிந்து
துன்னிய மாந்தர தென்ப
பன்னருஞ் சிறப்பின் விண்மிசை யுலகே.''- அந்தாதித் தொடையும் வந்த செய்யுள்.

''ஒக்குமே யொக்குமே யொக்குமே யொக்கும்
விளக்கினுட் சீற்றெரி யொக்குமே யொக்கும்
குளக்கொட்டிப் பூவி னிறம்.'' இ.்.து ஓரடி முழுதும் ஒருசொல்லே வரத் தொடுத்தமையான் இரட்டைத் தொடை.

''பூத்த வேங்கை வியன்சினை யேறி
மயிலின மகவு நாடன்
நன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே.'' இது மோனை முதலாகிய தொடையுந் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையாற் செந்தொடை.

## 11.12 தொடை விகற்பம்:

இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டொரூஉவாம்
இருசீ ரிடையிட்டது ஈறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றாமென்ப மற்றவையே.

குறிப்பு

முதல் இரு சீர்க்கண் : மோனை, இயைபு, எதுகை, முரண், அளபெடை என்னும் ஐந்தும் வரத்தொடுப்பது இணைத்தொடை எனப்படும்.

முதற்சீர்க்கண்ணும் மூன்றாஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது பொழிப்புத் தொடை எனப்படும்.

நடுவிருசீர்களில் இன்றி முதற்சீர்க்கண்ணும் நான்காஞ் சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது ஒரூஉத்தொடை எனப்படும்.

இறுதிச்சீர்க்கண் இன்றி, ஏனைய மூன்றுசீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது கூழைத்தொடை எனப்படும்.

முதலயற் சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத்தொடுப்பது மேற்கதுவாய் எனப்படும்.

ஈயற்றற்சீர்க்கண் இன்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத்தொடுப்பது கீழ்க்கதுவாய் என்றும் வழங்கப்படும்.

நான்கு சீர்க்கண்ணும் மோனை முதலாயின ஐந்தும் வரத் தொடுப்பது முற்றுத் தொடை எனப்படும்.

## 11.13 தொடை விகற்பங்கட்கு உதாரண முதனினைப்புக் காரிகை:

மோனை விகற்ப மணிமலர் மொய்த்துட னாமியைபிற்
கேனை யெதுகைக் கினம்பொன்னி னன்ன வினிமுரணிற்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
றாள விகற்பமுந் தாஅட்டாஅ மரைபென்ப தாழ்குழலே.

அணிமல ரசோகின் றளிர்நலங் கவற்றி - (இணைமோனை)
அரிக்குரற் கிண்கிணியரற்றுஞ் சீறடி - (பொழிப்பு)
அம்பொற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி - (ஒரூஉ)
அகன்ற வல்கு லந்நுண் மருங்குல் - (கூழை)
அரும்பிய கொங்கை யவ்வளை யமைத்தோள் - (மேற்கது)
அவிர்மதி யனைய திருநுத லரிவை - (கீழ்க்கது)
அயில்வே லனுக்கி யம்பலைத் தமர்ந்த - (முற்று)
“கருங்கய னெடுங்க ணோக்கமென்
றிருந்திய சிந்தையைத் திறைகொண் டனவே” இதனுள் இணைமோனை முதலாகிய ஏழு விகற்பமும் முறை யானை வந்தன.

மொய்த்துடன்றவழு முகிலேபொழிலே - (இணையியைபு)
மற்றத னயலே முத்துறழ் மணலே - (பொழிப்பு)
நிழலே யினியத னயலது கடலே - (ஒரூஉ)
மாதர் நகிலே வல்லே யியலே - (கூழை)
வில்லே நுதலே வேற்கண் கயலே - (மேற்கது)
பல்லே தளவம் பாலே சொல்லே - (கீழ்க்கது)
புயலே குழலே மயிலே யியலே - (முற்று) அதனால்

குறிப்பு

இவ்வயி னிவ்வுரு வியங்கலின்
எவ்வயி னோரு மிழப்பர்தந்நிறையே. இதனுள் இணையியைபு முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தன
பொன்னி னன்ன பொறிசுணங் கேந்திப் - (இணையெதுகை)
பன்னருங் கோங்கி னன்னலங் கவற்றி - (பொழிப்பு)
மின்னிவ ரொளிவடந் தாங்கி மன்னிய - (ஒரூஉ)
நன்னிற மென்முலை மின்னிடை வருத்தி - (கூழை)
என்னையு மிடுக்கண் டுன்னுவித் தின்னடை - (மேற்கது)
அன்ன மென்பெடை போலப் பன்மலர்க் - (கீழ்க்கது)
கன்னியம் புன்னை யின்னிழற் றுன்னிய - (முற்று)
மயிலோர் சாயல் வாணுதல்
அயில்வே லுண்கணெம் மறிவுதொலைத் தனவே -இதனுள் இணையெதுகை முதலாகிய ஏழு விகற்பமும் முறை யானே வந்தன
சீறடிப் பேரக லல்கு லொல்குபு - (இணைமுரண்)
சுருங்கிய நுசுப்பிற் பெருகுவடந் தாங்கிக் - (பொழிப்பு)
குவிந்துசுணங் கரும்பிய கொங்கை விரிந்து - (ஒரூஉ)
சிறிய பெரிய நிகர்மலர்க் கோதைதன் - (கூழை).
வெள்வளைத் தோளுஞ் சேயரிக் கருங்கணும் - (மேற்கது)
இருக்கையு நிலையு மேந்தெழி லியக்கமுந் - (கீழ்க்கது)
துவர்வாய்த் தீஞ்சொலு முவந்தெனை முனியாது - (முற்று)
“என்று மின்னண மாகுமதி
பொன்றிகழ் நெடுவேற் போர்வல் லோயே.” இதனுள் இணைமுரண் முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தன.
“தாஅட் டாஅ மரைமல ருழக்கிப் - (இணையளபெடை)
பூஉக் குவளைப் போஒ தருந்திக் - (பொழிப்பு)
காஅய்ச் செந்நெற் கறித்துப் போஒய் - (ஒரூஉ)
மாஅத் தாஅண் மோஒட் டெருமை - (கூழை)
தேஎம் புனலிடைச் சோஒர் பாஅன் - (மேற்கது)
மீஇ னாஅர்ந் துகளுஞ் சீஇர் - (கீழ்க்கது)
என ராஅர் நீஇ ணீஇர் - (முற்று)
“ஊரன் செய்த கேண்மை
ஆய்வளைத் தோளிக் கலரா னாதே.” இதனுள் இணையளபெடை முதலாகிய ஏழு விகற்பமும் முறையானே வந்தன.

## 11.14 உறுப்பியல் முதனினைப்புக் காரிகை:

கந்தமுந் தேனார் சுருக்கமுங் காதற் குறில் குறிலே
தந்தன வீரசை தேமாவுந் தண்குன்றத் தன்றிருவுங்

குறிப்பு

கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளை யறவெழுவாய்
அந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

**பயிற்சி வினாக்கள்:**

**1.** அசை என்பது குறித்து விளக்கி வரைக.

ஓர் எழுத்து பிறிதோர் எழுத்துடன் சேர்ந்து அசைவைச் செய்யும் செயலைச் செய்வதால் அசை எனப்பட்டது. அது முறையே நேரசை, நிரையசை எனப்படும்

குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

நிரனிறைப் பொருள்கோள் வகையான் நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றுக்கு உதாரணம் ஆமாறும் உணர்த்திற்று.

குற்றெழுத்துத் தனியே வரினும், நெட்டெழுத்துத் தனியே வரினும், குற்றெழுத்து ஒற்றடுத்து வரினும், நெட்டெழுத்து ஒற்றடுத்து வரினும், நேரசையாம்.

நேரசைக்குச் சான்று: ஆ, ழி, வெள், வேல்

ஆ - தனிநெடில் நேரசை

ழி - தனிக்குறில் நேரசை

வெள் - குற்றெழுத்து ஒற்றடுத்து நேரசை

வேல் - நெட்டெழுத்து ஒற்றடுத்து நேரசை

குறில் இணைந்து வரினும், குறினெடில் இணைந்து வரினும், குறில் இணைந்து ஒற்றடுத்து வரினும், குறினெடில் இணைந்து ஒற்றடுத்து வரினும் நிரையசையாம்

நிரையசைக்குச் சான்று: வெறி, சுறா, நிறம், விளாம்

வெறி - குறில் இணைந்து நிரையசை

சுறா - குறினெடில் இணைந்து நிரையசை

நிறம் - குறில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை,

விளாம் - குறினெடில் இணைந்து ஒற்றடுத்து நிரையசை

2. சீரின் வகைகளை விளக்கி எழுதுக.

ஓரசைச்சீர்: ஓரசையே நின்று சீராவது.நேர், நிரை ஓரசைச்சீர் எனப்படும்.இதனை நாள், மலர் எனக் குறிப்பர்.

ஈரசைச்சீர் நான்காவன : நேர்நேர், நிரைநேர், நிரைநிரை, நேர்நிரை என்பன ஆகும்.

நேர் இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன : நேர்நேர்நேர், நிரை நேர் நேர், நிரை நிரை நேர், நேர் நிரை நேர் என்பன ஆகும்.

குறிப்பு

நிரை இறுதியாகிய மூவசைச்சீர் நான்காவன : நேர் நேர் நிரை, நிரைநேர்நிரை, நிரைநிரைநிரை, நேர்நிரை நிரை என்பன.

3.தளை என்பதனை விவரி.

தளைக்கப்படுவது தளை; தளை - கட்டு. நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியும் ஒன்றாதும் வரும் தளை எனப்படும். அது ஏழு வகைப்படும். அவை முறையே நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை,இயற்சீர் வெண்டளை என்பதாகும்.

தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையாம்
ஒண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே

தன்சீர் நின்று தனது வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது தன்றளையாம் எனவே, ஆசிரியவுரிச்சீர் நிற்ப ஆசிரியவுரிச்சீர் வந்து நேரா யொன்றுவது நேரொன்றாசிரியத்தளை; நிரையாயொன்றுவது நிரையொன்றாசிரியத்தளையாம்..

வெண்பாவுரிச்சீர் நிற்கத் தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளையாம்.

வஞ்சியுரிச்சீர் நிற்கத் தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாம். வஞ்சியுரிச்சீர் நிற்பத் தன்வருஞ்சீர் முதலசையோ டொன்றாதது ஒன்றாத வஞ்சித்தளையாம். “வண்சீர்“ என்று சிறப்பித்த வதனால் வஞ்சியுரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளை. வெண்பாவுரிச்சீர் நின்று தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாததும் கலித்தளையாம். ஒண்சீர்“ என்று சிறப்பித்த வதனால் ஆசிரிய வுரிச்சீர் நின்று பிறிதாகி வருஞ்சீர் முதலசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளையே ஆகும். இதனைக் கீழ்கண்டவாறு குறிக்கலாம்.

மா முன் நேர் - நேரொன்றாசிரியத்தளை;
விள முன் நிரை - நிரையொன்றாசிரியத்தளை
மா முன் நிரை விள முன் நேர் - இயற்சீர் வெண்டளை
காய் முன் நேர் - வெண்சீர் வெண்டளை
காய் முன் நிரை – கலித்தளை
கனி முன் நிரை - ஒன்றிய வஞ்சித்தளை.
கனி முன் நேர் - ஒன்றாத வஞ்சித்தளை.

4. அடி என்பதனை விளக்கி வரைக.

சீர்களால் இயைந்த தளைகளால் முடிவது அடி. இது குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

குறிப்பு

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

இருசீரால் வந்த அடி - குறளடி

முச்சீரால் வந்த அடி - சிந்தடி

நாற்சீரால் வந்தஅடி – அளவடி, நேரடி

ஐஞ்சீரால் வந்த அடி – நெடிலடி.

ஐஞ்சீரின் மிக்க சீரான் வந்த அடி - கழி நெடிலடி

5. தொடை என்பதன் இலக்கணம் கூறி விளக்குக.

பாடலில் உள்ள ஓரடியின் சீர்களில் அமைந்த அழகம் அடிதோறும் அமைந்த அழகும் மிளிரத் தொடுப்பது தொடை எனப்படும்.

எழுவா யெழுத்தோன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு மொழிமுதற்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

அடிதோறும் இறுதிக்கண் நின்ற எழுத்தானும் சொல்லானும் ஒன்றிவரத் தொடுப்பது அடியியைபுத் தொடை எனப்படும்.

அடிதோறும் முதற்கண் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.

அடிதோறும் மொழிமுதற்கட் சொல்லானும் பொருளானும் மறுதலைப்படத் தொடுப்பது அடிமுரண்தொடை எனப்படும்.

அடிதோறும் மொழிமுதற்கட் கண் உயிரானும் ஒற்றானும் அளபெடுத்துத் தம்முள் ஒன்றிவரத் தொடுப்பது அளபெடைத் தொடை எனப்படும்.

அடிமோனை என்பது இணைமோனை பொழிப்புமோனை ஒரூஉமோனை கூழைமோனை மேற்கதுவாய்மோனை கீழக்கதுவாய்மோனை முற்று மோனை எனப்படும்.

அடியியைபு என்பது இணையியைபு பொழிப்பியைபு ஒரூஉவியைபு கூழையியைபு மேற்கதுவாயியைபு கீழ்க்கதுவாயியைபு முற்றியைபு எனப்படும்.

அடியெதுகை என்பத இணையெதுகை பொழிப்பெதுகை ஒரூஉ வெதுகை கூழையெதுகை மேற்கதுவா யெதுகை கீழ்க்கதுவா யெதுகை முற்றெதுகை எனப்படும்.

அடிமுரண் என்பது இணைமுரண் பொழிப்புமுரண் ஒரூஉமுரண் கூழைமுரண் மேற்கதுவாய் முரண் கீழ்க்கதுவாய்முரண் முற்று முரண் எனப்படும்.

அடியளபெடை என்பது இணையளபெடை பொழிப்பளபெடை ஒரூஉ வளபெடை கூழையளபெடை மேற்கதுலாயளபெடை கீழ்க்கதுவா யளபெடை முற்றளபெடை எனப்படும்.

குறிப்பு

.

குறிப்பு

# கூறு: 12 யாப்பருங்கலக்காரிகை – செய்யுளியல் - பாக்கள் - வகைகள்

**நோக்கம்: பாக்களின் அடி – ஓசை – வெண்பா – ஆசிரியப்பா - இனம் - துறை – தாழிசை – விருத்தம் போன்றவற்றைப் பற்றி அறிதல்**

## பிரிவு: IV - செய்யுளியல் - ஒழிபியல்

செய்யுள் இயற்றுவதற்கான அடிப்படைகளை உறுப்பியலில் உணர்த்திய பின் செய்யுள் வகை பற்றிய செய்திகளை இவ் இயலில் உணர்த்துகிறார் ஆசிரியர்.செய்யுள் என்பதும் பா என்பதும் ஒரு பொருள் குறித்த இருவேறு சொற்கள் ஆகும். செய்யப்படுவது செய்யுள் என்றாற் போன்று பரந்து பட்ட ஓசை நயத்துடன் பாடப்படுவது பா என்று அழைக்கப்பெறும். இத்தகைய சொல் வழக்கே இச் செய்யுளியலுள் பின்பற்றப்படுகிறது. செய்யளியல் என்னும் இப்பகுதி வெண்பா, வெள்ளொத்தாழிசை,வெண்டுறை, வெளிவிருத்தம்; ஆசிரியப்பா, ஆசிரியத்தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் ; கலிப்பா, கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம்; வஞ்சிப்பா, வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சிவிருத்தம்; மருட்பா எனக் கிடந்த செய்யுட்களாமாறு உணர்த்துதலாற் செய்யுளியல் என்னும் பெயர் பெற்றது என்பது உரையாசிரியர் தரும் உரைக்குறிப்பாம்.

## 12.1 பாக்களின் அடியும் ஓசையும்:

வெண்பா அகவல் கலிப்பா அளவடி வஞ்சியென்னும்
ஒண்பா அடிகுறள் சிந்தென்று உரைப்ப ஒலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்சால் அகவல்சென் றோங்குதுள்ளல்
நண்பா அமைந்த நலமிக தூங்கல் நறுநுதலே.

செய்யுளியலின் இம் முதற்காரிகை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கு பாவிற்கும் உரிய அடியும் ஓசையும் உணர்த்திற்று.

**அடி:**

வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் நாற்சீரடியான் வரும்.

வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரும்.

வஞ்சி என்னும் ஒண்பா“ என்று சிறப்பித்தவதனால் வெண்பாவின் ஈற்றடியும் நேரசை யாசிரிய்பாவின் ஈற்றயலடியும், கலி வெண்பாவின் ஈற்றடியும் முச்சீரடியான் வரும்;

இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையடி இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரும்; கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்க உறுப்பும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும்; அராகவுறுப்பு நாற்சீரின் மிக்கு வருவனவும் உள.

*Self -Instructional -Material*

**ஓசை**:

வெண்பா செப்பலோசையால் வரும். ஆசிரியப்பா அகவல் ஓசையால் வரும்.கலிப்பா துள்ளலோசையான் வரும். வஞ்சிப்பா தூங்கலோசையான் வரும்.

**செப்பலோசையின் வகை:**

குறிப்பு

திண்பாமலி செப்பல்" என்று சிறப்பித்தவதனாற் செப்பலோசை மூன்று வகைப்படும். ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் என்பதாம்.வெண்சீர் வெண்டளையான் வருவது ஏந்திசைச் செப்பல்.இயற்சீர் வெண்டளையான் வருவது தூங்கிசைச் செப்பல். வெண்சீர் ஒன்றலும் இயற்சீர் விகற்பமும் ஒன்றி வருவது ஒழுகிசைச் செப்பல்.

''யாநானு நாடாமா லூராமா லென்னொருவன்

சாந்துணையுங் கல்லாத வாறு.'' இது வெண்சீர் வெண்டளையான் வந்தமையால் ஏந்திசைச் செப்பலோசை.

"பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி

வாலெயி றூறிய நீர்'' - இ∴து இயற்சீர் வெண்டளையான் வந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை.

''கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி

எல்லா வுயிருந் தொழும்.'' இ∴து இரண்டு தளையும் விரவி வந்தமையால் ஒழுகிசைச் செப்பலோசை.

**அகவலோசையின் வகை:**

''சீர்சா லகவல்'' என்று சிறப்பித்தவதனால் அகவலோசை மூன்று வகைப்படும். அவை ஏந்திசை யகவலும் தூங்கிசை யகவலும் ஒழுகிசை யகவலுமாம். நேரொன்றாசிரியத் தளையான் வருவது ஏந்திசை யகவல். நிரையொன் றாசிரியத் தளையான் வருவது தூங்கிசை யகவல். இரண்டு தளையும் விரவி வருவது ஒழுகிசை யகவல்

''போது சாந்தம்....................துன்னுவாரே'' - இது நேரொன்றாசிரியத் தளையான் வந்தமையால் ஏந்திசை யகவலோசை.

''அணிநிழ...................பரிசறுப்பவரே''- இது நிரையொன் றாசிரியத் தளையான் வந்தமையால் தூங்கிசை யகவலோசை.

''குன்றக் குறவன்...........சுணங்கே.'' - இ∴து இரண்டு தளையும் விரவி வந்தமையால் ஒழுகிசை யகவலோசை

**துள்ளல் ஓசையின் வகை:**

''சென்றோங்கு துள்ளல்'' என்று சிறப்பித்த வதனாற் றுள்ள லோசை மூன்று வகைப்படும்.அவை ஏந்திசைத் துள்ளல், அகவற் றுள்ளல், பிரிந்திசைத் துள்ளல் என்பதாம்..

''முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே

குறிப்பு

வருசினனார் தருமறைநூல் வழிபிழையா மன முடையார்
இருவினைபோய் விழமுனியா வெதிரியகா தியையரியா
நிருமலரா யறிவினராய் நிலவுவர்சோ தியினிடையே.'' இது கலித் தளையான் வந்தமையால் ஏந்திசைத்துள்ள லோசை

''செல்வப்போர்க்...........தொளித்ததே''-இது வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வந்தமையால் அகவற்றுள்ளலோசை.

''குடநிலைத் தண்புறவிற் கோவல ரெடுத்தார்ப்பத்
தடநிலைய பெருந்தொழுவிற் றகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத் தாங்குவனத் 10தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக் கடிமுல்லை முறுவலிப்ப,
எனவாங்கு, ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையுங்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.'' இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் துள்ள லோசை

**தூங்கலோசையின் வகை:**

''நண்பா வமைந்த நலமிகு தூங்கல்'' என்று சிறப்பித்த வதனாற் தூங்கலோசை மூன்று வகைப்படும்.அவை அவை ஏந்திசைத் தூங்கல், அகவற்தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் என்பதாம். ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமைந்தால் ஏந்திசைத் தூங்கலோசை. ஒன்றாத வஞ்சித் தளையான் வந்தமைந்தால் அகவற்தூங்கலோசை, பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் தூங்க லோசை.

''வினைத்திண்பகை விழச்செற்றவன்
வனப்பங்கய மலர்த்தாளிணை
நினைத்தன்பொடு தொழுதேத்துநர் நாளும்
மயலார் நாற்கதி மருவார்
பெயரா மேற்கதி பெறுகுவர் விரைந்தே'' - இ·து ஒன்றிய வஞ்சித்தளையான் வந்தமையால் ஏந்திசைத் தூங்கலோசை.

''வானோர்தொழ வண்டாமரைத்
தேனார்மலர் மேல்வந்தருள்
ஆனாவருள் கூரறிவனைக் கானார்
மலர்கொண் டேத்தி வணங்குநர்
பலர்புகழ் முத்தி பெறுகுவர் விரைந்தே.'' இ·து ஒன்றாத வஞ்சித் தளையான் வந்தமையால் அகவற் தூங்க லோசை.

''மந்தாநிலம்..........மகிழ்ந்தே.'' இது பலதளையும் விரவி வந்தமையால் பிரிந்திசைத் தூங்க லோசை.

## 12.2 உதாரண முதனினைப்பு

வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குகாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணார்கொடிபோற்
றுளங்கிடை மாதே சுறமறி தொன்னலத் தின்புலபன்
றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

குறிப்பு

வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை
அளந்தன போக மவரவ ராற்றான்
விளங்காய் திரட்டினா ரில்லைக் - களங்கனியைக்
காரெனச் செய்தாரு மில் - இஃது அளவடியானும் செப்பலோசையானும் வந்தமையான் வெண்பா.

"செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
செங்கோ லம்பிற் செங்கோட் டியானைக்
கழறொடிச் சேஎய் குன்றங்
குருதிப் பூவின் குலைக்காந் தட்டே." - இஃது அளவடியானும் அகவலோசையானும் வந்தமையான் ஆசிரியப்பா.

"அரிதாய வறனெய்தி யருளியோர்க் களித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும் ------
புனைநலம் வாட்டுந ரல்லர் மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திசைத்தன
நல்லெழி லுண்கணு மாடுமா லிடனே." இஃது அளவடியானும் துள்ளலோசையானும் வந்தமையால் கலிப்பா.

"சுறமறிவன துறையெல்லாம்
இறவீன்பன வில்லெல்லாம்
மீன்றிரிவன கிடங்கெல்லாம்
தேன்றாழ்வன பொழிலெல்லாம் என வாங்குத்
தண்பணை தழீஇய விருக்கை
மண்கெழு நெடுமதின் மன்ன னூரே."- இஃது இருசீரடியானும் தூங்கலோசையானும் வந்தமையால் குறளடி வஞ்சிப்பா.

"தொன்னலகத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
இன்னலத்தகை யிதுவென்ன வெழில்காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள்கருத்தி னிற்சிறந்தாங்கெனப்பெரிதும்
கலங்கஞ ரெய்தி விடுப்பவுஞ்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே." இது முச்சீரடியானும் தூங்கலோசையானும் வந்தமையால் சிந்தடி வஞ்சிப்பா.

"கண்ணார் கொடிபோல் துளங்கிடை மாதே" எ - து. மகடூஉ முன்னிலை.

குறிப்பு

## 12.3 குறள்வெண்பா, நேரிசைவெண்பா:

ஈரடி வெண்பாக் குறள் குறட்பா இரண்டாய் இடைக்கண்
சீரிய வான்தனிச் சொல்லடி மூய்ச் செப்பலோசைகுன்றாது
ஓரிரண்டாயும் ஒருவிகற்பாயும் வருவதுண்டேல்
நேரிசை யாகும் நெரிசுரி பூங்குழல் நேரிழையே.

வெண்பா குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, ப.்.றொடை வெண்பா, நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

ஆசிரியப்பா நேரிசை யாசிரியப்பா, இணைக்குறளாசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, அடிமறிமண்டில ஆசிரியப்பா எனப் பலவகைப்படும்.

கலிப்பா நேரிசை யொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா, வண்ணக வொத்தாழிசைக் கலிப்பா, வெண்கலிப்பா, தரவு கொச்சகக் கலிப்பா, தரவிணைக் கொச்சகக் கலிப்பா, சி.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா, ப.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா, மயங்கிசைச் கொச்சகக் கலிப்பாஎனப் பல வகைப்படும்.

.வஞ்சிப்பா குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா, எனப்படும்.மருட்பா புறநிலை வாழ்த்து மருட்பா, கைக்கிளை மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா எனப்படும்.

இவற்றுள் ஈரடி வெண்பாக்பாக்களுள், செப்பலோசை உடையதாய் ஈற்றடி முச்சீர், ஏனையடி நாற் சீர்,பெற்றதாய் வெண்சீரும் இயற்சீரும் வந்து வெண்டளை தட்டு, வேற்றுத் தளை விரவாது, காசு, பிறப்பு, நாள், மலர் என்னும் வாய்பாட்டால் முடிவதாய் வரும் வெண்பாவினை அடியாலும் ஓசையாலும் தொடையாலும் பெயர் வேறுபாடுணர்த்துவதற்காக எடுத்துக்கொண்டார் ஆசிரியர். இக்காரிகையில் குறள்வெண்பாவினையும் இருகுறள் நேரிசை வெண்பாவினையும், ஆசிடை நேரிசை வெண்பாவினையும் உணர்த்துகின்றார்.

**குறள் வெண்பா:**

வெண்பாவின் இலக்கணம் பெற்று இரண்டடியால் வரும் வெண்பா குறள்வெண்பா எனப்படும்.

**நேரிசை வெண்பா:**

இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதல் தொடைக்கேற்ற தனிச் சொல்லால் செப்பலோசை குன்றாது ஓரிரண்டாயும் ஒரு விகற்பாயும் வருவதுண்டேல் அது நேரிசை வெண்பா ஆகும்.

**இருகுறள்நேரிசை வெண்பா:**

இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக்கேற்ற தனிச் சொல்லால் அடி நிரம்பிச் செப்பலோசை வழுவாது முதலிரண்டடியும் ஒரு விகற்பமாய்க்

இறுதியிரண்டடியும் மற்றொரு விகற்பாய் வரினும் நான்கடியும் ஒரு விகற்பாய் வரினும் அவை இருகுறள்நேரிசை வெண்பா எனப்படும்.

இவற்றுள் அடியாற் பெயர் பெற்றவை குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா என்பன.

ஓசையாற் பெயர் பெற்றவை நேரிசை வெண்பா,இன்னிசை வெண்பா என்பன. தொடையாற் பெயர்பெற்றது ப.்.றொடை வெண்பா என்பனவாகும்.

குறிப்பு

**ஆசிடையிட்ட நேரிசை வெண்பா**:

“வான்றனிச் சொல்” எனக் குறித்தமையால் முதற் குறட்பாவினோடு தனிச்சொல் இடை வேறுபட்டு விட்டிசைப் பின், ஒற்றுமைப்படாத உலோகங்களை ஒற்றுமைப்படப் பற்றாசிட்டு விளக்கினாற்போல, முதற் குறட்பாவின் இறுதிக் கண் ஒன்றும் இரண்டும் அசை கூட்டி உச்சரிக்கப்பட்டு இரு விகற் பத்தானும் ஒரு விகற்பத்தானும் வருவனவும் உள. அவை ஒருசார் ஆசிடை நேரிசை வெண்பா எனப்படும்.

“உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.”

“உடையார்மு னில்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.” இவை இரு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்த குறள் வெண்பா.

“அரிய வரைகீண்டு காட்டுவார் யாரே
பெரிய வரைவயிரங் கொண்டு - தெரியிற்
கரிய வரைநிலையார் காய்ந்தாலென் செய்வார்
பெரிய வரைவயிரங் கொண்டு.” இவை இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லால் அடிநிரம்பிச் செப்பலோசை வழுவாது இருவிகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் வந்தமையால் இருகுறள் நேரிசை வெண்பா.

“தாமரையின் றாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையி னாற்றமே தானாறும் - தாமரைபோற்
கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடியெங்
கண்ணார்வஞ் செய்யுங் கருத்து.”

“கருமமு முள்படாப் போகமுந் துவ்வாத்
தருமமுந் தக்கார்க்கே செய்யா - ஒருநிலையே
முட்டின்றி மூன்று முடியுமே ல.்.தென்ப
பட்டினம் பெற்ற கலம்.” இவை இரண்டு குறள் வெண்பாவாய் நடுவு முதற்றொடைக் கேற்ற தனிச்சொல்லாய் இடை வேறுபட்டு முறையே இரண்டசை யானும் ஓரசையானும் ஆசிட்டு இரண்டு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசைவெண்பா.

குறிப்பு

"ஆர்த்த வறிவின ராண்டிளைய ராயினும்
காத்தோம்பித் தம்மை யடக்குப - மூத்தொறூஉம்
தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவைபோற்
போத்தறார் புல்லறிவி னார்." (நாலடி. 351)

"வஞ்சியே னென்றவன்ற னூருரைத்தான் யானுமவன்
வஞ்சியா னென்பதனால் வாய்நேர்ந்தேன் - வஞ்சியான்
வஞ்சியேன் வஞ்சியே னென்றுரைத்தும் வஞ்சித்தான்
வஞ்சியாய் வஞ்சியார் கோ." இவை முதற் குறட்பாவின் இறுதிக்கண், முறையே ஓரசை, யானும் ஈரசையானும் ஆசிட்டு ஒரு விகற்பத்தான் வந்த ஆசிடை நேரிசை வெண்பா.

நெரிசுரி பூங்குழல் நேரிழையே -. மகடூஉ முன்னிலை.

## 12.4 இன்னிசை வெண்பா, ப.்.றொடை வெண்பா:

ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பின் அ.்.து இன்னிசை துன்னும் அடிபலவாய்ச்
சென்று நிகழ்வது ப.்.றொடையாம் சிறை வண்டினங்கள்
துன்றும் கருமென்குழல் துடியோர் இடைத் தூமொழியே

**இன்னிசை வெண்பா:**

ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வந்து நான்கடியாய்த் தனிச் சொலின்றி நடப்பின் அ.்.து இன்னிசை வெண்பா எனப்படும்.

"ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் கனிச்சொல் இன்றி நடப்பின் அ.்.து இன்னிசை" என்னாது "துன்னும்" என்று மிகுத்துச் சொல்லியவதனால் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றா மடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தால் வருவனவும், அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவனவும் எல்லாம் இன்னிசை வெண்பா என்று பெயரிட்டு வழங்கப்படும்.

**ப.்.றொடை வெண்பா:**

வெண்பாவின் இலக்கணம் பொருந்தப் பெற்று நான்கடியின் மிக்க பலவடியால் வருவது ப.்.றொடை வெண்பா எனப்படும்.

"அடிபலவாய் நிகழ்வது என்னாது, அடி பலவாய்ச் சென்று நிகழ்வது என்று சிறப்பித்தவதனால், செப்பலோசையிற் சிறிது வழுவி வந்த ப.்.றொடை வெண்பாக்களை ஒருசார் ஒப்புமை நோக்கி வெண்கலிப்பாற்படுத்து வழங்கினும் அ.்.து தவறன்று.

"வைகலும் வைகல் வரக்கண்டு ம.்.துணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணாள்மேல் வைகுதல்

குறிப்பு

வைகலை வைத்துணரா தார்.'' (நாலடி. 39)இது நான்கடியாய்த் தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

''இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.'' (நாலடி. 36) இது நான்கடியாய்த் தனிச்சொலின்றிப் பல விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பா,

''அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மற் - றிங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.'' (நாலடி, 151) இது இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

''வளம்பட .................. செய்தாரு மில்.'' இது மூன்றாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா.

''மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லைத் தவமும்
அரசிலா னில்வழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.'' (நான்மணி. 48.) இஃது அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு வந்த இன்னிசை வெண்பா.

''வையக மெல்லாங் கழனியா வையகத்துச்
செய்யகமே 4நாற்றிசையின் றேயங்கள் செய்யகத்து
வான்கரும்பே தொண்டை வளநாடு வான்கரும்பின்
சாறேயந் நாட்டுத் தலையூர்கள் சாறட்ட
கட்டியே கச்சிப் புறமெல்லாங் கட்டியுட்
டானேற்ற மாய சருக்கரை மாமணியே
ஆனேற்றான் கச்சி யகம்'' - இஃது அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்றுப் பல விகற்பத்தால் வந்த ஏழடிப் பஃறொடை வெண்பா.

''பன்மாடக் கூடன் மதுரை நெடுந்தெருவில்
என்னோடு நின்றா ரிருவ ரவருள்ளும்
பொன்னோடை நன்றென்றா ளல்லளே பொன்னோடைக்
கியானைநன் றென்றாளு மந்நிலையள் யானை
எருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்
றிருத்தார்நன் றென்றேன் றியேன்''.- இஃது ஆறடியான் வந்த பலவிகற்பப் பஃறொடை வெண்பா.

## 12.5 சிந்தியல் வெண்பா, வெண்பாவின் ஈற்றடி

நேரிசை இன்னிசை போல நடந்தடி மூன்றின் வந்தால்
நேரிசை இன்னிசைச் சிந்திய லாகும் நிகரில் வெள்ளைகது
ஓரசைச் சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண் காசும் இற்ற
சீருடைச் சிந்தடியே முடிவாம் என்று தேறுகவே.

குறிப்பு

**நேரிசைச் சிந்தியல் வெண்பா:**

நேரிசை வெண்பாவேபோல இரண்டாமடி யிறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தானும் ஒரு விகற்பத்தானும் மூன்றடியால் வருவன வெல்லாம் நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

**இன்னிசைச் சிந்தியல் வெண்பா:**

இன்னிசை வெண்பாவே போலத் தனிச்சொல்லின்றி ஒரு விகற்பாகியும் பல விகற்பாகியும் மூன்றடியால் வருவனவெல்லாம் இன்னிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும்.

எல்லா வெண்பாவிற்கும் நாளென்னும் நேரசைச் சீரானும், மலரென்னும் நிரையசைச் சீரானும், காசு பிறப்பென்னும் வாய்பாட்டாற் குற்றியலுகர மீறாகிய நேரீற் றியற்சீரானும் இற்ற முச்சீரடியே இறுதியாம்.

''நற்கொற்ற வாயி னறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண் டார்ப்பப் புடைத்தாளே - பொற்றேரான்
பாலைநல் வாயின் மகள்.'' இது இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரு விகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வந்த நேரிசைச் சிந்தியல் வெண்பா.

''சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை''. இவை மூன்றடியாய்த் தனிச் சொல் லின்றிப் பல விகற்பத் தான் வந்த இன்னிசைச் சிந்தியல் வெண்பா.

எல்லா வெண்பாவிற்கும் நாளென்னும் நேரசைச் சீரானும், மலரென்னும் நிரையசைச் சீரானும், காசு பிறப்பென்னும் வாய்பாட்டாற் குற்றியலுகர மீறாகிய நேரீற் றியற்சீரானும் இற்ற முச்சீரடியே இறுதியாம்.

''பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.'' (குறள், 1121.) இது நீர் என்று நாளென்னும் ஓரசைச்சீரான் முடிந்தது.

''நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.'' (குறள், 1072) இ∴து இலர் என்று மலர் என்னும் ஓரசைச்சீரான் முடிந்தது.

''கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை

சொல்லா நலத்தது சால்பு'' - இது சால்பு என்று காசென்னும் வாய்பாட்டான் முடிந்தது.

''அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.''-இ∴து உலகு என்று பிறப்பென்னும் வாய்பாட்டான் முடிந்தது.

குறிப்பு

''நிகரில் வெள்ளைக்கு'' என்று சிறப்பித்தவதனால் குறள் வெண்பாவினை ஓரடி முக்காலென்றும், சிந்தியல் வெண்பாவினை ஈரடி முக்காலென்றும், நேரிசை வெண்பாவினை நேரிசை மூவடி முக்காலென்றும், இன்னிசை வெண்பாவினை இன்னிசை மூவடி முக்காலென்றும், ப∴றொடை வெண்பாவினைப் பலவடி முக்காலென்றும் பெயரிட்டு வழங்குவாரும் உண்டு என்பது பெறப்படும்.

''ஒளிசேர் பிறப்பும் ஒண்காசும்'' என்று சிறப்பித்தவதனால் காசு பிறப்பு என்னுங் குற்றியலுகர மீறாய் நேரீற்றியற்சீர் முடிவதுபோல முற்றியலுகர மீறாய் நேரீற்றியற்சீர் இறுதியாக வருவனவுமுள ஒருசார் வெண்பா எனக் கொள்ளப்படும்.

மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலும்
அஞ்சொன் மடவாட் கருளு. - இது பிறப்பென்னும் வாய்பாட்டான் முற்றிய லுகர மீறாக இற்ற வெண்பா.

''இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.'' இது காசென்னும் வாய்பாட்டான் முற்றியலுகர மீறாக இற்ற வெண்பா.

## 12.6 வெண்செந்துறை, குறட்டாழிசை:

அந்தமில் பாதம் அளவிரண்டு ஒத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகும் திருவே அதன்பெயர் சீர்பலவாய்
அந்தம் குறைநவும் செந்துறைப் பாட்டின் இழிபும் அங்கேழ்ச்
சந்தம் சிதைந்த குறளும் குறளினத் தாழிசையே.

**வெண்செந்துறை:**

.இரண்டடியாய்த் தம்முள் அளவொத்து வருவது வெண்செந்துறை என்றும் செந்துறை வெள்ளையென்றும் வழங்கப்படும்.

**குறட்டாழிசை:**

நாற்சீரின் மிக்க பலசீரால் வந்த அடி இரண்டாய் ஈற்றடி குறைந்து வருவனவும், செந்துறை வெள்ளையிற் சிதைந்து வருவனவும், குறள் வெண்பாவிற் சிறிது செப்பலோசை சிதைந்து வருவனவும் குறள் வெண்பாவிற்கு இனமாகிய குறட்டாழிசை எனப்படும். குறட்டாழிசை எனினும் தாழிசைக் குறள் எனினும் ஒன்றேயாம்.

''ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.'' (முதுமொழிக்.) இது இரண்டடியாய் அளவொத்து ஒழுகிய ஓசையும் விழுமிய பொருளுமுடைத்தாய் வந்த வெண்செந்துறை.

''நண்ணு வார்வினை நைய நாடொறும்
நற்ற வர்க்கர சாய ஞானநற்
கண்ணி னானடி யேயடை வார்கள் கற்றவரே.'' இது நாற்சீரின் மிக்க பலசீரான் வந்த அடி யிரண்டாய் ஈற்றடி குறைந்து வந்த குறட்டாழிசை.

''அறுவர்க் கறுவரைப் பெற்றுங் கவுந்தி
மறுவறு பத்தினி போல்வையி னீரே.'' இது விழுமிய பொருளும் ஒழுகிய வோசையு மின்றி இரண்டடியும்அளவொத்துச் செந்துறை வெள்ளையிற் சிதைந்து வந்தமையின் செந்துறைச் சிதைவுத் தாழிசைக் குறள்.

''வண்டார்பூங் கோதை வரிவளைக்கைத் திருநுதலாள்
பண்டைய எல்லள் படி.'' - இது குறள் வெண்பாவிற் சிறிது செப்பலோசை சிதைந்து வந்த சந்த மழிந்த குறட்டாழிசை.

## 12.7 வெண்பாவின் இனம்:

மூன்றடியானும் முடிந்தடி தோறு முடிவிடத்துத்
தான் தனிச்சொல்பெறும் தண்டா விருத்தம் வெண்டாழிசையே
மூன்றடியாய் வெள்ளை போன்றிறும்மூன்று இழிபு ஏழ் உயர்வாய்
ஆன்றடிதாம் சில அந்தம் குறைந்திறும் வெண்டுறையே

**விருத்தம்:**

மூன்றடியால் நிறைவுற்று அடிதோறும் ஒருசொல்லே இறுதியில் தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம்

**வெண்டாழிசை**:

மூன்றடியாய் அவற்றின் ஈற்றடி வெண்பாவே போல முச் சீரான் இறுவது வெண்டாழிசை யென்றும், வெள்ளொத்தாழிசை என்றும் வழங்கப்படும்.

**வெண்டுறை:**

மூன்றடிச் சிறுமையாய் ஏழடிப் பெருமையாய் இடையிடை நான்கடியானும் ஐந்தடியானும் ஆறடி யானும் வந்து, பின்பிற் சிலவடி சிலசீர் குறைந்துவருவன வெண்டுறையாகும்

''ஆன்றடிதாம்'' என்று சிறப்பித்தவதனால் முன்பிற் சிலவடி ஓரோசையாய்ப் பின்பிற் சிலவடி மற்றோர் ஓசையாய் வருவனவும் உள. அஃது ஒரு சார் வேற்றொலி வெண்டுறை எனப்படும்.

''கொண்டன் முழங்கினவாற் கோபம்
பரந்தனவால் - என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம்

பூத்தனவால் - என்செய்கோயான்
எண்டிசையுந் தோகை யியைந்தகவி
யேங்கினவால் - என்செய்கோயான்,'' - இது மூன்றடியாய் அடிதோறும் இறுதிக்கண் "என்செய் கோயான்" என்னுந் தனிச் சொற் பெற்று வந்த வெளி விருத்தம்.

''ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தார் - ஒருசாரார்.
கூகூ வென்றே கூவிளி கொண்டார் - ஒருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீத்தார் – ஒருசாரார்
ஏகீர் நாய்கீ ரென்செய்து மென்றார் - ஒருசாரார்.'' இது நாலடியாய் அடிதோறும் இறுதிக்கண் ''ஒரு சாரார்'' என்னுந் தனிச் சொற் பெற்று வந்த வெளி விருத்தம்.

''நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவ செய்யார்
அன்பு வேண்டு பவர்.'' - இ∴து ஆசிரியத் தளையால் வந்த வெண்டாழிசை.

''குழலிசைய வண்டினங்கள் கோழிலைய செங்காந்தட் குலை மேற்பாய
அழலெரியின் மூழ்கினவா லந்தோ வளியவென் றயல்வாழ் மந்தி
கலுழ்வனபோ னெஞ்சழிந்து கல்லருவி தூஉம்
நிழல்வரை நன்னாட னீப்பானோ வல்லன்'' இது நான்கடியாய் ஈற்றடி யிரண்டும் இவ்விருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

''தாளாள ரல்லாதார் தாம்பலராயக்கா லென்னா மென்னாம்
யாளியைக் கண்டஞ்சி யானைதன் கோடிரண்டும்
பீலிபோற் சாய்த்துவிடும் பிளிற்றி யாங்கே.'' இது மூன்றடியாய் ஈற்றடி யிரண்டும் இவ்விருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

''முழங்குதிரைக் கொற்கைவேந்தன் முழுதுலகும்
புரந்தளித்து முறைசெய் கோமான்
வழங்குதிறல் வாண்மாறன் மாச்செழியன்
றாக்கரிய வைவேல் பாடிக்
கலங்கிநின் றாரெலாங் கருதலா காவணம்
இலங்குவா ளிரண்டினா லிருகைவீ சிப்பெயர்ந்
தலங்கன்மா லையவிழ்ந் தாடவா டும்மிவள்
பொலங்கொள்பூந் தடங்கட்கே புரிந்துநின் றாரெலாம்
விலங்கியுள் ளந்தப விளிந்துவே றாபவே.'' - இ∴து ஏழடியால் முதலிரண்டடியும் அறுசீராய் ஓரோசையாய், பின்பில் ஐந்தடியும் நாற்சீராய் வேற்றோசையாய் வந்த வேற்றொலி வெண்டுறை.

''வெறியுறு கமழ்கண்ணி வேந்தர்கட் காயினும்
உறவுற வரும்வழி யுரைப்பன வுரைப்பன்மற்

குறிப்பு

செறிவுறு தகையினர் சிறந்தன ரிவர்நமக்
கறிவுறு தொழிலரென் றல்லவை சொல்லன்மின்
பிறபிற நிகழ்வன பின்.'' - இஃது ஐந்தடியாய் ஈற்றடி ஒன்றொருசீர் குறைந்து வந்த ஓரொலி வெண்டுறை.

''அன்னா யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
ஒன்னா ருடைபுறம் போல நலங்கவர்ந்து
துன்னான் துறந்து விடல்
"ஏடி யறங்கொ னலங்கிளர் சேட்சென்னி
கூடா ருடைபுறம் போல நலங்கவர்ந்து''- இது சிந்தியல் வெண்பா வொருபொருண்மேல் மூன்றடுக்கி வந்தமையால் வெள்ளொத் தாழிசை.

## 12.8 உதாரண முதனினைப்புக் காரிகை:

கொண்டன் முழங்கின வாவா விருத்தங் குழலிசைய
வண்டினம் வெண்டுறை தாளாண் முழங்கொடு தாழிசையே
நண்பிதென்றார் கலி கொன்றைவெண் செந்துறை நீலநண்ணு
பிண்டி யறுவர்வண் டார்குறட் டாழிசை பெய்வளையே.

## 12.9 நால்வகை ஆசிரியப்பா:

கடையயற் பாதம் முச்சீர்வரின் நேரிசை காமருசீர்
இடைபல குன்றின் இணைக்குறள் எல்லா அடியும் ஒத்து
நடைபெறு மாயின் நிலைமண்டிலம் நடுவு ஆதியந்தத்து
அடைதரு பாதத்து அகவல் அடிமறி மண்டிலமே.

அகவலோசையோடு அளவடித்தாகியும், இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும், தன்றளை தழுவியும் பிறதளை மயங்கியும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வருதலில்லா ஆசிரியப் பாவினை அடியானுந் தொடையானும் ஓசையானும் பொருளானும் பெயர் வேறுபாடுணர்த்துவதற்காக எடுத்துக்கொண்டார் ஆசிரியர். அவற்றுள். இக்காரிகை நேரிசை யாசிரியப்பாவும், இணைக்குறள் ஆசிரியப்பாவும், நிலைமண்டில ஆசிரியப்பாவும் உணர்த்திற்று.

**நேரிசை ஆசிரியப்பா:**

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப்பெற்று ஈற்றடி யின் அயலடி முச்சீரான் வரும் எனின் அது நேரிசையாசிரியப்பா எனப்படும்.

**இணைக்குறள் ஆசிரியப்பா:**

முதலடி யும் ஈற்றடியும் ஒத்து இடையடிகள் இரண்டும் பலவும் ஒருசீர் குறைந்தும் இருசீர் குறைந்தும் வருவன இணைக்குறளாசிரியப்பா எனப்படும்.

**நிலைமண்டில வாசிரியப்பா:**

எல்லாவடியும் தம்முள் ஒத்து நாற்சீரடியான் வருவது நிலைமண்டில ஆசிரியப்பாவாம்.

குறிப்பு

**அடிமறிமண்டில ஆசிரியப்பா:**

எல்லாவடியும் ஒத்து முதல் நடு விறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்

"நிலத்தினும் பெரிதே வானினு முயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரற்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தே னிழைக்கு நாடனொடு நட்பே." (குறுந். 3) இ∴து ஈற்றடியின் அயலடி முச்சீரான் வந்தமையால் நேரிசை ஆசிரியப்பா

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே." இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடி இருசீரானும் முச்சீரானும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா "காமரு சீர்" என்று சிறப்பித்தவதனால் ஆசிரியப்பா நான்கிற்கும் ஏ என்னும் அசைச்சொல்லால் இறுவது சிறப்புடைத்து.

"வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சார னாட செவ்வியை யாகுமதி
யார∴ தறிந்திசி னோரே சாரற்
சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே." (குறுந். 18.) இ∴து எல்லாவடியும் ஒத்து நான்குசீரான் வந்தமையால் நிலைமண்டில ஆசிரியப்பா.

"சூரல் பம்பிய சிறுகா னியாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார னாட நீவர லாறே." இ∴து எல்லா வடியும் முதல் நடுவிறுதியாக வுச்சரிக்க ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மண்டில ஆசிரியப்பா

## 12.10 ஆசிரியப்பாவின் இனம்:

தருக்கிய தாழிசை மூன்றடி ஒப்பன நான்கடியாய்
எருத்தடி நைந்தும் இடைமடக் காயும் இடையிடையே
சுருக்கடி யாயும் துறையாம் குறைவில் தொல் சீரகவல்
விருத்தம் கழிநெடில் நான்கொத்து இறுவது மெல்லியலே

குறிப்பு

**ஆசிரியத்தாழிசை:**

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப் பெற்று மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவன ஆசிரியத்தாழிசையாம்.

**ஆசிரியத்துறை:**

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும்,ஆசிரியத்துறை எனப்படும்.

**ஆசிரிய விருத்தம்:**

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப் பெற்று கழிநெடிலடி நான்காய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தமெனப்படும்.

தருக்கிய தாழிசை என்று சிறப்பித்தவதனால் ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவன சிறப்புடையதாம். தனியே வரப்பெறு மாயினும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

“கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ.”
“கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.” இவை மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

“வானுற நிமிர்ந்தனை வையக மளந்தனை
பான்மதி விடுத்தனை பல்லுயி ரோம்பினை
நீனிற வண்ணநின் னிரைகழ றொழுதனம்.” - இது தனியே வந்த ஆசிரியத் தாழிசை.

“கரைபொரு கானியாற்றங் கல்லத ரெம்முள்ளி வருவி ராயீன்
அரையிருள் யாமத் தடுபுலியே றஞ்சி யகன்று போக
நரையுரு மேறுநுங் கைவே லஞ்சு நும்மை
வரையர மங்கையர் வவ்வுத லஞ்சுதும் வார லையோ.” - இது நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை

“புனலாமென வனலாமெனப்
புகையா நின்றன புலிமா னேற்றை

குறிப்பு

என்றாங் கிவையிவை யியங்கலி னெந்திறத்
தினிவரல் வேண்டலந் தனிவரல் விலக்கலின்
இறுவரைமிசை யெறிகுறும்பிடை
இதுவென்னென வதுநோனார்
கரவிரவிடைக் களவுளமது கற்றோரது கற்பன்றே.'' இது முதலடியும் மூன்றாமடியும் பதினான்கு சீராய் அல்லாத அடியிரண்டும் பதினாறு சீராய் இடையிடை குறைந்து வந்த ஆசிரி யத்துறை.

''இரங்கு குயின்முழவா வின்னிசையாழ் தேனா
அரங்க மணிபொழிலா வாடும்போலு மிளவேனில்
அரங்க மணிபொழிலா வாடுமாயின்
மரங்கொன் மணந்தகன்றார் நெஞ்ச மென்செய்த திளவேனில்.'' இது நான்கடியா யிடையிடை குறைந்து இடைமடக்காய் வந்த ஆசிரியத்துறை.

''கடஞ்சூழ் நாடன் காளிங்கன்
கதிர்வேல் பாடு மாதங்கி
வடஞ்சூழ் கொங்கை மலைதாந்தாம்
வடிக்க ணீல மலர்தாந்தாம்
தடந்தோ ளிரண்டும் வேய்தாந்தாம்
என்னுந் தன்கைந் தண்ணுமையே'' என்பது அறுசீர்க் கழிநெடிலயான் வந்த ஆசிரியவிருத்தம்.

''கணிகொண் டலர்ந்த'' (கா. 13.) என்பது எழுசீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

மூவடிவி னாலிரண்டு'' (கா. 13.) என்பது எண்சீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

இடங்கை வெஞ்சிலை'' (கா. 13.) என்பது ஒன்பதின்சீர்க் கழி நெடிலடியான் வந்த ஆசிரிய விருத்தம்.

**பயிற்சி வினாக்கள்:**

1.பாக்களின் அடி குறித்து எழுதுக.

வெண்பாவும் ஆசிரியப்பாவும் கலிப்பாவும் நாற்சீரடியான் வரும்
வஞ்சிப்பா இருசீரடியானும், முச்சீரடியானும் வரும்.

வஞ்சி என்னும் ஒண்பா" என்று சிறப்பித்தவதனால் வெண்பாவின் ஈற்றடியும் நேரசை யாசிரிய்பாவின் ஈற்றயலடியும், கலி வெண்பாவின் ஈற்றடியும் முச்சீரடியான் வரும்.

இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையடி இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வரும்; கலியினுள்ளும் ஒருசார் அம்போதரங்க வுறுப்பும் இருசீரடியானும் முச்சீரடியானும் வரப்பெறும்; அராகவுறுப்பு நாற்சீரின் மிக்கு வருவனவும் உள.

குறிப்பு

2. இன்னிசை வெண்பா குறித்து விவரி.

ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
இன்றி நடப்பின.ஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்வது ப.ஃறொடை யாஞ்சிறை வண்டினங்கள்
துன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே

ஒரு விகற்பத்தானும் பல விகற்பத்தானும் வந்து நான்கடியாய்த் தனிச் சொலின்றி நடப்பின் அ.ஃது இன்னிசை வெண்பா எனப்படும்.

"ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடியாய்த் கனிச்சொல் இன்றி நடப்பின் அ.ஃது இன்னிசை என்னாது "துன்னும்" என்று மிகுத்துச் சொல்லியவதனால் இரண்டாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று மூன்று விகற்பத்தால் வருவனவும், மூன்றா மடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தால் வருவனவும், அடிதோறும் ஒரூஉத்தொடை பெற்று வருவனவும், நேரிசை வெண்பாவிற் சிறிது வேறுபட்டு நான்கடியாய் வருவனவும் எல்லாம் இன்னிசை வெண்பா என்று பெயரிட்டு வழங்கப்படும்.

3. அடிமறிமண்டில ஆசிரியப்பாவினை விளக்குக.

எல்லாவடியும் ஒத்து முதல் நடு விறுதியாக உச்சரித்தாலும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது அடிமறிமண்டில ஆசிரியப்பா ஆகும்.

சூரல் பம்பிய சிறுகா னியாறே
சூரர மகளி ராரணங் கினரே
வார லெனினே யானஞ் சுவலே
சார நாட நீவர லாறே." இ.ஃது எல்லா வடியும் முதல் நடுவிறுதியாக வுச்சரிக்க ஓசையும் பொருளும் பிழையாது வந்தமையால் அடிமறி மண்டில ஆசிரியப்பா

4. இணைக்குறள் ஆசிரியப்பா குறித்து எழுதுக.

முதலடி யும் ஈற்றடியும் ஒத்து இடையடிகள் இரண்டும் பலவும் ஒருசீர் குறைந்தும் இருசீர் குறைந்தும் வருவன இணைக்குறளாசிரியப்பா எனப்படும்.

"நீரின் றண்மையுந் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சார னாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே." இது முதலடியும் ஈற்றடியும் நாற்சீராய் இடையடி இருசீரானும் முச்சீரானும் வந்தமையால் இணைக்குறளாசிரியப்பா ஆகும்.

5. ஆசிரியத்தாழிசை - விவரி

ஆசிரியப்பாவின் இலக்கணங்கள் பொருந்தப் பெற்று மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஒரு பொருள் மேல் மூன்றடுக்கி வருவது ஆசிரியத்தாழிசையாம்.

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமே லவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ.
பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமே லவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ."
"கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த 8மாயவன்
எல்லிநம் மானுள் வருமே லவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ.'' இவை மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வந்த ஆசிரியத் தாழிசை.

குறிப்பு

# கூறு:13 -யாப்பருங்கலக்காரிகை - கலிப்பா- வண்ணகம்-தரவு - சுரிதகம் - அம்போதரங்கம்

**நோக்கம்: கலிப்பா – கலிப்பாவின் வகைகள் - வண்ணகம் - தரவு – சுரிதகம் - அம்போதரங்கம் பற்றி அறிதல்**

## 13.1 நேரிசையொத்தாழிசைக் கலிப்பா, அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா:

குறிப்பு

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொல் சுரிதகமாய்
நிரலொன்றி னேரிசை ஒத்தா ழிசைக்கலி நீர்த்திரைபோல்
மரபொன்று நேரடி முச்சீர் குறள் நடுவே மடுப்பின்
அரவொன்றும் அல்குல் அம்போதரங்க ஒத் தாழிசையே.

.துள்ளல் ஓசை உடையதாய், நேரீற்று இயற்சீரும் நிரை நடுவாகியவஞ்சியுரிச்சீரும் வாராது, நிரை முதலாகிய வெண்பா வுரிச்சீர்மிக்கு வருவதாய், தன்தளையும் அயற்றதளையுந் தட்டுத் தரவு, தாழிசை, என்னும் முதலுறுப்பும் அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் துணையுறுப்பும் உடைத்தாய் ஒத்தாழிசைக்கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்னும் பெயர் வேறு பாட்டால் அமைந்த கலிப்பாவினை உறுப்பினானும் ஓசையானும் பொருளானும் பெயர் வேறுபாடு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார் ஆசிரியர்.

**நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:**

முன்பு ஒரு தரவு வந்து, அதன்பின் மூன்று தாழிசை வந்து,அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து, அதன்பின் ஆசிரியப்பாவானும் வெண்பாவானும் ஒரு சுரிதக உறுப்புப் பெற்றுச் சொன்ன பெற்றியில் திரியாது வருமெனின் அது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாம்.

**தரவு:** தரவு எனினும் எருத்தம் எனினும் ஒன்றேயாகும்.

**தாழிசை:** தாழிசை எனினும் இடைநிலைப்பாட்டு எனினும் ஒக்கும்.தனிச்சொல் எனினும், விட்டிசை எனினும், தனிநிலை எனினும், கூன் எனினும் ஒக்கும். தாழம்பட்ட இசையையுடையது தாழிசை; தாழம்பட்ட இசை. கீழ்ப்பட்ட ஓசைக்கும் மேல்ப்பட்ட ஓசைக்கும் மாறுபட்டது இது.

**இடைநிலைப்பாட்டு:** இடை நிலைப்பாட்டு - தரவுக்கும் சுரிதகத்துக்கும் இடையில் நிற்கும் பாட்டு;

**தனிச்சொல்:** தனிச்சொல் - சுரிதகத்தோடும் அதற்குமுன்னே உள்ள உறுப்போடும் ஓசை முதலியவற்றிற் றொடர்பின்றித் தனியே நிற்கும் சொல். இரு சொல்லா லாகிய தொடர்மொழியாயினும் சொல்லெனப்படும்.

**விட்டிசை:** விட்டிசை ஓரோசையினின்று மற்றோரோசை விட்டு இசைக்கப்படுவதற்குக் காரணமாக உள்ளது.

குறிப்பு

**கூன்:** கூன் - நேர்மையாக வந்த ஓசை சுரிதகத்தோடு பொருந்தாமற் றடைப்பட்டு வளைதற்குக் காரணமாக உள்ளது;

**சுரிதகம்**: சுரிதகம் எனினும், அடக்கியல் எனினும், வைப்பு எனினும், வாரம் எனினும், போக்கியல் எனினும் ஒன்றேயாம்.

'தந்துமுன் நிற்றலிற் றரவே தாழிசை
ஒத்தாழ் தலின.'. தொத்தா ழிசையே
தனிதர நிற்றலிற் றனிச்சொல் குனிதிரை
நீர்ச்சுழி போல நின்றுசுரிந் திறுதலிற்
சோர்ச்சியில் புலவர் சுரிதக மென்பர்' என்பர் சான்றோர்.

"வாணெடுங்கண் பனிகூர வண்ணம்வே றாய்த்திரிந்து
தோணெடுந்தண் டகைதுறந்து துன்பங்கூர் பசப்பினவாய்ப்
பூணொடுங்கு முலைகண்டும் பொருட்பிரிதல் வலிப்பவோ" - இது தரவு,

"சூருடைய நெடுங்கடங்கள் சொலற்கரிய வென்பவாற்
பீருடைய நலந்தொலையப் பிரிவாரோ பெரியவரே,
"சேணுடைய கடுங்கடங்கள் செலற்கரிய வென்பவால்
நாணுடைய நலந்தொலைய நடப்பாரோ நயமிலரே,
சிலம்படைந்த வெங்கானஞ் சீரிலவே யென்பவாற்
புலம்படைந்த நலந்தொலையப் போவாரோ பொருளிலரே." இவை மூன்றுந் தாழிசை

எனவாங்கு, - இது தனிச்சொல்

"அருளெனு மிலராய்ப் பொருள்வயிற் பிரிவோர்பன்னெடுங் காலமும் வாழியர்
பொன்னொடுந் தேரொடுந் தானையிற் பொலிந்தே." - இது சுரிதகம்.

இது தரவு மூன்றடியாய்த் தாழிசை மூன்றும் இரண்டடியாய்த் தனிச்சொற் பெற்றுமூன்றடி ஆசிரியச் சுரிதகத்தால் இற்ற நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா.

**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா**

.கரைசேரக் கரைசேரக் சுருங்கிவரும் நீர்த் தரங்கமே போல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகிய அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச்சொற்கும் நடுவே கொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல். சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புடைத்தாய் அவைசொன்ன தன்மையின் திரியாது வருமெனின் அது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என்று வழங்கப்படும்

**அம்போதரங்கம்** - நீர்அலை. தோன்றுமிடத்துப் பெரிதாக இருந்து கரையைச் சேரச் சேரச் குறைந்து போவது அலையின் இயல்பு. அதனைப் போன்றது அம்போதரங்கம் என்னும் உறுப்பு. அம்போதரங்க உறுப்பு எனினும்,

குறிப்பு

அசையடி எனினும் பிரிந்திசைக்குறள் எனினும், சொற்சீரடி எனினும், எண் எனினும் ஒனறேயாம்..

மரபொன்றும்" என்று சிறப்பித்தவதனால் அசையடிதான் அளவடி ஈரடியாய் இரண்டும், அளவடி ஓரடியாய் நான்கும், சிந்தடி ஓரடியாய் எட்டும், குறளடி ஓரடியாய்ப் பதினாறுமாய் வருவது சிறப்புடைத்து. எட்டும் பதினாறுமென்று சொல்லப்பட்டன.நான்கும் எட்டுமாய் வருவனவுமுள. இவற்றைப் பேரெண், அளவெண், இடையெண், சிற்றெண் எனக் குறிப்பர். எண் : அளவடி ஈரடி ஓர் எதுகையாக இரண்டு வருவது பேரெண். அளவடி ஓரடி நான்கு வருவது அளவெண். சிந்தடியாய் வருவது இடையெண். குறளடியாய் வருவது சிற்றெண்.

வசையறு வண்ணகம்" என்று சிறப்பித்தவதனால் அராக உறுப்புத்தான் அளவடி முதலாகிய எல்லாவடியானும் வரப்பெறும்.சிறுமை நான்கடியானும், பெருமை எட்டடியானும், இடை ஐந்தடியானும் ஆறடியானும் ஏழடியானும் வரப்பெறும்.

''வார்புன லிழிகுருதி யகலிட முடனனைப்பக்
கூருகிரான் மார்பிடந்த கொலைமலி தடக்கையோய்'' - இது தரவு.

"முரசதிர் வியன்மதுரை முழுவதூஉந் தலைபனிப்பப்
புரைதொடித் திரடிண்டோட் போர்மலைந்த மறமல்லர்
அடியொடு முடியிறுப்புண் டயர்ந்தவர் நிலஞ்சேரப்
பொடியெழ வெங்களத்துப் புடைத்ததுநின் புகழாமோ.
கலியொலி வியனுலகங் கலந்துட னனிநடுங்க
வலியிய லவிராழி மாறெதிர்ந்த மருட்சோர்வு
மாணாதா ருடம்போடு மறம்பிதிர வெதிர்மலைந்து
சேணுய ரிருவிசும்பிற் சிதைத்ததுநின் சினமாமோ.
படுமணி யினநிரை பரந்துட னிரிந்தோடக்
கடுமுர ணெதிர்மலைந்த காரொலி யெழிலேறு
வெரிநாடு மருப்பொசிய வீழ்ந்துதிறம் வேறாக
எருமலி பெருந்தொழுவி னிறுத்ததுநின் னிகலாமோ.'' - இவை மூன்றும் தாழிசை.

''இலங்கொளி மரகத மெழின்மிகு வியன்கடல்
வலம்புரித் தடக்கை மாஅல் நின்னிறம்.
விரியிணர்க் கோங்கமும் வெந்தெரி பசும்பொனும்
பொருகளி றட்டோய் புரையு நின்னுடை.'' இவை ஈரடி இரண்டு அம்போதரங்கம்.

''கண்கவர் கதிர்முடி கனலுஞ் சென்னியை
தண்சுட ருறுபகை தவிர்த்த வாழியை

ஒலியிய லுவண மோங்கிய கொடியினை
வலிமிகு சகட மாற்றிய வடியினை''. - இவை நாற்சீ ரோரடி நான்கு அம்போதரங்கம்.

''போரவுணர்க் கடந்தோய் நீ
புணர்மருதம் பிளந்தோய் நீ
நீரகல மளந்தோய் நீ
நிழறிகழைம் படையோய் நீ'' - இவை முச்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்.

குறிப்பு

(1) ஊழி நீ (2) உலகு நீ
(3) உருவு நீ (4) அருவு நீ
(5) ஆழி நீ (6) அருளு நீ
(7) அறமு நீ (8) மறமு நீ". - இவை இருசீரோரடி எட்டு அம்போதரங்கம்.

என வாங்கு, - இது தனிச்சொல்.

''அடுதிற லொருவநிற் பரவுது மெங்கோன்
தொடுகழற் கொடும்பூட் பகட்டெழின் மார்பிற்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வே லச்சுதன்
தொன்று முதிர்கட லுலக முழுதுடன்
ஒன்றுபுரி திகிரி யுருட்டுவோ னெனவே.'' - இ∴து ஆசிரியச் சுரிதகம்.

இ∴து எட்டும் பதினாறும் என்று சொல்லப்பட்ட முச்சீரடியும் இருசீரடியும் நான்கும் எட்டுமாய்ச் சிறப்பில்லாத எண்ணடியான் வந்த அம்போதரங்க வொத்தாழிசைக் கலிப்பா.

## 13.2 உதாரண முதனினைப்புக் காரிகை:

வாணெடுங் கண்பனி நேரிசை யாகும் மதர்த்திருண்டு
சேணுற வோடிக் குழையிட றிச்செருச் செய்யும்விழி
நாணுந் திருவு மறிவுஞ் செறிவு முடையநல்லாய்
ஏணுங் கெடலரு மாமுனி யம்போ தரங்கமென்னே.

**வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா:**

தரவு, தாழிசை, தனிச்சொல், சுரிதகம், அம்போதரங்கம், எண், அராகம் என்பன வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

''விளங்குபணிப் பசும்பொன்னின் விரித்தமைத்துக் கதிர்கான்று
துளங்குமணிக் கனைகழற்காற் றுறுமலர நறும்பைந்தார்ப்
பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட மணிப்பூணோய் குறையிரந்து முன்னாட்கண்
மாயாத வனப்பினையாய் மகிழ்வார்க்கு மல்லார்க்குத்
தாயாகித் தலையளிக்குந் தண்டுறை யூரகேள'' ; இது தரவு.

குறிப்பு

"காட்சியாற் கலப்பெய்தி யெத்திறத்துங் கதிர்ப்பாகி
மாட்சியாற் றிரியாத மரபொத்தாய் கரவினாற்
பிணிநலம் பிரிவெய்திப் பெருந்தடந்தோள் வனப்பழிய
அணிநலந் தனியேவந் தருளுவது மருளாமோ ;
அன்பினா லமிழ்தளைஇ யறிவினாற் பிறிதின்றிப்
பொன்புனை பூணாகம் பசப்பெய்தப் பொழிலிடத்துப்
பெருவரைத்தோ ளருளுவதற் கிருளிடைத் தமியையாய்க்
கதிர்வளைத்தோள் கதிர்ப்பிக்குங் காதலுங் காதலோ ;
செய்யுளியல் அசையடி முன்ன"
"பாங்கனையே வாயிலாப் பலகாலும் வந்தொழுகுந்
தேங்காத கரவினையுந் தெளியாத விருளிடைக்கட்
குடவரைவேய்த் தோளிணைகள் குளிர்ப்பிப்பான் றமியையாய்த்
தடமலர்த்தா ரருளுநின் றகுதியுந் தகுதியோ" ; - இவை மூன்றுந் தாழிசை.

"தாதுறு முறிசெறி தடமல ரிடையிடை தழலென விரிவன பொழில்
போதுறு நறுமலர் புதுவிரை தெரிதரு கருநெய்தல் விரிவன கழி
தீதுறு திறமறு கெனநனி முனிவன துணையொடு பிணைவன துறை
மூதுறு மொலிகலி நுரைதரு திரையொடு கழிதொடர் புடையது கடல்" - இவை நான்கும் அராகம்.

"கொடுந்திற லுடையன சுறவேறு கொட்பதனால்
இடுங்கழி யிராவருதல் வேண்டாவெண் றுரைத்திலமோ
"கருநிறத் துறுதொழிற் கராம்பெரி துடைமையால்
இருணிறத் தொருகான லிராவார லென்றிலமோ" ; இவை நாற்சீர் ஈரடி இரண்டு அம்போதரங்கம்.

"நாணொடு கழிந்தன்றாற் பெண்ணரசி நலத்தகையே
துஞ்சலு மொழிந்தன்றாற் றொடித்தோளி தடங்கண்ணே
அரற்றொடு கழிந்தன்றா லாரிருளு மாயிழைக்கே
நயப்பொடு கழிந்தன்றா னனவனு நன்னுதற்கே" ; இவை நாற்சீர் ஓரடி நான்கு அம்போதரங்கம்.

"அத்திறத்தா லசைந்தன தோள்
அலரதற்கு மெலிந்தன கண்
பொய்த்துரையாற் புலர்ந்தது முகம்
பொன்னிறத்தாற் போர்த்தன முலை
அழலினா லசைந்தது நகை
அணியினா லொசிந்த திடை
குழலினா னிமிர்ந்தது முடி

குறிப்பு

குறையினாற் கோடிற்று நிறை;'' இவை முச்சீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்.

''உட்கொண்ட தகைத்தொருபால்
உலகறிந்த வலத்தொருபால்
கட்கொண்ட றுளித்தொருபால்
கழிவெய்தும் படிற்றொருபால்
பரிவுறூஉந் தகைத்தொருபால்
படர்வுறூஉம் பசப்பொருபால்
இரவுறூஉந் துயரொருபால்
இளிவந்த வெளிற்றொருபால்
மெலிவுவந் தலைத்தொருபால்
விளர்ப்புவந் தடைந்தொருபால்
பொலிவுசென் றகன்றொருபால்
பொறைவந்து கூர்ந்தொருபால்
காதலிற் கதிர்ப்பொருபால்
கட்படாத் துயரொருபால்
ஏதில்சென் றணைந்தொருபால்
இயனாணிற் செறித்தொருபால''. - இவை இருசீர் ஓரடிப் பதினாறு அம்போதரங்கம்.

எனவாங்கு, - இது தனிச்சொல்.

''இன்னதிவ் வழக்க மித்திற மிவணலம்
என்னவு முன்னாட் டுன்னா யாகிக்
கலந்த வண்மையை யாயினு நலந்தகக்
கிளையொடு கெழீஇய தளையவிழ் கோதையைக்
கற்பொடு காணிய யாமே
பொற்பொடு பொலிகநும் புணர்ச்சி தானே.'' - இது சுரிதகம்.

இ∴து ஆறுறுப்புங் குறைவின்றி வந்த வண்ணகவொத் தாழிசைக் கலிப்பா.

**கலிவெண்பா:**

கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும்,வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி முச்சீரான் அமையுமெனின் அது வெண்கலிப்பா என்றும் கலிவெண்பா என்றும் வழங்கப்படும். 'விசையறு சிந்தடி' என்று சிறப்பித்த வதனால் வேற்றுத் தளை தட்டு அருகியும் வரப்பெறும்.

''வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்கக்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்

குறிப்பு

வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் வையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.'' - தன்றளையானும் துள்ளலோசையானும் வந்து ஈற்றடி முச்சீராய் வெண்பாப்போல முடிந்தமையான் வெண்கலிப்பா.

''சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா லில்லுளே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.'' - இது வெள்ளோசை தழுவி வெண்டளை தட்டுச் சிந்தடியா லிற்று ஒரு பொருண்மேல் வந்தமையாற் கலிவெண்பா.

**கொச்சகக்கலிப்பா:**

ஒரு தரவு வந்தும், தரவு இரண்டாய் வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும். தரவு தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறுறுப்பும் தம்முள் மயங்கியும், வெண்பாவினோடும் ஆசிரியத்தினோடும் மயங்கியும் வருவன எல்லாம் கொச்சகக்கலிப்பாவாம்.

''மரபே'' என்று சிறப்பித்தவதனால் வரலாற்று முறைமையோடுங் கூட்டிக் கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும் உறழ்ந்தும் மயங்கியும் வண்ணமும் அடியும் தொடையும் மயங்கியும் கலியுள் வாராவென்ற நேரீற்று இயற்சீரும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீரும் ஐஞ்சீரடியும் வந்து ஒத்தாழிசைக் கலிப்பாவினோடு ஒவ்வாது வேறுபட்டு வருவனவெல்லாம் கொச்சகக் கலிப்பா என்று வழங்கப்படும்.

கொச்சகம் : "பல கோடுபட அடுக்கியுடுக்கும் உடையினைக் கொச்சகம் என்ப; அது போலச் சிறியவும் பெரியவும் விராய் அடுக்கியும் தம்முள் ஒப்ப அடுக்கியும் செய்யப்படும் பாட்டதனைக் கொச்சகம் என்றார். இக்காலத்தார்

அதனைப் பெண்டிர்க்குரிய உடையுறுப்பாக்கியும் கொய்ச்சகம் என்று சிதைத்தும் வழங்குப'' (தொல். பொருள். சூ. 464, பேரா.)

குறிப்பு

**கொச்சகச்கலிப்பாவின் வகை:**

ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டு வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வந்தால் சி∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் ப∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும்" தரவு, தாழிசை முதலாகிய ஆறு உறுப்பும் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தோடும் மயங்கியும் வருவன வெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும்

''செல்வப்போர்க் கதக் கண்ணன்'' - என்பது தனிச்சொல்லும் சுரிதகமும் இல்லாத தன்றளையான் வந்த தரவு கொச்சகக் கலிப்பா.

''குடநிலைத் தண்புறவிற்......சென்றவாறே'' என்பது தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தால் இற்ற தரவு கொச்சகக் கலிப்பா.

''வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனாம்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே''- இது தரவு.

எனவாங்கு, - இது தனிச்சொல்.

''துணைவளைத்தோ ளிவண்மெலியத் தொன்னலந் துறப்புண்டாங்
கிணைமலர்த்தா ரருளுமே லிதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார் துணையாகக் கருதாரோ.'' இது தரவு.

அதனால், - இது தனிச்சொல்.

''செவ்வாய்ப் பேதை யிவடிறத்
தெவ்வா றாங்கொலி∴. தெண்ணிய வாறே'' இது சுரிதகம்.

இ∴து இடையிடை தனிச்சொற் பெற்றுச் சுரிதகத்தால் இற்ற தரவிணைக் கொச்சகக்கலிப்பா.

''பரூஉத்தடக்கை மதயானைப் பணையெருத்தின் மிசைத்
தோன்றிக், குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க் குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் றோரினொடும் பரந்துலவு மறுகினிடைக்
கொடித்தானை யிடைப்பொலிந்தான் கூடலார் கோமானே''. - இதுதரவு.

ஆங்கொருசார், - இது தனிச்சொல்.

''உச்சியார்க் கிறைவனா யுலகெலாங் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூட் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே.

ஆங்கொருசார்,

அக்கால மணிநிரைகாத் தருவரையாற பகைதவிர்த்து

குறிப்பு

வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்
சக்கரங் காணாத காரணத்தால் சமழ்த்தனரே.
ஆங்கொருசார்,
மால்கொண்ட பகைதணிப்பான் மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங் கொடியவனாப் பாவித்தார்
வேல்கண்ட தின்மையால் விம்மிதராய் நின்றனரே''. - இவை மூன்றுந் தாழிசை.

அ∴தான்று, - இது தனிச்சொல்.

''கொடித்தே ரண்ணல் கொற்கைக் கோமான்
நின்றபுக ழொருவன் செம்பூட் சேஎய்
என்றுநனி யறிந்தனர் பலரே தானும்
ஐவரு ளொருவனென் றறிய லாகா மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.''

'தரவே தரவிணை'' இ∴து இடையிடை தனிச்சொற் பெற்று நான்கடித் தரவு ஒன்றும், மூன்றடித் தாழிசை மூன்றும், சுரிதகமுமாய் நேரிசை யொத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டுத் தன்றளையான் வந்தமையாற் சி∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா.

''தண்மதியோர் முகத்தாளைத் தனியிடத்து நனிகண்டாங்
குண்மதியு முடைநிறையு முடன்றளர முன்னாட்கட்
கண்மதியொப் பிவையின்றிக் காரிகையை நிறைகவர்ந்து
பெண்மதியின் மகிழ்ந்தநின் பேரருளும் பிறிதாமோ. இது தரவு.
இளநல மிவள்வாட விரும்பொருட்குப் பிரிவரயேல்
தளநல முகைவெண்பற் றாழ்குழ றளர்வாளோ.
தகைநல மிவைவாடத் தரும்பொருட்குப் பிரிவாயேல்
வகைநல மிவள்வாடி வருந்தியில் லிருப்பாளோ.
அணிநல னிவள்வாட வரும்பொருட்குப் பிரிவாயேல்
மணிநலன் மகிழ்மேனி மாசொடு மடிவாளோ.
"நாம்பிரியோ மினியென்று நறுநுதலைப் பிரிவாயேல்
ஓம்பிரியோ மெனவுரைத்த வுயர்மொழியும் பழுதாமோ.
"குன்றளித்த திரடோளாய் கொய்புனத்தற் கூடியநாள்
அன்றளித்த வருண்மொழியா லருளுவது மருளாமோ.
"சில்பகலு மூடியக்காற் சிலம்பொலிச்சீ றடிபரவிப்
பல்பகலுந் தலையளித்த பணிமொழியும் பழுதாமோ.'' இவை ஆறும் தாழிசை.

அதனால், - இது தனிச்சொல்.

“அரும்பெற லிவளினுந் தரும்பொரு ளதனினும்
பெரும்பெற லரியன வெறுக்கையு மற்றே
விழுமிய தறிமதி வாழி
தழுவிய காதலிற் றரும்பொருள் சிறிதே.’’ இது சுரிதகம்.

இது நான்கடித் தரவும் இரண்டடித் தாழிசை ஆறும் தனிச் சொல்லும் நான்கடிச் சுரிதகமும் பெற்று வந்த ப.்.றாழிசைக் கொச்சகக் கலிப்பா.

குறிப்பு

‘‘மணிகிளர் நெடுமுடி மாயவனுந் தம்முனும்போன்
றணிகிளர் நெடுங்கடலுங் கானலுந் தோன்றுமால்
நுரைநிவந் தவையன்ன நொய்ப்பறைய சிறையன்னம்
இரைநயந் திரைகூரு மேமஞ்சார் துறைவகேள்.
“மலையென மழையென மஞ்செனத் திரைபொங்கிக்
கனலெனக் காற்றெனக் கடிதுவந் திசைப்பினும்
விழுமியோர் வெகுளிபோல் வேலாழி யிறக்கலா
தெழுமுன்னீர் பரந்தொழுகு மேமஞ்சார் துறைவகேள். இவை இரண்டும் தரவு.

‘‘கொடிபுரையு நுழைநுசுப்பிற் குழைக்கமர்ந்த திருமுகத்தோள்
தொடிநெகிழ்ந்த தோள்கண்டுந் துறவலனே யென்றியால்.
“கண்கவரு மணிப்பைம்பூட் கயில்கவைஇய சிறுபுறத்தோள்
தெண்பனிநீ ருகக்கண்டுந் 12திரியலனே யென்றியால்,
நீர்பூத்த நிரையிதழ்க்க ணின்றொசிந்த புருவத்தோள்
பீர்பூத்த நுதல்கண்டும் பிரியலனே யென்றியால்.
“கனைவரல்யாற் றிகுகரைபோற் கைநில்லா துண்ணெகிழ்ந்து
நினையுமென் னிலைகண்டும் நீங்கலனே யென்றியால்.
“கலங்கவிழ்ந்த நாய்கன்போற் களைதுணை பிறிதின்றிப்
புலம்புமென் னிலைகண்டும் போகலனே யென்றியால்.
“வீழ்சுடரி னெய்யேபோல் விழுமநோய் பொறுக்கலாத்
தாழுமென் னிலைகண்டும் தாங்கலனே யென்றியால்.’’ - இவை ஆறும் ஈரடித் தாழிசை.

அதனால் ,- இது தனிச்சொல்.

“அடும்பம லிறும்பி னெடும்பனை மிசைதொறுங்
கொடும்புற மடலிடை யொடுங்கின குருகு.
“செறிதரு செருவிடை யெறிதொழி லிளையவர்
நெறிதரு புரவியின் மறி தருந் திமில்.
“அரைசுடை நிரைபடை விரைசெறி முரசென
நுரைதரு திரையொடு கரைபொருங் கடல்.
“அலங்கொளி ரவிச்சுட ரிலங்கொளி மறைதொறுங்

குறிப்பு

கலந்தெறி காலொடு புலம்பின பொழில்.'' இவை நான்கும் அராகம்.

"விடாஅது கழலுமென் வெள்வளையுந் தவிர்ப்பாய்மன்

கெடாஅது பெருகுமென் கேண்மையு நிறுப்பாயோ.

"ஒல்லாது கழலுமென் னொளிவளையுந் தவிர்ப்பாய்மன்

நில்லாது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

"தாங்காது கழலுமென் றகைவளையுந் தவிர்ப்பாய்மன்

நீங்காது பெருகுமென் னெஞ்சமு நிறுப்பாயோ.

"மறவாத வன்பினேன் மனனிற்கு மாறுரையாய்

துறவாத தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.

"காதலார் மார்பன்றிக் காமக்கு மருந்துரையாய்

ஏதிலார் தலைசாய யானிற்கு மாறுரையாய்.

"இணைபிரிந்தார் மார்பின்றி யின்பக்கு மருந்துரையாய்

துணைபிரிந்த தமருடையேன் றுயர்தீரு மாறுரையாய்.'' இவை ஆறுத் தாழிசை.

எனவாங்கு, - இது தனிச்சொல்.

"பகைபோன் றதுதுறை

பரிவா யினகுறி

நகையிழந் ததுமுகம்

நனிவாடிற் றுடம்பு

தகையிழந் தனதோள்

தலைசிறந் ததுதுயர்

புகைபரந் ததுமெய்

பொறையா யிற்றுயிர். - இவை இருசீர் ஓரடி எட்டு அம்போதரங்கம்.

அதனால், - இது தனிச்சொல்.

"இனையது நினையா லனையது பொழுதால்

நினையல் வாழி தோழி தொலையாப்

பனியொடு கழிக வுண்கண்

என்னொடு கழிகவித் துன்னிய நோயே.''

இது சுரிதகம்.

இது தரவு இரண்டும், தாழிசை ஆறும், தனிச்சொல்லும் அராகம் நான்கும், பெயர்த்தும் ஆறு தாழிசையும், தனிச்சொல்லும், எட்டம்போதரங்க வுறுப்பும், தனிச்சொல்லும் பெற்று நான்கடிச் சுரிதகத்தால் இற்றுக் கலிக்கு ஓதப்பட்ட ஆறுறுப்பும் மிக்குங் குறைந்தும் பிறழ்ந்தும். உறழ்ந்தும் மயங்கியும் வந்தமையால் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா.

## 13.3 கலிப்பாவின் இனம்:

அடிவரை யின்றி அளவொத்து அந்தடி நீண்டிசைப்பின்

கடிதலில் லாக்கலித் தாழிசை யாகும் கலித்துறையே
நெடிலடி நான்கா நிகழ்வது நேரடி ஈரிரண்டாய்
விடின் அதுவாகும் விருத்தம் திருத்தகு மெல்லியலே.

கலித்தாழிசையும் கலித்துறையும் கலிவிருத்தமும் உணர்த்திற்று,

குறிப்பு

**கலித்தாழிசை:**

இரண்டடி முதலாய்ப் பலவடியானும் வந்து ஈற்றடி மிக்கு ஏனையடி தம்முள் அளவொத்தும் ஒவ்வாதும் வருமெனின் அது கலித்தாழிசை எனப்படும். அளவொத்தும் என்ற உம்மையால் ஈற்றடி மிக்கு அல்லாத வடி அளவொத்தும் ஒவ்வாதும் வரப்பெறும் என்பது தெரியவருகிறது.

'கடித லில்லாக் கலித்தாழிசை'' என்று சிறப்பித்தவதனால் அவை ஒருபொருண்மேல் மூன்றடுக்கி வருவது சிறப்புடைத்துத்தாகும். தனியே வரப்பெறுமாயினும் ஏற்றுக் கொள்ளப்பெறும்.

''கொய்தினை காத்துங் குளவி யடுக்கத்தெம்
பொய்தற் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்''
"ஆய்தினை காத்து மருவி யடுக்கத்தெம்
மாசில் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்''
"மென்றினை காத்து மிகுபூங் கமழ்சாரற்
குன்றச் சிறுகுடி வாரனீ யைய நலம்வேண்டில்.''

இவை இரண்டடியாய் ஈற்றடி மிக்கு ஒரு பொருண் மேல் மூன்றடுக்கி வந்தமையாற் கலித்தாழிசை.

''வாள்வரி வேங்கை வழங்குஞ் சிறுநெறியெங்
கேள்வரும் போழ்தி னெழால்வாழி வெண்டிங்காள்
கேள்வரும் போழ்தி 4னெழாதாய்க் குறாலியரோ
நீள்வரி நாகத் தெயிறே வாழி வெண்டிங்காள்''

இது ஈற்றடி மிக்கு ஏனையடி மூன்றும் ஒத்துத் தனியே வந்த கலித்தாழிசை.

"பூண்ட பறையறையப் பூத மருள
நீண்ட சடையா னாடுமே
நீண்ட சடையா னாடு மென்ப
மாண்ட சாயல் மலைமகள் காணவே காணவே.''

இ∴து இரண்டாமடி குறைந்து, ஈற்றடி மிக்கு முதலடியும் மூன்றாமடியும் ஒத்து வந்தமையால், ஈற்றடி மிக்கு, ஏனையடிகள் ஒவ்வாது வந்த கலித்தாழிசை.

**கலித்துறை::**

கலிப்பாவின் பொது இலக்கணங்களைப் பெற்று ஐஞ்சீரடி நான்காய் ஒத்து வருவது கலித்துறை எனப்படும்.

குறிப்பு

"யானுந் தோழியு மாயமு மாடுந் துறைநண்ணித்
தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான்
செய்யுளியல் " அடிவரை யின்றி "
தேனும் பாலும் போல்வன சொல்லிப் பிரிவானேற்
கானும் புள்ளுங் கைதையு மெல்லாங் கரியன்றே."
"வென்றான் வினையின் ....நீங்கி நின்றார்."
இவை நெடிலடி நான்காய் வந்தமையாற் கலித்துறை.

**கலிவிருத்தம்:** கலிப்பாவின் பொது இலக்கணங்களைப் பெற்று நாற்சீரடி நான்காய் வருமெனின் அது கலிவிருத்தம் எனப்படும்.

"வேய்தலை நீடிய வெள்ளி விலங்கலின்
ஆய்தலி னொண்சுட ராழியி னான்றமர்
வாய்தலி னின்றனர் வந்தென மன்னன்முன்
நீதலை நின்றுரை நீள்கடை காப்போய்,
இவை நாற்சீர் நாலடியாய் வந்தமையாற் கலிவிருத்தம்.
"தேம்பழுத் தினிய......தவள மாடமே."
இவை நாற்சீர் நாலடியாய் வந்தமையாற் கலிவிருத்தம்.

### 13.3.1 உதாரண முதனினைப்புக் காரிகை:

கொய்நினை யாய்தினை மென்றினை வாள்வரி பூண்ட பறை
எய்திய தாழிசை யானும்வென் 9றானுங் கலித்துறையே
மைதிக ழோதி வடிவே னெடுங்கண் வனமுலையாய்
மெய்திகழ் வேய்தலை தேம்பழுத் தென்ப விருத்தங்களே.

## 13.4 வஞ்சிப்பாவின் இனம்:

குறளடி நான்கின் மூன்றொரு தாழிசை கோதில் வஞ்சித்
துறையொரு வாது தனிவருமாய்விடில் சிந்தடி நான்கு
அறைதரு காலை அமுதே விருத்தம் தனிச்சொல் வந்து
மறைதலில் வாரத்தினால் இறும் வஞ்சி வஞ்சிக்கொடியே

**வஞ்சித் தாழிசை:**

வஞ்சிப்பாவின் இலக்கணங்களைப் பெற்று இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் மூன்றக்கி வந்தமையால் வஞ்சித் தாழிசை எனப்படும்.

இடைச்சுர மிறந்தார்க்கே
நடக்குமென் மனனேகாண்.
"பேடையை யிரும்போத்துத்
தோகையால் வெயின்மறைக்கும்
காடக மிறந்தார்க்கே
ஓடுமென் மனனேகாண்.
"இரும்பிடியை யிகழ்வேழம்

பெருங்கையான் வெயின்மறைக்கும்
அருஞ்சுர மிறந்தார்க்கே
விரும்புமென் மனனேகாண்."

இவை இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் மூன்றக்கி வந்தமையால் வஞ்சித் தாழிசை.

குறிப்பு

**வஞ்சித்துறை:**

வஞ்சிப்பாவின் இலக்கணங்களைப் பெற்று இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்றே வரின் அது வஞ்சித்துறை எனப்படும்.

"மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் கரதலர்
மெய்சிறந்திலர் விளங்கிழாய்."

"திரைத்த சாலிகை.....................மாலையாய்." (கா. 13, மேற்.)

இவை இருசீரடி நான்கினால் ஒரு பொருண்மேல் தனியே வந்தமையால் வஞ்சித்துறை எனப்படும்.

**வஞ்சி விருத்தம்:**

வஞ்சிப்பாவின் இலக்கணங்களைப் பெற்று முச்சீரடி நான்காய் வருவது வஞ்சிவிருத்தம் எனப்படும்.

"சோலை யார்ந்த சுரத்திடைக்
காலை யார்கழ லார்ப்பவும்
மாலை மார்பன் வருமாயின்
நீல வுண்க ணிவள்வாழும்."

"இருது வேற்றுமை .......கையினாய்." (கா. 13, மேற்.)

இவை சிந்தடி நான்காய் வந்தமையான் வஞ்சிவிருத்தம்.

**குறளடி வஞ்சிப்பா – சிந்தடி வஞ்சிப்பா:**

குறளடி வஞ்சிப்பாவும் சிந்தடி வஞ்சிப்பாவும் தனிச் சொற் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால்
வரும்.

"மறைதலில் வாரம்" என்று சிறப்பித்தவதனால் வஞ்சிப்பா ஆசிரியச் சுரிதகத்தால் வருவது அல்லது வெள்ளைச் சுரிதகத்தால் வாராது என்பது பெறப்படும்.

"பூந்தாமரை...........பெருவண்மையனே" (கா. 9. மேற்.) என்னும் குறளடி வஞ்சிப்பா நாளுமென்னும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் வந்தது.

"கொடிவாலன குருநிறத்தன குறுந்தாளன

குறிப்பு

வடிவாளெயிற் றழலுளையன வள்ளுகிரன
பணையெருத்தி னிணையரிமா னணையேந்தத்
துணையில்லாத் துறவுநெறிக் கிறைவனாகி
எயினடுவ ணினிதிருந் தெல்லோர்க்கும்
பயில்படுவினைப் பத்திமையாற் செப்பினோன்
புனையெனத்
திருவுறு திருந்தடி திசைதொழ
விரிவுறு நாற்கதி வீடுநனி யெளிதே.''

இச்சிந்தடி வஞ்சிப்பா, புணையென" என்னும் தனிச்சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் வந்தது.

"தொன்னலத்தின்............சேணிவந்தற்றே'' (கா. 23. மேற்.) என்னும் சிந்தடி வஞ்சிப்பா" எனப் பெரிதும்" என்னும் தனிச் சொற் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் வந்தது.

## 13.5 உதாரண நினைப்புக் காரிகை:

"மடப்பிடி பேடை யிரும்பிடி வஞ்சியின் றாழிசையாம்
வடுப்புரை கண்ணினல் லாய்மை சிறந்தன வான்றுறையாம்
தடப்பெருஞ் சோலை விருத்தம தாகுந் தயங்குவஞ்சிக்
கொடித்தொடி பூந்தா மரைகொடி வால னுதாரணமே.''

## 13.6 மருட்பா:

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்து
ஒண்பாச் செவியறிவு என்றுஇப் பொருண்மிசை ஊனமில்லா
வெண்பா முதல்வந்து அகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பால் மொழிமடவாய் மருட்பா என்னும் வையகமே.

புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம் என்னும் நான்கு பொருண்மேலும் வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வருமெனின் அதனை மருட்பா என்று வழங்குவர் புலவர்."பண்பார் புறநிலை'' என்றும், "ஒண்பாச் செவியறிவு" என்றும் சிறப்பித்தவதனால், புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெண்பாவேயாயும் ஆசிரியமேயாயும் வரப்பெறும்; கலியும் வஞ்சியுமாய் வரப்பெறாது.

ஊனமில்லா வெண்பா" என்று சிறப்பித்தவதனால் வேற்று வண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத்தாய் மங்கல மரபிற்றாய் அவ்வாறே வேற்றுத் தளையும் அடியும் விரவாமையின் எல்லாப் பாவினுள்ளும் வெண்பாச் சிறப் புடைத்தென்று முன்வைக்கப்பட்டது என்பது வெளிப்போந்து நிற்கும்.

குறிப்பு

**புறநிலை வாழ்த்து மருட்பா**

“வழிபடு தெய்வ நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்
பொலிமி னென்னும் புறநில வாழ்த்தே - எனத் தொல்காப்பியம் இதற்கு இலக்கணம் வகுக்கும்.

‘‘தென்ற லிடைபோழ்ந்து தேனார் நறுமுல்லை
முன்றின் முகைவிரியு முத்தநீர்த் தண்கோள்ர்க்
குன்றமர்ந்த கொல்லேற்றா னிற்காப்ப வென்றுந்
தீரா நண்பிற் றேவர்
சீர்சால் செல்வமொடு பொலிமதி சிறந்தே:’’

இது வழிபடு தெய்வம் நிற் புறங்காப்பப் பழிதீர் செல்வ மொடு ஒருகாலக் கொருகால் சிறந் பொலிவாய்“ என்றமையால் புறநிலை வாழ்த்து மருட்பா.

**கைக்கிளை மருட்பா**

காட்சி முதலாக் கலவியி னொருதல
வேட்கயிற் புலம்புதல் கக்கிள யதான்
கேட்போ ரில்லாக் கிளவிகள் பெறுமே – என்பது இதன் இலக்கணம்.

‘‘திருநுதல் வேர்வரும்புந் தேங்கோத வாடும்
இருநிலஞ் சேவடியுந் தோயும் அரிபரந்த
போகித முண்கணு மிமக்கும்
ஆகு மற்றிவ ளகலிடத் தணங்கே.’’ (பு. வெ. 287.)

இது துணிதலை நுதலிய ஒருதலைக் காமம் ஆதலாற் கைக்கிளை மருட்பா.

**வாயுற வாழ்த்து மருட்பா:**

வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொற்
றாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றோம்படைக் கிளவியின் வாயுறுத் தன்றே (பொருள், சூ. 424.) என்றார் தொல்காப்பியனார்.

‘‘பலமுறயு மோம்பப் படுவன கேண்மின்
சொலன்முறக்கட் டோன்றிச் சுடர்மணித்தே ரூர்ந்
நிலமுறயி னாண்ட நிகரில்லார் மாட்டும்
சிலமுறை யல்லது செல்வங்க ணில்லா
இலங்கு மெறிபடையு மாற்றலு மன்பும்
கலந்ததங் கல்வியுந் தோற்றமு மேனைப்
பொலஞ்செய் புனைகலனோ டிவ்வாற னாலும்
விலங்கிவருங் கூற்றை விலக்கலு மாகா
அனைத்தாத னீவிருங் காண்டிர் - நினைத்தக்க

குறிப்பு

கூறிய வெம்மொழி பிறழாது
தேறிநீ ரொழுகிற் சென்றுபயன் றருமே''. - இது மெய்ப்பொருளே சொன்னமையால் வாயுறை வாழ்த்து மருட்பா.

**செவியுறை:**

செவியுறைதானே,
பொங்குத லின்றிப் புரையோர் நாப்பண்
அவிதல் கடனெனச் செவியுறுத் தன்றே" (பொருள். சூ. 426.) என்பது தொல்காப்பியனார்.

''பல்யானை மன்னர் முருங்க வமருழந்து
கொல்யானை தேரொடுங் கோட்டந்து நல்ல
தலையாலங் கானம் பொலியத் தொலையாப்
படுகளம் பாடுபுக் காற்றிப் பகைஞர்
அடுகளம் வேட்டோன் மருக வடுதிறல்
ஆளி நிமிர்தோட் பெருவழுதி யெஞ்ஞான்றும்
ஈர முடையையா யென்வாய்ச்சொற் கேட்டி
வருங்கா லுழவர்க்கு வேளாண்மை செய்யல்
மழவ ரிழைக்கும் வரைக்கா ணிதியீட்டம்
காட்டு மமைச்சரை யாற்றத் தெளியல்
அமைத்த வரும்பொரு ளாறன்றி வெளவல்
இனத்தைப் பெரும்பொரு ளாசையாற் சென்று
மன்ற மறுக வகழாதி யென
மறப்புற மாக மதுரையா ரோம்பும்
அறப்புற மாசைப் படேற்க வறத்தால்
அவையார் கொடுநாத் திருத்தி நவையாக
நட்டார் குழிசி சிதையாதி யொட்டர்
செவிபுதைக்குந் தீய கடுஞ்சொற் கவியுடைத்தாய்க்
கற்றார்க் கினனாகிக் கல்லார்க் கடிந்தொழுகிச்
செற்றார்ச் செறுத்துநிற் சேர்ந்தாரை யாக்குதிநீ
அற்ற மறிந்த வறிவினாய் - மற்றும்
இவையிவை வீயா தொழுகி னிலையாப்
பொருகட லாடை நிலமகள்
ஒருகுடை நீழற் றுஞ்சுவண் மன்னே.'' இது வியப்பின்றி உயர்ந்தோர்கண் அவிந்தொழுகல் கடனென்று அரசர்க்கு உரைத்தமையாற் செவியறிவுறூஉ மருட்பா.

"புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதிற் றெரியின்

வெண்பா வியலினு மாசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வென்ப'' (பொருள். சூ. 473. என்றார் தொல்காப்பியனார்.

**13.6.1 உதாரண முதல் நினைப்புக் காரிகை:**

குறிப்பு

தென்ற லிடையுந் திருநுதல் வேர்வும் பலமுறையென்
றொன்றிய பாவும்பல் யானையு மென்பவொண் போதமர்ந்த
பொன்றிக ழோதி புறநிலை கைக்கிளை வாயுறைவாழ்த்
தென்றிவற் றிற்குஞ் செவியறி விற்கு மிலக்கியமே."

## 13.7 செய்யுளியல் முதனினைப்புக் காரிகை

வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையே
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
நண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்ப பாவலரே.

**பயிற்சி வினாக்கள்:**

**1.**அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா குறித்து எழுதுக.

.கரைசேரக் கரைசேரக் சுருங்கிவரும் நீர்த் தரங்கமே போல நாற்சீரடியும், முச்சீரடியும், இருசீரடியுமாகிய அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச்சொற்கும் நடுவே கொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல். சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புடைத்தாய் அவைசொன்ன தன்மையின் திரியாது வருமெனின் அது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என்று வழங்கப்படும்

அம்போதரங்கம் - நீர்அலை. தோன்றுமிடத்துப் பெரிதாக இருந்து கரையைச் சேரச் சேரச் குறைந்து போவது அலையின் இயல்பு. அதனைப் போன்றது அம்போதரங்கம் என்னும் உறுப்பு. அம்போதரங்க உறுப்பு எனினும், அசையடி எனினும் பிரிந்திசைக்குறள் எனினும், சொற்சீரடி எனினும், எண் எனினும் ஒனறேயாம்.

2.கொச்சகக்கலிப்பாவின் வகைகள் யாவை?

ஒரு தரவு வந்தால் தரவு கொச்சகக் கலிப்பா என்றும், தரவு இரண்டு வந்தால் தரவிணைக் கொச்சகக் கலிப்பா என்றும், சில தாழிசை வந்தால் சி∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும், பல தாழிசை வந்தால் ப∴றாழிசைக் கொச்சகக் கலிப்பா என்றும்" தரவு, தாழிசை முதலாகிய ஆறு உறுப்பும் தம்முள் மயங்கியும் வெண்பாவினோடும் ஆசிரியத்தோடும் மயங்கியும் வருவன வெல்லாம் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா என்றும் வழங்கப்படும்.

3.கலிவெண்பாவினைச் சான்று காட்டி நிறுவுக.

குறிப்பு

கலித்தளை தட்டுக் கலியோசை தழுவியும்,வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி முச்சீரான் அமையுமெனின் அது வெண்கலிப்பா என்றும் கலிவெண்பா என்றும் வழங்கப்படும். ‘விசையறு சிந்தடி’ என்று சிறப்பித்த வதனால் வேற்றுத் தளை தட்டு அருகியும் வரப்பெறும்.

வாளார்ந்த மழைத்தடங்கண் வனமுலைமேல் வம்பனுங்க்
கோளார்ந்த பூணாகங் குழைபுரளக் கோட்டெருத்தின்
மாலைதாழ் கூந்தலார் வரன்முறையான் வந்தேத்தச்
சோலைதாழ் பிண்டிக்கீழ்ச் சூழ்ந்தவர்தஞ் சொன்முறையான்
மனையறமுந் துறவறமு மண்ணவர்க்கும் விண்ணவர்க்கும்
வினையறுக்கும் வகைதெரிந்து வீடொடுகட் வையுரைத்த
தொன்மைசால் கழிகுணத்தெந் துறவரசைத் தொழுதேத்த
நன்மைசால் வீடெய்து மாறு.“ - தன்றளையானும் துள்ளலோசையானும் வந்து ஈற்றடி முச்சீராய் வெண்பாப்போல முடிந்தமையான் வெண்கலிப்பா.

சுடர்த்தொடீஇ கேளாய் தெருவினா மாடும்
மணற்சிற்றில் காலிற் சிதையா வடர்ச்சியபொற்
கோதை பரிந்து வரிப்பந்து கொண்டோடி
நோதக்க செய்யுஞ் சிறுபட்டி மேலோர்நாள்
அன்னையும் யானு மிருந்தேமா லில்லுளே
உண்ணுநீர் வேட்டே னெனவந்தாற் கன்னை
அடர்பொற் சிரகத்தால் வாக்கிச் சுடரிழாய்
உண்ணுநீ ரூட்டிவா வென்றா ளெனயானும்
தன்னை யறியாது சென்றேன்மற் றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்
டன்னா யிவனொருவன் செய்ததுகா ணென்றேனா
அன்னை யலறிப் படர்தரத் தன்னையான்
உண்ணுநீர் விக்கினா னென்றேனா வன்னையும்
தன்னைப் புறம்பழித்து நீவமற் றென்னைக்
கடைக்கண்ணாற் கொல்வான்போ னோக்கி நகைக்கூட்டஞ்
செய்தானக் கள்வன் மகன்.“ - இது வெள்ளோசை தழுவி வெண்டளை தட்டுச் சிந்தடியா லிற்று ஒரு பொருண்மேல் வந்தமையாற் கலிவெண்பா.

4. வஞ்சித்துறை – சுட்டியுரைக்க.

வஞ்சிப்பாவின் இலக்கணங்களைப் பெற்று இருசீரடி நான்காய் ஒரு பொருண்மேல் ஒன்றே வரின் அது வஞ்சித்துறை எனப்படும்.

“மைசிறந்தன மணிவரை
கைசிறந்தன காந்தளும்
பொய்சிறந்தனர் கரதலர்

குறிப்பு

மெய்சிறந்திலர் விளங்கிழாய்.''

“திரைத்த சாலிகை......................மாலையாய்.'' (கா. 13, மேற்.)

இவை இருசீரடி நான்கினால் ஒரு பொருண்மேல் தனியே வந்தமையால் வஞ்சித்துறை எனப்படும்.

5. மருட்பா – விளக்கி வரைக.

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச் செவியறி வென்றிப் பொருண்மிசை யூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவென்னும் வையகமே.

புறநிலை வாழ்த்தும், கைக்கிளையும், வாயுறை வாழ்த்தும், செவியறிவுறூஉம் என்னும் நான்கு பொருண்மேலும் வெண்பா முதலாக ஆசிரியம் ஈறாக வருமெனின் அதனை மருட்பா என்று வழங்குவர் புலவர்.“பண்பார் புறநிலை''என்றும், “ஒண்பாச் செவியறிவு“ என்றும் சிறப்பித்தவதனால், புறநிலை வாழ்த்தும் வாயுறை வாழ்த்தும் செவியறிவுறூஉம் இவ்வாறன்றி வெண்பாவேயாயும் ஆசிரியமேயாயும் வரப்பெறும்; கலியும் வஞ்சியுமாய் வரப்பெறாது.

''ஊனமில்லா வெண்பா'' என்று சிறப்பித்தவதனால் வேற்று வண்ணம் விரவாது வெள்ளை வண்ணம் எல்லா வண்ணத்துள்ளுஞ் சிறப்புடைத்தாய் மங்கல மரபிற்றாய் அவ்வாறே வேற்றுத் தளையும் அடியும் விரவாமையின் எல்லாப் பாவினுள்ளும் வெண்பாச் சிறப் புடைத்தென்று முன்வைக்கப்பட்டது என்பது வெளிப்போந்து நிற்கும்.

# கூறு:14 - யாப்பருங்கலக்காரிகை- ஒழிபியல்

**நோக்கம்: அசை, சீர். தளை, அடி, தொடை போன்றவற்றின் புறனடைகள் - பாக்களின் புறனடை – வனப்பு – வண்ணம் - பொருள்கோள் போன்றவற்றை அறிதல்**

குறிப்பு

## 14.1 எழுத்துக்களின் புறனடை

சீருந் தளையுஞ் சிதையிற் சிறிய இ உ அளபோ
டாரு மறிவ ரலகு பெறாமையை காரநைவேல்
ஒருங் குறிலிய லொற்றள பாய்விடி னோரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிண்முலை வாணுதலே.

உறுப்பியலிலும் செய்யுளியலிலும் சொல்லாது ஒழிந்த பொருளின் இயல்புகளை இது உணர்த்தியமையால் ஒழிபியல் என்னும் பெயர் பெற்றது, சீருந் தளையுங் கெடவந்த விடத்துக் குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் உயிரளபெடையும் அலகு காரியம் பெறாது.

ஒற்றளபாய்விடின் ஓர் அலகாம்“ என்றமையால் ஈண்டு உயிரளபெடையே கொள்ளப்பட்டது. சீரும் தளையும் சிதையிற் சிறிய இ உ அளபோடு அலகு பெறா“ என்னாது “ஆரு மறிவர்“ என்று மிகுத்துச் சொல்லியவதனால் குற்றிய லிகரக் குற்றிய லுகரங்கள் ஒற்றியல்பினவாய் நிற்கும், உயிரள பெடை நெட்டெழுத்தியல்பிற்றாய் நிற்கும், அலகிடுமிடத்து என்பது வெளிப்போந்து நிற்கும்.

“எதிரது மறுத்தல்“ என்னும் இலக்கணத்தாற் சீருந் தளையுந் திருந்த நிற்புழி சிறிய இ உ அளபோடு ஆரும் அறிவர் அலகு பெறுதல் என்பதாயிற்று. சீருந் தளையுங் கெடாமல் வந்த இடத்துக் குற்றியலிகரக் குற்றியலுகரம் உயிரளபெடைகள் அலகு காரியம் பெறும் இன்னும் “ஆரும் அறிவர்“ என்று சிறப்பித்தவதனால் அவை அலகு காரியம் பெறும் பொழுது குற்றியலிகரக் குற்றிய லுகரமும் குற்றெழுத்தின் பயத்தவாய் நின்று அலகு பெறும்.

‘‘சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கா னாளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென் - றுறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉந் தானமன் றென்பவே
வானவா முள்ளத் தவர்.’’

இதனுள், “இன்றிவர்க்கியாம்’’ என்புழிக் குற்றிய லிகரம் வந்து வெண்பாவினுள்ஸவஞ்சி யுரிச்சீராயிற்று. வெண்பாவினுள் வஞ்சியுரிச்சீர் விரவும் என்னும் ஓத்திலாமையால் வெண்பா அழிய நிற்கு மாதலின் ஈண்டுக் குற்றியலிகரத்தை இவ்விலக்கணத்தால் அலகு பெறா தென்று களையச் சீர் சிதையாதாம்.



“குழலினி தியாழினி தென்ப தம்மக்கள்

மழலைச்சொற் கேளா தவர்.''

''அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்

பொருளல்ல தவ்வூன் றினல்.'' இவற்றுட், "குழலினி தியாழினி'' தென்புழி ஆசிரியத்தளையும், "அருளல்ல தியாதெனி'' லென்புழிக் கலித்தளையும் வந்து "வெள்ளைத் தன்மை குன்றிப் போஞ்சீர் கனி புகிற் புல்லாதயற்றளை'' (கா. 38) என்னும் இலக்கணத்தோடு மாறுகொள்ளும் ஆதலான் ஈண்டுக் குற்றிய லிகரத்தை இவ்விலக்கணத்தான் அலகு பெறாது என்று நீக்கச் சீருந் தளையுஞ் சிதையாது.

குறிப்பு

குழ /லினி/ தியா/ ழினி

நி - நி - நி -- நி

கரு விளம் கருவிளம் x ( விளமுன் நிரை )

கரு விளம் கூவிளம் √ ( விள முன் நேர் )

அரு/ ளல் / ல/ தியா/ தெனிற்

நி நே நே – நி நி

புளிமாங்காய் - கருவிளம் x ( காய் முன் நிரை )

புளிமாங்காய் - கூவிளம் √ ( காய் முன் நேர் )

வஞ்சிப்பா

''கொன்றுகோடுநீடு குருதிபாயவும்

சென்றுகோடுநீடு செழுமலைபொருவன

வென்றுகோடுநீடு விறல்வேழம்

என்றுமூடுநீடு பிடியுளபோலும்அதனால்

இண்டிடை யிரவிவ ணெறிவரின்

வண்டுண் கோதை யுயிர்வா ழலலே''

கொன் / றுகோ /டுநீ/ டு --- குரு/ திபா/ யவும்

நே நி நி நே நி நி நி

கூ விள நறும் பூ -- கரு விளங் கனி

வஞ்சிப்பாவில் நாலசைச்சீர் வந்தாலும் அதனை மூவசை ஆக்கியே தளை கூற வேண்டும் ஆதலால் 'டு " என இறுதியில் நிற்கும் நேரசையை அலகு பெறாமல் செய்வோமாயின் மூவசை ஆகிவிடும்.அதாவது கூவிள நறும்பூ கூவிளங் கனியாகி நிற்க கனி முன் நிரை ஒன்றிய வஞ்சித் தளையாய் நின்றது.

**உயிரளபெடை:**

''பல்லுக்குத் தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்

சொல்லுக்குத் தோற்றின்னுந் 6தோன்றிலவால் - நெல்லுக்கு

நூறோஒநூ றென்பா ணுடங்கிடைக்கு மென்முலைக்கும்

குறிப்பு

மாறோமா லன்றளந்த மண்.''

இதனுள், "நூறோஒ நூ'' றென்புழிப் பண்ட மாற்றின்கண் அளபெடை அநுகரணம் வந்து வெண்பாவினுள் நாலசைச் சீராயிற்று. அவ்வாறு வருதல் ஒத்ததில்லை ஆதலால் இவ்வாறு அலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசை ஊட்டும்பொழுது ஓசை உண்ணாது செப்பலோசை அழிந்து நிற்கும். எனவே உயிரளபெடையை அலகு பெறாதென்று நீக்கி நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடச் சீரும் தளையும் சிதையாவாம்.

வெண்பா

''இடைநுடங்க வீர்ங்கோதை பின்றாழ வாட்கண்
புடைபெயரப் போழ்வாய் திறந்து - கடைகடையின்
உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்
கொப்போநீர் வேலி யுலகு.''

இதனுள் "உப்போஒ'' என்றவழி பண்டமாற்றிக்கண் அளபெடை யனுகரணம் வந்து கலித்தளை தட்டும். அவ்வாறு வரும் இலக்கணம் இல்லாமையால் அலகிட்டு உதாரண வாய்பாட்டால் ஓசை ஊட்டினும் ஓசை உண்ணாது செப்பலோசை அழிந்து வரும். எனவே இங்கு உயிரளபெடையை இவ்விலக்கணத்தால் நெட்டெழுத்தே போலக் கொண்டு அலகிடத் தளை சிதையாதாம்.

இனிக் குற்றிய லிகரக் குற்றியலுகரங்கள் குற்றெழுத்தே போல நின்று அலகு பெறல்:

''வந்துநீ பேரி னுயிர்வாழும் வாராக்கான்
முந்தியாய் பெய்த வளைகழலும் - முந்தியாம்
கோளானே கண்டநங் கோல்குறியா யின்னுமோர்
நாளானே நாம்புணரு மாறு''

இதனுள் "வந்துநீ" என்றவழி குற்றியலுகரமும் "முந்தியாய்" என்றவழி குற்றியலிகரமும் சீர்தளை சிதையாமல் வந்து திருந்தி நிற்றலிற் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகுபெற்றது.

''நடைக்குதிரை யேறி நறுந்தார் வழுதி
அடைப்பையாய் கோறா வெனலும் - அடைப்பையான்,
சுள்ளற் சிறுகோல் கொடுத்தான் றனைப்பெறினும்
கொள்ளாதி யாங்காண் டலை.''

''கெண்டையை வென்ற கிளரொளி யுண்கணாள்
பண்டைய எல்லள் படி.'' இவற்றுள் ஐகாரக் குறுக்கம் குற்றெழுத்தே போலக் குறிலோடும் நெடிலோடுமகூடி நின்று நிரையசை யாயின.

ஒற்றுக்கள் அள பெழுந்தால் நேரசையாம்

''கார்க்கட னீர்த்திரையாய்க் கன்னற்கே கார்வடிவப்

போர்க்களிறு வாளிதொட்ட போது.''

இதனுள் ஈரொற்று உடனிலையாய் நிற்பினுங் குற்றெழுத்தின் பயத்தவாய் அலகு பெறாவெனக் கொள்க.

''எ.·.·. கிலங்கிய கையரா யின்னுயிர்
வெ.·.·. குவார்க்கில்லை வீடு.''

இவற்றுள் ஒற்றும் ஆய்தமும் அளபெழுந்து ஓரலகு பெற்றது.

குறிப்பு

## 14.2 அசையின் புறனடை:

விட்டிசைத் தல்லான் முதற்சுட் டனிக்குறி னேரசையென்
றொட்டப் படாததற் குண்ணா னுதாரண மோசைகுன்றா
நெட்டள பாய்விடி னேர்நேர் நிரையொடு நேரசையாம்
இட்டத்தி னாற்குறில் சேரி னிலக்கிய மேர்சிதைவே.

மேல் பொது வகையாய், தனிக் குறில் நேரசை என்றார் (கா. 1) ஆயினும், விட்டிசைத்து நின்றபொழுதல்லது மொழிக்கு முதற்கண் நின்ற தனிக் குற்றெழுத்து நேரசை யாகாது. எனவே, விட்டிசையாத வழி மொழிமுதற்கண் தனிக்குறில், குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசையாம்.

''உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் - கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்.''

இதனுள் அஆ என்புழி அருளின்கட் குறிப்பாய், விட்டிசைத்துக் குற்றெழுத்துமொழிக்கு முதற்கண் நேரசையாயினவாறும், அல்லாத வழி பிறவற்றின் குறிலோடும் நெடிலோடும் கூடி நிரையசை ஆயின.

விட்டிசைத்தல்லால் முதற்கண் தனிக்குறில் நேரசை யாகாது என்னாது, ஒட்டப்படாது என்று சிறப்பித்தனால் மொழிக்கு மூன்றிடத்தும் விட்டிசைத்து வந்து குற்றெழுத்து நேரசையாம் என்பதும், விட்டிசைத்து நிற்பதுதான் குறிப்பின் கண்ணும், ஏவற் கண்ணும், தற்சுட்டின் கண்ணும், வினாவின் கண்ணும், சுட்டின் கண்ணும் என்பதூம், விட்டிசைத்து வந்த குற்றெழுத்து மற்றோர் எழுத்தினோடு கூடி நிரையசை ஆகாது என்பதும் கொள்ளப்படும்.

நெட்டெழுத்து அளபெடுத்து வருமெனின் அ·.·.து இரண்டு நேரசையாக வைக்கப்படும் .''ஓசை குன்றா'' என்று மிகுத்துச் சொல்லியவதனால் மூன்று மாத்திரையின் மிக உச்சரிப்பினும் நேர் நேராக வைக்கப்படும்.

குற்றெழுத்தினோடு புணர்ந்த நெட்டெழுத் அளபெடுத்து வந்தால் அவை இரண்டினையும் கூட்டிஸ நிரையசையும், நேரசையுமாக வைக்கப்படும்.

''ஏஎர் சிதைய வழாஅ லெலாஅநின்

சேயரி சிந்திய கண்'' என்னும் இப்பாட்டு நேர் நேர் ஆதற்கும், நிரை நேர் ஆதற்கும். இலக்கியம் ஆகும்.இதனுள் “ஏளர்“ என்பது நேர் நேராயிற்று; அழாஅல்'' என்பதும், "எலாஅ'' என்பதும் நிரை நேராயின.“இட்டத்தினால்“ என்று சிறப்பித்தவதனால் பின்பு நின்ற குற்றெழுத்தினோடும் நெட்டெழுத்தினோடும் கூடி அளபெடை நிரையசை ஆகாது என்பதனைத் தெரிதல் வேண்டும்.

குறிப்பு

## 14..3 சீர்க்கும் தளைக்கும் புறனடை:

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்து
ஆஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சீர் மயக்குந் தளையும.'. தேவெள்ளைத் தன்மைகுன்றிப்
போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

தேமா புளிமா என்னும் இரண்டு நேரீற்று இயற்சீரும் கலிப்பாவினுட் புகப்பெறாது. கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீர் இரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறாது.

ஆசிரியப்பாவினுள்ளும் கருவிளங்கனி விளங்கனியென்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் புகப் பெறாது. ஒழிந்த சீர் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்படும்.

நான்கு பாவிற் றளையும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப்படும்.எல்லாச் சீரும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவினுட் புகப்பெறா, புகில் வெள்ளோசை யழிந்து வேறுபட்டு ஓசையுண்ணாது கெடும்..

எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் எல்லாத் தளையும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், வெண்பாவினுள் வெண்சீர் வெண்டளை ஒன்றலும் இயற்சீர் வெண்டளை ஒன்றலும் அல்லது வேற்றுத்தளை விரவாது.

தரவுகொச்சகக் கலிப்பாவினுள் நிரையீற்று ஆசிரிய உரிச்சீரும் நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் புக்கு மயங்கிய வாறு கண்டுகொள்க. நேரீற்று ஆசிரிய உரிச்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வருதலில்லை.

ஆசிரியப்பா

“நெடுவரைச் சாரற் குறுங்கோட்டுப் பலவின்
விண்டுவார் தீஞ்சுளை வீங்குகவுட் கடுவன்
உண்டு சிலம்பேறி யோங்கிய விருங்கழைப்
படிதம் பயிற்று மென்ப

மடியாக் கொலைவி லென்னையர் மலையே.''

இவ்வாசிரியப் பாவினுள் தன்சீரும் வெண்சீரும் நேர் நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, தன்றளையும் வெண்டளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் மயங்கி வந்தமைந்தது. இதனுள் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீர் வாராது அமைந்தது.

குறிப்பு

''மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரும்''(புறநா.2 ) இக்குறளடி வஞ்சிப்பாக்களுள் (2) தன்சீரும் வெண்சீரும் நேரீற்று இயற்சீரும் வந்து வஞ்சித்தளையும் வெண்டளையும், ஆசிரியத்தளையும் கலித்தளையும் விரவி வந்தது.

"முழங்குதிரைக் கொற்கை வேந்தன்.....வேறாபவே'' (கா. 27, மேற்) என்னும்வேற்றொலி வேண்டுறையுள் வஞ்சியுரிச்சீரும் இயற்சீரும் வெண்சீரும் வந்து,வஞ்சித்தளையும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டு மயங்கி வந்தமைந்தது.

கலி விருத்தம்

''வளர்கொடியன மணம்விரிவன மல்லிகையொடு மவ்வல்
நளிர்கொடியன நறுவிரையன நகுமலரன வகுளம்
குளிர்கொடியன குழைமாதவி குவிமுகையன கோங்கம்
ஒளிர்கொடியன 8வுயர்தளிரன வொழுகிணரன வோடை.''

இக்கலிவிருத்தத்துள் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் நேரீற்று இயற்சீரும் வந்து வஞ்சித்தளையும், இயற்சீர் வெண்டளை யும்ஸ மயங்கி வந்தமைந்தது.

## 14.4 அடி மயக்கம்:

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே

இயற்சீர் வெண்டளையான் வந்த வெண்பாவடியும் வஞ்சியடியும் ஆசிரியப்பாவினுள் மயங்கப் பெறும்.

ஆசிரியப்பா

''எறும்பி யளையிற் குறும்பல் சுனைய
உலைக்க லன்ன பாறை யேறிக்
கொடுவில் லெயினர் பகழி மாய்க்குங்
கவலைத் தென்பவவர் தேர்சென்ற வாறே

குறிப்பு

அதுமற் றவலங் கொள்ளாது

நொதுமற் கழறுமிவ் வழங்க லூரே'' (குறுந். 12) இந்நேரிசை யாசிரியப்பாவினுள், ''எறும்பி யளையிற் குறும்பல் சுனைய'' என்பது இயற்றளை வெள்ளடி.

''இருங்கட லுடுத்தவிப் பெருங்கண் மாநிலம்
உடையிலை நடுவண திடைபிறர்க் கின்றித்
தாமே யாண்ட வேமங் காவலர்
இடுதிரை மணலினும் பலரே சுடுபிணக்
காடு பதியாகப் போகித் தத்தம்
நாடு பிறர்கொளச் சென்றுமாய்ந் தோரே
அதனால்,
நீயுங் கேண்மதி யந்தை வீயா
துடம்பொடு நின்ற வுயிரு மில்லை - இயற்றளை வெள்ளடி
''மடங்க லுண்மை மாயமோ வன்றே
கள்ளி வேய்ந்த முள்ளியம் புறங்காட்டு
வெள்ளில் போகிய வியலு ளாங்கண்
உப்பிலாஅ வவிப்புழுக்கல்
கைக்கொண்டு பிறக்குநோக்கா
திழிபிறப்பினோ னீயப்பெற்று
நிலங்கல னாக விலங்குபலி மிசையும்
இன்னா வைகல் வாரா முன்னே
செய்ந்நீ முன்னிய வினையே

முந்நீர் வரைப்பக முழுதுடன் றுறந்தே'' (புறநா. 363.) இவ்வாசிரியப் பாவினுள் ''உப்பிலாஅ வவிப்புழுக்கல்'' எனவும், "கைக்கொண்டு பிறக்கு நோக்கா'' எனவும், "இழிபிறப்பினோ னீயப்பெற்று'' எனவும் வஞ்சியடி விரவி வந்தது.

"இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாதம் அகவலுள்ளான் மயக்கப்படும்''

என்னாது "மயக்கப்படா வல்ல'' என்று இருகால் விலக்கிச் சொன்னமையால் வெண்சீர்

விரவிய இயற்றளை வெள்ளடியும் கலியடியும் ஆசிரியத்துள் அருகி வரப் பெறும்.

நேரிசையாசிரியப்பா

அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டெனப்
பூசல் வாயாப் புலம்புமனைக் கலங்கி
ஏதின் மாக்களு நோவர் தோழி
என்று நோவா ரில்லைத்

குறிப்பு

தண்கடற் சேர்ப்ப னுண்டவென் லைக்கே.'' இவ்வாசிரியத்துள், "அங்கண் மதிய மரவின்வாய்ப் பட்டென'' வென்பது வெண்சீர் விரவிய இயற்றளை வெள்ளடி.

''குருகுவேண் டாளி கோடுபுய்த் துண்டென
மாவழங்கு பெருங்காட்டு மழகளிறு காணாது
மருள்பிடி திரிதருஞ் சாரல்
அருளா னாகுத லாயிழை கொடிதே'' இவ்வாசிரியத்துள் இரண்டாம் அடி கலியடி.

"வஞ்சி மருங்கின் எஞ்சா அகவல் கலிப்பாதமும் நண்ணும்''
வஞ்சிப்பாவினுள் ஆசிரியவடியும் கலியடியும் வந்து மயங்கப்பெறும்.
எஞ்சாவகவல்முு என்று சிறப்பித்தவதனால் வஞ்சியுள் ஆசிரியவடி பயின்றுவரும்,
கலியடியும் அருகியன்றி வாராது. கலிப்பாதமும் என்ற உம்மையால் வஞ்சியுள் வெள்ளடியும் அருகிவந்து மயங்கப்பெறும்.
பட்டினப்பாலை என்னும் வஞ்சிநெடும் பாட்டினுள் ஆசி குருகு வேண்டு ஆளி - குருத்தை விரும்புகின்ற சிங்கம். "குவட்டு மால்கரிக் குருகுதேர் அரிமு (கந்த. ஆற்றுப். 14.) உண்டென - களிற்றை உண்டதாக. மாவழங்கு - கொடிய விலங்குகள் திரிகின்ற. சாரவில் தலைவன் அருளாதவனாக இருத்தல் கொடிது.
இது தலைவி கூற்று. கலிப்பாவினுள் இது தாழிசை என்னும் உறுப்பு.
வஞ்சியடிகள் விரவிவந்தமையின்பட்டினப்பாலையை வஞ்சிநெடும் பாட்டு என்றும் கூறுவர்.
இயற்றளை வெள்ளடி
ஆசிரியவடி பயின்றும் கலியடியும் வெள்ளடியும் அருகியும் வந்தனவும் உள..
"நேரிழை மகளி ருணங்குணாக் கவரும்'' (பட்டினப், 22.) என்ற இத்தொடக்கத்தன ஆசிரியவடி.
"கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை'' (பட்டினப், 23.) என்பது இயற்றளை வெள்ளடி.
கோழி யெறிந்த கொடுங்காற் கனங்குழை
யாழிசூழ் வையக் கணி'' என உச்சரிக்கும்போது வெள்ளடி
வயலாமைப் புழுக்குண்டும் வறளடும்பின் மலர் மலைந்தும்(பட்டினப். 64-5.) என்பது கலியடி

"கவியினுள்ளான் முயக்கப்படும் முதற்கால் இருபாவும் முறைமையினே கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் புக்கு மயங்கப்படும்

"காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்" (கலி. 38.) என்னும் மயங்கிசைக் கொச்சகக் கலிப்பாவினுள் வெண்பாவும் ஆசிரியப்பாவும் மயங்கி வந்தது

## 14.5 அடிக்கும் தொடைக்கும் புறனடை:

குறிப்பு

அருகிக் கலியோ டகவன் மருங்கினைஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் கடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுவே.

ஒருசார் கலிப்பாவினுள்ளும் ஆசிரியப்பாவினுள்ளும் ஐஞ்சீரடியும் அருகி வரப்பெறும் என்று சொல்லுவர் புலவர்

அணிகிளர் சிறுபொறி யவிர்துத்தி மாநாகத் தெருத்தேறித்
துணியிரும் பனிமுந்நீர்த் தொட்டுழந்து மலைந்தனையே." இக்கலிப்பாவினுள் முதலடியின் ஐஞ்சீர் வந்தது.

மொழியினும் பொருளினு முரணத் தொடுப்பின்
இரணத் தொடையென் றெய்தும் பெயரே" (காக்கை பாடினியார்.)

"மொழியினும் பொருளினு முரணுதன் முரணே." (தொல். பொருள், சூ. 407; யா. வி. சூ. 38.)

கடைமுரணாவது அடிதோறும் இறுதிச்சீர் முரணத் தொடுப்பது. கடையிணை முரணாவது அடிதோறும் கடையிரு சீர் முரணத் தொடுப்பது. பின்முரணாவது இரண்டாஞ் சீர்க் கண்ணும் நான்காஞ் சீர்க்கண்ணும் முரணத் தொடுப்பது. கடைக் கூழை முரணாவது முதற்சீர்க் கண்ணின்றி ஒழிந்த மூன்று சீர்க்கண்ணும் முரணத் தொடுப்பது. இடைப்புணர் முரணாவது "நடு இருசீர்க் கண்ணும் முரணத் தொடுப்பது

நேரிசை யாசிரியப்பா

கயன்மலைப் பன்ன கண்ணினை கரிதே
தடமுலை திவளுந் தனிவடம் வெளிதே
நூலினு நுண்ணிடை சிறிதே
ஆடமைத் தோளிக் கல்குலோ பெரிதே" இ∴து அடிதோறும் கடைச்சீர் மறுதலைப்படத் தொடுத்த மையாற் கடைமுரண்டொடை.

நேரிசை யாசிரியப்பா

"மீன்றேர்ந் தருந்திய கருங்கால் வெண்குருகு
தேனார் ஞாழல் விரிசினைத் தொகூஉம்
தண்ணந் துறைவன் றவிர்ப்பவுந் தவிரான்
தேரோ காணலங் காண்டும்
பீரேர் வண்ணமுஞ் சிறுதல் பெரிதே." இ∴து அடிதோறும் கடை இரு சீரும் முரண்வரத் தொடுத்தமையாற் கடையிணை முரண்.

குறிப்பு

"சார லோங்கிய தடந்தாட் டாழை
கொய்மலர் குவிந்து தண்ணிழல் விரிந்து
தமிய மிருந்தன மாக நின்றுதன்
நலனுடைப் பணிமொழி நன்குபல புகழ்ந்து
வீங்குதொடிப் பணைத்தோ ணெகிழத்
துறந்தோ னல்லனெம் மேனியோ தீதே." இஃது அடிதோறும் கடைச்சீரும் இரண்டாஞ்சீரும் மறுதலைப் படத் தொடுத்தமையாற் பின் முரண்.

காவியங் கருங்கட் செவ்வாய்ப் பைந்தொடி
பூவிரி சுரிமென் கூந்தலும்
வேய்புரை தோளு மணங்குமா லெமக்கே. இது முதற் சீரொழிந்த மூன்று சீர்க்கண்ணும் மறுதலைப் படத் தொடுத்தமையாற் கடைக்கூழை முரண்டொடை.

"போதுவிரி குறிஞ்சி நெடுந்தண் மால்வரை
கோதையிற் றாழ்ந்த வோங்குவெள் ளருவி
காந்தளஞ் செங்குலைப் பசுங்கூ தாளி
வேரல் விரிமலர் முகையொடு விரைஇப்
பெருமலைச் சீறூ ரிழிதரு நலங்கவர்ந்
தின்னா வாயின மினியோர் மாட்டே." இஃது இடை யிருசீர்க் கண்ணும் மறுதலைப்படத் தொடுத் தமையால் இடைப்புணர் முரண்டொடை

வருக்க எதுகை இனவெதுகை என்றும், வருக்கமோனை நெடில்மோனை இனமோனை என்றும் பெயரிட்டு வழங்கப்படும்.

நீடிணர்க் கொம்பர்க் குயிலாலத் தாதூதிப்
பாடுவண் டஞ்சி யகலும் பருவத்துத்
தோடார் தொடிநெகிழ்த்தா ருள்ளார் படலொல்லா
பாடமை சேக்கையுட் கண்" இது டகர மெய் வருக்க வெதுகை.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை." அ(குறள். 37.) இது றகர மெய் வருக்க வெதுகை.

"ஆவா வென்றே யஞ்சின ராழ்ந்தா ரொருசாரார்" இது இரண்டாமெழுத் தொன்றாதாயினும் இரண்டா மெழுத்தின்மே லேறிய நெடிலொப்புமை நோக்கி நெடிலெதுகை என்று வழங்கப்படும்.

இனவெதுகை மூன்றுவகைப்படும், வல்லின வெதுகை மெல்லின வெதுகை இடையினவெதுகை என.

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும் இது வல்லின வெதுகை.
அன்பீனு மார்வ முடைமை யதுவீனும்

குறிப்பு

நண்பென்னு நாடாச் சிறப்பு.'' இது மெல்லின வெதுகை.

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்

பொய்யா விளக்கே விளக்கு.''இ∴து இடையின வெதுகை.

இனி வருக்கமோனை முதலாகிய மூன்று மோனையும் வருமாறு :

பகலேபல் பூங்கானக் கிள்ளை யோப்பியும்

பாசிலைக் குளவியொடு கூதளம் விரைஇப் ---

இப்பொழுது வருகுவை யாயின

நற்றார் மார்ப தீண்டலெங் கதுப்பே.'' இது பகரமெய் வருக்க மோனை.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்

ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை. இது முதலெழுத்து ஒன்றாதாயினும் முதலெழுத்தின்மேல் ஏறிய நெடில் ஒப்புமை நோக்கி நெடில்மோனை என்று வழங்கப்படும்.

இனமோனை மூன்று வகைப்படும், வல்லின மோனையும் மெல்லின மோனையும் இடையின மோனையும் என்பதாம்..

"கயலே ருண்கண் கலுழ நாளுஞ்

சுடர்புரை திருநுதல் பசலை பாயத்

திருந்திழை யமைத்தோ ளரும்பட ருழப்பப்

போகல் வாழி யைய பூத்த

கொழுங்கொடி யணிமலர் தயங்கப்

பெருந்தண் வாடை வரூஉம் பொழுதே,''

இ∴து எல்லாவடியும் முதற்கண்ணே வல்லெழுத்து வந்தமை யால் வல்லின மோனை.

"சிலைவிலங்கு நீள்புருவம்'' என்னும் பாட்டு சீர்முழுதொன்றி வந்தமையால் தலையா கெதுகை.

அகர முதல..........யுலகு'' என்பதும் (5) ஓரெழுத்து ஒன்றி வந்தமையால் இடையாகெதுகை.

தக்கார் தகவிலர் என்பது (6) கடையா கெதுகை.

பற்றுக பற்றற்றான் பற்றினை யாப்பற்றைப்

பற்றுக பற்று விடற்கு  இது சீர்முழுதும் ஒன்றி வந்தமையால் தலையாகு மோனை.

மாவும் புள்ளும் வதிவயிற் படர என்பது  இடையாகு மோனை.

"பகலேபல் பூங்கானக் கிள்ளை யோப்பியும்'' என்பது (8) கடையாகு மோனை.

உயிரெதுகை ஆசெதுகை இடையிட் டெதுகை என்னும் எதுகையும் இரண்டடி யெதுகை மூன்றாமெழுத்து ஒன்றெதுகை என்று இத்தொடக்கத்து

ஒருசார் எதுகையும் உள; ஆகிலும் அவை பெரியதோர் சிறப்புடையன அல்ல.

துளியொடு மயங்கிய தூங்கிரு ணடுநாள்
அணிகிளர் தாரோ யருஞ்சுர நீந்தி
வடியமை யெ.·.கம் வலவயி னேந்தித்
தனியே வருதி நீயெனின்
மையிருங் கூந்த லுய்தலோ வரிதே.'' இ.·.து இரண்டாமெழுத் தொன்றாதாயினும் இரண்டாமெழுத் தின்மேலேறிய உயிர் ஒன்றி வந்தமையால் உயிரெதுகை.

குறிப்பு

ஆசெதுகை:

"யரலழ வென்னு மீரிரண் டொற்றும்
வரன்முறை பிறழாது வந்திடை யுயிர்ப்பின.·.
தாசிடை யெதுகையென் றறையல் வேண்டும்'' – தொல்

"காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகி னெற்றிப்
பூமாண்ட தீந்தேன் றொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங் கனிசிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங் கதமென் றிசையாற் றிசைபோய துண்டே'' (சீவக. 31) இது யகரவொற்று இடைவந்த ஆசெதுகை.

கலிவிருத்தம்

மாக்கொடி மாணையு மவ்வற் பந்தருங்
''கார்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூங்கொடிப் பொதும்பரும் பொன்ன ஞாழலுந்
தூக்கடி கமழ்ந்துதான் றுறக்க மொத்ததே.'' இது ரகர வொற்று இடைவந்த ஆசெதுகை.

ஆசிடையிட்ட இருகுற ணேரிசை வெண்பாவிற் கூறப்படும் ஆசு வேறு; இங்கே கூறப்படும் ஆசு வேறு. அது பற்றாசு போன்ற ஒன்றும் இரண்டுமாகிய அசைகள். இது ய ர ல வ ழ ஒற்றுக்கள்.

வெண்பா

''ஆவே றுருவின வாயினு மாபயந்த
பால்வே றுருவின வல்லவாம் - பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி யாபோல்
உருவு பலகொள லீங்கு.'' இது லகரவொற்று இடைவந்த ஆசெதுகை.

வெண்பாஅந்தரத் துள்ளே யகங்கை புறங்கையா
மந்திரமே போலு மனைவாழ்க்கை - யந்தரத்து
வாழ்கின்றே மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று. இது ழகரவொற்று இடைவந்த ஆசெதுகை.

குறிப்பு

ஆர்கலி யுலகத்து.........முடைமை'' இது ரகர வொற்று இடைவந்த வல்லின வெதுகை.

இடையிட்டெதுகை

''தோடா ரெல்வளை நெகிழ நாளும்
நெய்த லுண்கண் பைதல் கலுழ ---
ஓடா மலையன் வேலிற்
கடிது மின்னுமிக் கார்மழைக் குரலே.'' இ∴து அடையிடையிட்டு இரண்டாமெழுத்து ஒன்றி வந்தமையால் இடையிட்டெதுகை

"தாஅ வண்ணம்.
இடையிட்டு வந்த வெதுகைத் தாகும்'' (தொல். பொருள், 527.)

இனி இரண்டடி எதுகை வருமாறு :

இன்னிசை வெண்பா

''துவைக்குந் துளிமுன்னீர்க் கொற்கை மகளிர்
அவைப்பதம் பல்லுக் கழகொவ்வா முத்தம்
மணங்கமழ்தா ரச்சுதன் மண்காக்கும் வேலின்
அணங்கமுத மந்நலார் பாட்டு'' இது முதலிரண்டடியும் ஓரெதுகையாய்ப் பின்பிரண்டடியும் மற்றோர் எதுகையாய் வந்தமையால் இரண்டடி யெதுகை.

கலிவிருத்தம்

''ஆகங் கண்டகத் தாலற்ற வாடவர்
ஆகங் கண்டகத் தாலற்ற வன்பினர்
பாகங் கொண்டு பயோதரஞ் சேர்த்தினார்
பாகங் கொண்டு பயோதர நண்ணினார்.'' இது முதலிரண்டடியும் ஒரு மோனையாய்ப் பின்னிரண்டடியும் மற்றொரு மோனையாய் வந்தமையால் இரண்டடி மோனை.

மூன்றாமெழுத் தொன்றெதுகை

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்." இவை மூன்றாமெழுழுத்தொன் றெதுகை.

"பற்றிப் பலகாலும் பான்மறி யுண்ணாமை
நொஅலைய நின்னாட்டை நீ.'' இது வல்லொற்று அடுத்தாற்போல விட்டிசைத்த குற் றெழுத்தோடு
புணர்த்தமையால் விட்டிசை வல்லொற் றெதுகை.

"அ அவனும் இ இவனும் உ உவனுங் கூடியக்கால் எவனை வெல்லா ரிகல். இது முதலெழுத்து விட்டிசைத்து வந்தமையால் விட்டிசை மோனை

இன்னும் "ஒருக்கப் பெயரால்'' என்று சிறப்பித்தவதனால் பாவினங்கள் எல்லாத் தொடையானும் வரும் என்றார் ஆயினும் பெரும்பான்மையும் தலையாகு மோனையிற் றிரிந்தும் தலையா கெதுகையிற் றிரிந்தும்

வாராவென்றும், செந்தொடை யொழிந்த எல்லாத் தொடைக்கும் இனவெழுத்து வரத் தொடுப்பதூஉம் (15) வழியெதுகை வரத்தொடுப்பதூஉம் வழிமுரண் வரத் தொடுப்பதூஉம் சிறப்புடைத்து. இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாது வேறுபடத் தொடுப்பது மருட் செந்தொடை யெனப்படும்.

குறிப்பு

இனவெழுத்து வருமாறு :

தானமொத்த குறிலும் நெடிலும் தம்முள் இனமாம். அகர ஆகார ஐகார ஒளகாரங்கள் தம்முள் இனமாம். இகர ஈகார எகர ஏகாரங்கள் தம்முள் இனமாம். உகர ஊகார ஒகர ஓகாரங்கள் தம்முள் இனமாம். உயிர்மெய்க்கும் இவ்வாறேயாம்.. ஒற்றினுள், சகர தகரங்கள் தம்முள் இனமாம். ஞகர நகரங்கள் தம்முள் இனமாம். மகர வகரங்கள் தம்முள் இனமாம்.

அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் இவை இனவெழுத்துப் பெற்று மோனை முதலாகிய தொடையும் தொடை விகற்பமும் போலாமை வேறுபடத் தொடுத்தமையால் மருட் செந்தொடை.

வழியெதுகை:

''மண்டலம் பண்டுண்ட திண்டேர் வரகுணன் றொண்டியின்வாய்க்
கண்டிலந் தண்டுறைக் கண்டதொன் றுண்டு கனமகர
குண்டலங் கெண்டை யிரண்டொடு தொண்டையுங் கொண்டொர்திங்கள்
மண்டலம் வண்டலம் பக்கொண்ட றாழ வருகின்றதே'' அனுப்பிராச மென்னும் வடமொழியை வழி யெதுகை என்பது தமிழ் வழக்கெனக் கொள்க.

வழிமுரண் : வழிமுரணி வருவன வழிமுரண் என்று வழங்கப்படும்.

''செய்யவாய்ப் பசும்பொன் னோலைச் சீறடிப் பரவை யல்குல்
ஐயநுண் மருங்கு னோவ வடிக்கொண்ட குவவுக் கொங்கை
வெய்யவாய்த் தண்ணெ னீலம் விரிந்தென விலங்கி நீண்ட
மையவா மழைக்கட் கூந்தன் மகளிரை வருக வென்றான்''

“சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவு'' என்றாராயினும், கலிப்பாவுக்கு நான்கடியே சிறுமை என்று “வெள்ளைக் கிரண்டடி“ என்னும் காரிகையிற் (கா. 14) சொன்னமையால் தரவு கொச்சகக் கலிப்பாவுக்கு நான்கடியே சிறுமை

பொதுவகையாற் றாழிசை சொல்லினார் எனனும். தாழிசைக்கு இரண்டடிச் சிறுமை, பெருமை

குறிப்பு

நான்கடி, இடை மூன்றடியாய் வருவதெனக் கொள்க. தரவடியிற் றாழிசையடி சுருங்கி வரும்

## 14.6 பாக்களுக்குரிய சில இயல்புகள்:

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
இருள்சேர் விலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழிந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள் பொலங்
கொடியே

அடி முதற்கண் பாவினது பொருளைத் தழுவித் தனியே நிற்பது கூன் எனப்படும். அக்கூன் வஞ்சிப்பாவின் ஈற்றினும் நிற்கும் “பொருளோ டடிமுதல்“ஈற்றினும் நிற்கும்'' என்ற உம்மையால் வஞ்சிப்பாவில் நடுவினும் கூன் வரப்பெறும்

“இருள் சேர்விலா வஞ்சி“ என்று சிறப்பித்தவதனால், வஞ்சியடியின் நடுவும் இறுதியும் அசை கூனாய் வருவது சிறப்புடைத்து. சீர் கூனாய் வரினும் உகர மீறாகிய நேரீற்று இயற் சீராய் அல்லது வாராவெனக் கொள்க. கொச்சகக் கலியுள் ஓரடி கூனாய் வரினும் சிறப்பினவாம். ஆசிரியப்பாவிற்கு இடையிலே வருதலின்றி அதன் ஈற்றினும், வெண்பா கலி என்னும் இவற்றின் இடையினும் ஈற்றினும் கூன் வரப்பெறாது.

“உதுக்காண்,
“சுரந்தானா வண்கைச் சுவணமாப் பூதன்
பரந்தானாப் பல்புகழ் பாடி - யிரந்தார்மாட்
டின்மை யகல்வது போல விருணீங்க
மின்னு மளித்தேர் மழை.''

இவ்வெண்பாவின் அடிமுதற்கண் “உதுக்காண்'' எனக் கூன் வந்தது.

‘‘அவரே, கேடில் விழுப்பொரு டருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே.
யானே, தோடா ரெல்வளை நெகிழ வேங்கிப்
பாடமை சேக்கையுட் படர்கூர்ந் திசினே
அன்ன ளளிய ளென்னாது மாமழை
இன்னும் பெய்ய முழங்கி
மின்னுந் தோழியென் னின்னுயிர் குறித்தே.''

இவ்வாசிரியத்துள் அடி முதற்கண் “அவரே'' எனவும் இடைக்கண், யானே'' எனவும் சீர் கூனாய் வந்தது.

மாவழங்கலின் மயக்குற்றன - வழி என்னும் வஞ்சி யடியி னிறுதிக்கண் “வழி'' என அசை கூனாய் வந்தது.

"கலங்கழாலிற் றுறை கலக்குற்றன" என வஞ்சியடியின் நடுவு "துறவு" என அசை கூனாய் வந்தவாறு.

இனி, ஒழிந்த "மருள்தீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசை வனப்புப் பொருள்கோள் குறிப்பிசை ஒப்பும் குறிக்கொள்" என்றமையால் "எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை பா இனம் கூறுவன்" என்று அதிகாரம் பாரித்த காரிகையுள் . எடுத்து ஓதப்படாத யாப்புறுப்பாய் மயக்கம் நீக்க வகுக்கப்பட்ட விகாரமும், வகையுளியும், வாழ்த்தும், வசையும், வனப்பும், பொருளும்,பொருள் கோளும், குறிப்பிசையும், செய்யுளொப்புமையும் ஆமாறு உபதேச முறைமையால் உணர்க

**குறிப்பு**

## 14.6. 1 விகாரம்:

விகாரம் ஆறு வகைப்படும், வலித்தல், மெலித்தல்,விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்பதாம்.

குறுத்தாட் பூதஞ் சுமந்த

அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே." இதனுள் "குறுந்தாள்" என்பதனை "குறுத்தாள்" என்றமையால் இது வலிக்கும் வழி வலித்தல்

"தண்டையி னினக்கிளி கடிவோள்

பண்டைய எல்லண் மானோக் கினளே." - தட்டை என்பதனை தண்டை என்றமையால் மெலிக்கும் வழி மெலித்தல்.

தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார் - "தண்டுறைவர்" எனபதனை "தண்ணந்துறைவர்" என்றமையால் விரிக்கும் வழி விரித்தல்

வேண்டார் வணங்கி விறன்மதி றான்கோடல் - "வேண்டாதாரை வணக்கி" என்பதனை "வேண்டார் வணக்கி" என்றமையால் தொகுக்கும் வழித் தொகுத்தல்.

பாசிழை யாகம் பசப்பித்தான் பைந்தொடீஇ - "பச்சிழை" என்பதனை "பாசிழை" என்றமையால் நீட்டும் வழி நீட்டல்.

திருந்தார்நன் றென்றேன் றியேன். - "தீயேன்" என்பதனை "தியேன்" என்றமையால் குறுக்கும் வழிக்குறுக்கல்.

"மருடீர் விகாரம்" என்று சிறப்பித்தவதனால் தலைக்குறைத்தலும், இடைக்குறைத்தலும், கடைக்குறைத்தலும் என இவையும் வரலாற்று முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும்

மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி." - "தாமரை" என்பதனை "மரை" என்றமையால் தலைக்குறை

"வேதின வெரிநி னோதி முதுபோத்து." - "ஓந்தி" என்பதனை "ஓதி" என்றமையால் இடைக்குறை

"நீலுண் டுகிலிகை கடுப்ப."- 'நீலமுண்ட துகிலிகை" என்பதனை "நீலுண் துகிலிகை" என்றமையால் கடைக்குறை

குறிப்பு

### 14.6.2 வகையுளி:

வகையுளி என்பது முன்னும் பின்னும், அசை முதலாகிய உறுப்புக்கள் நிற்புழி அறிந்து குற்றப்படாமல் வண்ண மறுத்தல்.

கடியார்பூங் கோதை கடாயினான் றிண்டேர்

சிறியாடன் சிற்றில் சிதைத்து.'' - "கடியார்'' என்றும், "பூங்கோதை'' என்றும் புளிமா வாகவும் தேமாங்காயாகவும் "கடாயினான்'' என்று கருவிளமாகவும் அலகிடின் ஆசிரியத்தளையும் கலித்தளையும் தட்டி, "வெள்ளைத் தன்மை குன்றிப் போஞ்சீர் கனிபுகிற்புல்லா தயற்றளை'' (கா. 38) என்னும் இலக்கணத்தோடு மாறுகொள்ளும் ஆதலால் இதனைக் "கடியார்பூம்" என்று புளிமாங்காயாகவும் கோதையென்று தேமாவாகவும் அலகிடச் சீரும் தளையும் வண்ணமும் சிதையாவாம்.

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்

நிலமிசை நீடுவாழ் வார்" - "நீடு'' என்றும் "வாழ்வார்'' என்றும் அலகிட ஆசிரியத் தளை தட்டிவெண்பாவின் இறுதிக்கண் "வார்'' என்று அசைச்சீர் ஆகற்பாலது இயற்சீராய், "நிகரில் வெள்ளைக்கு ஓரசைச் சீரும் ஒளிசேர் பிறப்பும் ஒண் காசு மிற்ற சீருடைச் சிந்தடியே முடிவாம் (கா. 25.) என்னும் இலக்கணத்தோடு மாறுபடும் ஆதலின் இதனை "நீடுவாழ்'' என்று கூவிளமாகவும் "வார்'' என்று நாள் என்னும் நேரசைச் சீராகவும் அலகிடத் தளையும் வண்ணமுஞ் சிதையாவாம்.

### 14.6.3 வாழ்த்து:

வாழ்த்து இரண்டு வகைப்படும், மெய் வாழ்த்து, இருபுற வாழ்த்து என்பதாம்.

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவங்கொலோ - கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.'' - இது மெய் வாழ்த்து.

"பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கேரட்பட்டு
வெங்கடத்து வில்லேற்றிக் கொண்டுழந்தான் - தென்களந்தைப்
பூமான் றிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.'' இது இருபுற வாழ்த்து.

### 14.6.4 வசை:

வசை இரண்டு வகைப்படும், மெய் வசை, இருபுற வசை என்பதாம்.

தந்தை யிலைச்சுமடன் றாய்தொழிலி தான்பார்ப்பான்
எந்தைக்கி தெங்ஙனம் பட்டதுகொல் - முந்தை
அவியுணவி னார்தெரியி னாவதாங் கொல்லோ
கவிகண்ண னார்தம் பிறப்பு.'' - இது மெய் வசை.

"படையொடு போகாது நின்றெறிந்தா னென்றும்

கொடையொடு நல்லார்கட் டாழ்ந்தான் - படையொடு
பாடி வழங்குந் தெருவெல்லாந் தான்சென்று
கோடி வழங்கு மகன்.'' - இது இருபுற வசை.

**14.6..5 வனப்பு:**

வனப்பு எட்டு வகைப்படும், அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என்பன.

குறிப்பு

**14.6.6 அம்மை:**

அம்மையென்பது சிலவாய மெல்லியவாகிய சொற்களால் ஒள்ளியவாகிய பொருண்மேற் சிலவடியாற் சொல்லப்படுவது.

சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
''அம்மை தானே யடிநிமிர் வின்றே'' – தொல்காப்பியம்.

''அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை''

**14.6.7 அழகு:**

அழகென்பது - செய்யுட் சொல்லாகிய திரி சொற்களால் ஓசை இனியவையாகப் புணர்க்கப்படுவது.

"செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே யழகெனப் படுமே''

''துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்புற விழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே''

**14.6.8 தொன்மை:**

தொன்மை என்பது பழமைத்தாய் நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படும்

''தொன்மை தானே
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே'' - தொல்காப்பியம்.

"செறிதொடி யுவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன் செய்வதென்'' என்பதுஉம், பாரதம் இராமாயணம் முதலாயினவும் ஆகும்.

**14.6.9 தோல்:**

தோல் என்பது இழுமென மெல்லியவையாகிய சொற்களான் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களோடுங் கூடிப் பலவடியும் மயங்கி வந்தனவாய்க் கிடப்பனவும் என இருதிறத்தனவாம்.

குறிப்பு

“இழுமென் மொழியால் விழுமியது நுவவினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்’’ – தொல்காப்பியம்
“பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமை யில்லை
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோர் யார∴ திருவழி யிறுகென.’’ இது மார்க்கண்டேயனார் காஞ்சி.
இ∴து இழுமென் மொழியால் விழுமியது
திருமலை தலைஇய விருணிற விசும்பின்’’ - (26மலை படுகடாம்)
பரந்தமொழியால் அடிநிமிர்ந்தொழுகியது.

## 14.6. 10 விருந்து:

புதிதாய்த் தோன்றும் இலக்கிய வகை விருந்து எனப்படும்.
“விருந்து தானே
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.’’ –தொல்காப்பியம்

## 14.6.11 இயைபு:

இயையென்பது ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு.
“ஞகார முதலா ளகார லீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே“

## 14.6.12 புலன்:

புலன் என்பது இயற் சொல்லாற் பொருள் தோன்றச் சொல்லப்படுவது.
“தெரிந்த மொழியாற் செவ்வி திற்புணர்ந்த
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே“ – தொல்காப்பியம்
“பார்க்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுபுகக் கடவுமதி பாக வுதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்

பெருங்காடு மடுத்த காமர் களிறே"

## 14.6.13 இழைபு:

இழைபு என்பது - வல்லொற்று யாதும் தீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களான் வருவது.

குறிப்பு

''ஒற்றொரு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி காறும்
ஓங்கிய மொழியா னாங்ஙன மொழியின்
இழைபி னிலக்கண மியைந்த தாகும்'' – தொல்காப்பியம்.

செய்யுளியலுடையார் நாற்சீரடி தன்னையே நாலெழுத்து முதலா ஆறெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் குறளடி என்றும், ஏழெழுத்து முதலா ஒன்பதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் சிந்தடி என்றும், பத்தெழுத்து முதலாப் பதினான் கெழுத்தின் காறும் உயர்ந்த ஐந்தடியும் அளவடி என்றும், பதினைந் தெழுத்து முதலாப் பதினேழெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் நெடிலடி என்றும், பதினெட்டெழுத்து முதலா இருபதெழுத்தின் காறும் உயர்ந்த மூன்றடியும் கழிநெடிலடி என்றும் வேண்டுவர். இருபதெழுத்தின் மிக்க நாற்சீரடிப்பா இல்லை எனக் கொள்க.

எழுத்து எண்ணுகின்றுழிக் குற்றியலுகரமும், குற்றியலிகரமும், ஒற்றும் ஆய்தமும் ஒழிந்த உயிரும் உயிர்மெய்யுங் கூட்டி எண்ணப் படும்.

குற்றிகரங் குற்றுகர மென்றிரண்டு மாய்தமும்
ஒற்று மெனவொரு நான்கொழித்துக் - கற்றோர்

இழைபு என்பது இசைப்பாட்டுக்கள். கலியும் பரிபாடலும் போன்றவையும் அபிநயத்துக்குப் பயன்படும் பாட்டுக்களும் ஆம். நிலம் - இசைப்பாட்டின் தானம். குறளடி முதல் கழிநெடிலடி யீறாக உள்ள ஐந்தடிகளுக்கு முரிய எழுத்துக்களின் எண்ணைக்கொண்டு கணக்கிடப்படுவது இது. நிலம் பதினேழு ஆவன : குறளடிக்கு மூன்று-நிலம், சிந்தடிக்கு மூன்று-நிலம், அளவடிக்கு ஐந்து-நிலம், நெடிலடிக்கு மூன்று-நிலம். கழிநெடிலடிக்கு மூன்று-நிலம், ஆக 17-நிலம். செய்யுளியலுடையார் - தொல்காப்பியனார். நாற்சீர் கொண்ட அளவடி ஒன்றனையே எழுத்தெண்ணி அது குறளடி முதல் ஐந்தடிகளில் ஒன்று என்று கணக்கிடுவர் தொல்காப்பியனார்.

"போந்து போந்து சார்ந்து சார்ந்து
தேர்ந்து தேர்ந்து மூசி நேர்ந்து –
பெருமணம் புணர்ந்தனை யென்பவ∴.
தொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே."

## 14.6.14 பொருள்:

"பொருள் கோள்" என்பது உம்மைத் தொகை, பொருளும் பொருள்கோளும் என்பதாம்.

“அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.” - இதனுள் அருளும் அருளல்லதும் என்றார் போலக் கொள்க.

அவற்றுள் பொருளாவன : குறிஞ்சி, கைக்கிளை முதலிய அகமும் அகப்புறமும், வெட்சி, பாடாண்பாட்டு முதலிய புறமும், புறப்புறமும் என இவை. அவை அவ்விலக்கணங் கூறிய நூல்களுட் கண்டுகொள்க.

குறிப்பு

## 14.6. 15 பொருள்கோள்

இனிப் பொருள் கோள் ஒன்பது வகைப்படும். அவை நிரனிறை மொழிமாற்று,சுண்ண மொழி மாற்று, அடிமறி மொழிமாற்று,அடி மொழிமாற்று, பூட்டுவிற் பொருள் கோள், புனலாற்றுப் பொருள் கோள், அளை மறி பாப்புப் பொருள் கோள், தாப்பிசைப் பொருள் கோள், கொண்டு கூட்டுப் பொருள் கோள் என்பாவாகும். அவற்றுள், நிரனிறை இரண்டு வகைப்படும், பெயர் நிரனிறை, வினை நிரனிறை என்பதாம்.

## 14.6.15.1 பெயர் நிரனிறை

“கொடிகுவளை கொட்டை நுசுப்புண்கண் மேனி
மதிபவள முத்த முகம்வாய் முறுவல்
பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச் சாயல்
வடிவினளே வஞ்சி மகள்” - வினை நிரனிறை வருமாறு :
“காதுசேர் தாழ்குழையாய் கன்னித் துறைச்சேர்ப்ப
பொதுசேர் தார்மார்ப போர்ச்செழிய - நீதியால்
மண்ணமிர்த மங்கையர்தோள் மாற்றாரை யேற்றார்க்கு
நுண்ணிய வாய பொருள்.”
“அடல்வே லமர்நோக்கி நின்முகங் கண்டே
உடலு மிரிந்தோடு மூழ்மலரும் பார்க்கும்
கடலுங் கனையிருளு மாம்பலும் பாம்புந்
தடமதிய மாமென்று தான்”

இனி, முறை நிரனிறை, எதிர் நிரனிறை, மயக்க நிரனிறை என்று வேண்டுவாரும் உளரெனக் கொள்க.

சுண்ண மொழிமாற்று:

“சுரையாழ வம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.” – “சுரை” என்பதனோடு “மிதப்ப” என்பது பொருள் கொள்ளவும், “அம்மி” என்பதனோடு “ஆழ” என்பது பொருள் கொள்ளவும், “யானை” என்பதனோடு “நிலை” என்பது பொருள் கொள்ளவும், “முயல்”

என்பதனோடு "நீத்து" என்பது பொருள் கொள்ளவும் வந்தமையால் சுண்ண மொழிமாற்று.

குறிப்பு

## 14.6.15.2 அடி மறி மொழிமாற்று:

அடிமறி மண்டில வாசிரியப்பா

"சூரல் பம்பிய சிறுகா னியாறே

சூரர மகளி ராரணங் கினரே

வார லெனினே யானஞ் சுவனே

சார நாட நீவர லாறே." - பாட்டு வேண்டிற் றோரடி முதலாகச் சொன்னாலும் ஓசையும் பொருளுங் கொண்டு நிற்றலால் அடிமறி மொழி மாற்று.

## 14.6.15.3 அடி மொழி மாற்று :

ஆலத்து மேல குவளை குளத்துள

வாலி னெடிய குரங்கு." - "ஆலத்து மேல வாலி னெடிய குரங்கு" எனவும், "குவளை குளத்துள"

எனவும் இரண்டடியின் மொழி மாற்றிப் பொருள் கொண்டமையால் அடி மொழி மாற்று.

இதனை இரண்டடி மொழிமாற்று எனினும் அமையும்.

## 14.6.15.4 பூட்டுவிற் பொருள்கோள்:

"திறந்திடுமின் றீயவை பிற்காண்டு மாதர்

இறந்து படிற்பெரிதா மேதம் - உறந்தையர்கோன்

தண்ணார மார்பிற் றமிழர் பெருமானைக்

கண்ணாரக் காணக் கதவு." - "திறந்திடுமின்" என்பது கதவென்பதனோடு நோக்குடைமையிற் பூட்டுவிற் பொருள்கோளாயிற்று.

## 14.6.15..5 புனல் யாற்றுப் பொருள்கோள்:

"அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்

விலைப்பாலிற் கொண்டூன் மிசைவதூஉங் குற்றம்

சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்

கொலைப்பாலுங் குற்றமே யாம்." இஃது அடிதோறும் பொருளற்று வந்தமையால் புனல் யாற்றுப்பொருள்கோள்.

**அளைமறி பாப்புப் பொருள்கோள்:**

"தாழ்ந்த வுணர்வினராய்த் தாளுடைந்து

தண்டூன்றித் தளர்வார் தாமுஞ்

சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற்

சுழல்வார் தாமும்

மூழ்ந்த பிணிநலிய முன்செய்த வினையென்று

முனிவார் தாமும்

வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி

முயலா தாரே.'' "வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறி முன்னி முயலாதார்" என்னும் இறுதிச் சொல், இடையும் முதலும் சென்று பொருள் கொண்டமையால் அளைமறி பாப்புப் பொருள் கோள்.

குறிப்பு

### 14.6.15.6 தாப்பிசைப் பொருள்கோள்

"உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண

அண்ணாத்தல் செய்யா தளறு.'' ஊன் உண்ணாமை யுள்ளது உயிர்நிலை எனவும் "ஊன் உண்ண அண்ணாத்தல் செய்யா தளறு'' எனவும் நடுநின்ற "ஊன்'' என்னும் சொல் முன்னும் பின்னும் பொருள் கொண்டமையால் தாப்பிசைப் பொருள்கோளாயிற்று.

### 14.6.15.7 கொண்டு கூட்டுப் பொருள்கோள்

"தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்

வெண்கோழி முட்டை யுடைத்தன்ன மாமேனி

அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்.'' - "தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட வெண் கோழி முட்டை

யுடைத்தன்ன மாமேனிப் பசலை'' எனவும், "அஞ்சனத்தன்ன பைங்கூந்தல்'' எனவுஞ் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் கொண்டு கூட்டுப் பொருள்கோளாயிற்று.

ஆரிய மன்னர் பறையி னெழுந்தியம்பும்

பாரி பறம்பின்மேற் றண்ணுமை - காரி

விறன்முள்ளீர் வேங்கைவீ தானாணுந் தோளாள்

நிறனுள்ளீ ருள்ளு தலர்.- "தண்ணுமை நாணும் தோளாள்'' என்றும், "நிறம் வேங்கை வீ'' என்றும்,

"அலர் ஆரிய மன்னர் பறையின் எழுந் தியம்பும் முள்ளீர்'' என்றும் சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டமையால் இதுவும் கொண்டு கூட்டுப் பொருள் கோள் ஆயிற்று.

### 14.6.15.8 குறிப்பிசை:

குறிப்பிசை என்பது எழுத்திலோசையான் வந்த முற்கும் வீளையும் இலதையும் அனுகரணமும் முதலாக உடையன செய்யுளகத்து வந்தால் அவற்றையும் செய்யுள் நடை அழியாமல் அசையும் சீரும் அடியும் தொடையும் பிழையாமல் கொண்டு அலகிட்டு வழங்கப்படும

மன்றலங் கொன்றை மலர்மிலைந் து.ஃ.குவ.ஃ.

கென்று திரியு மிடைமகனே - சென்று

மறியாட்டை யுண்ணாமல் வன்கையால் வல்லே

அறியாயோ வண்ணாக்கு மாறு''

எழுத்த லிசையன அசையொடு சீர்க்கண்

நிறைக்கவும் படுமென நேர்ந்திசி னோரே'' – தொல்காப்பியம்.

## 14.6.15.9 ஒப்பு:

குறிப்பு

"ஒப்பும்'' என்பது மேற் சீரும், தளையும், அடியும், வரை யறுக்கப்பட்டபாவும், பாவினமும் சொன்ன பெற்றியிற் றிரிந்து மிக்குங் குறைந்தும் வந்தாலும் அவற்றை ஒரு புடை ஒப்புமை நோக்கி 36அவ்வச் செய்யுட்களின் பாற்படுத்தி அப்பெயரானே வழங்கப்படும்.

''கோழியுங் கூவின குக்கில் குரல்காட்டுந்

தாழியு ணீலத் தடங்கணீர் போதுமினோ

ஆழிசூழ் வையத் தறிவ னடியேத்திக்

கூழை நனையக் குடைந்து குரைபுனல்

ஊழியு மன்னுவா மென்றேலோ ரெம்பாவாய்.'' மேல் நாற்சீர் நாலடியான் வருவது கலிவிருத்தம் என்று வரையறத்துச் சொன்னார் இ∴து ஐந்தடியான் வந்த தாயினும் ஒருபுடை ஒப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின் பாற்படுத்தி வழங்கப்படும். இதனைத் தரவு கொச்சகம் எனினும் இழுக்காது.

சுற்றுநீர் சூழ்கிடங்கிற்

பொற்றாமரைப் பூம்படப்பைத் தெண்ணீர்

நல்வய லூரன் கேண்மை

அல்லிருங் கூந்தற் கலரா னாதே." மேல் வஞ்சிப்பாவுக்கு மூன்றடிச் சிறுமை என்று வரையறுத்துச் சொன்னார் இ∴து இரண்டடியான் வந்ததாயினும் ஒரு புடை ஒப்புமை நோக்கி வஞ்சிப்பாவின் பாற்படுத்து வழங்கப்படும். வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறும் என்று சொன்னார் ஒருசார் ஆசிரியர் எனக் கொள்க. பிறவும் புராண கவிஞராற் சொல்லப்பட்ட இலக்கியங்களை இவ் விலக்கணத்தால் ஒரு புடை ஒப்புமை நோக்கி மிக்கதனால் பெயர் கொடுத்து வழங்கப்படும்.

இனி, ஒப்பும் என்ற உம்மையால் வண்ணமும், புனைந்துரையும், அடி இன்றி நடப்பனவும், ஓரடியான் நடப்பனவும் ஆமாறு உரைத்துக் கொள்க.

## 14.7 வண்ணம்:

வண்ணம் நூறு வகைப்படும்.

தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்று இவ் வைந்தினையும் முதல் வைத்து,

அகவல் வண்ணம், ஒழுகல் வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்று இந்நான்கினையும் இடை வைத்து,

குறிப்பு

குறில் வண்ணம், நெடில் வண்ணம், வலி வண்ணம், மெலி வண்ணம், இடைவண்ணம் என்று இவ்வைந்தினையும் கடை வைத்துக் கூட்டியுறழ நூறு வண்ணம் பிறக்கும்.

"தூங்கேந் தடுக்கல் பிரிதன் மயங்கிசை வைத்துப் பின்னும்
பாங்கே யகவ லொழுகல் வலிமெலி பாற்படுத்தியுட்
டூங்கே குறினெடில் வல்லிசை மெல்லிசை யோடிடையுந்
தாங்கா துறழ்தரத் தாம்வண்ணம் நூறுந் தலைப்படுமே" – தொல்காப்பியம்

### 14.7.1 தூங்கிசை வண்ணம் - 20

குறில் அகவல் தூங்கிசை வண்ணம், நெடில் அகவல் தூங்கிசை வண்ணம், வலி அகவல் தூங்கிசை வண்ணம்,மெலி அகவல் தூங்கிசை வண்ணம்,இடை அகவல் தூங்கிசை வண்ணம் எனவும்

குறில் ஒழுகல் தூங்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் தூங்கிசை வண்ணம்,வலி ஒழுகல் தூங்கிசை வண்ணம்,மெலி ஒழுகல் தூங்கிசை வண்ணம்,இடைட் ஒழுகல் தூங்கிசை வண்ணம். எனவும்,

குறள் வல்லிசைத் தூங்கிசை வண்ணம்,நெடில் வல்லிசைத் தூங்கிசை வண்ணம்,வலி வல்லிசைத் தூங்கிசை வண்ணம்,மெலி வல்லிசைத் தூங்கிசை வண்ணம்,இடை வல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம்,நெடில் மெல்லிசைத் தூங்கிசை வண்ணம்,வலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம்,மெலி மெல்லிசைத் தூங்கிசை வண்ணம், இடை மெல்லிசைத் தூங்கிசை வண்ணம் எனவும் வரும்.

### 14.7.2 ஏந்திசை வண்ணம் ( 20 )

குறில் அகவல் ஏந்திசை வண்ணம், நெடில் அகவல் ஏந்திசை வண்ணம், வலி அகவல் ஏந்திசை வண்ணம்,மெலி அகவல் ஏந்திசை வண்ணம்,இடை அகவல் ஏந்திசை வண்ணம் எனவும்

குறில் ஒழுகல் ஏந்திசை வண்ணம், நெடில் ஒழுகல் ஏந்திசை வண்ணம்,வலி ஒழுகல் ஏந்திசை வண்ணம்,மெலி ஒழுகல் ஏந்திசை வண்ணம்,இடைட் ஒழுகல் ஏந்திசை வண்ணம். எனவும்,

குறள் வல்லிசைத் ஏந்திசை வண்ணம்,நெடில் வல்லிசைத் ஏந்திசை வண்ணம்,வலி வல்லிசைத் ஏந்திசை வண்ணம்,மெலி வல்லிசைத் ஏந்திசை வண்ணம்,இடை வல்லிசைத் ஏந்திசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசைத் ஏந்திசை வண்ணம்,நெடில் மெல்லிசைத் ஏந்திசை வண்ணம்,வலி மெல்லிசைத் ஏந்திசை வண்ணம்,மெலி மெல்லிசைத் ஏந்திசை வண்ணம், இடை மெல்லிசைத் ஏந்திசை வண்ணம் எனவும் வரும்.

## 14.7.3 அடுக்கிசை வண்ணம்: ( 20 )

குறில் அகவல் அடுக்கிசை வண்ணம், நெடில் அகவல் அடுக்கிசை வண்ணம், வலி அகவல் அடுக்கிசை வண்ணம்,மெலி அகவல் அடுக்கிசை வண்ணம்,இடை அகவல் அடுக்கிசை வண்ணம் எனவும்

குறில் ஒழுகல் அடுக்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் அடுக்கிசை வண்ணம்,வலி ஒழுகல் அடுக்கிசை வண்ணம்,மெலி ஒழுகல் அடுக்கிசை வண்ணம்,இடைட் ஒழுகல் அடுக்கிசை வண்ணம். எனவும்,

குறள் வல்லிசை அடுக்கிசை வண்ணம்,நெடில் வல்லிசை அடுக்கிசை வண்ணம்,வலி வல்லிசைத் அடுக்கிசை வண்ணம்,மெலி வல்லிசை அடுக்கிசை திசை வண்ணம்,இடை வல்லிசை அடுக்கிசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம்,நெடில் மெல்லிசை அடுக்கிசை வண்ணம்,வலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம்,மெலி மெல்லிசை அடுக்கிசை வண்ணம், இடை மெல்லிசை அடுக்கிசை வண்ணம் எனவும் வரும்.

குறிப்பு

## 14.7.4 பிரிந்திசை வண்ணம்: ( 20 )

குறில் அகவல் பிரிந்திசை வண்ணம், நெடில் அகவல் பிரிந்திசை வண்ணம், வலி அகவல் பிரிந்திசை வண்ணம்,மெலி அகவல் பிரிந்திசை வண்ணம்,இடை அகவல் பிரிந்திசை வண்ணம் எனவும்

குறில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம், நெடில் ஒழுகல் பிரிந்திசை வண்ணம்,வலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம்,மெலி ஒழுகல் பிரிந்திசை வண்ணம்,இடைட் ஒழுகல் பிரிந்திசை வண்ணம். எனவும்,

குறள் வல்லிசை பிரிந்திசை வண்ணம்,நெடில் வல்லிசை பிரிந்திசை வண்ணம்,வலி வல்லிசைத் பிரிந்திசை வண்ணம்,மெலி வல்லிசை பிரிந்திசை திசை வண்ணம்,இடை வல்லிசை பிரிந்திசை வண்ணம் எனவும்,

குறில் மெல்லிசை பிரிந்திசை வண்ணம்,நெடில் மெல்லிசை பிரிந்திசை வண்ணம்,வலி மெல்லிசை பிரிந்திசை வண்ணம்,மெலி மெல்லிசை பிரிந்திசை வண்ணம், இடை மெல்லிசை பிரிந்திசை வண்ணம் எனவும் வரும்.

## 14.7.5 மயங்கிசை வண்ணம்: ( 20 )

குறில் அகவல் மயங்கிசை வண்ணம், நெடில் அகவல் மயங்கிசை வண்ணம், வலி அகவல் மயங்கிசை வண்ணம்,மெலி அகவல் மயங்கிசை வண்ணம்,இடை அகவல் மயங்கிசை வண்ணம் எனவும்

குறில் ஒழுகல் மயங்கிசை வண்ணம், நெடில் ஒழுகல் மயங்கிசை வண்ணம்,வலி ஒழுகல் மயங்கிசை வண்ணம்,மெலி ஒழுகல மயங்கிசை வண்ணம்,இடைட் ஒழுகல் மயங்கிசை வண்ணம். எனவும்,

குறிப்பு

குறள் வல்லிசை மயங்கிசை வண்ணம்,நெடில் வல்லிசை மயங்கிசை வண்ணம்,வலி வல்லிசைத் மயங்கிசை வண்ணம்,மெலி வல்லிசை மயங்கிசை திசை வண்ணம்,இடை வல்லிசை மயங்கிசை வண்ணம் எனவும், குறில் மெல்லிசை மயங்கிசை வண்ணம்,நெடில் மெல்லிசை மயங்கிசை வண்ணம்,வலி மெல்லிசை மயங்கிசை வண்ணம்,மெலி மெல்லிசை மயங்கிசை வண்ணம், இடை மெல்லிசை மயங்கிசை வண்ணம் எனவும் வரும். இவ்வாறு வண்ணம் நூறு என்பார் அவிநயனார்.

இனித் தொல்காப்பினார் வண்ணம் இருபது என்றார். என்னை?

"வண்ணந் தானே நாலைந் தென்ப."

"அவைதாம்,
பாஅ வண்ணந் தாஅ வண்ணம்
வல்லிசை வண்ணம் மெல்லிசை வண்ணம்
இயைபு வண்ண மளபெடை வண்ணம்
நெடுஞ்சீர் வண்ணங் குறுஞ்சீர் வண்ணம்
சித்திர வண்ணம் நலிபு வண்ணம்
அகப்பாட்டு வண்ணம் புறப்பாட்டு வண்ணம்
ஒழுகு வண்ண மொரூஉ வண்ணம்
எண்ணு வண்ண மகைப்பு வண்ணம்
தூங்கல் வண்ண மேந்தல் வண்ணம்
உருட்டு வண்ணம் முடுகு வண்ணமென்
றாங்கவை யென்ப வறிந்திசி னோரே." (தொல். பொருள். சூ. 524, 25.)

என்பது தொல்காப்பியம் எனவும் விர்த்துரைப்பார்.

## 14.8 புனைந்துரை:

புனைந்துரை இரண்டு வகைப்படும். அவைமுறையே பெரியதனைச் சுருக்கிச் சொல்லல், சிறியதனைப் பெருக்கிச் சொல்லல் என்பதாம்.

உரைக்கப் படும்பொருட் கொத்தவை யெல்லாம்
புகழ்ச்சியின் மிக்க புனைந்துரையாகும் - தொல்காப்பியம்.

அடையார்ப்பூங் கோதையாட் கல்குலுந் தோன்றும்
புடையார் வனமுலையுந் தோன்றும் - இடையாதும்
40கண்கொள்ளா வாயினுங் காரிகை நீர்மையாட்
குண்டாக வேண்டு நுசுப்பு - இது பெரியதனைச் சுருக்கிற்று.

அவாப்போ லகன்றத னல்குன்மேற் சான்றோர்
உசாப்போல வுண்டே மருங்குல் - உசாவினைப்
பேதைக் குரைப்பான் பிழைப்பிற் பெருகினவே
கோதைக்கொம் பன்னாள் குயம் இது சிறியதனைப் பெருக்கிற்றும் பெரியதனைச் சுருக்கியது.

பொன்மலி கச்சி பூமலி கூடல் மாரி யீகை மணிமாடம்“ - இவை சிறியதனைப் பெருக்கின.

## 14.9அடியின்றி நடப்பனவும் ஓரடியால் நடப்பனவும்:

குறிப்பு

அடியின்றி நடப்பன பாட்டு, உரை, நூல், மந்திரம், பிசி, முதுசொல், அங்கதம், வாழ்த்து முதலாயன ஆகும்.

“உரையு நூலு மடியின்றி நடப்பினும்
வரைவில வென்ப வாய்மொழிப் புலவர்’’ – தொல்காப்பியம்

“வாய்மொழி பிசியே யங்கத முதுசொலென்
றாயவை நான்கு மன்ன வென்ப.’’- தொல்காப்பியம்.“

“அவை தாம்
பாட்டுரை நூலே மந்திரம் பிசியே
முதுசொ லங்கதம் வாழ்த்தொடு பிறவும்
ஆகு மென்ப வறிந்திசி னோரே’’- தொல்காப்பியம்.

## 14.10 காரிகை நுதலிய பொருளும் தொகையும்:

எழுத்துப் பதின்மூன் றிரண்டசை சீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பதின் மூன்றைந்து பாவினமூன்
றொழுக்கியவண்ணங்கணூறொன்ப தொண்பொருள்கோளிருமூ
வழுக்கில் விகாரம் வனப்பெட்டி யாப்புள் வகுத்தனவே.

எழுத்துப் பதின்மூன்றாவன : (1) குற்றெழுத்தைந்து, (2) நெட்டெழுத்தேழு, (3) உயிரெழுத்துப் பன்னிரண்டு, (4) குற்றியலுகர வெழுத்து நாற்பத்திரண்டு, (5) குற்றியலிகர வெழுத்து நாற்பத்து மூன்று, (6) ஐகாரக் குறுக்க வெழுத்து மூன்று, (7) ஆய்தவெழுத்து ஆறு, (8) மெய்யெழுத்துப் பதினெட்டு, (9) வல்லின வெழுத்து ஆறு, (10) மெல்லின வெழுத்து ஆறு, (11) இடையின வெழுத்து ஆறு, (12) உயிர் மெய்யெழுத்துஇருநூற்றொருபத்தாறு, (13) அளபில் உயிரளபெடை யெழுத்து இருபத்தெட்டு, ஒற்றளபெடை யெழுத்து இருபத்திரண்டு. ஆக எழுத்துப் பதின்மூன்று.

இரண்டசையாவன : நேரசை, (2) நிரையசை என இவை.

சீர் முப்பதாவன :ஆசிரிய வுரிச்சீர் நான்கும், வெண்பா வுரிச்சீர் நான்கும், வஞ்சியுரிச்சீர் நான்கும், பொதுச்சீர் பதினாறும், ஓரசைச் சீர் இரண்டும் என இவை.

தளை ஏழாவன: (1) நேரொன்றாசிரியத் தளை, (2) நிரை யொன்றாசிரியத்தளை, (3) இயற்சீர் வெண்டளை, (4) வெண்சீர் வெண்டளை, (5) கலித்தளை, (6) ஒன்றிய வஞ்சித்தளை, (7) ஒன்றாத வஞ்சித்தளை என இவை.

ஐந்து இழுக்கில் அடியாவன : (1) குறளடி, (2) சிந்தடி, (3) அளவடி, (4) நெடிலடி, (5) கழிநெடிலடி என இவை.

குறிப்பு

தொடை நாற்பத்து மூன்றாவன : அடிமோனை, அடியியைபு, அடியெதுகை, அடிமுரண், அடியளபெடை என ஐந்தும், அந்தாதித் தொடை இரட்டைத் தொடை செந்தொடை என மூன்றும், இணைமோனை முதலாகிய விகற்பத் தொடை முப்பத்தைதும் என இவை.

ஐந்து பா : (1) வெண்பா, (2) ஆசிரியப்பா, (3) கலிப்பா, (4) வஞ்சிப்பா, (5) மருட்பா என இவை.

இனம் மூன்றாவன : (1) தாழிசை, (2) துறை, (3) விருத்தம் என இவை.

ஒழுக்கிய வண்ணங்கள் நூறு ஆவன : குறிலகவற்றூங்கிசை வண்ணம் முதலாயின.

ஒன்பது ஒண் பொருள்கோள் ஆவன : நிரனிறை மொழி மாற்று முதலாயின.

இருமூ வழுக்கில் விகாரம் ஆவன : வலிக்கும் வழி வலித்தன் முதலாயின.

வனப்பு எட்டாவன : அம்மை முதலாயின.

“ஐந்து இழுக்கிலடி’’ என்று சிறப்பித்தவதனால், திணை வழுவும், பால்வழுவும்,மரபுவழுவும், வினாவழுவும், செப்பு வழுவும், காலவழுவும், இடவழுவும், என்றுரைக்கப்பட்ட ஏழு வழுவும் படாமற் புணர்க்கப்படும்.

“ஒழுக்கிசை வண்ணங்கள் நூறு’’ என்று சிறப்பித்தவதனால் ஒருசாராசிரியர் வண்ணம் இருபதெனச் சொன்னார் என்பதாம்

“ஒன்பது ஒண் பொருள்கோள்’’ என்று சிறப்பித்தவத னால் பொருள்கோள் ஒன்பதல பல என்பாரும் உளர்.

“வழுக்கில் விகாரம்’’ என்று சிறப்பித்தவதனால் (1) எழுத்துக் குற்றம், (2) சொற்குற்றம், (3) பொருட் குற்றம், (4) யாப்புக் குற்றம், (5) அலங்காரக் குற்றம், (6) ஆனந்தக் குற்றம் என்னும் இவ்வாறு குற்றமும் படாமற் சொல்லப்படுவன செய்யுட்கள் என்பதாகும்.

‘‘வெறிகமழ் தண்சிலம்பின் வேட்டமே யன்றிப்
பிறிதுங் குறையுடையான் போலுஞ் - செறிதொடீஇ
தேமா னிதணத்தேம் யாமாக நம்புனத்’’
வாமான்பின் வந்த மகன்.’’- “தேமா’’ எனற்பாலதனைத் “தேமான்’’ என்று னகர வொற்றுக்
கொடுத்தமையால் எழுத்துக் குற்றமாயிற்று.

சொற்குற்றமாவது சொல்லதிகாரத்தோடு மாறு கொள்வது.

இசையெலாங் கொட்ட வெழிற்றானை யூர்ந்து
வசையில்லா மன்னர்வந் தேத்த - மிசையும்
அடிசில் பருகி யணியார்த்துப் போந்தான்
கொடிமதிற் கூடலார் கோ.’’ - “இசையெலாம் ஆர்ப்ப’’ எனவும், “தானை நாப்பண்’’ எனவும், “அடிசில்அயின்று’’ எனவும், “அணி அணிந்து’’ எனவும்

இவ்வாறு பொதுவினால் எடுத்துக்காட்டிப் பொதுவினால் முடிக்கற் பாலனவற்றைச் சிறப்பு வினையால் ஒன்றற்குரிய சிறப்வினை புணர்த்தமையாற் சொற்குற்றமாயிற்று.

வேறுவினைப் பொதுச்சொ லொருவினை கிளவார் (தொல். சொல். சூ. 46)

குறிப்பு

பொருட்குற்றமாவது : பொருளதிகாரத்தோடு மாறு கொள்வது.

“பொருளின் வழுவே தமிழ்நடைத் திரிவே -தொல்காப்பியர்

“முன்னுந் தொழத்தோன்றி முள்ளெயிற்றா யத்திசையே
இன்னுந் தொழத்தோன்றிற் றேயதுகாண் - மன்னும்
பொருகளிமால் யானைப் புகார்க்கிள்ளி பூண்போற்
பொருகொளியான் மிக்க பிறை.- இது நாண நாட்டம்.

“பண்டிப் புனத்துப் பகலிடத் தேனலுட்
கண்டிக் களிற்றை யறிவன்மற் - றிண்டிக்
கதிரவன் பழையனூர்க் கார்நீலக் கண்ணாய்
உதிர முடைத்திதன் கோடு. - இது நடுங்க நாட்டம். இதுவும் பொருளதிகாரத்தோடு மாறுகொண்டமையாற் பொருட்குற்றமாயிற்று.

நாணவு நடுங்கவு நாடா டோழி
காணுங் காலைத் தலைமக டேத்தே”- தொல்காப்பியர்

“வாளை மேய்ந்த வளைகோட்டுக் குதிரை
கோழிலை வாழைக் கொழுமட லுறங்கும்
ஊரன் செய்த கேண்மை
தேரை வாலினும் பெரிதா கின்றே.” இதுவும் பொருள் மாண்ட தின்மையாற் பொருட்குற்றம்.

யாப்புக் குற்றமாவது : யாப்பதிகாரத்தோடு மாறு கொள்வது.

“யாப்பின் வழுவே யாப்பின திலக்கண”

“கானக நாடன் கடுங்கோன் பெருமலைமேல்
ஆனை கிடந்தனபோ லாய பெருங்கற்கள்
தாமே கிடந்தன கொல்லோ வவற்றைப்பெற்றிப்
பிறங்கவைத் தாரு முளர்கொல்லோ.” இது முதலெடுத்துக் கொண்ட ஓசையிற் கெட்டுப் பாவிகற்பக் கட்டுரையான் வந்தமையால் யாப்புக் குற்றமாயிற்று.

அலங்காரக் குற்றம் வருமாறு :

வெண்டினங்கள் போன்றிலங்கு வெண்சங்கு வெண்சங்கம்
விண்டன்ன தாழை வளர்தொடு - கொண்டெங்கும்
கள்ளாவி நாறுங் கருங்கழிசூழ் கானத்தெம்
உள்ளாவி வாட்டு முருவு.” இதனுள், “வெண்டிங்கள் போலும் சங்கு, சங்கு போலும் தாழைப்பூ” என்று

குறிப்பு

உவமைக்கு உவமை சொன்னமையால் அடுத்து வரல் உவமை என்னும் அலங்காரக் குற்ற மாயிற்று.

அடுத்துவர லுவமை யில்லென மொழிப''

இனி ஆனந்தக் குற்றம் வருமாறு :

இயனெறி திரிந்த வெழுத்தா னந்தமும்
சொன்னெறி திரிந்த சொல்லா னந்தமும்
பொருணிலை திரிந்த பொருளா னந்தமும்
தூக்குநிலை திரிந்த தூக்கா னந்தமும்
தொடைநிலை திரிந்த தொடையா னந்தமும்
நடையுறு புலவர் நாட்டிய வகையே''

ஆழி யிழைப்பப் பகல்போ மிரவெல்லாந்
தோழி துணையாத் துயர்தீரும் - வாழி
நறுமாலை தாராய் திரையவோஒ வென்னும்
செறுமாலை சென்றணைந்த போது. இதனுள் "திரையவோஒ'' என்புழி இயற்பேர் சார்த்தி எழுத்து அளபெழுந்தமையால் எழுத்தானந்தம்.

"இயற்பெயர் சார்த்தி யெழுத்தள பெழினே
இயற்பா டில்லா வெழுத்தா னந்தம்''

சொல்லானந்தம் வருமாறு :

என்னிற் பொலிந்த திவண்முக மென்றெண்ணித்
தன்னிற் குறைபடுப்பான் றண்மதியம் - மின்னி
விரிந்திலங்கு வெண்குடைச் செங்கோல் விசையன்
எரிந்திலங்கு வேலி னெழும்.'' இதனுள், விசைய னென்னும் பாட்டுடைத் தலைமகன் மேல் எரிந்தென்னும்
சொல்லேறப் புணர்த்தமையாற் சொல்லானந்த மாயிற்று

"இயற்பெயர் மருங்கின் மங்கல மழியத்
தொழிற்சொற் புணர்ப்பினது சொல்லா னந்தம்''

பொருளானந்தம் வருமாறு :

இந்திரனே போலு மிளஞ்சாத்தன் சாத்தற்கு
மந்தரமே போன்றுளது மல்லாகம் - மந்தரத்திற்
றாழருவி போன்றுளது தார்மாலை யம்மாலை
ஏழுலகு நாறு மிணர்.'' இதனுள் இளஞ்சாத்தன் என்னும் கீழ்மகனை அரசரை உவ மிக்குமாறு போலப் மூ
பரிக்கலாகா வண்ணம் இறப்ப உயரச் சொன்னமையால் இறப்ப உயர்ந்த பொருளானந்தம்.

"கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி

குறிப்பு

அருவிடர் வீழ்ந்தென" இதனுள் ஐந்திணைக்குரிய பொருளை இறப்ப இழிவுபடச் சொன்னமையால் இறப்ப

விழிந்த பொருளானந்தம்

இறப்ப வுயர்ந்தது மிறப்ப விழிந்ததும்

அறத்தக வழீஇய வானந் தம்மே"

எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் வருமாறு :

"தாமரை புரையுங் காமர் சேவடி

பவழத் தன்ன மேனித் திகழொளிக்

குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்

நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் கெடுவேற்

சேவலங் கொடியோன் காப்ப

ஏம வைக லெய்தின்றா லுலகே." (குறுந். கடவுள்.)

**ஒழிபியல் முதனினைப்புக் காரிகை:**

சீருந் தளையுடன் விட்டிசை மாஞ்சீ ரியத்றளைதேர்

வாரு மருகிக் கலியே வருக்க நெடில்சுருங்கிற்

றோரும் பொருளோ டடிமுத லாவெழுத் தொன்பதுவென்

றாருந் தெளிந்த வொழிபியற் சூத்திர மாகியதே.

ஒழிபியல் முதனினைப்புக் காரிகை பிரதிதோறும் கீழ்வருமாறு வேறுபட்டுள்ளது.

சீரொடு விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி

வாரடர் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்று வான்பொருளும்

சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்துமென்றே

யாரு மொழிபியற் பாட்டின் முதனினைப் பாகுமன்றே."

அடிவர வாசிரியம்

"சீரும் விட்டிசை மாஞ்சீ ரியற்றளை

அருகி வருக்கஞ் சுருங்கிற் பொருளோ

டெழுத்தென வொன்பா னொழிபிய லொத்தே"

**பயிற்சி வினாக்கள்:**

1. சீர்க்கும் தளைக்குமான புறனடை குறித்து விவரி.

மாஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்

தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்

தாஞ்சீர் மயக்குந் தளையும.·. தேவெள்ளைத் தன்மைகுன்றிப்

போஞ்சீர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

தேமா புளிமா என்னும் இரண்டு நேரீற்று இயற்சீரும் கலிப்பாவினுட் புகப்பெறாது. கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச் சீர் இரண்டும் கலிப்பாவினுட் புகப்பெறாது.

குறிப்பு

ஆசிரியப்பாவினுள்ளும் கருவிளங்கனி விளங்கனியென்னும் நிரைநடுவாகிய வஞ்சியுரிச்சீர் இரண்டும் புகப் பெறாது. ஒழிந்த சீர் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்படும்.

நான்கு பாவிற் றளையும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் வந்து மயங்கப்படும்.எல்லாச் சீரும் எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனி என்னும் வஞ்சியுரிச்சீர் நான்கும் வெண்பாவினுட் புகப்பெறா, புகில் வெள்ளோசை யழிந்து வேறுபட்டு ஓசையுண்ணாது கெடும்..

எல்லாப் பாவினுள்ளும் பாவினத்துள்ளும் எல்லாத் தளையும் புக்கு மயங்கப்பெறும் என்றார் ஆயினும், வெண்பாவினுள் வெண்சீர் வெண்டளை ஒன்றலும் இயற்சீர் வெண்டளை ஒன்றலும் அல்லது வேற்றுத்தளை விரவாது.

தரவுகொச்சகக் கலிப்பாவினுள் நிரையீற்று ஆசிரிய உரிச்சீரும் நேர்நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வந்து, வெண்டளையும் ஆசிரியத்தளையும் கலித்தளையும் வஞ்சித்தளையும் புக்கு மயங்கிய வாறு கண்டுகொள்க. நேரீற்று ஆசிரிய உரிச்சீரும், நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வருதலில்லை.

2. பொருள்கோளின் வகைகளைத் தருக.

இனிப் பொருள் கோள் ஒன்பது வகைப்படும். அவை (1) நிரனிறை மொழிமாற்று, (2) சுண்ண மொழி மாற்று, (3) அடிமறி மொழிமாற்று, (4) அடி மொழிமாற்று, (5) பூட்டுவிற் பொருள் கோள், (6) புனலாற்றுப் பொருள் கோள், (7) அளை மறி பாப்புப் பொருள் கோள், (8) தாப்பிசைப் பொருள் கோள், (9) கொண்டு கூட்டுப் பொருள் கோள் என்பாவாகும்.. அவற்றுள், நிரனிறை இரண்டு வகைப்படும், பெயர் நிரனிறை, வினை நிரனிறை என்பதாம்.

3. விகாரத்தின் வகைகளை விளக்கி வரைக.

விகாரம் ஆறு வகைப்படும், வலித்தல், மெலித்தல்,விரித்தல், தொகுத்தல், நீட்டல், குறுக்கல் என்பதாம்.

குறுத்தாட் பூதஞ் சுமந்த
அறக்கதி ராழியெம் மண்ணலைத் தொழினே." இதனுள் "குறுந்தாள்" என்பதனை "குறுத்தாள்'' என்றமையால் இது வலிக்கும் வழி வலித்தல்

"தண்டையி னினக்கிளி கடிவோள்
பண்டைய ளல்லண் மானோக் கினளே.'' - தட்டை என்பதனை தண்டை என்றமையால் மெலிக்கும் வழி மெலித்தல்.

தண்ணந் துறைவர் தகவிலரே தற்சேர்ந்தார் - "தண்டுறைவர்'' எனபதனை "தண்ணந்துறைவர்'' என்றமையால் விரிக்கும் வழி விரித்தல்

வேண்டார் வணங்கி விறன்மதி றான்கோடல் - "வேண்டாதாரை வணக்கி'' என்பதனை "வேண்டார் வணக்கி" என்றமையால் தொகுக்கும் வழித் தொகுத்தல்.

குறிப்பு

பாசிழை யாகம் பசப்பித்தான் பைந்தொடீஇ - "பச்சிழை'' என்பதனை "பாசிழை'' என்றமையால் நீட்டும் வழி நீட்டல்.

திருந்தார்நன் றென்றேன் றியேன். - "தீயேன்'' என்பதனை "தியேன்'' என்றமையால் குறுக்கும் வழிக்குறுக்கல்.

"மருடீர் விகாரம்'' என்று சிறப்பித்தவதனால் தலைக்குறைத்தலும், இடைக்குறைத்தலும், கடைக்குறைத்தலும் என இவையும் வரலாற்று முறைமையோடுங் கூட்டி வழங்கப்படும்

மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி.'' - "தாமரை'' என்பதனை "மரை'' என்றமையால் தலைக்குறை

"வேதின வெரிநி னோதி முதுபோத்து." - "ஓந்தி" என்பதனை "ஓதி'' என்றமையால் இடைக்குறை

"நீலுண் டுகிலிகை கடுப்ப.''- 'நீலமுண்ட துகிலிகை" என்பதனை "நீலுண் துகிலிகை'' என்றமையால் கடைக்குறை

4.வாழ்த்தின் வகைகளை விவரி

வாழ்த்து இரண்டு வகைப்படும், மெய் வாழ்த்து, இருபுற வாழ்த்து என்பதாம்.

கார்நறு நீலங் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலை நின்ற தவங்கொலோ - கூர்நுனைவேல்
வண்டிருக்க நக்கதார் வாமான் வழுதியாற்
கொண்டிருக்கப் பெற்ற குணம்.'' - இது மெய் வாழ்த்து.

"பண்டு மொருகாற்றன் பைந்தொடியைக் கேரட்பட்டு
வெங்கடத்து வில்லேற்றிக் கொண்டுழந்தான் - தென்களந்தைப்
பூமான் றிருமகளுக் கின்னும் புலம்புமால்
வாமான்றேர் வையையார் கோ.'' இது இருபுற வாழ்த்து.

5. வனப்பின் வகைகளை விளக்கி வரைக.

வனப்பு எட்டு வகைப்படும், அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு என்பன.

அம்மை:

அம்மையென்பது சிலவாய மெல்லியவாகிய சொற்களால் ஒள்ளியவாகிய பொருண்மேற் சிலவடியாற் சொல்லப்படுவது.

சின்மென் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அம்மை தானே யடிநிமிர் வின்றே'' – தொல்காப்பியம்.

அறிவினா லாகுவ துண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை''

குறிப்பு

அழகு:

அழகென்பது - செய்யுட் சொல்லாகிய திரி சொற்களால் ஓசை இனியவையாகப் புணர்க்கப்படுவது.

“செய்யுண் மொழியாற் சீர்புனைந் தியாப்பின்
அவ்வகை தானே யழகெனப் படுமே”
துணியிரும் பௌவங் குறைய வாங்கி
அணிகிள ரடுக்கன் முற்றிய வெழிலி
காலொடு மயங்கிய கனையிரு ணடுநாள்
யாங்குவந் தனையோ வோங்கல் வெற்ப
நெடுவரை மருங்கிற் பாம்புற விழிதருங்
கடுவரற் கலுழி நீந்தி
வல்லியம் வழங்குங் கல்லதர் நெறியே”

தொன்மை:

தொன்மை என்பது பழமைத்தாய் நிகழ்ந்த பெற்றி உரைக்கப்படும்

சுரிகுழன் மடவாய் தொன்மை தானே
யுரையொடு புணர்ந்த பழமை மேற்றே” - தொல்காப்பியம்.
“செறிதொடி யுவகை கேளாய் செஞ்சுடர்த்
தெறுகதிர்ச் செல்வன் செய்வதென்” என்பதுஉம், பாரதம் இராமாயணம் முதலாயினவும் ஆகும்.

தோல்:

தோல் என்பது இழுமென மெல்லியவையாகிய சொற்களான் விழுமியவாய்க் கிடப்பனவும், எல்லாச் சொற்களோடுங் கூடிப் பலவடியும் மயங்கி வந்தனவாய்க் கிடப்பனவும் என இருதிறத்தனவாம்.

இழுமென் மொழியால் விழுமியது நுவவினும்
பரந்த மொழியா னடிநிமிர்ந் தொழுகினுந்
தோலென மொழிப தொன்னெறிப் புலவர்” – தொல்காப்பியம்
“பாயிரும் பரப்பகம் புதையப் பாம்பின்
ஆயிர மணிவிளக் கழலுஞ் சேக்கைத்
துளிதரு வெள்ளந் துயில்புடை பெயர்க்கும்
ஒளியோன் காஞ்சி யெளிதெனக் கூறின்
இம்மை யில்லை மறுமை யில்லை
நன்மை யில்லை தீமை யில்லை
செய்வோ ரில்லை செய்பொரு ளில்லை
அறிவோர் யாஃ. திருவழி யிறுகென. (மார்க்கண்டேயனார் காஞ்சி) இஃது இழுமென் மொழியால் விழுமியது

குறிப்பு

திருமலை தலைஇய விருணிற விசும்பின்'' - (26மலை படுகடாம்) பரந்தமொழியால் அடிநிமிர்ந்தொழுகியது.

விருந்து:

புதிதாய்த் தோன்றும் இலக்கிய வகை விருந்து எனப்படும்.

வெதிர்புரை தோளாய் விருந்து தானே
புதுவது புனைந்த யாப்பின் மேற்றே.'' –தொல்காப்பியம்

இயைபு:

இயையென்பது ஞணநமன யரலவழள என்னும் பதினொரு புள்ளியும் ஈறாக வந்த பாட்டு.

ஞகார முதலா ளகார லீற்றுப்
புள்ளி யிறுதி யியைபெனப் படுமே''

புலன்:

புலன் என்பது இயற் சொல்லாற் பொருள் தோன்றச் சொல்லப்படுவது.

"தெரிந்த மொழியாற் செவ்வி திற்புணர்ந்த
தோதல் வேண்டாது குறித்தது தோன்றிற்
புலனென மொழிப புலனுணர்ந் தோரே'' – தொல்காப்பியம்

"பார்க்கடன் முகந்த பருவக் கொண்மூ
வார்ச்செறி முரசின் முழங்கி யொன்னார்
மலைமுற் றின்றே வயங்குதுளி சிதறிச்
சென்றவ டிருமுகங் காணக் கடுந்தேர்
இன்றுபுகக் கடவுமதி பாக வுதுக்காண்
மாவொடு புணர்ந்த மாஅல் போல
இரும்பிடி யுழைய தாகப்
பெருங்காடு மடுத்த காமர் களிறே''

இழைபு:

இழைபு என்பது - வல்லொற்று யாதும் தீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுக்கப்பட்ட குறளடி முதலாகப் பதினேழ் நிலத்து ஐந்தடியும் முறையானே உடைத்தாய் ஓங்கிய சொற்களான் வருவது.

"ஒற்றொரு புணர்ந்த வல்லெழுத் தடக்காது
குறளடி முதலா வைந்தடி காறும்
ஓங்கிய மொழியா னாங்ஙன மொழியின்
இழைபி னிலக்கண மியைந்த தாகும் – தொல்காப்பியம்.

"போந்து போந்து சார்ந்து சார்ந்து
பெருமணம் புணர்ந்தனை யென்பவ.்.
தொருநீ மறைப்பி னொழிகுவ தன்றே.''

குறிப்பு

# மாதிரி வினாத்தாள் - I

**அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்**

**பி.லிட் - தமிழ் இலக்கியம் - மூன்றாம் பருவம்**

**தாள் - 10732 - இலக்கணம் - அகப்பொருளும் - யாப்பும்**

**காலம் : 3மணி** **மதிப்பெண்: 75**

## பகுதி – அ

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: (10 X 2 =20)**

1.நம்பியகப்பொருளின் வழியைக் குறிப்பிடுக.

2.பெருந்திணைக்குரிய இலக்கணத்தைச் சுட்டியுரை

3.கைகோளின் வகைகள் யாவை?

4.உடன்போய் வரைதல் என்றால் என்ன?

5.காவற் பிரிவின் வகைகளைத் தருக.

6.வன்புறை – குறித்துரைக்க.

7.அசைக்கு உறுப்பாகும் எழுத்துகளின் எண்ணிக்கை யாது?

8. கலிப்பாவின் ஓசை யாது?

9.தன்சீர் தனதொன்றின் தன்தளை - விளக்கியுரை

10.மனைமருட்சி என்பது யாது?

## பகுதி – ஆ

**II.அனைத்து வினாக்களுக்கும் ஒருபக்கஅளவில் விடை தருக. (5 X 5 = 25)**

11 (அ ) முப்பொருள் குறித்து எழுதுக.

( அல்லது )

(ஆ ) பெரும்பொழுது, சிறுபொழுதின் வகைகள் யாவை?

12 (அ ) களவில் பிரிவின் வகைகளைச் சுட்டுக.

( அல்லது )

( ஆ ) செலவழுங்கல் என்பதனை எடுத்துரைக்க

13 ( அ ) வரைவு மலிதலின் வகைகளை விளக்குக.

( அல்லது )

(ஆ ) உடன்போக்கு இடையீடு குறித்து எழுதுக.

14 (அ ) பாக்களின் ஓசைகள் எடுத்து எழுதுக

( அல்லது )

(ஆ ) நாலசைச்சீர்கள் யாவை?

15 (அ ) குறள் தாழிசை - இலக்கணம் தருக.

( அல்லது )

(ஆ ) அராகம் குறித்து எழுதுக

## பகுதி - இ

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக. (3 X10 =30)**

16.பாலைத்திணைக்குரிய முதல்,கரு, உரிப்பொருளைக் கட்டுரைக்க.

17. பாங்கி மதியுடன்பாட்டினை விவரி

18. உணர்த்த உணரா ஊடலின் தன்மைகளை விளக்கி வரைக.

19.கொச்சகக் கலிப்பாவின் வகைகளைத் தொகுத்துரைக்க

20. பொருள்கோளின் வகைகளை விவரி.

குறிப்பு

## மாதிரி வினாத்தாள் - II
## அழகப்பா பல்கலைக்கழகம் - தொலைதூரக் கல்வி இயக்ககம்
## பி.லிட் - தமிழ் இலக்கியம் - மூன்றாம் பருவம்
## தாள் - 10732 - இலக்கணம் - அகப்பொருளும் - யாப்பும்

**காலம் : 3 மணி** **மதிப்பெண்: 75**

**பகுதி – அ**

**I. அனைத்து வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக: (10X2 = 20)**

1.நம்பியகப்பொருளின் எவ்வரசனுடைய காலம்- குறிப்பிடுக.

2.முதல்பொருளின் இலக்கணத்தைச் சுட்டியுரை

3.செவிலி யாரிடத்து அறத்தொடு நிற்பாள்?

4.குறிப்பறிதல் என்றால் என்ன?

5. பிரிவுழிக்கலங்கலின் வகைகளைத் தருக.

6. களவில் கூற்றிற்கு உரியோர் யாவர்?

7. முன்னம் என்பது யாது?

8. ஆசிரியப்பாவிள் அடிவரையறை யாது?

9. தூங்கல் ஓசை எந்தப் பாவிற்கு உரியது?

10. மோனைத்தொடை என்பது யாது?

**பகுதி – ஆ**

**II.அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக. (5 X 5= 25 )**

11 (அ ) மெய்யுறு புணர்ச்சிக்குரிய காலம் குறித்து எழுதுக.

( அல்லது )

**(ஆ )** களவிற்குரிய கிளவித்தொகைகள் யாவை?

12 (அ ) மன்றலின் எட்டு வகைகளைச் சுட்டுக.

( அல்லது )

**( ஆ )** அகப்பாட்டு உறுப்புகள் யாவை?

13 ( அ ) பரத்தையர் பிரிவின் வகைகளை விளக்குக.

( அல்லது )

(ஆ ) பாங்கற் கூட்டத்தின் விரிகள் யாவை?

14 (அ ) கைக்கிளை மருட்பா குறித்து எழுதுக

( அல்லது )

(ஆ ) ஆசிரிய விருத்தம் - விளக்குக. யாவை?

15(அ ) இயற்சீர்வெண்டளை, வெண்சீர் வெண்டளை - இலக்கணம் தருக.

( அல்லது )

(ஆ ) அம்போதரங்கம் குறித்து எழுது

**பகுதி - இ**

**III. எவையேனும் மூன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடைதருக.( 3 X 10 = 30 )**

16. மடல்விலக்கு குறித்துக் கட்டுரைக்க.

17. பாங்கி அறத்தொடு நிற்றலை விவரி

18. வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதலின் தன்மைகளை விளக்கி வரைக.

19.தொடையின் வகைகளைத் தொகுத்துரைக்க

20. வண்ணங்களின் வகைகளை விவரி.